அறிஞர்களும் தமிழும்

ஒரு திறனாய்வு

ஆய்வியல் நிறைஞர்கள் (2019~2020)

செந்தமிழ்க்கல்லூரி, மதுரை

eBook

மின்நூல்

‘வள்ளுவரின் வாழ்வியல் சிந்தனைகள்’

பாரதியின் பாஞ்சாலி சபதம் – ந சுப்புரெட்டியாரின் எளிய வெளிப்பாட்டுத் திறன்

பன்முகப்பார்வையில் ஏர்வாடி எஸ் இராதாகிருஷ்ணனின் ‘*சொந்தமாக ஒரு சொர்க்கம்*’



ந சுப்பு ரெட்டியார்100

Centenary Committee Publications

ISBN : 978-81-948697-7-1

ஆய்வேட்டின் நூல்வடிவு

அறிஞர்களும் தமிழும்

ஒரு திறனாய்வு

செங்கமிழ்க் கல்லூரியின்
ஆய்வியல் நிறைஞர் மாணாக்கர்களின் (2019—2020)
ஆய்வேட்டின் தொகுப்பு

<u>தொகுப்பு:</u>
நூற்றாண்டுக் குழு

ந சுப்பு ரெட்டியார்100

Centenary Committee Publications

அறிஞர்களும் தமிழும்

ஒரு திறனாய்வு

முதற்பதிப்பு: ஆகஸ்ட் 2021

Published by:

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

Na Subbu Reddiar 100 Educational Trust

AD-13, 5th Street, Anna Nagar West, Chennai – 600 040

ISBN 978-81-948697-7-1

9 788194 869771

Wrapper Design: **Centenary Committee**

Printed at: DJ Prints, Chennai – 600 095

பதிப்புரை

பேராசிரியர் முனைவர் ந சுப்பு ரெட்டியார் அவர்கள் எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று, ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர். திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர். பல பல்கலைக்கழகங்களில் சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி, நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர். பல ஆய்வாளர்களை உருவாக்கியவர். வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர். **136 [135 +1]** நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015 – 2016) 108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும் மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

பேராசிரியரின் நூற்றாண்டில் (2015 – 2016) நூற்றாண்டுக்குழு தமிழகமெங்கும் நடத்திய 108 நிகழ்வுகள் அகில இந்திய சாதனையாக அங்கீகரிக்கப் பெற்றுள்ளன. நூற்றாண்டில் பேராசிரியரின் தமிழ்த்திறத்தையும், அறிவுநுட்பத்தையும் வெளிக்கொணரும் பொருட்டு பன்னிரெண்டு நூட்கள் வெளியிட்டப்பெற்றன. அவரது 120 நூல்கள், இந்திய அரசு நல்கிய **ISBN** எண்களுடன், மின் நூல்களாக மாற்றுப்பெற்று https://archive.org/details/@centenary1916nsr2016 என்ற இணைதளத்தில் அனைவரும் பதிவிறக்கம் செய்யும் வகையில் அமைக்கப்பெற்றுள்ளன.

பேராசிரியரின் படைப்பான “***கவிஞர் வாலியின் இராமாநுஜ காவியம் – ஒரு மதிப்பீடு***” எனும் நூலை பேராசிரியரின் நூற்றாண்டிற்குப் பின்பும் (102வது), இராமாநுஜரின் ஆயிரமாண்டிற்குப் பின்பும் (1002வது) நூற்றாண்டுக்குழு 2018ல் வெளியிட்டது.

பேராசிரியரின் நூட்களை அடித்தளமாக்கொண்டு சுமார் 25 முதுகலைப்பட்ட மாணாக்கர்கள், ஆய்வியல் நிறைஞர் மாணாக்கர்கள் மற்றும் முனைவர் பட்ட ஆய்வாளர்கள் பல்வேறு பல்கலைக் கழகங்களில் (சென்னைப் பல்கலைக்கழகம், மதுரை காமராஜ் பல்கலைக்கழகம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,

அழகப்பா பல்கலைக்கழகம் மற்றும் தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்) ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.

மூன்று முனைவர் பட்ட ஆய்வாளர்கள் ஆய்வு மேற்கொண்டு, சென்னை பல்கலைக் கழகம், மதுரை காமராஜ் பல்கலைக் கழகம் மற்றும் பாரதியார் பல்கலைக் கழகம் ஆகியவற்றில் ஆய்வேடு சமர்ப்பித்து முனைவர் பட்டம் பெற்றுள்ளனர். ஐந்து முதுகலை பட்ட மாணாக்கர்கள் (திராவிடப் பல்கலைக் கழகம் : 2017 – 2019) ஆய்வேடு சமர்ப்பித்துள்ளனர். ஐந்து ஆய்வியல் நிறைஞர் மாணாக்கர்கள் (தமிழ்ப் பல்கலைக் கழகம் : 2018 – 2019) ஆய்வேடு சமர்ப்பித்து ஆய்வியல் நிறைஞர் பட்டம் பெற்றுள்ளனர்.

தமிழ்த்துறை, செந்தமிழ்க் கல்லூரி (மதுரை காமராஜ் பல்கலைக் கழகம்) பரிந்துரைத்த மூன்று ஆய்வியல் நிறைஞர் மாணாக்கர்கட்கு **ந சுப்பு ரெட்டியார் 100 கல்வி அறக்கட்டளை NSR100 Kamatchi Ammal Fellowship** வழங்கியது. அதன்கீழ், தமிழ் அறிஞர்களின் ஏதேனும் ஒரு நூலை ஆய்வுக்குரிய மையக்கருத்தாக தேர்ந்தெடுத்து திறனாய்வு செய்யும் ஆய்வியல் நிறைஞர் மாணாக்கர்கட்கு உதவித்தொகையும், நூலைத் தேர்ந்தெடுக்க ஆலோசனையும், தேர்ந்தெடுக்கப் பெற்ற நூலும் வழங்கப்பெற்றன.

<u>திறனாய்வு செய்த மாணாக்கர்கள்</u>:

S விக்னேஷ்வர பிரகாஷ் (B8811347)
Ms P உமா மகேஸ்வரி (B8811343)
Ms C இராமேஸ்வரி (B8811340)

<u>ஆய்வேட்டின் தலைப்புகள்</u>:

‘‘வள்ளுவரின் வாழ்வியல் சிந்தனைகள்’’

பாரதியின் பாஞ்சாலி சபதம் – ந சுப்புரெட்டியாரின் எளிய வெளிப்பாட்டுத் திறன்

பன்முகப்பார்வையில் ஏர்வாடி எஸ் இராதாகிருஷ்ணனின் ‘*சொந்தமாக ஒரு சொர்க்கம்*’

<u>தெரிவு செய்யப்பெற்ற நூல்கள்</u>:

01) வள்ளுவரின் வாழ்வியல் சிந்தனைகள் (பேராசிரியர் முனைவர் ந சுப்பு ரெட்டியார்)
https://archive.org/details/valluvarinvazhiviyalsenthanaigal

02)பாஞ்சாலி சபதம் - ஒரு நோக்கு (பேராசிரியர் முனைவர் ந சுப்பு ரெட்டியார்)
https://archive.org/details/paanjaalisabathamorunokku

03)சொந்தமாக ஒரு சொர்க்கம் (ஏர்வாடி எஸ் இராதாகிருஷ்ணன்)

இவ்வாறு சமர்ப்பிக்கப்பெற்ற ஆய்வேடுகள் தொகுக்கப்பெற்று

அறிஞர்களும் தமிழும்
ஒரு திறனாய்வு

ஆய்வியல் நிறைஞர் மாணாக்கர்கள் (2019-2020)
செந்தமிழ்க் கல்லூரி, மதுரை

எனும் நூலாக வெளியிடப் பெறுகின்றது. நூலின் ஒரு படி ஒவ்வொரு மாணாக்கர்கட்கும், 3 படிகள் கல்லூரிக்கும் வழங்கப்பெறுகின்றன.

நூற்றாண்டுக்குழு

பொருளடக்கம்

செந்தமிழ்க் கல்லூரி

(மதுரை காமராசர் பல்கலைக் கழகம்)

ஆய்வியல் நிறைஞர் மாணாக்கர்களின் (2019-2020) **ஆய்வேடு**

Compilation of Dissertations submitted by the Recipients of **'NSR100 Kamatchi Ammal Fellowship'** provided by **Na Subbu Reddiar 100 Educational Trust** in the Senthamil College, Madurai, Tamil Nadu

வ.எண்	மாணாக்கர், ஆய்வேடு, பேராசிரியரின் நூல்
01	**S** விக்னேஷ்வர பிரகாஷ் (B8811347) "வள்ளுவரின் வாழ்வியல் சிந்தனைகள்" ***வள்ளுவரின் வாழ்வியல் சிந்தனைகள்***
02	**Ms P** உமா மகேஸ்வரி (B8811343) பாரதியின் பாஞ்சாலி சபதம் – ந சுப்புரெட்டியாரின் எளிய வெளிப்பாட்டுத் திறன் ***பாஞ்சாலி சபதம் - ஒரு நோக்கு***
03	**Ms C** இராமேஸ்வரி (B8811340) பன்முகப்பார்வையில் ஏர்வாடி எஸ் இராதாகிருஷ்ணனின் '*சொந்தமாக ஒரு சொர்க்கம்*' ***சொந்தமாக ஒரு சொர்க்கம்***

“வள்ளுவரின் வாழ்வியல் சிந்தனைகள்”

மதுரைகாமராசர் பல்கலைக்கழக இளநிலைஆய்வாளர் (M.Phil.,) பட்டத்தின்
ஒருபகுதியாகஅளிக்கப்படும் ஆய்வேடு

ஆய்வாளர்

சௌ.விக்னேஷ்வரபிரகாஷ் பி.லிட்.,டி.பி.டி.,பி.ஜி.டி.சி.ஏ.,

பதிவுஎண்:B8811347

மேற்பார்வையாளர்

முனைவர் சு.மலர்விழிஎம்.ஏ.,எம்.ஃபில்.,பிஎச்.டி.,

தமிழ்த்துறை-உயராய்வுமையம்

செந்தமிழ்க் கல்லூரி

மதுரை– 625001.

2019– 2020

நன்றியுரை

"வள்ளுவரின் வாழ்வியல் சிந்தனைகள்" என்னும் தலைப்பில் இளநிலை ஆய்வாளர் பட்டத்திற்கு ஆய்வு மேற்கொள்ள அனுமதி வழங்கிய மதுரைகாமராசர் பல்கலைக் கழகத்தாருக்கும்,செந்தமிழ்க் கல்லூரியின் செயலாளர் திருமிகு.**இராணி.ந.இலட்சுமிகுமரன் சேதுபதி,** எம்.எஸ்சி.,எம்.ஃபில்., அம்மா அவர்களுக்கும், மதுரைநான்காம் தமிழ்ச்சங்கச் செயலாளர் வழக்குரைஞர் திருமிகு.**ச.மாரியப்பமுரளி**,எம்.ஏ.,எம்.எல்., ஐயா அவர்களுக்கும், கல்லூரி முதல்வர்(பொ.) **முனைவர் கி.வேணுகா** எம்.ஏ.,எம்.ஃபில்.,பிஎச்.டி. அம்மா அவர்களுக்கும், **துணைமுதல்வர் முனைவர் கோ.சுப்புலெட்சுமி** எம்.ஏ.,எம்.ஃபில்.,பிஎச்.டி., அம்மா அவர்களுக்கும், அனைத்து பேராசிரியர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய ஆய்விற்கு மேற்பார்வையாளராக இருந்து ஆய்வின் தொடக்கத்திலிருந்து நிறைவுவரை எல்லாநிலைகளிலும் என்னை வழி நடத்தி இவ்வாய்வு சிறப்பாக அமைய உதவிய **முனைவர் சு.மலர்விழி** எம்.ஏ.,எம்.ஃபில்.,பிஎச்.டி., அவர்களுக்கும் என் மனமார்ந்தநன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் பட்டப்படிப்பு பயிலக் காரணமாயிருந்த என் பெற்றோர்கள் **திரு.போ.சௌந்தரராஜன், திருமதி.சௌ.அழகுராணி** அவர்களுக்கும் எனது மனைவி **வீ.லாவண்யா** மற்றும் என் கல்லூரி நண்பர்கள் அனைவருக்கும் என் இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாய்விற்குத் தேவையானஎல்லா நூல்களையும் கொடுத்துதவிய நூலகர் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் எனது ஆய்விற்கு உதவிசெய்த என் வகுப்புத் தோழர்கள் அனைவருக்கும் என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆய்வேடு சிறப்பாக அமைய நல்ல முறையில் கணினி மயமாக்கிக் கொடுத்தவர்க்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சௌ.விக்னேஷ்வரபிரகாஷ்

(ஆய்வாளர்)

பொருளடக்கம்

சுருக்கக் குறியீட்டுவிளக்கம்

குறள்.	-	திருக்குறள்
திரு.வ.மா.	-	திருவள்ளுவமாலை
நு.	-	நூற்பா
ப.	-	பக்கம்
பா.	-	பாடல்
சிலப்.	-	சிலப்பதிகாரம்
தி.வா.வா.	-	திருக்குறள் வாய்மொழியும் வாசகமும்
தி.ச.சி.	-	திருக்குறள் சமயவியல் சிந்தனை
ப.பி.	-	பட்டர்பிரான்
மேலது.	-	மேலேகாட்டிய நூல்
P.	-	Page

ஆய்வு அறிமுகம்

ஆய்வு முன்னுரை

‘தமிழ் வாகைச் செம்மல்’, ‘பொதுமறைச் செம்மல்’, கலைமாமணி ‘ஆய்வுத் தமிழரசு’ பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் அவர்கள் வள்ளுவரின் வாழ்வியல் சிந்தனைகளையும், தமிழ் இலக்கிய வகையின் வளர்ச்சியும், இக்கால இலக்கியங்களும், தமிழ் அறிஞர்களின் மரபு வழிக் கவிதை நடைமுறைகள் மற்றும் கவிஞரின் நினைவுகள் பற்றியும் ஆராய்ந்து இவ் ஆய்வேடு தொகுப்பு அமைந்துள்ளது.

தமிழ் வளர்ச்சிக்கான சிறந்து நூல்களை வெளியிட தமிழக அரசின் உதவியுடன் பற்பல நூல்களை வெளிட்டுள்ளார் கவிஞர் ந.சுப்புரெட்டியார் அவர்கள். கல்வித் துறையில் பாட போதனையின் தரம் உயரவேண்டும் என்பது அனைவருடைய விருப்பம். நமது உயர்நிலைப் பள்ளிகளில் பாடபோதனை தமிழில் அமைந்திருக்கின்றது. ஆனால் இந்தப் பாடங்களைப் போதிக்கும் ஆசிரியர்களுக்குப் பயிற்சியும் பாடமும் ஆங்கிலத்தில் அளிக்கப் பெறுகின்றன. பின்னர் அவர்கள் பள்ளிகளில் மேற்கொள்ள விருக்கும் பணிகளில் அவர்கள் பெற்ற அறிவும் பயிற்றியும் முற்றிலும் பயன்படாமல் போகின்றன. எனவே, முதலில் ஆசிரியர்க் கல்லூரிகளில் பாடங்கள் தமிழில் சொல்லித் தரப்பட வேண்டியது மிகவும் அவசியம். இதற்குத் தேவையான புத்தகங்கள் தமிழில் இல்லையேல் என்று சிலர் கூறுகின்றார்கள். இந்தக் குறையை நீக்க பேரா.ந.சுப்புரெட்டியார் முன்வந்திருப்பது பாராட்டத் தக்கது.

ஆய்வுத் தலைப்பு

பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் அறக்கட்டளை 100 மூலம் ”**வள்ளுவரின் வாழ்வியல் சிந்தனைகள்**” என்பது இவ் ஆய்விற்குரிய தலைப்பாக அமைகிறது.

ஆய்வு எல்லை

பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் பல்வேறு இலக்கிய தொகுப்பினையும் வெளியிட்டுள்ளார் மற்றும் பிற தமிழ் கவிஞர்களுடன் வள்ளுவம் பற்றியும், மனிதனின் வாழ்விற்கு தேவையான வழிமுறைகள் பற்றியும் திறனாய்வதே நமது ஆய்வின் தொகுப்பாகும்.

ஆய்வு மூலம்

மதுரை காமராசர் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள பதிப்புகளில் ஆய்வுப் பதிப்பு நூலில் இடம் பெற்றுள்ள கருத்துக்களும் மற்றும் வள்ளுவரின் வாழ்வியல் சிந்தனைகள் என்ற பேரா.ந.சுப்புரெட்டியார் அவர்களின் நூலும் மூலச்சான்றாக அமைகின்றன.

துணைமைச் சான்றுகள்

பேரா.ந.சுப்புரெட்டியார் அவர்களின் நினைவுக் குமிழிகள், திருக்குறள் தெளிவுரைகள், கல்வி உளவியல் கோட்பாடுகள், வாழும் கவிஞர்கள், காலமும் கவிஞர்களும் போன்ற நூல்கள் துணைமைச் சான்றாகவும் அமைகின்றன.

ஆய்வு நோக்கம்

பேரா.ந.சுப்புரெட்டியார் அவர்கள் வள்ளுவரின் வாழ்வியல் சிந்தனைகளையும், தமிழ் இலக்கிய வகையின் வளர்ச்சியும், இக்கால இலக்கியங்களும், தமிழ் அறிஞர்களின் கவிதை பயிற்றும் முறை, பாட்டுத்திறன், கவிஞரின் நினைவு குமிழிகள் (கல்வி, மானிட உடல், மலரும் நினைவுகள்) போன்றவையும் திறனாய்வு நோக்கிலேயே அமைத்துக் கொண்டுள்ளார் என்பதையும் வெளிக்காட்டுவது ஆய்வின் நோக்கமாக அமைகிறது.

கருதுகோள்

வள்ளுவர் பெருமான் சிந்தித்து, சிந்தித்து அந்தச் சிந்தனைகளின் அடிப்படையில் தமது நூலை "திருக்குறள்" என்னும் தமிழ் மறையை அமைத்துள்ளார். வாழ்வது எல்லா மனிதர்க்கும் பொது; ஆதலால் வாழ்க்கை விளக்கங்களும் பொதுவாக அமைதல் வேண்டும். நாடு, இனம், மதம், நிறம், மொழி முதலிய பிரிவுகளை யெல்லாம் கடந்து எக்காலத்திற்கும் பொருந்துவனவாக கருத்துக்களைக் கொண்டு இயங்கும் ஒரே நூல் இது. தமிழுக்கு என அவர் ஆற்றிய இலக்கிய சுவையுடன் ஒன்றிய தமிழ்ப்பணியும் சிறப்பானவை என ஆராய்வதே இவ்வாய்வின் கருதுகோளாகும்.

ஆய்வு அணுகுமுறை

"**வள்ளுவரின் வாழ்வியல் சிந்தனைகள்**" என்னும் இந்த ஆய்வு தமிழ்வளம், இலக்கியத் துறையில் மட்டுமல்லாமல், தத்துவம், சமயம் குறிப்பாக அறிவியல் - போன்ற பல துறைகளிலும் கவிஞரின் பணிகளும், படைப்புகள் முதலிய செய்திகளாய் பகுத்து காண்பதால் பகுப்பு முறையும் விளக்கி கூறுவதால், விளக்க முறையும் அணுகு முறைகளாக அமைகின்றன.

ஆய்வேட்டின் அமைப்பு

இந்த ஆய்வு முன்னுரை, இயல் பகுப்பு மற்றும் ஆய்வு முடிவுரை என பகுக்கப்படுகிறது.

1. ந.சுப்புரெட்டியாரும் வள்ளுவ சிந்தனையும்
2. பிற தமிழ் கவிஞர்களுடன் வள்ளுவம் பற்றிய ந.சுப்புரெட்டியாரின் பார்வை
3. வாழ்விற்கு தேவையான வழிமுறைகள் - ந.சுப்புரெட்டியாரின் கூற்று

என்று மூன்று இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளது.

இயல் விளக்கம்

ஆய்வு முன்னுரையில் ஆய்வு தலைப்பு, ஆய்வு எல்லை, ஆய்வு மூலம், துணைமைச் சான்றுகள், ஆய்வு நோக்கம், ஆய்வு அணுகுமுறை, கருதுகோள், ஆய்வேட்டின் அமைப்பு இவற்றை நவில்வதாக அமைந்துள்ளது.

முதல் இயலான **"ந.சுப்புரெட்டியாரும் வள்ளுவ சிந்தனையும்"** என்னும் இயலில் திருக்குறள் ஓர் அறநூல்: அருமறைக் கருத்துகள் நிறைந்தது. அறத்தின் வீறு நூலெங்கும் பிரதிபலிக்கும் வேகத்தை தருவதற்காக பாயிரமான இவ்வியலில் உலக பொதுமறையான அறம், பொருள், இன்பம் இவற்றில் அறம் வீறு மிக்கது. அற வாழ்க்கையே சிறந்தது என இவ்வியலில் வலியுறுத்தப்பெற்றுள்ளது.

இரண்டாம் இயலான **"பிற தமிழ் கவிஞர்களுடன் வள்ளுவம் பற்றிய ந.சுப்புரெட்டியாரின் பார்வை"** என்னும் இயலில் இன்றியமையாத உண்மை போன்றவை கவிதையில் அமைதல் வேண்டும். பிற கவிஞர்கள் மூலம் மரபுக் கவிதையினை எழுதும் நடைமுறைப் பற்றியும், இலக்கிய வளர்ச்சிப் பற்றியும் இவ் ஆய்வின் மூலம் அறியலாம்.

மூன்றாம் இயலான **"வாழ்விற்கு தேவையான வழிமுறைகள் - ந.சுப்புரெட்டியாரின் கூற்று"** என்னும் இயலில் திருக்குறளில் வாய்மொழி வாசகமும், சமயவியல் சிந்தனைகள் பற்றியும், கல்வி உளவியல் கோட்பாடுகள், மானிட உடல் மற்றும் பேராசிரியர் ந.சுப்புரெட்டியாரின் நினைவு குமிழிகளும் புலமைப்படுத்தப்பட்டுள்ளது.

ஆய்வு முடிவுரையில் ஆய்வில் கண்ட முடிவுகள் அனைத்தும் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. ஆய்வு முடிவுரையை அடுத்து இறுதியாக துணைநூற்பட்டியல் இடம் பெற்றுள்ளது.

இயல் - 1

ந.சுப்புரெட்டியாரும் வள்ளுவ சிந்தனைகளும்

முன்னுரை

அறம், பொருள், இன்பம் இவற்றில் அறம் வீறு மிக்கது. இப்பண்பே அறத்துப்பாலை நூலின் தொடக்கத்தில் முன்னிறுத்தும் கட்டாயத்தை பெற்றது.

"அறமே வாழ்க்கைக்கு வேண்டிய சிறப்பையும் தரும், செல்வத்தையும் நல்கும். ஆகையால் அறத்தை விட உயிர்க்கு ஆக்கம் தருவது வேறொன்றும் இல்லை.

"சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு" - (குறள். 31)

இதில் 'செல்வம்' என்பது பொருள் குறித்து வருதலால் 'சிறப்பு' என்பது அருளைக் குறித்தது என்று கொள்ள வேண்டும். தலைமைப்பாடு என்று பொருள் கொண்டால் அருள் தலைமை என்பது கருத்தாகும். செல்வம் என்பது ஒரு பொருளாகும். அறமே தலைமை ஏற்கும் என்பது வள்ளுவரின் கருத்தாகும்"[1] என்பதே சுப்புரெட்டியின் கருத்தாகும்.

அறஒழுக்கம்

அறஒழுக்கம் ஒன்றே எப்பிறப்பிலும் சிறந்த ஒன்றாகும் என்பதை வள்ளுவர் பின்வருமாறு கூறுகிறார். "செல்வம் வேண்டுமா? செல்வாக்கு வேண்டுமா? சிறப்பு வேண்டுமா? இப்பிறப்பில் மட்டுமின்றி எப்பிறப்பிலும் இவை வேண்டுமா? பிறப்பே அற்ற பெருவாழ்வு வேண்டுமா?"[2] என்னென்ன எவ்வப்போது தேவையோ எல்லாவற்றையும் அறவொழுக்கம் ஒன்றே தரும். அப்படியானால் அதைவிட ஆக்கம் தருவது உயிர்க்கு வேறு என்ன இருக்க

முடியும்? என்பது அவர் தருகின்ற முதல் தெளிவு என்று சுப்புரெட்டியார் கூறுகிறார். அறத்தை இயன்ற அளவில்லாது இடைவிடாமல் வாய்ப்புள்ள போதெல்லாம் செய்து தர வேண்டும்.

"ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வாய் எல்லாம் செயல்" - **(குறள். 33)**

என்பது வான் மறை வள்ளுவம் "செய்தால் சரியாகச் செய்ய வேண்டும்; இல்லை என்றால் சும்மா இருக்கவே வேண்டும் என்றும் நானும் எப்போதாவது உதவி செய்யாமல் இல்லை திரும்பத் திரும்பத் செய்ய வேண்டுமென்றால் எனக்கு ஒத்துவராது என்றும், ஒவ்வொரு வாய்ப்பிலும் இயன்ற போதெல்லாம் நம்மால் கவனிக்க முடியாது" என்றும் நொண்டிச் சாக்குகளாக(Lame Excuses) சொல்லப்பட்டு வரும் கருத்துகளுக்கு இக்குறட்பா மறுப்பாக உள்ளது. சாக்கு போக்குகள் வள்ளுவர் பெருமானுக்குப் பிடிப்பதில்லை; அவர் அவற்றை விரும்புவதும் இல்லை. வாழ்வில் ஒவ்வொரு நொடியும் பயனுள்ளதாய் இருப்பதே முக்கியம்.

'அறம் பொருள் இன்பம் வீடு அடைதல் நூற்பயனே'[3]

- (நன்னூல். நூற்.10)

என்று இலக்கணம் வகுத்த பெருமை தமிழ்மொழிக்குத் தான் உண்டு. நல்லொழுக்கமும் கடவுள் அன்புமே கல்வியின் கனிந்த பயன்கள் என்று கொண்ட பெருமை தமிழ் மறைக்குத்தீரன் உண்டு.

அறச் செய்கை

மனதில் மாசு இல்லாத தன்மை பெறுதல் அறமே என்றும் அதனை,

"மனத்துக்கன் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற" - **(குறள். 34)**

என்பது வள்ளுவம். இதனைச் சோம்பல் உடையோர் தமக்குச் சாதகமாக அனைத்துக் கொண்டு செயலின்றி இருந்து விடுகின்றார்கள். ஆனால் திருவள்ளுவர் இந்த அதிகாரம் முழுமையும் அறம் என்பதைச் செயல் முகத்தில் வைத்தே வற்புறுத்துகின்றார் என்று சுப்புரெட்டியார் கூறுகிறார். உள்ளொன்று புறமொன்றாக இல்லாமல் இரண்டும் ஒத்திருக்க வேண்டும் என்பதற்காக இல்லாமல் நடந்து கொள்வது முக்கியத்துவமும் என்று வள்ளுவர் கூற்றாக கூறுகிறார்.

அறத்தின் வழிகாட்டல்

அறத்தின் பொறாமை, அவா, வெகுளி, இன்னாச் சொல் இந்த நான்கனையும் கடிந்து நடப்பது அறமாகும்.

"**அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்**
இழுக்கா இயன்றது அறம் - (**குறள்.** 35)

என்பது பொய்யா மொழி. "இங்கும் 'அறம்' என்ற சொல் 'அறச் செய்கையை' உணர்த்தும் அதனால் அதன் வினைச்சொல் நடைபெறுவது என்னும் கருத்தில் 'இயன்றது' என வந்தது. 'அறம்' என்பதற்குச் செயல் முகமே."[4] அதற்கு மனமும் தூய்மையாய் இருக்க வேண்டும் என்னும் கருத்தை வற்புறுத்தவே இக்கருத்து வலியுறுத்தப்படுகின்றது என சுப்புரெட்டியார் கூறுகிறார்.

அறத்தின் காலம்

"அறம் செய்வதில் தயக்கமோ, காலம் தாழ்த்தவோ, ஒத்தி வைத்தலோ கூடாது. இளமை முதற்கொண்டே அறம் செய்ய வேண்டும். அவ்வாறு செய்யும் அறமே, அழிவு வருங்காலத்தில் அழியாத துணையாக நின்று காக்கும்.

"அன்றறிவாம் என்னாது அறம் செய்க மற்ற அது

பொன்றுங்கால் பொன்றாத் துணை"   - (குறள். 36)

என்பது வள்ளுவர் வாய்மொழி.

அறம் என்ற சொல்லுக்கு "நன்று" என்று பெயர் உண்டு."[5] வள்ளுவரின் கூற்றாக சில எடுத்துக்காட்டுகளை சுப்புரெட்டியார் விளக்குகிறார்.

வாழ்க்கையில் அறியாமை காரணமாக கொள்ளப்படும் உயர்வு தாழ்வுகளை வைத்து அறத்தை அளந்தறியக் கூடாது. அகத்தே எண்ணும் எண்ணங்களின் தூய்மையிலும் நெஞ்சின் இன்ப துன்ப உணர்வுகளாலும் அறத்தை அறியக் கூடுமே அல்லாமல் புறத்தே உள்ள உயர்வு தாழ்வுகளால் அறிய முடியாது.

ஆகையால் பல்லக்கை சுமப்பவன் ஊர்பவன் இவர்களிடையில் வைத்து, அறஞ்செய்யாத காரணத்தால் சுமக்கின்றான் என்றும் அறத்தின் பயனை அளந்து கூற வேண்டா சுமப்பவன் இன்புறுகின்றான் எனவும் ஊர்கின்றவன் துன்புறுகின்றான் என்றும் கூற முடியாது. இன்ப துன்ப உணர்வுகளை நெஞ்ச நிலையால் அறிய முடியுமே அல்லாமல் இத்தகைய வேறுபாடுகளால் அறிய முடியாது. "அரியணை மேலிருந்து அழுது கலங்குவாரும் உண்டு. எளிய வாழ்வில் நடைபாதையில் வாழ்வார் அமைதியாக இன்புறுவதும் உண்டு. வாழ்க்கைக் கடமை எது தன்னலங் குறைந்ததாய்ப் பிறர்க்கு நன்மை மிகுந்த்தாய் உள்ளதோ அதுவே உயர்ந்தது."[6]

ஆகையால் புறத்தோற்றத்தை கண்டு அறியாமையால் காண்பிக்கும் உயர்வு தாழ்வுகளைக் அகத்தே ஏற்படும் உணர்வுகளாலும், புறத்தே ஏற்படும் உயர்வு தாழ்வுகளாலும் அறம் மதிப்பிடுவதில்லை என்பது சுப்புரெட்டியாரின் கூற்றாகும்.

அறத்தின் நெறிமுறைகள்

'அறம்' என்ற சொல் விரிந்த பொருளையுடையது. மனிதன் புரியும் நற்செயல்கள் அனைத்தையும் இதில் அடக்கிக் கூறலாம். தமிழர் வாழ்க்கையில் - அகவாழ்க்கையிலும் புறவாழ்க்கையிலும் அறம் - கடைப்பிடிக்கப்பட்டு வருதலைத் தமிழ் இலக்கியங்களில் குறிப்பாகவும் தெளிவாகவும் புலப்படுத்தியிருப்பதைக் கண்டு மகிழலாம்.

'அறம்' என்ற சொல் நீதியை குறிக்கும்; அதற்கு மேலும் பல பொருள்களைத் தரும். இதனை நாளைய சொற்பொருளில் விளக்க முயல்வேன். அறம் இடத்திற்கேற்ப பலபொருள்களில் வழங்கப்படுகின்றது. கருத்துப் பொருள் இப்படிப் பலவகையில் இருந்தாலும் அவை எல்லாவற்றுக்கும், அடிப்படையாக உள்ள அதன் சொற்பொருள் "அற்றது" என்பதாகும். அது பற்றற்ற நிலை; தன்னலப்பற்று அற்ற தூய்மை; நுட்பமும் ஆற்றலும் கொண்ட அந்நிலையை 'உண்மை' என வழங்கலாம். 'நன்மை' என்றும், 'நேர்மை' என்றும், 'குணம்' என்றும், 'நல்லூழ்' என்றும், 'கடமை' என்றும் பிறவாறும் கருதலாம். ஆகவே தொல்லாசிரியர்கள் 'அறம்' என்பதை பல்வேறு கருத்துகளிலும் ஆள்வர்.

வள்ளுவப் பெருந்தகை அறத்தில் - அறநெறியில் - அழுத்தமான நம்பிக்கையுடையவர். "மறந்தும் பிறர்க்குத் தீங்கு பயப்பனவற்றை எண்ணக்கூடாது. அவ்வாறு எண்ணினால் எண்ணியவனுக்கே கெடுதி விளையும். அவ்வாறு விளையுமாறு அறமே செய்துவிடும்" என்கின்றார்.

"மறந்தும் பிறன்கேடு சூழற்க; சூழின்
அறம்சூழும் சூழ்ந்தவன் கேடு"[7] - **(குறள். 204)**

என்பது அவர்கட்கு அறவழி ஒளிவிளக்கு. முடிவு நல்லதாக எற்படுமானால் அதுவே போதும் என்றும், அந்த முடிவை அடைவதற்கு உரியவழி தவறாக இருந்தாலும் கவலை இல்லை என்றும் சில அறநூல்கள் கருதும்.

அறநெறிச்சாரம்

இளமைநிலையாமையை உணர்த்திக் காலதாமாதமின்றி விரைந்து அறஞ்செய்யுமாறு உணர்த்தும் பல பாடல்கள் 'அறநெறிச்சாரம்' என்ற நூலில் காணப்படுகின்றன. அவற்றுள் ஒன்று:

"மின்னும் இளமை உளதாம் எனமகிழ்ந்து
பின்னை அறிவென்என்றல் பேதைமை தன்னைத்
துணித்தானும் தூங்கா அறஞ்செய்க கூற்றம்
அணித்தாய் வருதலும் உண்டு"[8] - (த.இ.அ. அறநெறி. 21)

என்பது, மின்னல் போலும் இளமைப் பருவமானது நிலைத்திருக்கும் என மகிழ்ந்து முதுமையில் அறத்திணைப் பற்றிக் கருதுதல் அறியாமையாகும். எமன் இளமையிலும் வருதல் உண்டு. ஆதலால் தனது உடலை வருத்தியேனும் ஒவ்வொருவரும் காலதாமமின்றி அறம் செய்தல் வேண்டும் என்று இதில் தெருட்டுதலை அறியலாம்.

அறம் செய்தலை வலியுறுத்தும் போக்கில் வள்ளுவர் கூறுவதை நோக்குவோம். அறம் ஒன்றே மனச்சான்றை மகிழ்விக்கும். அந்த மனச்சான்றின் மகிழ்ச்சியே உண்மையாகும்.

அறத்தின் இன்பம்

உலகத்தில் மக்கள் பலப்பல வகைகளில் இன்பம் காணுதல் உண்டு. செல்வத்தால் அறிவால் இன்பங்கள் காண்பது மட்டுமின்றி, காமத்தால் கள்ளால் சூதால், இன்னும் இவை போன்று பல்வேறு தீமைகளாலும் இனம் காண்பதை அறிவோம். பிறரை தண்டித்தலில் கூட இன்பம் படுவதும்

உண்டென்று வள்ளுவர் பெருமானே, "ஒறுத்தார்க்கு ஒரு நாளை இன்பம்"[9] என்று கூறுவார் இங்ஙனமெல்லாம் வாழ்க்கையின் இன்பம் காண்பதற்கு மக்கள் பலவாறாக முயல்கின்றனர். இவை அத்தனையும் இவைபோல் வன பிறவும் தருவன தக்க இன்பம் அல்ல; சிறுமை இன்பங்களே இவை நிலையுள்ளனவும் அல்ல 'அறத்தான் வருவதே இன்பம்' என்பது வள்ளுவரின் அசைக்க முடியாத முடிவு.

மனம் அமைதியுறாமல் மேன்மேலும் அலைந்து வருந்திக் கொண்டே இருக்கும் ஆகையால் அறத்தால் வருவதே உண்மை இன்பமாகும். மற்றவை எல்லாம் போலி இன்பமாகும். புகழும் இல்லாதவையாகும்.

அறத்தால் வரும் இன்பம் எப்படிப்பட்டது என்பதை வள்ளுவர்,

"அறத்தான் வருவதே இன்பம் மற் றெல்லாம்
புறத்த புகழும் இல" - (குறள். 39)

என்பது பொய்யா மொழி.

"அறத்தாற்றல் வரும் இன்பம் இந்த அளவோடு மட்டுமின்றி வாழ்நாள் வழி அடைக்கும் தடைக்கல்லாகவும் நின்று எல்லாத் துன்பங்களையும் உள்ளடக்கிய பிறவித் துன்பத்தையே மாற்ற வல்லதாகிய பேரின்பம் பயப்பதாக உள்ளது என்பதும் வள்ளுவர் பெருமானின் கருத்து."[10] அறத்தின் மூலம் வரும் இன்பம் எப்படிப்பட்ட தடைக்கல்லையும் தகர்த்து பிறவித்துன்பத்தையே மாற்றி அமைக்கும் என்பதை வள்ளுவர் வாய்மொழியாக நா.சுப்புரெட்டியார் கூறுகிறார்.

"செயற்பாலது ஒரும் அறனே, ஒருவற்கு
உயிற்பாலது ஓரும் பழி" - (குறள். 40)

என்ற இக்குறட்பாவில் 'செய்யத்தக்கது அறனே; தவிரத் தக்கது பழியே' என்று அவர் முடித்த முடிவு உரைத் தருளினார். 'செய்யத்தக்கது' என்றதனால் அறன் என்பது அறச் செய்கையை உணர்த்தும் என்பது தெளிவு. அதற்கு எதிர்ச் செய்கையே அதாவது விட்டு நீங்கத் தக்கதே பழி எனவும் இக்குறளில் வருகிறது. 'பழி' என்பது இவற்றால் பழிச் செய்கையாகும்.

அறத்துக்கு எதிர்ச்சொல்லாகப் 'பழி' என்பதைப் பெருமாள் நிறுத்தியதால் அறத்தால் 'புகழ்' வரும் என்பது தானே புலப்படும். அதனால் அதன் எதிர்செய்கையால் 'பழி' வரும் என்பதும் உடன் புலப்படும்.

அறம் - வகையும் - தொகையும்

'அறம்' பற்றியப் பேசும் போது முப்பால் எனப்படும் திருக்குறள் முழுவதையும் 'அறம்' என்றே சொல்லும் வழக்கு உண்டு என்பது நம் நினைவிற்கு வருகின்றது. இதனால் அறம் என்பது பொருளையும் இன்பத்தையும் தன்னுள் அடக்கிக் கொண்டிருத்தல் தெளிவாகின்றது.

இதனால் 'அறம்' என்பது தொகை எனவும், அறம், பொருள், இன்பம் என்னும் முப்பாலும் வகை எனவும் ஒரு முறைமையைக் கொள்ள இடம் தருகின்றது. இனி அறத்துப்பாலை மட்டிலும் எடுத்துக் கொண்டால் "இல்லறம் **இருபது** அதிகாரங்களிலும் துறவறம் **பதின்மூன்று** அதிகாரங்களிலும் கூறப்பெற்றிருப்பதைக் காணலம். துறவற இயல் 'நோன்புப் பகுதி', 'ஞானப் பகுதி' என்ற இரு பிரிவுகளாகக் கொண்டது. நோன்புப் பகுதியில் **ஒன்பது** அதிகாரங்களும், ஞானப் பகுதியில் **நான்கு** அதிகாரங்களும் உள்ளன. மக்களில் துறவற இயலின் அதிகாரங்கள் சுருக்கமாகவே உள்ளன."[11] இவ்வாறு அறத்தின் வகையினையும் தொகையினையும் இந்நூலில் மூலம் அறியப்படுகின்றது.

அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் - இவற்றில் வரும் செயல் முகமான கடமைகள் பொதுவாக அறச்செயல் முகமான கடமைகள் பொதுவாக அறச்செயல்கள் என்று கருதப்பெறுகின்றன. இதனால் செய்கை ஒவ்வொன்றும் அறத்தின் வகையாகின்றது. அந்த அறச்செய்கைகட்கும் வகைகள் உள்ளன. வகைகட்கு அறத்துப்பாலில் வரும் கடமைகள் முக்கியமானவை.

வாழ்க்கைத் துணைநலம்

அன்புடன் வாழ்வதே இல் வாழ்க்கையின் பண்பு அறத்தைப் போற்றி வாழ்வதே இல்வாழ்க்கையின் பயன்(45) அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை (49) மற்றவர்களையும் நல்வழியில் வாழச் செய்து தானும் அறநெறியிலிருந்து மட்டிலும் நன்மை அடைவதற்காக தவம் செய்வோரின் (துறவற) வாழ்க்கையை விடப் பிறர் நலம் கருதிய இல்வாழ்க்கை சிறந்தது.

"ஆற்றின் ஒழுக்கி அறன்இழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோக்மை உடைத்து" **- (குறள். 48)**

என்பது வள்ளுவர் பெருமானின் வாய்மொழி பொய்யாமொழி!

இல்லறம் சிறப்பது ஆதலின் வாழ்க்கைத் துணை நலமாக இருக்கும் பெண்ணைப் பொறுத்து 'இல்லாள் அகத்திருக்க இல்லாதது ஒன்றில்லை' என்பது பாட்டியின் வாக்கு. அவள் இல்லத்தரசியாக இருப்பதனால் "இல்லாள் இல்லத்தை ஆள்பவள்"[12] எனக் குறிக்க பெற்றாள் இதுபோல் கணவனைக் குறிக்கும் சொல் இல்லை. அவனைக் குறிக்க இல்வாழ்வான் என்ற ஒரு சொற்றொடர் உள்ளதேயன்றி சொல் இல்லை. அப்படி ஒரு சொல்லை விரும்பி 'இல்லான்' என்று போட்டுக் கொண்டால் விபரீதப் பொருளைத் (ஒன்றும் இல்லாதவன்) தந்து விடும்.

இல்லாளின் சிறப்பை இல்லவள் மாண்பானால் இல்லது என்ன? மாணாக்கடை உள்ளது என்ன? (53) என்று ஓர் குறட்பா ஓர் உண்மையை நமக்குப் புலப்படுத்துகின்றது. இல்லாளின் குண நலம். பொருள் நலங்களை எந்த வேளையிலும் எந்த நிலையிலும் இயக்கிப் பெருக்கிப் பயன் செய்ய 'பெண்ணின் பெருந்தக்க யாவுள?' (54) என்ற வினா எழுப்பினார்.

வாழ்க்கை துணையாக பெண்னே எடுத்ததே இச்சிறப்பை புலப்படுத்ததும். ஈண்டும் குறிப்பிட்ட குறளின் அஃறிணை முடிவு முக்கியமாய்க் குணநலனை நினைத்து எழுந்து பெண்ணின் என்பதற்குப் பெண்மையை விட என்பது பொருள்.

ஒருவருக்கு வாய்க்கும் மனைவி இல்லத்திற்கு தக்க நல்ல பண்பு உடையவளாக இருக்கவே வேண்டும். தன்னைக் துணையாக்க் கொண்ட கணவனுடைய வருவாய்க்குத் தக்க வாழ்க்கை நடத்த வேண்டும் அத்தகையவளே நல்வாழ்க்கைத் துணை.

"மன்னத்தக்க மாண்புடையாள் ஆகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கை துணை"   - (குறள். 51)

என்பது பொய்யாமொழி. இவ்வாறு இல்லறத்திற்கு ஏற்ற பண்பு மனைவியிடத்தில் இல்லையானால், அந்த இல்வாழ்க்கை வேறு என்ன சிறப்பு பெற்றிருந்தாலும் பயன் இல்லை.

"மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித்து ஆயினும் இல்"   - (குறள். 52)

என்பது வான்மறை வள்ளுவம். இல்வாழ்வானுக்கு துணையாக நிங்தேயன்றிப் பெண்ணுக்கு தனிச் சிறப்பும் உண்டு.

கற்பு என்னும் உறுதி உண்டாக பெற்றால் பெண்ணை விடப் பெருமையுடைய நிலை வேறு இல்லை.

"பெண்ணின் பெருந்தக்க யாவுள? கற்பென்னும்
திண்மையுண்டாகப் பெறின்" - **(குறள். 54)**

என்பது வள்ளுவர் வாக்கு. சீதாப்பிராட்டியின் கற்பைப்பற்றி அண்ணல் அநுமன் வாக்கினால் இரண்டு பாடல்களை ஈண்டு நினைவு கூர்ந்து மகிழலாம் என்பதையும் சந்தர்பத்தை நோக்கி எண்ணிப் படித்து மகிழலாம்.

பெண்கள் நிறை என்னும் பண்பினால் தம் நெஞ்சத்தை நெறியில் நிறுத்திக் காத்துக் கொள்ளும் காப்பு மிகச் சிறந்த முறையாகும். இதனை நோக்க மதில் முதலியன அமைத்துக் காப்பவர்களின் காவல் முறை பயனற்றதாகும்.

"சிறைகாக்கும் காப்பெவன் செய்யும்? மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை" - **(குறள். 56)**

என்பது பொய்யாமொழி. இந்தப் பண்பினால் தன்னையும் காத்துக் கொண்டு தன்னை துணையாகக் கொண்ட கணவனையும் காத்துக் கொண்டு இருவரும் ஒருமனத்தோடு நடத்தும் இல்வாழ்க்கையின் நன்மை மிக்க புகழையும் காத்துச் சோர்வு இல்லாமல் வாழ்கின்றவளே பெண் என்னும் சிறப்புக்கு உரியவள்.

"தற்காத்துக் கொண்டான் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்" - **(குறள்.57)**

என்பது வான்மறை வள்ளுவம்.

இல்லாளின் சிறப்பினால் கணவனுக்கு இவ்வுலகில் ஏறுபோல் பீடுநடை உண்டாதலும் (59), கணவனது அன்பைப் பெற்ற பெண்டிர் மேல்

உலகத்தில் பெருஞ்சிறப்புப் பெறுதலும் (58) இரண்டு குறட்பாக்களில் நுவலப் பெற்றுள்ளன. ஒருவரிடத்தில் ஒருவர் அன்புடையவரானால் இருவருக்கும் இவ்வுலகில் நலம் உண்டு என்று வள்ளுவர் பெருமான் கூறாமல், கணவனுக்கு இவ்வுலகில் மனைவிக்கு மேல் உலகில் நலமுண்டு என்று கூறுவது அவர் ஏதோ ஒருவர் பக்கமாகப் பேசுகின்றார் என்பது போல் தோன்றும் அப்படியல்ல; பெண்ணின் மாட்சியே இரண்டு குறள்களிலும் வந்துள்ளன. கணவன் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும். பெண்டிரின் பெருஞ்சிறப்பு ஒரு குறளிலும் (51) புகழ்க்குரிய அறக்கடமைகளை புரியும் இல்லாளின் மாண்பு மற்றொரு குறளிலும் (53) குறிக்கப் பெற்றுள்ளன. இருவருக்கும் இவ்வுலகில் நலம் இருப்பதோடு மனைவியின் மாண்பு சிறப்பால் மேல் உலகத்திலும் நலம் விளைவிப்பதாய் உள்ளதென்று உண்மை கூறியனவாம்.

அங்ஙனமாயின் கணவனுக்கு மேல் உலகப் பேறு இல்லையோ என்று ஐயுற வேண்டியதில்லை.'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்'(50) என்பதால் அவன் வானுறையும் தெய்வத்துள் ஒருவனாக இடம் பெறுவான் என்று பிறிதோரிடத்தில் கூறப் பெற்றுள்ளது. இங்கே கணவன்-மனைவி இருவரையும் ஒருங்கு குறிப்பிடும்போது அவ்விருவரில் பெண்டிரின் பெருஞ்சிறப்பு விளக்கப் பெற்றது.

மனைவியின் குணத்தை 'மங்கலம்' என்ப மனைமாட்சி (60) என்பதில் மங்கலம் என்னும் சொல்லால் வள்ளுவர் பெருமான் சிறப்பிப்பார். மங்கலம் என்பதை இயற்கை அழகு என்று சிலப்பதிகார உரை ஆசிரியர் அடியார்க்கு நல்லார் கூறுவர்.[13] அஃது அழியாத வாடாத தன்மை! அத்தகைய மங்கல இயற்கை அழகுக்கு மேலும் அழகு ஊட்டுவதாகிய அணிகலன் போன்றது மக்கட்பேறு என்பவற்றையெல்லாம் அநுபவித்து மகிழ்கின்றோம் என்பதை இந்நூலின் மூலம் உணர்த்துகிறார்.

தாயும் நூலாசிரியரும்

"ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன் மகனைச்

சான்றோன் எனக்கேட்ட தாய்" - ((குறள்.69)

இந்தக் குறளின் பொருளை ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். இதில் உள்ள பொருளை இரண்டு பகுதிகளாக பிரித்து நோக்க வேண்டும். அவை "(1) தாய் குழந்தையைப் பெறுதல் (2) பிறந்த குழந்தை வளர்ந்து சான்றோனாகப் புகழ் பெறுதல்"[14] என்பவை.

(1) தாய் குழந்தைப் பெறுதல்

(2) பிறந்த குழந்தை வளர்ந்து சான்றோனாகப் புகழ் பெறுதல்

என்பவை.

(1) **தாய் குழந்தைப் பெறுதல்** குழந்தை தாயின் கருப்பையிலிருந்து வெளிவருதலைச் சிந்திக்க வேண்டும். இதுதான் 'பிரசவ வேதனை' என்பது உடற் கூற்றுப்படி இதனை விளக்கத் துணிந்தால் பல பக்கங்களாக விரியும். சுருக்கமாக சில செய்திகள் ஈண்டு தரப் பெறுகின்றன.

பிரசவ வேதனையின் கால அளவு குழந்தையின் பருமன், தாயின் இடுப்பெலும்புக் கட்டின் அளவுகள் கருப்பைத் தசையின் சுருங்கும் ஆற்றல், தாயின் பொதுவான உடல் நிலை முதலிய பல்வேறு கூறுகளைப் பொறுத்தது.

பிரசவங்கள் பல்வேறு வகையில் நடைபெறுகின்றன. தொண்ணூற்றாறு சதவிகிதம் பிரசவங்களில் தலை உதயமே நிகழ்கின்றது. கருப்பையில் குழந்தையின் தலை கீழாகத்தான் இருக்கும். கால்களும் கைகளும் வளைந்தோ மடிந்தோ இருக்கும். தலை வட்டமாகவும் உறுதியாகவும் இருப்பதால் அது கருப்பையின் வாயினை விரியச் செய்யவும்

துணை செய்கின்றது. எனினும் சில சமயம் குழந்தை வேறு நிலையில் இருந்து முதலில் முகம், கை அல்லது கால் உதயம் ஆவது உண்டு. ‘அடிப்புறப் பிரசவம்’ என அழைக்கப்படும்.

(2) அருட்செல்வர்கள் படைத்த மறைகளும் அறிஞர்கள் படைத்த நூல்களும், ஆகியவை யாவும் உலக இயற்கையின் வடிப்புகளேயாகும். ஆகவே எல்லாப் பொருள்களும் உள்ளுறையாக அமைந்து ஏதோ ஒரு வகையில் மக்களுக்கு அறிவுரை நல்கும் வழிவகைகளாகவும் அமைகின்றன.

”அன்பிலார் எல்லாம் தமக்குஉரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு - (குறள். 72)

அன்பில்லாதவர்கள் எல்லாப் பொருள்களையும் தமக்கே பயன்படுத்தி கொள்வர். அன்புடையவரோ தம் உடமையும் பிறர்க்குப் பயன்படுத்துவர்“ என்பது இக்குறள் மணியின் விளக்கமாகும். இதனை இயற்கையில் தோன்றியுள்ள வாழை மரம் ஒன்றை எடுத்துக் கொண்டு விளக்குவோம்.

‘வாழ்’ என்னும் முதனிலையிலிருந்து ‘வாழை’ என்னும் அழகிய பெயரைப் பெற்றுள்ளது அம்மரம். வாழ்வது வாழை என்பதனால் தான் குலைதள்ளிய வாழை மரங்களை வாழும் வகைக்குத் திருமணம் கூட்டும் இல்வாழ்க்கை மண விழாக்களில் திருவருள் கூட்டும் ஞானவாழ்க்கை கடவுள் திருவிழாக்களிலும் மங்கலமாக நிறுத்தி அணி செய்விக்கும் மரபு நம் நாட்டில் எங்கும் காணப்படுவதை சிந்திக்கலாம்.

வாழை மரம் உலகப் பொருள்களில் ஒன்றாக இருப்பினும் அதற்கு தனிச் சிறப்புகளும் உள்ளன. “தனித் தனி“ என்று மதுரைத் தமிழ்நாகனார் என்ற சங்கப்புலவர் ஒருவரே குறிப்பிட்டு இருப்பது ஈண்டு அறிதற்பாலது. இதனால் தான் எவர் வேண்டுமானாலும் இதன் குறள் மணிகளைத் தம்

விருப்படியெல்லாம் கையாண்டிருப்பதை காணமுடிகின்றது. சிலவற்றை ஈண்டுக் காண்போம்.

செய்ந்நன்றியறிதல்

இப்பண்பு தமிழனின் தலை சிறந்த பண்பு. பிறர் தனக்கு செய்த நன்றியை மறுத்தலாகாது என்பது தான் அது. இப்பண்பை வள்ளுவர் பெருமான் ஒரு தனி அதிகாரத்தில் பலவிதமாக விளங்குகின்றனர். அனைத்திற்கும் சிகரமாகத் திகழ்வது.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்: உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு" - **(குறள். 110)**

என்ற குறள் மணியாகும். பெரிய அறங்களைச் சிதைத்தவர்க்கும் கழுவாய் உண்டு. ஆனால் ஒருவர் செய்த உபகாரத்தை மறந்தவர்க்குக் கழுவாய் இல்லை என்பது இதன் கருத்து. பெரிய அறங்களைச் சிதைத்தற்கு ஆன் முலை அறுத்தல். மகளிர் கருவினைச் சிதைத்தல், குரவர் தப்பிய கொடுமை முதலிய பாதகங்களைச் சான்றுகளாக காட்டுவார்.

கம்பராமாயணம்: இக்கருத்துடைய குறளைக் கம்பன் மிகச் சிறப்பாகத் தனது நூலில் கையாண்டுள்ளாள். கார்கால கழித்து தனது வானரச் சேனையைக் கொண்டு சீதை இருக்கும் இடத்தைக் கண்டறிவதாகச் சொன்ன சுக்கிரீவன் தான் குறிப்பிட்ட காலத்தில் வரவில்லை. இராமன் சினங் கொள்கின்றான். நிலையினை அறிந்து வருவதற்குத் தம்பி இலக்குவனை கிஷ்கிந்தைக்கு அனுப்புகின்றான். சீறும் சினத்துடன் வரும் இலக்குவன் மகளிர் கூட்டத்துடன் வந்து சந்தித்த தாரையால் மனம் மாற்றம் அடைகின்றான்.

"அந்தமிழ் கேள்வ நீயும்
அயர்ந்தனை யாகும் அன்றே"[15] - **(வ.வா.சி. பா.3)**

என்று கேட்கின்றான். அதனைச் செவி மடுத்த சொல்லின் செந்நன்றி கொன்றவர்கட்கு அப்பாவதை ஒழிக்கும் வழி கூட உள்ளதா? என்று கேட்கின்றான். தாய், தந்தை, குரு, அந்தணர், பசு, பெண் இவர்களைக் கொன்றவர்கள் யாவருமே கழுவாய் தேடிக் கொள்ளலாம். செய்த உதவியை மறந்தவர்கட்கு உய்யும் வழியே இல்லை என்று உணர்த்துகின்றான். அநுமன் வாய்மொழியாகக் கவிஞன், என்று கூறுகின்றான். 'எந்நன்றி கொன்றவர்க்கும்' என்ற திருக்குறள் தொடர்க்கு 'சிதையவ அகல் வதைபுரிதற்கு நகர்கும்' என்ற கம்பரின் பாடல் பகுதி விளக்கம் போல் அமைந்திருப்பதை காண்கின்றோம் அன்றோ?

'குறிப்பறிதல்' என்ற பண்பு நாடாளும் அரசனுக்கு மிகவும் இன்றியமையாதது என்பதை யாவரும் அறிவர். முகத்திலிருந்து அகத்திலுள்ளவற்றை அறிந்து கொள்ள முடியும் என்பதை வள்ளுவர்,

"அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்" - (குறள். 706)

என்ற குறள் மூலம் புலப்படுத்துவார். தன்னை அடுத்த பொருளின் நிறத்தை பளிங்கு காட்டுவது போல ஒருவரது உள்ளடக்கியை முகத்தில் பிரதிபலிக்கும்.

கம்பராமாயணத்தில் ஒரு நிகழ்ச்சி வேள்வி காத்தற் பொருட்டு இராமலக்குமணர்களை பெற்றுக் கானகத்தை நோக்கி விசுவாமித்திரன் வருங்கால் ஒரு சோலை குறுக்கிடுகிறது, அதன் வரலாறு கூறுபவனாய் மாவலிகதையைக் கூற நேரிடுகின்றது. இந்திரமிருந்து வலியக் கவர்ந்த வான் மண்களைத் திரும்ப பெற்றுத் தருவதற்காக வாமனனாக வருகின்றான். திருமால், வாமனன் மூவடிமண் வேண்டிய பெறவந்தபோது மாவலியின் குருவாகிய சுக்கீரன் தடுத்தான் தன் சீடனுக்கு எவ்வித தீங்கும்

நேரிடக் கூடாது என்ற கருத்தால், அதற்கு மறுமொழி கூறும் பாங்கில் மாவலி கூறுவது அவன் கேட்பதைக் கொடுத்தல் கூடாது; என்ன பயனாயின் எதனைக் கேட்டாலும் கொடுப்பது வள்ளல்கட்கு உரிய குணமாதலால் அதுவும் அங்கீகரிக்கப்படமாட்டாது என்றான். தனது உயிர் போவதாயினும், கொடுத்தல் நல்லது. இரத்தல் கூடாது என்பது இதன் கருத்து; இந்நீதியை "இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக உலகியற்றி யான்"(106)[16] என்ற திருக்குறளைக் கொண்டு அறியலாம். நல்லது கூறுவார் தீயதும் உடன் கூறினர். "நல்லாறு எனினும் கொளல் தீது; மேலுலகம் இல்லெனினும் ஈதலே நன்று"(222)[17] என்ற குறள் இங்கு பொதிருப்பது கண்டு மகிழ்த்தக்கது.

"கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் வடுப்பதுஉம்
உண்பதும்உம் இன்றிக் கெடும்" - **(குறள். 166)**

என்ற குறட்பாவின் கருத்துப் பொதிந்துள்ளது. இப்பாடலில் ஈவதனின் முன்னம் என்றது தடுத்தலின் விரைவு தோன்ற நின்றது நளன் கதையில் ஒரு காட்சி; நளன் அப்பொழுது அவனுக்கு தேரோட்டி; சமையல் காரணாகவும் செயல் புரிவன் கார்கோடகன் என்ற பாம்புக் கடியில் உருமாறி இருந்தவன் தமயந்தி உருமாறியுள்ள தேர்ப்பாகனைச் சோதிக்க தன் பிள்ளைகளுடன் தோழியொருத்தை அனுப்புகின்றான். பிள்ளை பாசம் எவரையும் விடாது.

"அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்" - **(குறள். 71)**

என்ற குறட்பாலும் இதனை உணரலாம்.

வாழையும் வள்ளுவமும்

மக்கள் தேடும் தேட்டங்கள் வாழையைப்போல் முற்றிலும் பிறர்க்குப் பயன்படுவதில்லை; பிறர் நலங்களுக்கென்றே தேடப் பெறுவதும் இல்லை.

பக்கங்களிலே சூழ்ந்திருந்தது. குலை வரையில் கன்றுகள் தாவிவளர்ந்து, காலமெல்லாம் காத்திருந்தாலும் தாய் இறுதியாகத் தள்ளும் ஒரே குரை கூடத் தமக்குப் பயன்படாமல் பிறர்க்குப் போய் விடுகின்றதே என்று சிறிதும் கவலை கொள்ளாமல் வஞ்சினத்திற்குத் தலை காட்டாமல், தாய் வாழையைப் போலவே கன்றுகளும் தாய்வழியை அவ் விடுதலையைக் கடைப் பிடிக்கின்றன. 'குலத்தளவே ஆகுமாம் குணம்' என்ற மொழிக்கு எடுத்துக் காட்டுகளாக திகழ்கின்றன அதன் கன்றுகள்!

"தாளாற்றித் தந்த பொருள்எல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு" - (**குறள்.** 212)

என்ற வள்ளுவமே கூறும் பற்றற்ற பான்மையை - பண்பை - முற்றும் துறந்த முனிவர்கள் சிலர் பக்கம் தான் காண முடிகின்றது. ஆறறிவு படைத்த மக்கட் பிறப்பினர் அனைவரிடமும் காணப் பெறுவது குதிரைக் கொம்புதான்.

"தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர்" - (**குறள்.** 348)

என்ற பொய்யாடுமொழிக் கிணங்க வாழையைத் தவிர மற்றையவர் மயங்கி வலைபட்டவராகவே பெரும்பாலும் காணப் பெறுவதை கூர்ந்து நோக்கினால் உணரலாம். இதில் உள்ள எஞ்சாமைக் குறிப்புக்கு வாழையைத் தவிர வேறு எடுத்துக் காட்டு காணல் அரிது. வாழையின் பொருள் எல்லாம் வேளாண்மையில் அதாவது பயன்படுதலில் - சற்றும் இழுக்கில்லாதவை. அடியிலுள்ள வேர் கிழங்கு, வாழைப் பட்டை, நார், வாழைத் தண்டு, வாழை இலை, சருகு, பூ, காய், கனி முதலிய அனைத்தும் தலை சிறந்த நிலைகளில் பயன்படுகின்றது. அதன் உலர்ந்த சருகு கூட உண்கலனாகவும் தொன்னைகளாகவும் உதவுகின்றது! வாழையில் பயன்படாத பொருள்

எதுவுமில்லை. முற்றிலும் பயன்பட்டு வாழை இங்ஙனமே பொருள்திறனை புலப்படுத்துகின்றது. இவ்வாறு வாழ்க்கைக்கு மிக அவசியமானவைகளை யெல்லாம் ந.சுப்புரெட்டியார் அவர்கள் வள்ளுவரின் குறள் மூலம் இந்நூலில் எடுத்துரைத்துள்ளார்.

பல்லாண்டு பாடிய பட்டர்பிரான்

விஷ்ணுசித்தரின் பரத்துவ நிர்ணயம் கற்றோர்க்கும் மற்றோர்க்கும் பெரு மகிழ்ச்சியைத் தருகின்றது. பாண்டிய மன்னன் தன் அமைச்சர்களையும் அரச புரோகிதர் செல்வ நம்பியையும் கலந்து யோசித்து விஷ்ணுசித்தரின் வெற்றியைக் கொண்டாடும் வகையில் ஒரு பெருவிழா எடுக்கின்றான். மதுரை மாநகர் முழுவதும் விழாக்கோலம் கொள்கின்றது. அரசன் அரண்மனையில் கற்றவர்களின் அவையைக் கூட்டி, கற்றவர்கள் அனைவர்க்கும் தலைவராய்த் திகழும் விஷ்ணுசித்தருக்குப் பட்டர்பிரான் என்ற விருதை அளித்துப் பாராட்டுகின்றன. கற்றவர்கள் இதனை ஆதரித்துக் கையொலி எழுப்புகின்றனர்.

பின்னர் விஷ்ணுசித்தரைப் பட்டத்து யானையின் மீது ஏற்றி நகர்வலம் செய்விக்கின்றான். மதுரை மக்களுக்கு அந்த நாள் ஒரு பெருவிழாவாக அமைகின்றது. வீடுகளிலும், வாசல்களிலும், தெருக்களிலும் திரண்ட மக்கள் ”விஷ்ணுசித்தர் வாழ்க!”[18] என்ற வாழ்த்தொலியை எழுப்புகின்றனர். ஊர்வலத்தில் திருச்சின்னமும் சங்கமும் கம்பீரமாக ஒலிகளை எழுப்புகின்றன. மங்கல வாத்தியங்கள் அதிர்கின்றன. வெண் கொற்றக்குடை, நிழற்ற இரு மருங்கும் கவரிகள் வீச, யானை மீது இவர்ந்து வரும் விஷ்ணுசித்தர் நகர்வலம் வரும்போது வித்துவான்கள் கட்டியும் கூறுகின்றனர். மக்கள் திரள்களிடமிருந்து, ஆகாய வீதிகளில் தேவர்கள் கூட்டம் கூட்டமாக வந்து வாழ்த்துகின்றனர். இந்திரன், நான்முகன், சிவபெருமான் முதலியோரும் அந்தக் கூட்டத்தில் காட்சி அளிக்கின்றனர்.

அந்தக் கூட்டத்தினிடேயே ஆயிரம் குரியர்கள் ஒரே காலத்தில் கூடியிருப்பதுபோல் பெருஞ்சோதி சுடர் விட்டுத் தோன்றுகிறது. மகனுடைய விழாவைக்காண வரும் பெற்றோர் போல பரமபதநாதன் பிராட்டிமாருடன் பெரிய திருவடிமீது திருவாழி திருசங்குடன் தோன்றியதே அச்சோதி வெள்ளத்திற்குக் காரணமாகும். இந்த அருள் வெள்ளத்தைச் சேவித்ததும் விஷ்ணு சித்தரின் பரமசக்தி பாட்டாக வெளிப்படுகின்றது. அந்தத் தேவாதி, தேவனுடைய சர்வ தத்துவம் முதலிய திருக்குணங்களை அநுசப்பதிற்கு முன்னே சௌந்தர்யம் (அழகு), சௌகுமார்யம் (இளமை) சௌலப்பியம் (எளிதாகப் பழகுதல்) சௌசீல்யம் (புரையறக் கலத்தல்) முதலிய திருக்குணங்களில் கண் செலுத்தி அவற்றையே சேவித்து ஈடுபட்டு ஆழ்ந்து பக்திப் பரவசாகின்றார் விஷ்ணுசித்தர்.

இதனால் தம்முடைய நிலைமையினையும் மறந்து ”காலம் நடையாடாத் பரம்பதத்திருக்கும் எம்பெருமானின் சேர்த்தியழகு (லாவண்யம்) காலமும் அசுர சக்திகளும் நடையாடுகின்றன. இருள் தருமா இவ்வுலகில் வந்து நிற்கின்றதே. பாவிகளின் கண்ணெச்சில் பட்டு எம்பெருமானுக்கு என்ன தீங்கு வருமோ? என்று அஞ்சியவர்போல் யானைக் கழுத்தின் மேல் கிடக்கும் மணியையே கைத்தானமாகக் கொண்டு பல்லாண்டு பாடத் தொடங்குகின்றார்.

”பல்லாண்டு பல்லாண்டு
பல்லா யிரத்தாண்டு
பலகோடி நூறாயிரம்....”[19] **- (ப.பா.பட்.பி. பக்.21)**

என்று ஆனந்தக் கண்ணீர் அருவி சோரப் பாடல் வெளிப்படுகின்றது. “பல்லாண்டு பல்லாண்டு” என்பது தாகவிடாய் உள்ளவன் ”தண்ணீர் தண்ணீர் என்று கூறுவது போலே, மங்களாசாசனம் பண்ணுகின்றார்.

எம்பெருமானுடைய மங்களத்தை மட்டிலுமே விரும்புகின்றவரான இவ்வாழ்வார் 'அடியோமோடும்' என்று தம்முடைய மங்களத்தையும் ஏன் விரும்புகின்றார்? தம்முடைய மங்களத்தையும் விரும்புகின்றார் என்பதில் அறிதல் வேண்டும். ஆகவே, எம்பெருமானுடை மங்களா சாசனத்தின் அபிவிருத்திக்காகவே தம்முடைய மேன்மையும் வேண்டுகிறார் என்பது தெளிவு.

நட்பியல்

நாங்கள் வந்த அன்றே இரவு எட்டு மணிக்கு லாரியும் வந்து சேர்ந்தது. சாமான்களை இறக்கிக் கொண்டு வாடகை கொடுத்து லாரியை அனுப்பி விட்டேன். முத்துச்சாமி வந்ததால் சாமான்களையெல்ல அந்தந்த இடங்களில் பொருத்தமாக வைப்பதற்கு வசதியாக இருந்தது. என் வாழ்நாளில் முத்துச்சாமியைப் போன்ற ஒரு திறமையான வேலையாளைப் பார்த்ததே இல்லை. இவன் திறமையைக் கண்டு நான் வந்த ஒன்றிரண்டு ஆண்டுகளில் என் அருமை நண்பர் கே.எஸ்.முத்துவேல் பிள்ளை தன்னுடைய அலுவலகத்தில் உதவியாளராக அமர்த்திக் கொண்டார். மாதச் சம்பளம் வாங்கினவனுக்கு ரூ.200/- சம்பளமாகவும் வெளியூர் முத்துச்சாமி எட்டாம் வகுப்பு வரை படித்தவன்; இயற்கையிலே எல்லாத் திறமைகளை அவனிடம் அமைந்திருந்தன "வெட்டிக் கொண்டு வா" என்றால் கட்டிக் கொண்டு வந்தான். இவனது செயலைப் பார்க்கும் போதெல்லாம் பாரதியாரின் 'கண்ணன் - என் சேவகன் நினைவுக்கு வருவான்' கொத்தடிமை போல் தகப்பனும் மகனும் ஜமீந்தாரிடம் பணி புரிந்தவர்களில் தந்தை பொன்னம்பலம் வயதினில் ஓய்வு பெற்றார். மகனுக்கு திரு.முத்துவேல்பிள்ளை மூலம் விடுதலை கிடைத்தது.

சாமான்களை வைக்க வேண்டிய இடங்களில் வைப்பதற்கே இரண்டு மணிநேரம் ஆயிற்று. வீட்டிலேயே உணவு கொள்ளச் செய்தேன். மறுநாள்

காலை அதிகாலையிலே மீண்டும் சாமான்களை ஒழுங்கிப்படுத்தினோம். விறகு வைப்பதற்கு புழைக்கடையில் நல்ல இடம் இருந்தது. மழையிலும் விறகு நணையாத அமைப்பு இருந்தது. ”காலையில் சிற்றுண்டி காபி அருந்தச்செய்து வழிச் செலவுக்கும் அன்பளிப்புக்குமாக ரூ.25/- கொடுத்து அனுப்பியதாக நினைவு”[20] தொகையை வாங்க மறுத்தான் வற்புறுத்தி வாங்கிக் கொள்ளச் செய்தேன். அவன்சாமன்களைப் பாதுகாப்புடன் கொண்டுவந்து சேர்த்தற்கு ஒன்பதாண்டுகாலம் இட்ட வேலைகளை யெல்லாம் முக மலர்ச்சியுடன் செய்தமைக்கும் இந்தத் தொகை போதாது; ஆனால் இத்துடன் கலந்த அன்பே விலைமதிப்பே இல்லை.

சமயம் என்பது இன்று, நேற்று, தோன்றியதால் நினைப்பிற்கு எட்டாத நெடுங்காலமாகவே அது நிலவி வருகின்றது. உலவி வருகின்றது என்றும் சொல்லலாம். சமயத்தையும் மனிதனையும் தனித்தனியே பிரித்தற்கியலாது. மக்களும் சமயத்தை விட்டுத் தனித்து வாழ இயலாத நிலையிலுள்ளனர். பகலவனையும் கதிர்களையும் தனித் தனியாகப் பிரித்தற்கியலுமா? இயலாது. அது போன்ற நிலைத்தான் இங்கும், சமயம் மக்களின் உயிரோடும் உடலோடும் ஒன்றி நிற்கின்றது. நம்மாழ்வார் இறைவனைப் பற்றிக் கூறும் போது ‘உடல் மிசை உயிரெனக் தோங்கும் பரந்துளன்’ என்றும் பாந்தண் பரவையுள் நீர்தொறும் பரந்துளன் என்றும் கூறுவர்.

இறைவனின் இருப்பைக் கூறும் கம்பநாடன் பிரகலாதன் வாய்மொழியாக அன்றாடக்கடன்கள்: மக்கள் அன்றாடம் செய் வேண்டிய கடமைகளில் கூட சமயம் தலை காட்டுகின்றது. ‘கூழானாலும் குளித்துக் குடி’, ‘கந்தையானாலும் கசக்கி கட்டு’, ‘ஆலயம் தொழுவது சாலவும் நன்று’, ‘நோன்பு என்பது கொன்று திண்ணாமை’ என்பன போன்ற முதுமொழிகளைச் சிந்தித்தால் சமயம் அறிவியலோடு தொடர்பு கொண்டுள்ளது என்பதை

இக்கவிஞரின் மூலம் பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் அவர்கள் இந்நூலில் எடுத்துரைக்கிறார்.

"கவிதையின் உயிர் போன்ற பகுதி அதில் பொதிந்துள்ள உணர்ச்சி. உணர்ச்சியற்ற கவிதை வெற்றெனக் தொடுக்கப் பெற்ற ஒரு சொற்கோவையே. நம்மிடம் தோன்றும் உணர்ச்சிப் பெருக்கை நாம் ஆராய்ந்து பிரித்துப் பார்க்க முனைந்தால் அ.து இயலாத செயலாக முடியும். கடலலைகளது ஒருவிதமாக எண்ணி முடிவு காட்டலாம் எனத் தோன்றும். நம் உணர்ச்சிகளை ஒருநாளும் எல்லை கட்டி வரையறுத்துப் பேசமுடியாது என்பது தெளிவாகப் புலனாகும். இந்த உணர்ச்சிகளைப்பற்றி மேனாட்டு உடலியலறிஞர்களும் உளவியல் அறிஞர்களும் ஆராய்ந்து அறிவியலடிப்படையில் சில கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர். அவற்றை ஓரளவு தொகுத்து வகைப்படுத்தி மூன்று இயல்களில் கூறப்பட்டுள்ளது."[21]

உடலும் உள்ளமும் நன்னிலையில் உறவு கொண்டிருந்தால் தான் நல்லுணர்ச்சிகள் தோன்றி, கவிதையை அநுபவிப்பதற்குத் துணை செய்யும். உணர்ச்சிகளின் திரட்சியே மேலீடானமன உணர்ச்சிகள். இவையே நம்மைக் கவிதைகளைத் படிக்கத் தூண்டுபவை. உணர்ச்சிகளே மீப்பண்புகளுக்கும் காரணமாக நாம் பல்வேறு கவிதைகளைப் படிக்கின்றோம். இவற்றை படித்து அநுபவிதற்கேற்ற மன நிலைகளையும் பெறுகின்றோம். இத்தகைய உணர்ச்சிகள், உள்ளக்கிளர்ச்சிகள் ஆகியவைபற்றி இந்நூல் விரித்துப் பேசுகின்றது.

கவிதையின் தலைமைப் பண்பு அ.்.து உணர்த்தும் உண்மையில்தான் உள்ளது. செய்தி கூறாத கவிதை வெற்றெனத் தொடுத்தலாகும். உயிரில்லாத சடம் போன்றது.

"நல்லது செய்தல் ஆற்றார் ஆயினும்

அல்லது செய்தல் ஓம்புமின்"[22] - (ம.க. பக்.13)

என்பது போன்ற அனைவருக்கும் இன்றியமையாத உண்மை போன்றவை கவிதையில் அமைதல் வேண்டும். மரபுக் கவிதையாயினும் இன்றையக் கவிஞர்கள் ஏதோ ஒரு கருத்தைக் கவிதைகள் மூலம் மக்களுக்கு உணர்த்துகின்றனர். இந்த நோக்கத்தை முக்கியமானதாகக் கொண்டே கவிதைகளைப் படைக்கின்றனர் என்பதை பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் அவர்கள் எடுத்துரைத்துள்ளார்.

அணிகலன்கள் கவிதைக்கு அழகு செய்வன அதில் அமையும் அணிகள் உவமையும், உருவகமுமே அணிகள் கையாளப் பெற்று வருகின்றன. 'தாமரை முகம்' என்ற தொடரை 'முகத்தாமரை' என்று மாற்றியமைத்தால் உருவகமாகி விடுகின்றது. பால் செறிந்து பாலாடையாவது போல, அடங்கிச் செறிந்த உவமையே உருவகம் ஆகிறது.

உவமையே பிற்காலத்தில் தோன்றிய நூற்றுக் கணக்கான அணிகட்கும் தாய். இதனை அப்பைய தீட்சிதர் என்ற வடமொழிப் புலவர் சித்திர மீமாம்சையில் இவ்வாறு கூறிய கருத்துகளின் அடிப்படையில் மரபுக் கவிதைகளைப் படைத்துவரும் வாழும் கவிஞர்களில் சிலர்தம் கவிதைகளை ஆராய்வோம்.

இளமையிலேயே கவிதை ஊற்று இவரது உள்ளத்தில் தோன்றியிறுத்தல் வேண்டும். கருவிலேயே திருவுடையவராதல் படிப்பும் அநுபவம் அந்த ஊற்றை வெள்ளமாகப் பெருக்கெடுத்து ஓடச் செய்திருக்க வேண்டும். கவிஞர் கூட்டத்தில் முன்ணனியில் நிற்பவர்களில் ஒருவராகத் திகழ்பவர்.

குடியியல்

உயர்குடியிற் பிறந்தவர்களிடம் தோன்றும் குற்றம் அளவால் சிறிதானாலும் விசும்பிடத்துத் திங்களிடம் காணப்படும் களங்கம்போல் பலரறிய ஓங்கித் தோன்றும்.

"குடிப்பிறந்தார் கண்விளங்கும் குற்றம் விசும்பின்
மதிக்கண் மறுப்போல் உயர்ந்து" - (குறள்.957)

ஒருவனுடைய நல்ல பண்புகளுக்கிடையில் அன்பற்ற தன்மை காணப்பட்டால் அவனை அவனுடைய குடிப்பிறப்புப் பற்றி ஐயப்பட நேரும்.

"நலத்தின்கண் நாரின்மை தோன்றின் அவனைக்
குலத்தின்கண் ஐயப் படும்" - (குறள். 958)

உயர்குடியில் பிறந்தவர்கள் ஒழுக்கமும், வாய்மையும் நாண்மும் ஆகிய இம்மூன்று பண்புகளிலிருந்தும் தவறாமல் இயல்பாகவே நன்னெறியில் வாழ்வர்.[23]

பெரியாரின் துணை

வள்ளுவர் பெருமான் அருளிய முப்பாலில் பொருட்பால் இவ்வுலக வாழ்வு - பொதுவாழ்வு - சீருடன் அமைய ஒருகலங்கரை விளக்குபோல, ஒரு துருவ மீன் போல வழிகாட்டிக் கொண்டிருப்பது. அதில் ஓர் இடம் 'பெரியோரைத் துணைக் கோடல்' என்ற அதிகாரம் ஆகும். நம் காலத்தில் வாழ்ந்த தந்தை பெரியாரைப் போல ஒருவரை அல்லது பலரை நினைந்து இவ்வதிகாரத்தை அமைத்திருக்க வேண்டும் எனச் சிந்திக்கத் தோன்றுகின்றது. இல்லையா?

நமது வாழ்வில் அறத்தின் பெருமையை உணர்த்தவர்களாகவும் தம்மை விட அநுபவம் முதிர்ந்தவர்களாகவும் உள்ள பெரியோர்களின்

துணைவேண்டியது மிகவும் இன்றியமையாதது. 'மாசற்றார் கேண்மை' மிக மிக அவசியமானது; முக்கியமானது.

மக்கள் தலைவர் - முதல் அமைச்சர் காமராஜ் அவர்களும், தந்தை பெரியார் அவர்களின் ஆசியையும் ஆலோசனையும் பெற்றவர்கள். அவர்கள் இருவரின் மனமும் தூய்மை யுடையதாக இருந்தது. அறிஞர்களின் பாராட்டையும் பொது மக்களின் புகழ் மாலைகளையும் பெற்றார்கள் அவர்கள். காரணம், தந்தை பக்.116

திருக்குறளுக்குப் பல அரிய உரைகள் உள்ளன. அவை அறிஞர்கட்கே உரியவை. இந்தத் திருக்குறள் தெளிவு இளைஞர் முதல் வளர்ந்தவர் வரை எளிதாக அறியும் வண்ணம் அமைக்கப் பெற்றுள்ளது. படிப்போர் ஒரு சில உண்மைகளையாவது கடைப்பிடித்தும ஒழுக வேண்டும் என்பது பேரா.ந.சுப்புரெட்டியாரின் விருப்பம். அதுவே வள்ளுவப் பெருந்தகைக்கு நாம் காட்டும் கைம்மாறு. இதற்காகத்தானே அவர் நமக்கு நூலை அருளினார்!

முடிவுரை

அறம், பொருள், இன்பம் இவற்றில் அறம் வீறு மிக்கது. அறமே வாழ்க்கைக்கு வேண்டிய சிறப்பையும் தரும், செல்வத்தையும் நல்கும்; இம்மூன்றினையும் வள்ளுவரின் அறநெறிகள் மூலமும், கவிதை புலம்பெற்ற கவிஞர்களின் வாயிலாக நட்பு, தாய்மை, சமயம், வாழையும் வள்ளுவமும் போன்ற நல்லொழுக்கத்திற்கு தேவையானவற்றை குறள்களின் அடிப்படையிலும், பட்டர் பிரானின் பாடல் வரிகளிலும் மிக சிறப்பாக எடுத்துரைத்துள்ளார் பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் அவர்கள்.

அடிக்குறிப்புகள்

1. வள்ளுவரின் வாழ்வியல் சிந்தனைகள் (வ.வா.சி.), பக். எண்.28.
2. மேலது., பக். எண்.29.
3. தமிழ் பயிற்றும் முறை (த.ப.மு.), ந.நூ. 10, பக்.எண்.23.
4. வள்ளுவரின் வாழ்வியல் சிந்தனைகள் (வ.வா.சி.), பக். எண்.31.
5. மேலது., பக். எண்.32.
6. மேலது., பக். எண்.33.
7. தமிழ் இலக்கியங்களில் அறம்-நீதி-முறைமை (த.இ.அ.நீ.மு.), பக்.எண்.13
8. மேலது., அறநெறிச்சாரம் பா.57, பக்.59.
9. மேலது., பக். எண்.34.
10. மேலது., பக். எண்.35.
11. தமிழ் இலக்கியங்களில் அறம்-நீதி-முறைமை (த.இ.அ.நீ.மு.), பக்.எண்.62
12. மேலது., இயல்-6, பக். எண்.37.
13. சிலப்ப. மங்கல வாழ்த்து பக். எண்.41.
14. வள்ளுவரின் வாழ்வியல் சிந்தனைகள் (வ.வா.சி.) 'இல்லற நெறி' பக்.எண்.201-207.
15. மேலது., 'கம்பராமாயணம்', கிட்கிந், கிட்கிந்தை பக்.எண்.48.
16. மேலது., 'இரவு அச்சம்' பக். எண். 2.
17. மேலது., 'ஈகை' பக். எண்.2.
18. விட்டு சித்தின் விரித்த தமிழ் (வி.சி.வி.த.) பக். எண்.29.
19. மேலது., பக். எண்.21.
20. நினைவு குமிழிகள் (நி.கு. - 3) பக். எண்.13.
21. பரகாலன் பைந்தமிழ் (ப.பை) பக். எண். 6
22. வாழும் கவிஞர்கள் 'மரபுக் கவிதை' பக். எண்.13.
23. திருக்குறள் தெளிவுரை., பக். எண்.195.

இயல் - 2

பிற தமிழ் கவிஞர்களின் வள்ளுவம் பற்றிய ந.சுப்புரெட்டியாரின் பார்வை

முன்னுரை

நாடறிந்த நல்ல தமிழறிஞர் பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் அவர்கள் சுந்தரத் தமிழுக்குச் சொந்தக்காரர்; இன்று வாழும் தமிழறிஞர்களில் போற்றிப் பாதுகாக்க வேண்டிய பெட்டகம்.

தமிழைக் கற்பவர் சிலர்; கற்றவழி நிற்பவர் சிலரில் சிலர்! கற்றவழி நின்றதோடு, நானிலத்தை நல்வழிப்படுத்த சமூகம் மேம்பாடடைய வழிகாட்டுவோர் வெகுசிலர்! தமிழால் தரணியில் உயர்பீடத்தில் நிற்பவர் பலர்! தமக்காய் தமிழை விற்பவர் பலர்! தமக்கெனத் தமிழைப் பயன்படுத்தி, மலரின் மகரந்தத்தில் தேனை நுகர்ந்து, மரப்பொதியில் மனித சமுகத்திற்குச் சேர்த்து வைக்கின்ற தேனீயைப் போலத் தமிழ் கூறும் நல்லுலகிற்கு உழைக்கும் நற்றமிழறிஞர் ந.சுப்புரெட்டியார்.

கவிஞர் முடியரசன் தொடங்கி, மரபில் உருவாகி புதுமையில் பூத்த வைரமுத்துவரை சிறந்த கவிஞர்களை, தமிழ் கூறும் நல்லுலகின் மணிமுடியாய் திகழும் மாபெரும் கவிஞர்களின் புதையலை ஆய்வு செய்திருப்பது பாராட்டுக்குரியது.

தோண்ட, தோண்டப் புதையல் கிடைப்பதைப்போல, அரிய இந்த படைப்பாளிகளின் படைப்பை ஆய்வு செய்யச் செய்ய, புதிய புதிய செய்திகள் கிடைக்கின்றன. அனைவருக்கும் இன்றியமையாத உண்மை போன்றவை கவிதையில் அமைதல் வேண்டும். மரபுக் கவிதையாயினும் இன்றைய கவிஞர்கள் ஏதோ ஒரு கருத்தைக் கவிதைகள் மூலம் மக்களுக்கு உணர்த்துகின்றனர். இந்த நோக்கத்தை முக்கியமானதாகக் கொண்டே கவிதைகளைப் படைக்கின்றனர்.

இவ்வாறு கூறிய கருத்துக்களின் அடிப்படையில் மரபுக் கவிதைகளைப் படைத்த வாழும் கவிஞர்கள் சிலர்தம் பின்வருமாறு:

1. கவிஞர் முடியரசன் (1920)
2. கவிஞர் எஸ்.கே.இராமராசன் (1922)
3. கவிஞர் நாரா.நாச்சியப்பன் (1922)
4. திருமதி சௌந்தர கைலாசம் (1927)
5. டாக்டர் ரெ.முத்துக்கணேசன் (1927)
6. டாக்டர் இரா.திருமுருகன் (1929)
7. கவிஞர் ஆ.பழனி (1931)
8. பன்மொழிப் புலவர் மு.கு ஜகந்நாத ராஜா (1933)
9. டாக்டர் சவகர்லால் (1936)
10. கவி வேந்தர் கா.வேழவேந்தன் (1936)
11. டாக்டர் அர.சிங்கார வடிவேலன் (1937)
12. டாக்டர் பு.மு. சாந்த மூர்த்தி (1939)
13. கவிஞர் (டாக்டர்) தா.ஜெயபுன்னிஸா (1944)
14. கவிஞர் குழ.கதிரேசன் (1949)
15. கவியரசு ஏ.வைரமுத்து (1953)

மார்கண்டன் வயது போல் அமைந்த இந்தப் பதினாறு கவிஞர்களின் படைப்புகள் பதினாறு பேறுகளுக்குச் சமமானவையாகும். இலக்கண வரம்பை மீறி இவர்கள் கவிதைப் படைப்புகள் தோன்றா.[1] பிற கவிஞர்களின் கருத்துக்களை பற்றி தமது புத்தகத்தில் அவர் எழுதிய வரலாற்று நூல் பற்றியும் எடுத்துரைத்துள்ளார். வாழும் மரபுக் கவிஞர்களை அவர்கள் பிறந்த ஆண்டை அடிப்படையாகக் கொண்டு 'அவர்களின் படைப்புகள்' என்று பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் அவர்கள் ஆராய்ந்துள்ளார்:

கவிஞர் முடியரசன்

கவிஞர் முடியரசன் செட்டி நாட்டு கவிஞர்களுள் தலையாயவர். மதுரை மாவட்டம் (அப்போதைய) பெரிய குளத்தில் பிறந்தவர் (1920) அடியேனைப் போலத் தெலுங்கு பேசும் குடும்பத்தை சேர்ந்தவர் துரைராஜ் என்பது பெற்றோரால் இடம்பெற்ற பெயர். அழுத்தமான தமிழ்ப் பற்றின் காரணமாக அப்பெயரை முடியரசன் எனத் தமிழாக்கிக் கொண்டார். .

ஒருவரின் கவிதைகளை மதிப்பிட வேண்டுமானால் இரு நோக்கில் ஆய்ந்து மதிப்பிடலாம். அவை, உருவம் உள்ளடக்கம் என்பனவாம்.

1. உருவம் - இதில் கற்பனை, சொல்லாட்சி, ஒலிநயம், உருவகம், யாப்பமைதி, அணிநலம், சுவை முதலியன அடங்கும்.

2. உள்ளடக்கம்- கவிதைகள் நுவலும் கருத்து, இதில் கவிஞரின் பல்வேறு கொள்கைகள், வாழும் சமுதாயம் பற்றிய குறிப்புகள், அரசியல் முதலியவை அடங்கும்.

இந்த அம்சங்கள் ஒருசில அமைந்திருப்பினும் சாலும், ஒன்றிரண்டு நலன்கள் சிறப்புடன் அமைந்திருந்தாலும் கவிதை உணர்த்தும் செய்தி மிகவும் முக்கியம்.

கவிஞர் முடியரசனின் 'இயற்கை உலகம்' என்ற தலைப்பின் கீழ் 'நிலவு' பற்றிய ஒரு பாடலில் காணலாம்.

"மதிப்புடையார் பேசுவதைக் கேட்டல் நன்று
மாண்புவரும் எனக்குழுமும் விண்மீன் கூட்டம்
அதுமகிழ வானத்து மேடை எறி
அம்புலியார் சொற்பொழிய முகிலன் ஓடி
எதிரியெனக் கூட்டத்துள் ஒளிம றைத்தான்

இடியிடித்தான் குழப்பத்தை ஆக்கி விட்டான்
இதிலென்ன கண்டனரோ மதியர் நாளை
ஏறாமல் இருப்பாரோ மேடை மீது"[2]

- (இ.நி. பா.1)

விண்மீன்களின் பெருங்கூட்டம் ஒன்றில் மதியர் என்னும் அம்புலியார் மேடை ஏறிச் சொற்பொழிவு நிகழ்த்துகின்றார். இதனைப் பொறுக்காத எதிர்க்கட்சி முகிலன் விளக்கை அனைத்து ஒளியை மறைக்கின்றான். இடியிடித்தும் குழப்பதை உண்டாக்குகின்றான். முடிவில் மீண்டும் அமைதி நிலவுகின்றது. கூட்டம் கலையவில்லை. மதியார் - அம்புலியார் மீண்டும் விண்மேடையில் ஏறிச் சொற்பொலிவு நடத்துகின்றார். விடியும் வரை சொற்பொழிவு அற்புதமாக நடைபெறுகின்றது.

கவிஞர் இராமராசனின் மரபு வழிக் கவிதை

கம்பராமன் என்றழைக்கப்படும் இவர் சேலம் மாவட்டம் நாமக்கல் வட்டம் வரகூர் என்ற சிற்றூரில் 1922-ல் பிறந்தவர். சொந்த ஊரில் நம்பெருமான் ரெட்டியார் என்ற பெரும்புலவரிடம் கல்வி பயின்றார். இளமையிலேயே கவிதை எழுதும் ஆற்றல் இவரிடம் முகிழ்த்தது. பின்னர் திருவையாற்று அரசர் கல்லூரியில் பயின்று (1941-45) வித்துவான் பட்டம் பெற்றார். வித்துவான் பட்டம் பெற்ற பிறகு கவிதை இயற்றும் ஆற்றல் வேகமாக வளர்ந்தது. 1947-ல் சேலம் மாவட்டம் வேலூர் கண்டர் உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியர் பணியேற்று 1981-ல் ஓய்வு பெற்றார். பின்னர் தஞ்சைத் தமிழ் பல்கலைக் கழகத்தில் அகராதித் துறையில் ஆண்டுகள் துணைப் பதிப்பாசிரியராகப் பணியாற்றி நிரந்தரமாக ஓய்வு பெற்று வேலூரில் வாழ்ந்து வருகிறார்.

இவர் மரபு வழியில் கவிதை இயற்றுவார். பாவினங்களாகிய தாழிசை துறை, வருத்தம் ஆகிய யாப்புகளில் தான் இவர் கவிதைகள் அமைகின்றன.

புதியவகைப் பாடல்கள் கூட இவர் இயற்றுவதில்லை. இவர் பாடல்கள் யாவும் சொற்சுவை, பொருட்சுவை, மிகுந்த புலவர்களின் கவனத்தை கருத்தையும், கவருவனவாக அமைகின்றது.

வைணவக் குடும்பத்தைச் சார்ந்தவர், வைணவச் செம்மல் திரு.பு.ரா புருடோத்தம நாயுடு அவர்கள் இவருடைய ஆசிரியர். பன்மொழிப் புலவர் வே.வேங்கட ராசுலு ரெட்டியார் அவர்களிடம் நெருங்கிய தொடர்புடையவராக இருந்தார். இவர் இயற்றிய நூல்கள் இரண்டு. அவை,

- **மேக நாதம் (இந்திரசித்தைப் பற்றியது)**
- **வரதோயம்**

என்பன.[3] வேலூரில் பணியேற்ற பிறகு காட்டுப் புத்தூரில் கோயில் கொண்டுள்ள ஆந்திர நாட்டு அடிகள் வரலாறு பிரம்மேந்திர கீதம் என்ற பெயரால் இயற்றப் பெற்றது.

தண்டபாணி சுவாமிகள், திருவரங்கப் பெருமான் மீது திரவரங்கத் திருவாயிரம் இயற்றியுள்ளார். அதுபோல் திருவேங்கட முடையான் மீது ஒரு பக்திப் பனுவல் இயற்ற வேண்டும் திருவாயிரம் என்ற நூல் உருவாயிற்று. இதில் அடங்கிய சிற்றிலக்கியங்கள் (4) கலி வெண்பா (5) பிள்ளைத்தமிழ் (6) கலம்பகம் (7) அலங்காரம் (8) பதிகங்கள் (9) ஒருபா ஒருபஃது (10) இரட்டை மணி மாலை (11) மும்பணக் கோவை (12) நான்மணிமாலை அனைத்திற்கும் பாடல் நாயகன் திருவேங்கடமுடையானே... இவை வெகுளி வந்தால் குமரகுருபர அடிகள், பிரகாச அடிகள் போல் இராமராசன் திகழ்வார் என்பதற்கு ஐயமில்லை.

திருவேங்கடமுடையான் மீது எழுதிய பாடல்களில் முதலில் திருப் பல்லாண்டில் இரண்டு பாடல்களைப் பார்ப்போம்.

“பல்லாண்டு பல்லாண்டு வேங்கடக் குன்றின்
பயின்றோர்க்கு நீல முகிலே

பல்லாண்டு பல்லாண்டு நின்கொற்ற மார்பிற்

படிந்தோங்கு கருணை வடிவே”[4]

- (வா.க. பக்.எண்.37, பா.1)

இதில், வேங்கடவனுக்கு அவன் திரு மார்பில் “அகலகில்லேன் இறையும்“ என்று அகலாதிருக்கும் அலர்மேல் மங்கைக்கும் பல்லாண்டு பாடுகிறார் ஆசிரியர்.

கவிஞர் நாரா.நாச்சியப்பனின் கவிதை திறம்

இவர் செட்டிநாட்டுக் கவிஞர் குழாமைச் சேர்ந்தவர். பாவேந்தர் பரம்பரைக் கவிஞர்களில் ஒருவர். சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் வட்டம் குன்றக்குடிக்கு அடுத்த ஆத்தங்குடி முத்துப் பட்டிணத்தில் பிறந்தவர்(1927). கோனா பட்டில் உயர்நிலைப் பள்ளிப் படிப்பை முடித்துக் கொண்டு (1946-1947) திருச்சி தேசியக் கல்லூரியில் இடைநிலை வகுப்புவரை படித்தவர். கல்லூரி வாழ்விலேயே கவிதைகள் எழுதத் தொடங்கி இன்று வரை எழுதிக் கொண்டிருப்பவர். சில ஆண்டுகட்கு முன்னர் திருச்சியில் நடைபெற்ற பாரதிதாசன் நூற்றாண்டு விழாவில், “பாரததிதாசன் விருது“, பத்தாயிரம் பொற்காசுகள் வழங்கி சிறப்பிக்கப் பெற்றவர். சுமார் முப்பத்தைந்து ஆண்டுகளாக எழுதிய மரபுக் கவிதைகளை தொகுத்து முதல் (1980) இரண்டாவது (1981) தொகுதிகளாக வெளியிட்டவர். கவிஞர் செட்டி நாட்டைச் சேர்ந்தவர். நகரத்தார் மரபினர் என்பதை கவிஞர் கூறுகின்றார்.[5]

கவிஞர்களின் இலக்கிய கூற்று

வழிவழி வரும் சமூக இயலையும் பண்பாட்டையும் அறியும் திறவுகோல்: எல்லா மொழிகளிலுமே அம்மொழி பேசுகின்றவர்களின் பண்டைச் சமுதாய வாழ்வையும் பண்பாட்டையும் அறிவதற்குரிய நூல்கள்

இருக்கும்; பெரும்பாலும் அவை இலக்கியமாகவும் வரலாற்று நூல்களாகவும் திகழும்.

பல்கலைக்கழகமும் தமிழ் இலக்கியத் துறையும் கல்வி அறக்கட்டளைச் சொற்பொழிவு (1996-க்குரியது) நிகழ்த்துமாறு நா.சுப்புரெட்டியாருக்கு அழைப்பு விடுத்தமைக்கு மிக்க நன்றி கூறி, கடந்த அறுபதாண்டுகட்கு மேல் அவர் மேற்கொண்டு ஆற்றிவரும் இலக்கியத் தொண்டினை பாராட்டித் தமிழ் இலக்கியத் துறையில் மதிப்பியல் பேராசிரியராக நியமனம் செய்து பெருமைப்படுத்தியதையும் நினைவு கூர்ந்துள்ளார்.

இந்தப் பல்கலைகழக வரலாற்றில், ”இன்று நான் ஒருவனே வாழ்நாள் மதிப்பியல் பேராசியராக உள்ளேன்”[6] என்ற பெருமிதம் அவருக்கு உண்டு. புதிய விதிகளின்படி 70 அகவைக்கு மேல் ஒருவரும் மதிப்பியல் பேராசிரியராக இருக்க முடியாது.

1940-41இல் நா.சுப்புரெட்டியார் சைதை ஆசிரியர் பயிற்ச்சிக் கல்லூரியில் பயின்றபோது நாள்தோறும் மாலை நேரங்களில் தியாகராச நகரில் உள்ள பனகல் பூங்காவுக்கு வருவதுண்டு. கால் நடையாகத்தான் குறுக்கு வழியில், இப்போதுள்ள சி.ஐ.டி.நகர் அன்று வெறும் பொட்டலாக வெற்றிடமாக இருந்தது. அங்கொன்றும் இங்கொன்றுமாக சிறுசிறு வீடுகள் காணப்பெற்றன. வரும்போது தனிமையாக, சில சமயம் ஒரு சில சாலை மானக்கர்களுடன் அவர் வருவதுண்டு. பூங்காவில் நல்ல காற்று வாங்கிக் கொண்டு அரட்டை அரங்கத்தையும் நடத்துவண்டு. இப்பொழுது அந்தக் காலத்தை அசைபோட்டு மகிழ்வதை தவிர, தூரமாக அந்தக் காலத்திற்குப் போக முடியுமா? என்ன? (அவரது மனதிற்குள் கேட்பதுண்டு). அந்த காலமும் ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டிருந்த காலம். பூங்காப்பகுதியில்

சில சமயம் அரசியல் கூட்டங்கள் நடைபெறுவதுண்டு. அவற்றில் நம் அருமை இராஜாஜி, கல்கி ஆசிரியர் இரா.கிருட்டிண மூர்த்தி போன்றவர்கள் பங்கேற்றுப் பேசியதை அவர் நினைவு கூர்ந்தார். அப்போது அவர் “ஆனந்த விகடன்”, திரு.வி.க.வின் “நவசக்தி” போன்ற பருவ இதழ்களில் பணியாற்றியதாக நினைவு. மாணவப் பருவத்தில் நான் கல்கியின் துணிவான பேச்சைக் கேட்டு அவர் மகிழ்வதுண்டு.

சோழமண்டலத்தில் “திருவாலி நாடு“ என்ற ஒரு பகுதி உண்டு. இது “மங்கை நாடு“ என்று கருதவும் இடமுண்டு. இப்போது சிறப்புடன் திகழும் “திரு நகரி“ப் பகுதியைச் சார்ந்தது. இந்தத் திவ்விய தேசத்தின் அருகிலுள்ளது திருக்குறையலூர் என்ற சிற்றூர். இந்த ஊரிலுள்ள கள்ளர் குடியில் தோன்றிய ஒருவர் சோழ அரசனுக்குத் சேனைத் தலைவனாக இருந்தார். இவருக்கு ஒரு மகன் பிறந்தான். பிறந்த ஆண்டு நள என்பது மாதம் கார்த்திகை நாள் முழுமதியம் கூடிய கிருத்திகை நட்சத்திரம். கலந்த திருக் கார்த்திகையில் கார்த்திகை வந்தோன் வாழியே“ என்பது வாழித் திருநாமம். இவரைத் திருமாலின் சார்ங்கம் என்ற வில்லின் கூறாக அவதரித்த கொள்வர். “பெற்றோர் இட்ட பெயர் கலியன் என்பதாகும். இவருக்கும் பரகலான், கலி கன்றி முதலிய திருநாமங்களும் உள்ளன.”[7] இது போன்ற வரலாற்றுகள் உரைநடைகளாகவும் இடம்பெற வேண்டும் என்பது பேராசிரியரின் கருத்து.

தமிழில் வாழ்வை அடிப்படையாகக் கொண்ட இலக்கியம் மற்றும் இலக்கண நூல்கள் இருப்பது அம்மொழியின் தனிச்சிறப்பாகும். வாழ்க்கைக்கே இலக்கணம் வகுத்துக் காட்டிய பெருமை தமிழனுடையது. இவ்வுலகில் எம்மொழியிலு மிராத பெருமை தமிழ் மொழியில் காணப்படுகின்றது. புறநானூறு, அகநானூறு போன்ற சங்க இலக்கியங்களிலிருந்து பண்டைத் தமிழர்களின் சமூக வாழ்க்கையையும்

பண்பாட்டையும் அறிந்துகொள்ளலாமென்றாலும் ‘இப்படித்தான் குறிக்கோள் வாழ்க்கை அமையவேண்டும்.’ என்று தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் திட்டமான குறிப்புக்கள் காணப்பெறுகின்றன. தமிழர்கள் வாழ்க்கையை அகவாழ்க்கை என்றும் புறவாழ்க்கை என்றும் இரு கூறிட்டுப் பேசுவர். வாழ்க்கையின் குறிக்கோட் பொருளாகிய அறம், பொருள், இன்பம், வீடு போன்ற நான்கு பகுதிகளில் இன்பத்தை அகத்திலும் ஏனைய மூன்றனைப் புறத்திலும் அடக்கினர்.

கல்வி பற்றிய அறிஞர்களின் கூற்று

கல்வியைப் பற்றியும் நடைமுறைக் கல்வியைப் பற்றிப் பலர் கூறும் கருத்துகளைப் பற்றியும் நாம் சிந்தித்தால், இரண்டிலுள்ள குறைகள் ஒரே காரணத்தால் எழுகின்றன என்பதை பரவுகின்றன. பல அறிஞர்கள் கல்வியைப் பற்றி கூறும் குறைகள் யாவும் கற்பத்திலேருந்தை எழுகின்றது. பெரும்பாலான ஆசிரியர்களுக்கு கற்பித்தல் தம்முடைய நோக்கம் என்பதைப் பற்றிய தெளிவான கருத்தே இருப்பதில்லை. தாம் மேற்கொள்ளும் முறைகளும் சரியானவைதானா என்பது பற்றியும் அவர்களிடம் தெளிவான எண்ணம் இல்லை.

ஆனால் கல்வியைப் பற்றி திறனாய்வு குறைகளை எடுத்துக் காட்டுவோரின் திடமான கருத்துகளை கொண்டுள்ளனர். கல்வியால் என்ன விளைய வேண்டுமென்று, அவர்கள் எடுத்துக்காட்டில் கற்பிக்கும் ஆசிரியர்களையும், தேர்வுகளில் வெற்றியடைந்து வெளிவரும் மாணக்கர்களையும் குறை கூறுகின்றனர். ஆனால் பெரும்பான்மையான திறனாய்வாளர்கள் கல்வியைப்பற்றி கூறுவோர் ஆசிரியர்களைப் போலவே குறையுடையவர்கள் அவர்கள் ஓர் உண்மையை சரியாகப் புரிந்து கொள்வதில்லை. கல்விக்குப் பொறுப்புள்ளவர்கள் ஆசிரியர்களைச் செய்யும்படி ஏவுவது ஒன்று. இத் திறனாய்வாளர்கள் ஆசிரியரிடம்

எதிர்பார்ப்பது மற்றொன்று. கல்வியை இயக்குவோர் ஒன்று கூற, இத்திறனாய்வாளர் வேறொன்றை எதிர்பார்த்தால் ஆசிரியர்கள் என்ன செய்ய முடியும்? தம்முடைய நோக்கம் யாது என்பது பற்றித் தனது நோக்கம் என்ன என்று தெளிவாக அறிந்து கொள்ளாமல் ஆசிரியர்களும் தவறு செய்கின்றனர். ஆசிரியர்களின் நோக்கம் யாதாக இருக்க வேண்டும் என்பதைப் புரிந்து கொள்ளாத திறனாய்வாளர்களும் தவறு இழைக்கின்றனர். தாம் செல்ல வேண்டிய திசையை அறியாது, ஆசிரியர்கள் சென்று கொண்டேயிருந்தால் அவர்கள் சரியான இடத்தை அடைவது எங்ஙனம்? ஆசிரியர்கள் எத்திசையில் செல்ல வேண்டும் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

"ஒவ்வொரு துறையைப்பற்றியும் அத்துறை வல்லுநர்களே எதையும் கூறுவதற்கு உரியவர்கள் என்ற நியதி இருந்தால் இத்தகைய "வேண்டா கருத்து வேறுபாடுகள்" எழுவதற்கு வாய்ப்புகளே ஏற்படா. மருத்துவத்துறை, பொறியியல் துறை வேறு பல நுணுக்கமான துறைகளில் நடைபெறும் வேலை நுணக்கத்தைப்பற்றி அத்துறைகளைச் சாராதவர்கள் எதையும் சொல்வதில்லை. அவற்றில் குறை கூறவும் அவர்கட்குத் தெரியாது. ஆனால் கல்வியைப் பற்றி எவரும் எதை வேண்டுமானாலும் கூறுகின்றனர். இதற்குக் காரணம், பெரும்பாலான ஆசிரியர்கட்குத் தம் துறையில் அதிக நம்பிக்கை இல்லை, கல்வித் துறையில் தொழில் நுட்பம் எத்துணையளவு ஆராய்ச்சிகளால் வளர்ந்துள்ளது என்பதை அறிந்து கொண்டு அதற்கேற்றவாறு தாம் பணியாற்ற வேண்டும் என்பதை அவர்கள் புரிந்து கொள்ள தவறுதல் உண்டு. இந்நிலையால் தான் கல்வித்துறையில் சிற்சில அவலநிலை ஏற்பட்டு வருகின்றது"[8] என்கிறார்.

கல்வி என்பத இயற்பியல் சூழ்நிலைக்கும் சமூகச் சூழ்நிலைக்கும் பொருத்தப்பட்டு அடைவதே என்பதையும் மாணாக்கர்களின் பல்வேறு

ஆளுமைக் கோலங்களை ஓரளவு கட்டுப்பாடுள்ள வகுப்பறையிலும், ஓரளவுகட்டுப் பாடற்ற நிலையிலுள்ள வகுப்பறைக்கு வெளியிலும் புலனாவதைத் தெளிவாக்குவதும் குழந்தையின் வளர்ச்சியும், குழந்தைக் கல்வியில் குடிவழியும் சூழ்நிலையும், மாணாக்கர்களின் கல்வியில் ஊக்குநிலை பெரும்பங்கு வகுத்தலும், கற்றலில் அடங்கிய மூலக்கூறுகளாகிய அக்கறை, கவனம், புலன்காட்சி, கற்பனை, சிந்தனை, நினைவு போன்றவற்றையும் அரசு கடைபிடிக்கவேண்டும். இவையே கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களும் மாணாக்கர்களின் பெற்றோர்களும், கல்வியில் ஆர்வங்காட்டும் பொது மக்களும் கருத்தில் இருத்த வேண்டியவை.

ஒரு முறையான அமைப்பில் தரமான விழுமிய நூலைப் படைத்த பேரா.ந.சுப்புரெட்டியாரின் பெருந்தொண்டு பாராட்டப் பெற வேண்டியதாகும். ஆசிரியர்களும் கல்வியில் பள்ளி, கல்லூரி மாணவர்களும் கல்வியில் நாட்டமுள்ள பெருமக்களும் இந்நூலை தக்க முறையில் பயன் படுத்துவார்களாயின் அதுவே அவர்கள் நூலாசிரியருக்குச் செய்யும் பெரு நன்றியாக அமையும்.

நா.சுப்புரெட்டியார் பிறந்த சிற்றூர்(நினைவுகள்)

திருச்சி மாவட்டத்தில் இலால்குடி வட்டத்தில் பெரகம்பி என்பது சிற்றூர். என் அன்னையர் பிறந்த ஊர் நீர் வளமும் நில வளமும் மிக்க அழகியதோர் ஊர். ஊருக்கு மேற்கே ஒர் எரி உண்டு. அதில் ஏரி நீர் பாய்தலால் ஊருக்கு மேற்புறத்திலுள்ள நஞ்செய் சொல்லவேண்டும். ஏரியின் நீர், மேட்டு நிலப்பகுதிக்கும் பள்ள நிலப் பகுதிக்குமாக மதகு வழியாகப் பிரித்து சென்றது.

இந்த ஏரிக்கும் ஊருக்கும் இடையே சற்றேறக்குறைய 50 ஏக்கர் பரப்புக்குரிய பத்தடி பள்ளம் உண்டு. இப்பகுதியில் ஒரு மாரியம்மன்

கோயில் உண்டு. தவிர தனியாரின் வைக்கோல் போர் பட்டைகளும் உள்ளன. சில சமயம் ஏரி அளவுக்கு மேல் பெருகி நீர் கடை வழிந்தால் ஊருக்கும் ஏரிக்கும் இடையேயுள்ள பள்ளப் பகுதியில் நீர் சூழ்ந்து விடும். ஒன்றிரண்டு நாட்கள் மக்களைத் தம் வயல்கட்குப் போகாது தடுத்து விடும். மாரியம்மனையும் நீர் சூழ்ந்து விடும். நீர்க்கடவுள் அல்லவா? வைக்கோல் பேற்கட்கும் இதே நிலைதான்.

ஏரியிலிருந்து வழிந்து பெருகிச் செல்லும் நீர் ஊருக்கு மேற்கில் ஒரு ஃபாலாங் தொலைவிலுள்ள சின்ன ஏரிக்குச் செல்லும். இவ்வாறு வழிந்து செல்லும் நிலையில் இடுப்பளவுக்கு மேலும் நீர் செல்வதால் ஒன்றிரண்டு நாட்களுக்கு ஊருக்கு மேல் திசையிலுள்ள ஊர்கட்கும் இந்த ஊருக்கும் தொடர்பு அறுந்துவிடும். சின்ன ஏரிக்கு அதிகப்பறுனம் இல்லை. இதிலிருந்து வழியும் நீர் மேல் திசையில் சென்று ஊருக்கு புறம்பே சுமார் இரண்டு கல் தொலைவில் செல்லும் ஒரு காட்டாற்றில் கலந்துவிடும்.

ஊருக்குத் தெற்கே "நல்ல தண்ணிக்குளம்" என்ற ஒரு நீர் நிலையுண்டு. மழை நீர் தேங்கும் குளம். நீரின் சுவை அற்புதமானது. ஊர் மக்கள் ஒன்றிரண்டு குடங்கள் இந் நீரை எடுத்துச் சென்று குடிநீராகப் பயன்படுத்துவர். அக்காலத்து மக்கள் கட்டுப் பாட்டுடன் நீர் கெடாமல், பாதுகாத்தனர்.

இத்தகைய சீரும் சிறப்பும் மிக்க சிற்றூரில் "ஞானியார் பரம்பரை" என்ற பரம்பரையைச் சேர்ந்தவர் என் தந்தையார். என் பிராரத்த கருமத்தால் (நுகர்வினையால்) நான் பெரகம்பியில் என் அன்னையார் பிறந்த இல்லத்தில் 27-08-1916இல் பிறந்தேன்.

"கற்றார் பற்றறுக்கும்

பிறவிப் பெருங்கடலே

பற்றா வந்து அடியேன் பிறந்தேன்”[9]

- **(பெரி.திரு.8,9:8)**

என்ற திருமங்கையாழ்வாரின் திருமொழியை அப்போது சிந்தித்து அறிய அகவை இல்லையாயினும் இப்போது(72-அகவையில்) நினைத்து அசைபோட முடிகின்றது.

கவிஞரின் கல்வி உளவியல்

கல்வி உளவியல் என்னும் தொடரில் கல்வியாவது எதனைக் குறிக்கின்றது? உளவியல் எதனை உணர்த்துகின்றது? என்பதை ஆராய வேண்டும்.

”ஒரு காலத்தில் கற்பித்தல் மட்டுமே கல்வி என்றும், படிப்பு, எழுத்து, கணிதம் ஆகிய மூன்றையும் குடிமைப்பற்றிய சில உண்மைகளையும் பயிற்றுவித்தலே கல்வி”[10] என்றும் கருதினர். ஆனால், இன்றைய கல்வி ஆராய்ச்சிகளும் மக்களைப் பற்றிப் பிற துறைகளால் அறிந்தளவும் கல்வியானது மக்களின் நடத்தையை மாற்றும் ஒரு செய்முறை என்று காட்டுகின்றன. கல்வியில் மாணக்கள் தான் கண்ட அறிவையும் மானப்பாண்மைகளையும் தடப்படியாவது உட்கொள்ளதாகவும், கல்வி அவனுக்கு ஊற்றப் பெற்றதாகவும் கருதப் பெற்றது. மாணக்கனின் உள்ளம் ஒரு வெற்றிடமாக கொள்ளப்பெற்றது. கல்வி என்பது நாம் ஒருவனுக்கு ஊற்றக்கூடிய பொருளன்று ஊட்டக்கூடிய பொருளன்று! கதை அவனே அடைய வேண்டும்!

முத்தமிழ் காவலர்

மக்களாய்ப் பிறந்த ஒவ்வொருவர் வாழ்விலும் பெரியோர்களது தொடர்பு மிகவும் இன்றியமையாதது என்பது ஒரு பேருண்மை. அவர்களிடம்

பெறும் உதவி மிகச் சிறிதாக கொண்டிருக்கும். இது தவிர, சிற்றினம் சேராது தவிர்க்கப் பெறுவது நாம் அடையும் பெரிய வாய்ப்பாக அமையும். இதனை நீள நினைந்தே வள்ளுவப் பெருந்தகை "பெரியோரைத் துணைகோடல்" (அதி-45) ஓர் அதிகாரத்திலேயே தமது நூலில் வகுத்துக்கொண்டு பத்துக் குறளில் பல்வேறு நோக்கிப் பல பட விரித்தேரிகின்றனர்.

அண்ணலின் வாழ்வில் பெரியோர் கேண்மை பல சிறப்புகளை நல்கியுள்ளது. சிறு வயது முதற் கொண்டே பெரும் புலவர்களின் தொடர்பு ஏற்பட்டது இறைவனது திருவுள்ளக் குறிப்பு. அத்தொடர்பு இறுதிவரை தொடர்ந்து நடைபெற்றுள்ளது. "மல்லல் பேர்யாற்று நீர்வழிப்படுஉம் புணை போல், முறை வழிபடும் ஆருயிர்"[11] (புறம்-192) என்பது சங்கப் புலவர் கணியன் பூங்குன்றனாரின் திருவருள் அல்லவா?

என் நிலையும் இது போன்றதே மூன்று வயதில் தந்தையை இழந்த அடியேனது வாழ்வில் பெரியோரை நாடும் பண்பு அடியேனிடம் திருக்குறிப்பேயாகும். இன்றுவரை (அகவை 84) பெரியொர்களின் தொடர்பும் நல்ல நண்பர்களின் இணக்கமும் தொடர்ந்து இருந்து வருகின்றன.

கவிஞர்களின் உடலை பற்றின கருத்து

தமிழ்மொழி வளம் பெற வேண்டுமானால் எல்லாத் துறைகளிலும் நல்ல தமிழ்ப் புத்தகங்கள் வெளிவருதல் வேண்டும். எந்தத் தமிழனும் தமிழிலேயே படித்து எத்தகைய உயர்ந்த அறிவையும் பெற வாய்ப்புக்கள் இருக்க வேண்டும்.

"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்;
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்"[12] -(மா.உ.1)

என்ற பாரதியாரின் வாக்கை ‘மறைமொழி’ போல் போற்றி அறிஞர்கள் தமிழுக்குத் தொண்டாற்ற வேண்டும்.

பன்னெடுங் காலமாகவே மனித அறிவு விரிந்து கொண்டே வருகிறது. ஆராய்ச்சி மனம்படைத்த மக்கள் பல துறைகளைப்பற்றி இந்த மனநிறைவு பெறக்கூடிய தனிப்பட்ட ஒரு சில நிபுணர்கட்கே உரியது என்று கருதப்பெற்ற அறிவியற் கலைபற்றி ஆராய்ச்சியினை இன்று பாமர மக்களுடம் அறிந்து சுவைக்கக் கூடிய நிலை ஏற்பட்டிருக்கின்றது என்கிறார் நா.சுப்புரெட்டியார்.

வள்ளுவரின் வழியில் கவிஞர்களின் பங்கு

திருக்குறளை ஓர் உயர்ந்த மணிகள் வைக்கப்பெற்றுள்ள ஒரு பெட்டகத்திற்கு ஒப்பிடலாம். தங்க நகைகள் செய்வோர் அவற்றில் தத்தம் பொருளாதார நிலைக்கேற்றவாறு இரத்தினங்களைப் பதித்து அழகு செய்வர். நகைகளில் பதிக்கப் பெற்றுள்ள மணிகள் தம் ஒளியைப் பிரகாசிக்கச் செய்து தங்கள் நகைகளின் மதிப்பை உயர்த்துகின்றது. இவ்வொளி புறவொளியாகும்.

பெரும்புலவர்கள் தம் இலக்கிய நகைகளை படைக்கும் போது கதைகளில் அல்லது காவியங்களில் ஆங்காங்குள்ள சந்தர்பங்களுக்கு ஏற்றவாறு காவிய மாந்தர்களின் தேவைப்கேற்றவாறு திருக்குறள் மணிகளைப் பதித்து அழகு செய்வர். இம்மணிகள் தாம் விடும் கருத்தொளிகளினால் காவியத்தின் அல்லது கதைகளின் அழகினைப் பெருக்குகின்றன. இந்த ஒளி அக ஒளி, உள் ஒளி, இந்த ஒளிப்படி பேள். உள்ளத்திற்கு வழிகாட்டி அவர்தம் பண்பாட்டையும் ஒழுக்கத்தையும் பெருமையுறச் செய்கின்றன.

திருக்குறளில் இல்லாத பொருளை இல்லை என்று சொல்லிவிடலாம். வாழ்க்கைக்கு வேண்டிய எல்லாப் பொருளும் இதில் அமைந்துள்ளன.

“எல்லாப் பொருளும் இதன்பால் உளஇதன்பால்

இல்லாத எப்பொருளும் இல்லையால்“ - (திரு.வ.மா. 29)

என்று மதுரைத் **தமிழ்நாகனர்**[13] என்ற சங்கப்புலவர் ஒருவரே குறிப்பிட்டிருப்பது ஈண்டு அறிதற்பாலது. இதனால் தான் எவர் வேண்டுமானாலும் இதன் குறள் மணிகளைத் தம் விருப்படியெல்லாம் கையாண்டிருப்பதைக் காண முடிகின்றது. சிலவற்றை ஈண்டு காண்போம்.

நளன் கதையில் ஒரு காட்சி: ‘தமயந்தியின் இரண்டாம் சுயம்வரம்’ என்ற செய்தி கேட்டுக் குண்டினபுரத்திற்கு வருகின்றான் ருதுபர்ணன், நளன் அப்பொழுது அவனுக்குத் தோரோட்டி; சமையல்காரனாகவும் செயல் புரிபவன கார்க்கோடகன் என்ற பாம்புக்கடியில் உருமாறி இருந்தவன் தமயத்தி உருமாறியுள்ள தேர்ப்பாகனைச் சோதிக்க தன்பிள்ளைகளுடன் தோழி யொருத்தியை அனுப்புகின்றாள்.

தன் பிள்ளைகளைக் கண்டமாத்திரத்தில் தன்னிடத்தே அடக்கொணா அன்பு எழுந்ததால் தன்னையும் மறந்து மளநடுங்கிப் பெருமூச்செறிந்து அவர்களை வாரியெடுத்துத் தோளோடு சேர்க்கின்றாள். இந்நிலையில் தன்னிலைமைபற்றிய எண்ணம் அவனுக்கு உதித்தபடியால் அவன் தன்னை மறைத்துக் கொள்ள வேண்டி அன்னியன் போல நடிக்கின்றான். அப்பிள்ளைகளை நோக்கி, ”நீங்கள் யாருடைய பிள்ளைகள்? என் குழந்தை போன்று இருக்கின்றீர்களே?” என்று உரைக்கின்றான். அன்பு எந்நிலையிலும் வெளிப்படும் என்பதை பேராசிரியர் உணர்த்துகின்றார்.

இனியவைகளை கூறல்

”இன்சொலால் ஈரம் அளைஇப் படிறுஇலவாம்

செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்.”[14] - (குறள். 91)

செம்மையான பொருளை அறிந்தவர்களின் வாய்சொற்கள் இனிய சொற்களாய், அன்பு கலந்தனவாய், வஞ்சம் இல்லாதனவாய் இருக்கும்.

"அகனமர்ந்து ஈதலின் நன்றே முகனமர்ந்து

இன்சொல னாகப் பெறின்."[15] - (குறள். 92)

முகம் மலர்ச்சியுடன் இன்சொல் உடையவனாக இருப்பது மனம் மகிழ்ந்து பொருள் கொடுப்பதைவிடச் சிறந்ததாகும்.

"முகத்தான் அமர்ந்து நோக்கி அகத்தானம்

இன்சொ லினதே அறம்."[16] - (குறள். 93)

முகத்தோற்றத்தால் விருப்பத்துடன் இனிமையுடன் நோக்கி உளம் கலந்த இன்சொற்களைக் கூறுவதே அறமாகும்.

"துன்புறூஉந் துவ்வாமை இல்லாகும் யார்மட்டும்

இன்புறுவம் இன்சொ லவர்க்கு."[17] - (குறள். 94)

எவரிடத்தும் இன்பத்தை நல்கும் இன்சொல் வழங்குவோர்க்குத் துன்பத்தை மிகுதிப்படுத்தும் வறுமையும் இல்லாமற் போகும்.

கல்வி அறிவு

"அறிவுஅற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்

உள்ளழிக்கல் ஆகாது அரண்" - (குறள். 421)

என்பது வள்ளுவம், மானிடர்களாகப் பிறந்தவர்கள் அனைவருக்கும் இறைவனால் நல்கப் பெற்றது அறிவு. எல்லோர்க்கும் இஃது ஒரே அளவில் இருப்பதில்லை. கற்றவர்களையும் கல்லாதவர்களையும் கூர்ந்து நோக்கினால் இவ்வுண்மை தெளிவாகும். "தார்ன்டைக் (Throndike) என்ற

மேனாட்டுக் கல்வி வல்லுநர் இந்த அறிவு பற்றி ஒரு கருத்தைத் தெரிவித்துள்ளார்."[18] அவர் இறைவனால் நல்கப் பெற்ற ஒருவருடைய அறிவு.

$$G=S_1+S_2+S_3+S_4+\dots\dots\dots\dots\dots+S_n$$

என்ற சமன்பாட்டில் அமைந்திருப்பதாகக் கருதுவார். இதில் G என்பது பொது அறிவைக் குறிக்கும் காரணிகை (factor) இஃது ஆளுக்கு ஆள் தரத்தில் அளவில் வேறுபட்டிருப்பது $S_1,S_2,S_3,S_4,\dots$ என்பவை பயிற்ச்சி ஒருவருடைய கணித திறமை, இலக்கியத் திறமை, பொறியியல் திறமை, இசைத்திறமை, ஓவியத் திறமை முதலியவற்றை குறிக்கும் பயிற்ச்சியால் மிகுவதில்லை $S_1,S_2,S_3,S_4,\dots$ என்பவை பயிற்சியால் பெருகி வளரும். G-யின் தன்மைகேற்ப $S_1,S_2,S_3,S_4,\dots$ பெருகும், அளவும் மாறுபடும். ஒருவரிடம் G அதிகமாக அமைந்திருந்தால் $S_1,S_2,\dots$ முதலியவையும் பெருகி வளரும். G அதிகமாக இருப்பவர் பொறியியலில் பயிற்சி பெற்றால் அவர் பெரிய பொறியியல் வல்லுநராக வளரும் வாய்ப்பினைப் பெறுவர். G-யின் அளவு குறைவாக இருப்பின் அவர் ஒரு தொழில் முதல்வர் (Foreman) அளவுதான் வளரமுடியும். பொது வாழ்க்கையில் கல்லாதவர்களும் கற்றவர்களும் பல்வேறு துறைகளில் தாம் ஆற்றல் பணிகளில் அவர்தம் திறமை வேறுபாடுகளைக் காண்கிறோம்.

நேர்மை குறித்த கவிஞரின் கருத்து

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்!" - (குறள். 131)

எந்தப் பொறுப்பிலிருந்தாலும் நேர்மையைக் கடைபிடித்தல், வைணவத்தில் ஆழ்ந்த பற்றுடைமை, ஆழ்வார் பாசுரங்களில் ஆழங்கால் படுதல், பிற சமயங்களில் காழ்ப்பின்றி சமரச நோக்குடைமை, சாதி வெறியின்மை, நாட்டுப் பற்றுடைமை. இவை யனைத்தும் உருண்டு திரண்டு ஒன்றான

தன்மையுடைய சான்றாளர் தாம் திரு.தி.மு.நாராயணசாமி பிள்ளை வழக்குரைஞர் தொழிலை தேர்ந்தெடுத்து கொண்டு வாழ்க்கையை நடத்தினாலும் பிற பொறுப்புகள் தாம் அவருடைய வாழ்க்கையை மேம்படுத்தின. ஒல்லும் வகையெல்லாம் நேர்மையாக பணியாற்றினமையால் அவர்தம் வாழ்க்கை வளமாக அமைந்தது;[19] அனைவராலும் போற்றப் பெறும் புகழும் அவரை வந்தடைந்தது.

"தோன்றில் புகழோடு தோன்றுக: அஃதிலார்
தோன்றலில் தோன்றாமை நன்று" - **(குறள். 131)**

என்று வள்ளுவர் வாக்கிற்கு இலக்கியமாக இவர் வாழ்க்கை அமைந்தது.

இந்து அறநிலைய வாரியத் தலைவர், பொதுப் பணியாளர் தேர்வு ஆணையத் தலைவர் அண்ணாமலைப் பல்கலை கழகத் துணைவேந்தர் (ஆறு ஆண்டுகள்), தமிழ்நாடு கூட்டுறவு வங்கித் தலைவர் இணைந்து கூறுபவையை வாழும் கவிஞர்கள் கூற்றாகவும் கருதுகின்றனர்.

வாழையும் வள்ளுவமும்

இயற்கை மனிதனுக்குப் புகட்டும் பாடம் சொல்லும் தரம் அன்று. அனைத்தும் அதில் அடங்கி இருக்கும் அற்புதம் அளவிடப்படாதது. மனிதன் காணும் கனவுகள் கற்பனைகள் அவன் வடித்த நூல்களின் உள்ளுறை ஆகிய அனைத்தும் உலக இயற்கையின் வடிப்புகளேயாகும். ஊன்றி நோக்கினால் அவை எல்லாப் பொருள்களின் உள்ளுறையாகவும் காட்சியளிக்கும்; பாடம் புகட்டி அறிவு, தெருட்டும் வழிவகைகளாகவும் திகழும் என்பதும் தெளிவாகும்.

வாழை ஏனை எல்லா உயிர்களையும் விட ஆறறிவும் அற உணர்வும் உடைய மக்கள் இனத்திற்குப் பேருதவியாக இருந்தலால் உயர்ந்த இனத்துடன் சேரும். அருகதை உடையதாகத் திகழ்கின்றது. இத்தகைய பெருந் தகுதியை இயற்கையிலேருந்தே பெற்றுள்ள வாழை மரம் மக்கள் இனத்திற்கு வேண்டிய

அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு உறுதிப் பொருளுக்கும் உள்ளுறையாகவும் திகழ்வதைக் குறிப்பாற் புலப்படுத்துகின்றது. இவற்றினை 'இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு'[20] என்ற தொல்காப்பியம் கூறும் நிரல்படி சந்திப்போம்.

இன்பத்திறம் : வாழையின் தோற்றமே இன்பத்தின் உள்ளுறையாகும். அது வழுவழுப்பாய், ஒழுங்காடு, நீண்டு பசிய இலைகளை உடையதாய் மிக அழகாய் அழகிய நங்கையைப் போல் காட்சி அளிக்கின்றது. அதன் அழகு கண்டார் கண்ணைக் கவரும் திறத்தாய்த் திகழ்கின்றது.

குறிப்புக்கு வாழையை தவிர வேறு எடுத்துக் காட்டு காண்டல் அரிது. வாழையின் பொருள் எல்லாம் பொருள்திறனை புலப்படுத்துகின்றது.

அறத்திறம் வாழையின் அறித்திறமோ உள்ளத்தை உருக்கி ஒருங்கே கொள்ளை கொள்கிறது என்றே கூறலாம்.

திருப்பதி சென்று திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ் துறையில் விரிவுரையாளராகச் சேர்வதென உறுதியாயிற்று. புதிய பல்கலைக் கழகத்தில் தமிழ் விரிவுரையாளர் பதவி 1960-இல் தான் ஏற்பட்டது நான் தான் தமிழ்த்துறையின் தொடக்கத்திற்குப் பிள்ளையார் சுழி போடவேண்டியவனாக இருந்தேன். சென்னையில் துணைவேந்தர் பேச்சிலிருந்து அறிந்து கொண்டமையால் நான் கருவியாக இருந்து 'பைந்தமிழ் பின் சென்ற பச்சை பசுங்கொண்டல்' எழுமலையான் உணர்வும் உண்மையான தமிழ்ப் பற்றும், இன்னல்களைத் தாங்கிக் கொள்ளக் கூடிய இதயமும், "பலனை எதிர்பாராது கடமையைச் செய்" என்ற கண்ணனின் மறை மொழியில் நம்பிக்கையும் உள்ளவர்கட்கு முடியாத காரியம் உண்டோ? வினைத்திட்டம் என்பது மனத்திட்டம் என்று வள்ளுவரும் கூறியுள்ளார்.

கவிஞர் ந.சுப்புரெட்டியாரின் மேற்படிப்பு

புதிய இல்லத்தில் மேல்மாடியில் இரண்டு அறைகள் இருந்தன. ஓர் அறைக்கு வேலை இல்லை. முன்னதாக உள்ள அறையில் இரு பெரிய அலமாரியில் எனக்குத் தேர்வுக்காகப் பயன்படுத்தும் நூல்களை மட்டிலும் வைத்துக் கொண்டேன். அமர்ந்து கொள்வதற்கு ஓர் ஆடும் சாய்விருக்கையும் எழுதுவதற்கு மேசையும் நாற்காலியும் இருந்தன. அவை பேரளவில் தான் பயன்பட்டன. சாய்விருக்கைலேயே இருந்து கொண்டு சிறுசிறு எழுத்து வேலையையும் முடித்து கொள்வேன். படுப்பதற்கு ஒரு நாடாகக் கட்டில், மெத்தை, தலையணைகள், ஊருக்குச் சற்று ஒதுக்குப்புறமாக இல்லம் இருந்ததால் கார், பேருந்து இரைச்சல்கள் இல்லாமல் அமைதியாக இருந்தது. தரைதளத்தில் என் மனைவிக்குத் துணையாக அவள் தாய்.

இந்த சூழ்நிலையில் படிப்பதற்கு வாய்பாக இருந்தது. காலை நேரத்தில் அதிகாலையில் 4 மணிக்கே எழுந்து காலைக்கடன்களை முடித்துக் கொண்டு நெற்றியில் அணிந்து கொண்டு படிக்கத் தொடங்குவேன்.

இந்த சூழ்நிலையின் ஆறரை மணிக்கு கீழே இறங்கி “போர்ன் வைட்டர்“ பானம் அருந்தி விட்டு, ஓர் அறைமணி நேரம் என் குழந்தை இராமலிங்கத்துடன் கொஞ்சி விளையாடுவேன். பிறகு அவனுக்குப் புட்டிப்பால் ஊட்டுவேன். ஏழு மணிக்கு மீண்டும் மாடிக்குச் சென்று படிப்பை நன்கு தொடங்குவேன். 8½ மணிக்குக் கீழிறங்கி நீராடுவேன். அதற்குள் குழந்தை குளித்துத் தந்தையை எதிர்நோக்கிக் கொண்டிருப்பான். குழந்தைக்கு ஆரஞ்சு அல்லது தக்காளி சாறு ஊட்டுவேன். ஊட்டுவதற்கு முன் “அடைக்ஸஸின்“ என்ற மீன் எண்ணெயை நான்கைந்து சொட்டுகள் வாயில் விட்டு சாற்றைப் பருக வைப்பேன். சிறிது நேரம் கொஞ்சி கொண்டிருப்பேன் என்றார் மழலை மொழி கவிஞர் பா.க.கண்ணம்மா.[21]

கவிஞர் ந.சுப்புரெட்டியாரின் கல்லூரிப் பற்றிய நினைவுகள்

குடும்பத்தைவிட்டுப் பிரிந்து பல்வேறு கவலைகளுடன் பணியைக் கவனித்து கொண்டு வந்த போது பதிவாளரிடமிருந்து அவர் மேலெழுத்துடன் ஒரு கடிதம் வந்தது. இந்தக் கடிதம் காரைக்குடி அழகப்பர் பயிற்ச்சிக் கல்லூரியின் தாளாளர் திரு.C.T.C.T.V. வேங்கடாசலம் செட்டியாரிடமிருந்து வந்த கடிதம். இதனை நேராக எனக்கு அனுப்பாமல் பல்கலைக்கழகப் பதிவாளர் மூலம் அனுப்பிருந்தமையால் அவரால் அனுப்பப் பெறுகின்றது. (forwarded) என்ற வாசகரால் அனுப்பப் பெறுகின்றது. சேர்ந்து ஒரு வாரத்தில் கடிதத்தில் ஆணையில் குறிக்கப் பெற்றிருந்த செய்தி இது. "திரு ந.சுப்புரெட்டியாருக்கு கொடுக்கப் பெற்ற ஆணை தள்ளுபடி செய்யப்பெற்றது. இந்த ஆணையின்படி இவர் திரும்பவும் அழகப்பச் செட்டியார் பயிற்சிக் கல்லூரியில் வந்து பணியேற்க வேண்டியது. இதற்கு விருப்பம் இல்லாவிடில் மூன்று மாத ஊதியத்தை நிர்வாகத்திற்குக்குக் கட்ட வேண்டியது."[22] என்பதாக கடிதம் என்னைத் திடுக்கிட வைத்தது. மனம் குழம்பிச் செயலற்ற நிலைக்கு தள்ளப்பெற்றது.

திரும்பவும் காரைக்குடிக்கு போக விருப்பம் இல்லை "மூன்று மாத காலமா? ராய சொ.சா.க இவர்கட்குக் கடிதம் எழுதி ஆணையை மாற்றச் செய்யலாமா? என்று என் மனம் எண்ணியது. ஒரு நாள் துணைவேந்தரைக் காலையில் சந்தித்து இந்த செய்தியைக் கூறி செய்ய வேண்டியது பற்றி யோசனை கேட்டேன்.

இந்தச் செய்தியை சொன்னவுடனே அவர் நகைத்தார். "மிஸ்டர் ரெட்டியார், இந்த இரண்டாவது ஆணை நகைபிற்கிடமாக உள்ளதே, வள்ளல் தோற்றுவித்த புகழ் பெற்ற நிர்வாகம்

துக்ளக் ராஜ்யமாகவா போய்விட்டது? மூன்று மாத ஊதியம் அனுப்பாதீர்கள் அவர்களால் இரண்டு ஆண்டிற்கு ஒன்றும் செய்ய முடியாது.

இரண்டாண்டு கழித்து பணம் கட்டுவதும் கட்டாதிருப்பதும் பற்றி யோசிக்கலாம்.“ என்றார். திரு.C.T.C.T.V. வேங்கடாசலம் செட்டியாரின் மனம் ஏன் மாறியது? சிறந்த நிர்வாகத் திறமையுள்ளவர் ஆயிற்றே. இது மணியனது கைங்காரியமாக இருக்குமோ? முன்னர்தான் என்னை ஒன்றும் செய்ய இயலவில்லை. பலமான பின்னணி இருந்தது. இப்பொழுது கல்லெறிந்து பாரக்கலாமா? என்று செட்டியாரைப் “பிரபததி“ செய்து இந்தப் புதிய ஆணை பிறபிக்க காரணமாக இருந்தாரா என்று யோசித்து அது தான் முடிவு என்று தீர்மானித்தேன். துணைவேந்தரிடம் “வீண் விவகாரம் செய்து மன அமைதியைக் குலைத்துக் கொள்ள விரும்பவில்லை. பணத்தை அனுப்பி விடுகின்றேன்“ என்று சொல்லிக் கொண்டு விடை பெற்றேன்.

இந்த மதியீனமான ஆணையை பலருக்குத் தெரிவித்தால் நிர்வாகத்தின் மானம், பெருமை எல்லாம் கப்பல் ஏறும் என்பதை நான் அறிவேன் என்று கவிஞர் கூறுகிறார்.

மனிதனும் சூழ்நிலையும்

எந்த உயிரியும் சூழ்நிலைக்கு ஏற்றவாறு தன்னை மாற்றிக் கொள்ளும். இதுவே வாழ்க்கையின் இலக்கணம் என்று கூடக் கூறலாம். மனிதனும் ஒருவகை உயிரியே. ஆகவே, அவனும் தன் சூழ்நிலையோடு இடையருது இடைவினை இயற்றிப் “பொருத்தப்பாடு“, அடைகின்றன. பொருத்தப்பாடு என்பது என்ன? மனிதன் தனக்கும் தன் சூழ்நிலைக்கும் இயந்த தொடர்பை அடையும் பொருட்டுத் தன் நடத்தையை இடைவிடாது மாற்றும் முறையே பொருத்தப்பாடு என்பது. பொருத்தப்பாடு அமைந்தால் தான் எல்லா உயிர்களும் வாழ வழி அமையும்; அன்றேல் சாகவேண்டியது தான். ஒரு செடியோ தவளையோ தான் இருக்கும் சூழ்நிலைக்கேற்றவாறு தன்னை அமைத்துக் கொண்டால் தான் உயிர்வாழலாம், இன்றேல் மரித்துவிடும்.

ஆனால், உயர் இன உயிராகிய மனிதனின் நோக்கம் வேறு. மனிதன் சூழ்நிலையுடன் பொருத்தப்பாடு அடைவது மூன்று விதங்களில் ஒன்று. தன் நடத்தையும் மனப்பான்மைகளையும் சூழ்நிலைக்கேற்றவாறு மாற்றிக் கொள்வது: மற்றொன்று தன் நடத்தைக் கேற்றவாறு சூழ்நிலையை மாற்றி அமைத்துக் கொள்வது. மற்றொன்று தன் நடத்தைக் கேற்றவாறு கலந்த கலவையினால் அமைத்து கொள்வது. குழந்தை பருவத்திலும் குமார பருவத்திலும் இப்பொருத்தப்பாடு தீவிரமாக நடைபெறுகின்றது.

கல்வி என்பது பொருத்தப்பாடே பிறந்த குழந்தையும் பள்ளியில் சேரும் மாணக்கனும் பௌதிகச் சூழ்நிலைக்கும் சமூக சூழ்நிலைக்கும் பொருத்தப்பாடு அடைவதில் பிறர் உதவியை நாடுகின்றனர். பெற்றோரும் ஆசிரியரும் தக்கவாறு இவர்கட்கு உதவ வேண்டும். எல்லாவிதப் பொருத்தப்பாடுகளுள்ளும் தனியாளின் தேவைகளுக்கும், அத்தீவினை நிறைவேற்றச் சூழ்நிலை அளிக்கும் வாய்ப்புகளும் தனியாளின் திறமைக்கும் இடையேயுள்ளதோர் சிக்கலான ஒரு சம்பந்தம் அடங்கியுள்ளது.

"சூழ்நிலையைக் கட்டுப்படுத்துவதனால் நாம் விரும்பும் துலங்கல்கள் ஏற்படா விடினும், குறிப்பிடத்தக்க விளைவுகள் ஒழுங்கானமுறையில் ஓரளவு ஏற்படத்தான் செய்கின்றன. இந்த உண்மையின் அடிப்படையில் தான் கல்வி என்பது அமைகின்றது. ஆழ்ந்து சிந்திப்பின் இப்பொருத்தப் பாடே கல்வி என்றாகிறது. எனவே கல்வி ஏற்பாட்டின் ஒரு அங்கமாகவே விளங்கியது. கல்வி ஓர் சிறந்த நூற்கரங்களை என்று வாழும் கவிஞர்கள் கூறுகின்றது."[23]

மக்கள், விலங்குகள் ஆகியவற்றின் செயல்களைப்பற்றிய விவரங்களை ஒழுக்காகவும் திட்டமாகவும் முற்றிலும் வரையறுத்து விளக்க முயல்வது உளவியல். அதன் நோக்கங்கள்: நம்முடைய நடத்தையை அறிந்து அதன்மேல் ஆட்சி கொள்வது ஒன்று; பிறருடைய நடத்தையை அறிந்து அதன்மேல் ஆட்சி கொள்வது மற்றொன்று; நம்முடைய

நடத்தையையும் பிறருடைய நடத்தையையும் அவற்றின் பொருட்டே அறிதல் இன்னொன்று; மக்களின் இயல்பை அறிந்ததன் மூலம் சமூகப் பிரச்சினைகளைத் தீர்ப்பது பிறிதொன்று; உளவியலறிஞனுக்கு மனிதன் எவ்வாறு தோன்றுகின்றான் என்பதை அறிவது வேறொன்று; பயிற்றலில் ஆசிரியருக்கு மிகவும் பயன்பட்டு அதற்குத் துணையாக நிற்பது நாம் அறிய வேண்டியதொன்று. இதனையே கல்வி உளவியலின் நோக்கமாக பேரா.ந.சுப்புரெட்டியார் அவர்கள் இந்நூலில் எடுத்துரைத்துள்ளார்.

உடலும் உள்ளமும்

கவிதைக்குக் கருத்து, உணர்ச்சி, கற்பனை, அழகிய வடிவம் ஆகிய நான்கும் மிகவும் இன்றியமையாதவை எனத் திறனாய்வாளர் கூறுவர். ஆனால் இந்நான்கும் ஒரு கவிதையில் ஒருங்கே அமைதல் உண்டு. இந்த நான்கிலும் உணர்ச்சியும் ஏனைய கூறுகள் மட்டிலும் உள்ள பாடலே உணர்ச்சியில்லாது ஏனைய கூறுகள் மட்டிலும் உள்ள பாடலே விடச் சிறந்தது என்று கவிதைகளை துய்ப்போர் கூறுவர். கவிதைகளைத் துய்க்கும் பழக்கம் இருந்தால் நாமும் இதே உண்மையைக் காண்போம். இதற்குக் காரணம் என்ன? உணர்ச்சி எல்லா காலத்தார்க்கும் எல்லா மாந்தர்க்கும் பொதுவாக அமைந்துள்ளது. வீரம், காதல், வெகுளி, இரக்கம் முதலிய உணர்ச்சிகள் வெவ்வேறு காரணங்களால் வெவ்வேறு சூழ்நிலையில் பிறக்கலாம். ஆயினும் அவை எல்லோர்க்கும் பொதுவானவை. இந்த உணர்ச்சியைக் கவிஞர்கள் சில சமயக் கவிதையின் வடிவத்தில் அமைப்பார். சில சமயம் அதன் பொருளிலும் அமைப்பர்; சில சமயம் அதன் கவிதையின் ஒலி நயத்திலும் நடையத்திலும் உணர்ச்சியைப் புலப்படச் செய்வதே அதன் வடிவத்தில் அமைப்பது கவிதையின் சொற்பொருளிலும் கருத்திலும் அமைப்பதே இதைவிடச் சிறந்தது என்று கூறுவர் அறிஞர்.[24]

நம் வாழ்க்கையில் பெறும் பல்வேறு உணர்ச்சி அனுபவத்தின் காரணமாகவே கவிதையிலுள்ள உணர்ச்சியை நன்கு அனுபவிக்க முடிகின்றது.

இந்த இருவகை உணர்ச்சிகளுக்கும் வேறுபாடு என்ன? வாழ்க்கையுணர்ச்சிகள் நம்மைச் செயற்படத் தூண்டுகின்றன. உடம்பின் தசைநார்களை இயக்குகின்றன. இதனால் ஆற்றில் குதிப்பவனை தடுக்க முனைகின்றோம்; கற்பனையில் தோன்றும் உணர்ச்சிகள் செயற்படத் தூண்டுவதில்லை; தசை நார்களையும் இயக்குவதில்லை. இதனால்தான் திரைப்படத்தில் ஒருவன் ஆற்றில் குதித்து அல்லது இரயிலின் அடியில் தலையைக் கொடுத்து தற்கொலை செய்து கொள்வதைக் காண நேரிடுங்கால் நாம் இருந்த இடத்தை விட்டு அசையாது.

ந.சுப்புரெட்டியின் சில பொதுக் குறிப்புகள்

பன்னெடுங் காலமாகவே மனித அறிவு விரிந்து கொண்டே வருகிறது. ஆராய்ச்சி மனம் படைத்த மக்கள் பல துறைகளைப்பற்றி இன்று மனநிறைவு பெறக்கூடிய தனிப்பட்ட ஒரு சில நிபுணர்கே உரியது என்று கருதப் பெற்ற அறிவியற் கலைகள் பற்றிய ஆராய்ச்சியினை இன்று பாமர மக்களும் அறிந்து சுவைக்கக் கூடிய நிலை ஏற்பட்டிருக்கின்றது.

ஆனால் பலர் இன்னும் நம்முடைய உடலைப்பற்றியே சரியாக அறிந்து கொள்ளவில்லை. அதன் பல்வேறு அமைப்புகளைப் பற்றியும் அதன் பல்வேறு பகுதிகள் எவ்வாறு ஒரு சேர இணைந்து இயங்குகின்றன என்பதைப்பற்றியும் இன்னும் புரிந்து கொள்ளவில்லை. ஒருவருக்குத் தம்முடைய மோட்டார் எவ்வாறு இயங்குகிறது என்பது நன்குத் தெரியும். ஆனால் தம்முடைய கல்லீரலின் இருப்பிடமோ அது இயங்கும் முறையோ அவருக்குத் தெரியாது. ஒருசிலருக்கு உடலைப் பகுத்துப் பார்க்கும் முறையே பிடிப்பதில்லை. இன்னும் சிலர் உடற்கூற்று இயல், உடலியல் ஆகியவற்றைப் பற்றித் தெளிவாக அறிந்து கொள்வது அவற்றை ஆழ்ந்து பயின்ற தனிப்பட்ட மாணக்கர்கட்கே இயலும் என்று கருதுகின்றன.

சாதாரண நிலையிலுள்ள உயிருள்ள மானிட உடல்லால் உயிரியல் துறையில் ஒருசிறு பகுதி அறிவினை மட்டிலும் தான் அறிந்து கொள்ள முடியும் என்பதை இப்புத்தகத்தில் கூறியுள்ளோம். புத்தகத்திலுள்ள பொருள் நல்ல முறையில் தேர்ந்தெடுக்கப் பெற்றுத் தம்முடைய உடலைப் பற்றித் தெளிவாக அறிந்து கொள்ள வேண்டும் என்ற அவாவினையுடைய அறியவியலறிஞல்லாத பிறரும் புரிந்துகொள்ளும் வகையில் கூறப்பெற்றுள்ளது. ஒவ்வொருடைய வாழ்விலும் உடல் தானே முக்கிய பங்கு கொண்டுள்ளது.

ஒரு பொருளைப் பற்றிய குறைந்த அறிவு நீங்கினைத்தான் பயக்கும். அறிவுக் குறைவு என்பதை உணராத போதும் அந்தக் குறைந்த அறிவினை நடைமுறையில் கையாளும் போதும் அதன் தீங்கு பயக்கும் விளைவினை அறியலாம். ஆனால் அந்தக் குறைந்த அறிவினை நடைமுறையில் தேர்ந்தெடுக்கப் பெற்றதாக இருப்பின் நிறைந்த பயனை அளித்தல் கூடும். அது பலவித மூடப் பழக்கங்களை அகற்றுவதற்கு துணைபுரியக் கூடும். அன்றாட வாழ்வில் நம் உடலைப் போற்றும் முறைகளில் எழக்கூடிய பல்வேறு வினாக்களுக்கு விடையிறுக்கவும் உதவ கூடும். சாதாரண நிலையிலுள்ள உடலைப்பற்றியும் நாம் புரிந்து கொள்ள வேண்டுமானால், “சாதாரண நிலை“ என்பதென்ன உடலின் கூற்றுகள். ஒரு கூட்டு வரிசையிலுள்ள இயந்திரக் கூறுகள் போன்று இணைந்தவை அன்று. செயற்படுங்கால் அவை பல முரண்பட்ட ஆற்றல்களுடன் வளர்ச்சி பெறுகின்றன.

வள்ளுவரின் மக்கள் செல்வம்

வங்கியில் இலட்சக்கணக்கான பணம் இருப்பு உள்ளவர்களைச் “செல்வர்“ என வழங்குகின்றனர். பழத்தோட்டம், தென்னந்தோப்பு, நஞ்சை, புன்செய் உள்ள நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலம் உள்ளவர்களையும்

“செல்வர்“ என்றே கூறுகின்றனர். இவர்களையும் இவர்கள் போன்றவர்களையும் “செல்வம்“ உள்ளவர்கள் “செல்வச் செழிப்புள்ளவர்கள்“ என்று பேசுகின்றனர். குழந்தைகள் பெற்று இல்லறம் நடத்துபவர்களையும் “மக்கள் செல்வம்“ உடையவர்கள் என்று பொது மக்கள் பேசுகின்றனர். சிலர் தம் மக்களின் பெயர்களையும் “செல்வம்“ என்று வழங்குகின்றனர். உண்மையில் அவனோ அவளோ “செல்வம்“ தானே! என்றே வழங்குகின்றனர். இச்சொல்லிலும் “வீடு பேறு“ என்பதிலும் “பேறு“ என்ற சொல் “செல்வம்“ என்ற சொல்லை விட அற்புதமான பொருள் தருவதை அறிந்து மகிழ்கின்றோம்.

இன்றைய உலகில் பெரும்பாலும் மக்கள் ஆண்பிள்ளைகளையே விரும்புகின்றார்கள். இவர்கள்தாம் இறந்தால் கொள்ளி வைப்பதற்கும் திவசம் கொடுப்பதற்கும் ஆண் மக்களே தகுந்தவர்கள் என்று கருதுபவர்கள். இவர்கள் பெண் பிள்ளைகள் தம் பெற்றோர் பால் - தாய், தந்தை என்று வேறு பிரிக்காமல் - காட்டும் அன்பையும் பரிவையும் பாசத்தையும் அறியாத அறிவற்ற பிறவிகள்!

“மக்கற்பேறு“[25] அதிகாரத்தில் அன்னைக்கு அருமருந்தனையமகன் செய்யும் உதவி யாது என்று தெரிவிக்காமல் அப்பனுக்கு மட்டும் அம்மகன் செய்யும் உதவி இன்னது என்று தெரிவிக்கின்றாரே ஆசிரியர் வள்ளுவர் என்றும், இதனால் அப்பெருமான் ஆண்பிள்ளைகட்கே முதன்மை தருவதாக அமைகின்றதே என்றும் ஒரு சிலர் தவறாக எண்ணுகின்றனர். அத்துடன் மக்கள் என்னும் பொதுமையிலிருந்து “மகனை“ மட்டிலும் தனித்தெடுத்துச் சில குறள்களில் ஆண் பிள்ளைகட்கே மேன்மை காட்டுகின்றார் என்றும் கருதுவர். இது தவறு; பெருந்தவறு. இவர்கள் இவ்வதிகாரத்தை நன்கு கற்று வள்ளுவர் பெருமானின் உள்ளத்தின் நுட்பத்தை அறியாதவர்கள் என்றே கருத வேண்டும்.

"வள்ளுவத்தை ஆழ்ந்து நோக்கினால் அப்பெருமான் அப்படியொன்றும் ஆண் மக்களுக்கு மட்டுமே சிறப்பளிக்கவில்லை என்பது புலனாகும். மக்கட்பேறு என்ற அதிகாரத்தில் ஏழு குறள்கள் (1,2,3,4,5,6,8) மக்கள் என்று வாழும் கவிஞர்கள் கூறுகின்றனர்.

அறிஞர்களும் அரசியல் அறிஞர்களும் காணும் நாடு திறனைப் பெறுகின்றது; அதனை அவர்களோடு ஒத்த மனப்பான்மையும் கொள்கையினையும் கொண்டவர்கள் மட்டும் புகழ்கின்றனர்; ஆனால் மாறான கருத்துக்களையுடையவர்கள் வெறுக்கின்றனர், எதிர்க்கின்றனர்; தூற்றுகின்றனர். தவிர, இவர்களுடைய கருத்துக்கள் எல்லாம் காலத்திற்கும் எல்லா நாட்டினருக்கும் பொருந்தவும் இல்லை. மேனாட்டு அரிஸ்டாட்டில் கண்ட நாடு ரூஸோவுக்கு பிடிக்கவில்லை.

ஒரு காலத்தில் தோன்றிய கொள்கை பிரிதொரு காலத்திற்குப் பொருந்தவில்லை. அரிஸ்டாட்டில் கண்ட நாடு அவர் காலத்திற்கு ஏற்றது. அது ரூஸோ, வால்டயர் இருந்த காலத்திற்குப் பொருந்தவில்லை என்கிறார் கவிஞர்.

கவிஞன் கண்ட நாட்டைப் பற்றிய கருத்துக்கள் பரந்த நோக்கத்துடன் இருந்தாலும், சாதி வேறுபாடு காரணமாகவும், சமய வேறுபாடு காரணமாகவும், நிற வேறுபாடு காரணமாகவும் அவை என்றும் போற்றபடுவனாக உள்ளன.

மின்னி மேகம் மழை பெய்வதும், பெய்த மழை வெள்ளமாகப் பெருகுவதும் அவ்வெள்ளம் இரு கரையும் மோதி ஆறாய் ஓடுவதும் குறித்து அவர்கள் முதலில் கூறுவர். அஃதுடன் அவ்வெள்ளம் குறிஞ்சி நிலத்தில் புரண்டு முல்லையில் பாய்ந்து, மருதத்தில் தவழ்ந்து கடலில் கலப்பதைப்பற்றி விரிவாக வருணிப்பர்.

மழை பெய்வதையும் ஆற்றில் வெள்ளம் வருவதையும் கூறியபின் உழவினை பற்றி ஒரு சில வார்த்தைகளை நேராக நெற்குவியலுக்கு அழைத்து சென்று விடுகிறார் கவிஞன்.

நல்ல தேனை சேகரித்தல், தேனைத் தரும் பிற மலர்கள் பிறர் முயற்ச்சியின்றி இயற்கையாகவே உண்டாதல், சேகரித்த தேனைச் சேர்ந்தே உண்ணுதல் என்ற வகையில் கோசல நாட்டு உழவர்கள் வண்டுகளை ஒத்துள்ளனர்.

இயற்கை வளம் வாய்ந்த நாட்டைப்பற்றி மேலும் வள்ளுவர் என்ன கூறுகின்றார். நல்ல வளமான நாடென்றால், பிற நாட்டு மக்கள் எல்லோரும் அதனை விரும்புவர்.

இவ்வாறு ஒரு நாடு ஏற்றுக்கொள்ள வேண்டிய பொறுப்புகள் பல. அப்பொறுப்புக்களை நாடு ஏற்றுக்கொள்ளாவிட்டால், மக்கட் கூட்டம் பலவித இன்னல்களை அடைய நேரிடும். எடுத்துக்காட்டாக பாகிஸ்தான் பிரிவினை ஏற்பட்ட காலத்தில் நம் நாடு எவ்வளவு அகதிகளை ஏற்க வேண்டியிருந்தது.

புலவர்கள் அரசர்கட்கு உணர்த்திய செய்திகளைப் புறநானூறு போன்ற சங்க நூல்கள் அறிகின்றோம். கொரியர்கள் சாமார்த்தியமாகப் போர் புரிவதற்கு மலைப் பிரதேசங்கள் சௌகர்யமாக இருந்த வரலாற்றை நாம் அறியத்தான் செய்கின்றோம். பண்டை காலத்தில் பாரி முதலிய குறுநில மன்னர்களின் வரலாறு மலையின் அவசியத்தை நன்றாக உணர்த்துகின்றது. ஒரு நாடு சிறக்க வேண்டுமானால் குறையாத விளை பொருள் வேண்டும். அவற்றை எல்லோரும் பெற்று நுகரம் செய்யுமாறு அறத்தைப் போற்றும் அறவோர் வேண்டும்.

மொழியின் சிறப்பு

தாய்மொழி இலக்கியத்தைப் படிக்கும்பொழுதுதான் அந்நாட்டு வரலாற்றைப்பற்றித் தெளிவாக அறியமுடிகின்றது. 'இலக்கியம் வாழ்க்கையின் கண்ணாடி' என்றும், வாழ்க்கையே மொழியில் இலக்கியமாக அமைகின்றது என்றும் மேனாட்டுத் திறனாய்வாளர்கள் கூறுவர். எடுத்துக் காட்டாக புறநானூறு போன்ற சங்க இலக்கியங்களால்தான் பண்டைத் தமிழகத்தின் வரலாறு, பண்டைத் தமிழர்களின் வாழ்க்கைமுறை, அவர்களின் ஆட்சிமுறை, சமய நிலைகள், கலைகள் முதலியவற்றை அறிய முடிகின்றது. வரலாற்றுப் படிப்பு, கல்வெட்டுக்கள், செப்புப் பட்டயங்கள், பழங்கட்டிடங்கள், கோயில்கள், நாணயங்கள், அயல் நாட்டினர் கட்டிடங்கள், கோயில்கள், நாணயங்கள், அயல் நாட்டினர் எழுதிவைத்த குறிப்புக்கள் முதலியவற்றால் அறியமுடியாத உண்மைகளை எல்லாம் இலக்கியங்களால் அறிய முடியும்.

எதிர்கால வாழ்வை அமைக்கக் கடந்தகால வாழ்வு பெரிதும் துணைபுரியுமாதலால், தாய்மொழி இலக்கியங்களின் மூலம் அதைத் தெளிவாக அறிந்து கொள்ளவேண்டும். மொழிப்பற்றும் நாட்டுப்பற்றும் உண்டாவதற்குத் தாய்மொழிப்படிப்பு மிகவும் இன்றியமையாதது. எல்லா மக்களும் தத்தம் தாய்மொழியைச் சிறப்பித்துப் பேசுதல் இயல்பெனினும், எம்மொழியும் பெறாத சிறப்பினைத் தமிழ் மொழிதான் பெற்றிருக்கின்றது. மொழியை இறையுடன் இயைபுபடுத்திப் பேசும் வழக்கம் நம் நாட்டில்தான் உண்டு.

"கண்ணு தற்பெருங் கடவுளும் கழகமோடு அமர்ந்து
பண்ணு றத்தெரிந்து ஆய்ந்தஇப் பசுந்தமிழ்"[26]

- (பரஞ்சோதியார் செய்.57)

என்று தமிழ்மொழி போற்றப்படுகின்றது.

முடிவுரை

பேரா. ந.சுப்புரெட்டியார் அவர்களின் கருத்துகளுக்கு இணையாக கவிஞர்களின் கவிதை நடைகளையும், மனிதனின் வாழ்நாள் குறுகியது; இதில் பிணிகளும் முயற்சிகளும் பல. ஆதலால் கற்கத் தக்கவை மட்டும் கற்றால் போதுமென்பதும், கற்றவகையில் உடனுக்குடன் செயலறுதல் மிகுதியாயிருத்தல் வேண்டும். தமிழகம் நெடுங்காலப் பழைமையுடையது. ஆதலால் காலந்தோறும் அதன் நாகரிக வாழ்க்கையிலும் மொழியிலும் மாசுகள் படிதல் இயல்பு. அம்மாசுகளை கவிஞர்களின் கவிதை நடை மூலமும், வள்ளுவரின் திருக்குறள் அதிகாரங்கள் மற்றும் பல அரிய வகை நூல்களின் மூலமும் கவிஞர்கள் இவ்வியலின் எடுத்துரைத்துள்ளார்.

அடிக்குறிப்புக்கள்

1. வாழும் கவிஞர்கள் (வா.க.), பக்.எண்.16.
2. மேலது., பக். எண்.17.
3. வாழும் கவிஞர்கள் (வா.க.), உடலும் உள்ளமும், பக்.எண்.36.
4. மேலது., பக்.எண்.37.
5. மேலது., பக்.எண்.49.
6. இலக்கிய வகையின் வளரச்சியும் இக்கால இலக்கியங்களும் (இ.வ.வ.இ.இ.), பக்.எண்.1.
7. பரகாலன் பைந்தமிழ் (ப.பை.), பக்.எண்.1
8. கவிதை பயிற்றும் முறை (க..ப.மு.), இயல்-1 பக்.எண்.1
9. நினைவு குமிழிகள்-1 (நி.கு.-1), இளமை நினைவுகள், பக்.எண்.8.
10. கல்வி உளவியல் (க.உ.), இயல்-1, இயல்பும் அளவும் பக்.எண்.1.
11. முத்தமிழ் காவலர் ((மு.கா.), பெரியோர் கேண்மை, பக்.எண்.13.
12. மானிட உடல் (மா.உ.) உடலைப் பற்றிய அறிவு, பக்.1.
13. வள்ளுவரின் வாழ்வியல் சிந்தனை (வ.வா.சி.), பக். எண்.59
14. திருக்குறள் தெளிவு (தி.தெ.), இனியவைக் கூறல் பக்.எண்.21.
15. மேலது., குறள்.92.
16. மேலது., குறள்.93.
17. மேலது., குறள்.94.
18. நீங்காத நினைவுகள்-2 (நீ.நி.-II), பக். எண்.192.
19. மலரும் நினைவுகள் (மா.நி.), பக். எண்.1.
20. வள்ளுவரின் வாழ்வியல் சிந்தனை (வ.வா.சி.), பக்.எண்.16.
21. நினைவு குமிழிகள் (நி.கு.-3), குமிழி-110, பக்.எண்.21.
22. நினைவு குமிழிகள் (நி.கு,-4) குமிழி-159, பக்.எண்.22
23. கல்வி உளவியல் கோட்பாடுகள் இயல்-2, பக்.எண்.26.

24. Winchester C.T. Some Principles of literary Criticism P.103.

25. வள்ளுவரின் வாழ்வியல் சிந்தனை (வ.வா.சி.), மக்கள் செல்வம் பக்.எண்.49.

26. தமிழ் பயிற்றும் முறை (த.ப.மு.), பரஞ்சோதியார்: திருவிளையாடல் - நாட்டுச்சிறப்பு - செய்.57

இயல் - 3

வாழ்விற்கு தேவையான வழிமுறைகள் - ந.சுப்புரெட்டியாரின் கூற்று

முன்னுரை

உயிர்களின் படைப்பு ஏணியில் உச்ச எல்லையில் இருப்பவன் மனிதன். அவன் அறவாழ்வு வாழ்ந்து மேலும் படி ஏணியில் உயர வேண்டும் என்ற எண்ணத்தில் வள்ளுவர் பெருமானின் சிந்தையில் சிந்தனையில் எழுந்தது திருக்குறள் என்னும் தெய்வப் பனுவல். அந்தப் பனுவல் பகரும் நாகரிகத்தை அளந்தறியும் கருவி கண்ணோட்டம். அந்தக் கண்ணோட்டத்து உள்ளது உலகியல். கண்ணோட்டம் என்பது யாது? அது பழகியவரிடத்தில் நெகிழ்ந்து நடக்கும் பண்பாகும். இப்பண்பு மக்களின் வாழ்க்கைக்கு அடிப்படையாக இருப்பது அன்றியும் மிகச் சிறந்த அழகாகவும் திகழ்கிறது. இப்பண்பு மனிதனிடம் இருப்பதால் தான் உலகியல் சிறப்பாக நடைபெறுகின்றது. இங்ஙனம் பழகியவரிடத்தில் நெகிழ்ந்து ஒழுகும் பண்பு இல்லையாயின் ஒருவரை ஒருவர் சீறுவதும் வெறுப்பதுமே வாழ்க்கையாக அமைந்து விடும். புலியும் மற்றக் கொடிய விலங்குகளும் வாழும் காடு போலவே நாடும் மாறித் தோன்றிய நிலை ஏற்பட்டு விடும். ஆகையால் உலகத்தில் சமுதாய அமைப்பிற்கே கண்ணோட்டம் அடிப்படையாக இருப்பது புலனாகிறது.

"கண்ணோட்டம் என்னும் கழிபெருங் காரிகை
உண்மையால் உண்டுஇவ் வுலகு"[1] - (குறள்.571)

என்பது வள்ளுவம். இது பொருளதிகாரத்தில் அமைந்திருக்கும் பொன்னைய கூறுடையது.

ஒருவரை ஒருவர் நோக்கும் பார்வையிலேயே உள்ளத்தின் நெகிழ்ச்சி புலப்படும். இஃது அன்புலகின் ஒரு கூறில் அடங்குவது. இந்தக் கண் பார்வையால் தான் அன்பு கொண்டு பழக முடிகின்றது. மக்கட்குப் பிறவிலேயே

இக்கண்ணோட்டம் அமைந்துள்ளது. இதன் காரணமாகவே மக்கள் நூற்றுக்கணக்காவும், பல்லாயிரக் கணக்காகவும் சேர்ந்து பழகவும் கூடி வாழவும் முடிகின்றது. விமானப் போக்குவரத்து வசதிகள் ஏற்பட்ட பிறகு கண்டங்களுக்கு அப்பாலுள்ள நாடுகளில் அமைந்துள்ள சமுதாயங்களுடன் தொடர்பு கொள்ளரும் வாய்ப்புகளும் ஏற்படுகின்றன. அமெரிக்கா, இரஷ்யா, சீனா, பிரட்டன், ஐரோப்பிய நாட்டு மக்கட் சமுதாயங்களுடன் இந்திய சமுதாயங்கள் உறவு கொண்டு வருவதையும் கண்டு மகிழ்கின்றோம்.

பகையும் பூசலும் பெருக்குவது மக்களுக்கு இயல்பான பண்பு அன்று, யாரோ சிலர் தன்னலம் கொண்டு தலைமைபெற்று மற்றவர்களை ஏய்த்து தூண்டினால் பகையும் போரும் அவ்வப்போது நேரிடுகின்றன. தன்னலம் உள்ளவர்கட்குத் தலைமை இல்லாமல் செய்ய வல்ல அறிவும் ஆற்றலும் மக்களிடம் ஏற்படுமானால் போருக்கு வழி இல்லாமல் போய்விடும். போருக்கு ஆள் திரட்ட ஒரு தலைவன் முயன்றால், மக்கள் எல்லோரும் ஒற்றுமையாக இருந்து போர் செய்ய மறுத்து விடுவார்கள்; தலைவன் வற்புறுத்தினால், அவனுடைய தலைமை ஒழித்து, போர் வேண்டா என்று அமைதியை நாடும் ஒருவகையே தலைவனாக்கி கொள்வார்கள்.

நாட்டுப்பற்று, சமயப் பற்று என்று பலவாறு கவர்ச்சியூட்டும் பெயர்களைச் சொல்லி வெறியூட்டுகின்றன. உணர்ச்சியாளர்களுக்கும் தந்திரகாரர்கட்கும் இரையாகாமல் விழித்துக் கொள்வார்கள். ஆகவே எப்படியும் மக்கள் பண்பை அழிக்க முடியாது. மக்கள் வாழ்க்கை இந்த அடிப்படை கொண்டே அமைந்துள்ளது.

புலி முதலிய கொடிய விலங்குகளின் வாழ்க்கை இப்படி அமையவில்லை. ஒன்றை ஒன்று காணும் போது உறுமுகின்றது. வலிய விலங்குகளைக் கண்டால் ஓடி ஒளிகின்றது.

இயற்கைக் கூற்று

கண்ணால் காணும் நிகழ்ச்சிகளைக் கவிதைகளில் பாய்ச்சி அலங்கரிக்கின்றனர் கவிஞர்கள். சங்க காலத்திலிருந்து இன்று வரை தமிழ் இலக்கியக் கருவூலத்தை அணி செய்து நிற்கும். இலக்கியங்களைப் படிப்போமானால் இவ்வுண்மை நன்கு விளங்கும்.

இயற்கை வாழ்வில் தோய்ந்து இயற்கைக் காட்சிகளைக் கண்ணுற்று மகிழும் சங்ககாலப் புலவர்கள் இயற்கையே குழைத்துத் தமது பாடல்களில் கலந்துள்ளனர். உள்ளவற்றை உள்ளபடியே கூறினாலும் அவர்கள் படைத்து காட்டும் சொல்லோவியம் நமது உள்ளக் கோவிலில் நன்கு தீட்டப்பெற்று விடுகின்றது.

"சங்கப் புலவர்களில் கபிலர் தலைசிறந்தவர்; மலைநாட்டு வளங்களைச் சிறப்பித்து பாடுவதில் வல்லவர். பெரும்பாலும் அவர் பாடல்கள் குறிஞ்சி நிலத்தைப் பற்றிய வருணனைகளைக் கொண்டவைகளாகவே இருக்கின்றன.

அவர் காட்டும் ஒரு காட்சி: மேகம் தவழும் மலை ஒருபால் அண்ணாந்து நிற்கின்றது. மலைச் சாரல்களில்; பக்க மலைகளில் மூங்கில்கள் ஓங்கி வளர்ந்திருக்கின்றன. அவை கோடை காற்றில் கம்பீரமாக ஆடி அசைகின்றன. மூங்கிற் சோலைக் கருகில் ஓர் அழகிய அருவி ஓடுகின்றது"[2] என்று இந்நூலின் மூலம் இயற்க்கையை கவிஞர் வருணித்துள்ளார்.

பணப்பெருக்கம்

ஆசைகளில் பலவகை உண்டு. பண்டையோர் மண்ணாசை, பெண் ஆசை, பொன்னாசை என்ற மூன்றில் அனைத்தையும் அடக்குவர். சிற்றூர்களில் ஏழைகட்கு நடு மேல் செல்வர்கள் கடன் கொடுத்து, அந்த ஏழைகள் அசலும் வட்டியும் திருப்பித் தராத நிலையில் ஈட்டுக் குரிய நிலத்தை தம் பேருக்கு கிரயம் எழுதிக் கொள்வார்கள். அரசியல்வாதிகள், உயர் அதிகாரிகள், தில்லு

முல்லுகளாலும் மையூட்டும் முறைகளிலும் சம்பாதித்த பணத்தை பூமி வாங்கி பூமி தாயைக் காணக் களங்கப்படுத்துவர். இது மண்ணாசையைச் சேர்ந்தது, பொன்னாசையுடையவர் பல்வேறு ஒழுக்கச் சீர்கேடுகள் புரிந்து கற்பழித்து பருவம் எய்தாத மகளிர்க்கு பங்கம் விளைவித்தல், போன்ற செயல்களில் ஈடுபட்டு அழியாப் பழிகளை சுமந்து சமூகத்தினால் இழித்துப் பேசப் பெறுவர். பொன்னாசை என்பது பணத்தாசையால் மக்கள் செய்யும் இழி செயல்கள் சொல்லி முடியாது. வங்கிக் கொள்ளை, வங்கியிலுள்ளரோ புரியும் தில்லு முல்லுகள், பதவிகளில் அன்றாட நிகழ்ச்சிகளை காண்கிறோம்.

" பணம்பணமென் றனுதினமு படுபேயாய்ப்
பறந்தோடிப் பரித பித்துக்
கணம்தெரியா துழல்கின்றார் காலன்வரு
கணம்தெரியார் கரவே சூழ்ந்து
குணம் தெரியா தமிமதியே கொண்டாடிக்
குருட்டாட்டம் கொள்ளு கின்றார்
பிணந்தெரியப் பெருநாளில் பெறுவதனை
நினையாமல் பிழைக்கின் றாரே"[3]

-(வீரபாண்டியம், செய்.891)

என்பது கவிராஜப் பண்டிதர் செகவீரபாண்டியனாரின் பாடல். அன்றாட வாழ்வில் ஏழையர் முதல் மேல் மட்டம் வரையிலுள்ளோர் பலர் பணத்திற்காக பறந்தோடி அலைவதைப் பாடல் சித்திரிக்கின்றது.

பணம் சம்பாதிப்பதைப்பற்றி 'வள்ளுவர்பெருமான்' பொருள் செயல்வகை (பொருட்பால் அதிகாரம் - 76) என்ற அதிகாரத்தில் விளக்குகின்றார். 'பணக்காரன் பக்கம் பத்து பேர் பைத்தியக்காரன் பக்கம் பத்து பேர்' என்பது ஒரு பழமொழி. இன்றைய உலகில் ஒரு பணக்காரன்

பக்கம் எந்தவிதக் காரணமும் இன்றி சிலர் சுற்றிக் கொண்டு அப்பணக்காரர் செல்லும் இடந்தோறும் அவருடன் கூடவே திரிவதைக் காணலாம். இதனால் அப்பணக்காரருக்குள்ள மதிப்பும் தமக்குண்டு என்ற பொய்யான மயக்கம் இவ்வாறு செய்யத்தூண்டுகின்றது என்று கருதலாம்.

மானமிகு வாழ்க்கை

வாழ்க்கையே போராட்டமானது. பறவைகள் விலங்குகள் ஆகியவை உயிர் வாழ்வதற்கு உணவு தேடுவதில் பல்வேறு வகையாகப் போராடுகின்றன. மக்கள் வாழ்க்கையில் இத்தகைய போராட்டம் இருந்தாலும் இந்த எல்லையைக் கடந்த வாழ்க்கைப் போராட்டம் ஒன்று உண்டு. அஃது என்ன போராட்டம்? வாழ்க்கையில் உயர்ந்த குறிக்கோள்களை வைத்துக் கொண்டு அவற்றைப் போற்றி வாழப்போராடுவதே அது. இத்தகையோருக்கு உணவு முதலிய வாழ்க்கைக்கு தேவைகளை விட உயர்ந்த கொள்கைகளே பெரியவையாகத் தோன்றும். இப்போராட்டம் முதிர்ந்த போது குறிப்பிடப்படுகின்றது.

இல்லற நெறி

வாழ்க்கையின் தத்துவம் திருமணத்தில் தொடங்குகின்றது. அதுவே அறனும் அன்பும் உடைய இல்வாழ்க்கையில் விளக்கமடைகின்றது. இல்வாழ்க்கை சிறப்புடன் அமைய வேண்டுமாயின் ஒருவருக்கொருவர் வாழ்க்கைத் துணையாகத் தேர்ந்தெடுக்கப்படுவர். எல்லா நிலைகளிலும் சரியாக அமைய வேண்டும். ஒத்த உடல்நிலை கிட்டத்தட்ட ஒத்துப் போதும் உள்ளக் கிளர்ச்சி நிலை, தேவையான அளவு பொருளாதாரநிலையில் மரபு வழிவகையில் வாழ்விற்கு தேவையான வழிமுறைகளாக கூறுகின்றனர்.

திருக்குறளை ஓர் உயர்ந்த மணிகள் வைக்கப்பெற்றுள்ள ஒரு பெட்டகத்திற்கு ஒப்பிடலாம். தங்க நகைகள் செய்வோர் அவற்றில் தத்தம்

பொருளாதார நிலைக்கேற்றவா இரத்தினங்களைப் பதித்து அழகு செய்வர். நகைகளில் பதிக்கப்பெற்றுள்ள மணிகள் தம் ஒளியைப் பிரகாசிக்கச் செய்து தங்கள் நகைகளின் மதிப்பை உயர்த்துகின்றன. இவ்வொளி புறவொளியாகும்.

பெரும்புலவர்கள் தம் இலக்கிய நகைகளைப் படைக்கும் போது கதைகளில் அல்லது காவியங்களில் ஆங்காங்குள்ள சந்தர்பங்களுக்கேற்றவாறு, திருக்குறள் மணிகளைப் பதித்து அழகு செய்வர். இம்மணிகள் தாம் விடும் கருத்தொளிகளினால் காவியத்தின் அல்லது கதைகளின் அழகினைப் பெருக்குகின்றன. இந்த ஒளி அகஒளி; உள் ஒளி; இந்த ஒளிபடிப்போர் உள்ளத்திற்கு வழிகாட்டி அவர்தம் பண்பாட்டையும் ஒழுக்கத்தையும் பெருமையுறச் செய்கின்றன.

நீங்காத நினைவுகள் (ஊர்)

"நான் பிறந்த ஊர் கோட்டாத்துர் (முசிறி வட்டம்) இப்போத துறையூர் வட்டம். சாதரணமாக எல்லாச் சிற்றூர்களில் உள்ளத்தைப் போலவே இவ்வூரிலும் ஊர்ப் பெயருடன் வீட்டுப் பெயர்கள் இணைந்தே வழங்குகின்றன. அரும்பாவூரார் வீடு, வேப்பூரார்வீடு, பரளியார் வீடு, கணவாயார் வீடு, சிறுகுடியார் வீடு, சிறுகனூரார் வீடு, ஒக்கரையார் வீடு என்று வழங்குகின்றன. என்றோ ஒரு காலத்தில் நினைத்து பார்க்க முடியாத காலத்தில் அரும்பாவூர், வேப்பூர், சிறுகுடி போன்ற ஊர்களேயாகும்."[4] நினைவு கூர்கிறார் பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் அவர்கள்.

ஒழுக்கச் சீர்கேடுகள்

ஆசைகளில் பலவகை உண்டு. பண்டையோர் மண்ணாசை, பெண் ஆசை, பொன்னாசை என்ற மூன்றில் அனைத்தையும் அடங்குவர். சிற்றூர்களில் ஏழைகட்கு ஈடு (நிலம்) மேல் செல்வர்கள் கடன் கொடுத்து, அந்த ஏழைகள் அசலும் வட்டியும் திருப்பித் தராத நிலையில் ஈட்டுக்குரிய நிலத்தை தம்

பேருக்குத் கிரயம் எழுதிக் கொள்வார்கள். ”அரசியல் வாதிகள், உயர் அதிகாரிகள் தில்லு முல்லுகளாலும் கையூட்டும் முறைகளினாலும் சம்பாதித்த பணத்தை பூமி வாங்கி பூமித்தாயை களங்கப்படுத்துவர். இது மண்ணாசையைச் சேர்த்து பெண்ணாசையுடைவர் பல்வேறு ஒழுக்கச் சீர்கேடுகள் புரிந்து கற்பழிப்பு, பருவம் எய்தாத மகளிர்க்குப் பங்கம் விளைவித்தல் போன்ற செயல்களில் ஈடுபட்டு அழியாப் பழிகளை சுமந்து சமூகத்தினால் இழித்துப் பேசப் பெறுவர். பொன்னாசை என்பது பணத்தாசையால் மக்கள் செய்யும் இழி செயல்கள் சொல்லி முடியாது வங்கிக் கொள்ளை, வங்கியிலுள்ளோரே புரியும் தில்லு முல்லுகள், பதவிகளில் உள்ளவர்கள் புரியும் பல்வேறு இழிசெயல்களால் திரட்டும் பணம் முதலியவற்றை நாம் அன்றாட நிகழ்ச்சிகளாக காண்கிறோம்.”[5] என்கிறார் கவிஞர்.

பணம் சம்பாதிப்பதைப் பற்றி வள்ளுவர் பெருமான் பொருள் செயல்வகை (பொருட்பால் அதிகாரம் – 76) என்ற அதிகாரத்தில் விளக்குகின்றார். ‘பணக்காரன் பக்கம் பத்து பேர் பைத்தியக்காரன் பக்கம் பத்து பேர்’ என்பது பழமொழி. இன்றைய உலகில் ஒரு பணக்காரன் பக்கம் எந்தவிதக் காரணமும் இன்றி சிலர் சுற்றிக் கொண்டு அப்பணக்காரர் செல்லும் இடந்தோறும் அவருடன் கூடவே திரிவதைக் காணலாம். இதனால் அப்பணக்காரருக்குள்ள மதிப்பும் தமக்குண்டு என்ற பொய்யான மயக்கம் இவ்வாறு செய்யத் தூண்டுகிறது எனக் காணலாம்.

எந்த விதமான நற்குணங்களும் ஓர் ‘அம்மன் காசு’ அளவு கூட மதிப்பில்லாதவரிடம் பணம் சேர்ந்து விட்டால் அவர்களையும் சமூகத்தில் மதிக்கத் தக்கவர்களாகச் செய்யும் சிறப்புடையது அவர்களிடமிருக்கும் பணம். ஆகையால் அந்தப் பணத்தை விட ஈட்டத் தகுந்த பொருள் வேறு இல்லை.

”பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்லது இல்லை பொருள்” **- (குறள். 751)**

என்பது வள்ளுவர் வாக்கு. இத்தகைய பெருமையைத் தரக்கூடிய பணத்தின்மேல் ஆசை கொண்டு அதனை எப்படித் திரட்டலாம் என்று சிலர் ஆலாய் பறந்து திரிவதைக் காணலாம். என் தாயார் பிறந்த பிரகம்பி (திருச்சி மாவட்டம் இலால்குடி வட்டம்) என்ற சிற்றூரில் ஒரு செட்டியார் குடும்பம். அவருக்குச் சமயபுரம் (திருச்சி அருகில் உள்ளது) பக்கம் ஏராளமான சொத்து இருந்தது. அவர் குடும்பத்தில் ஒருவரும் எச்சில்கையாலும் காக்கை ஓட்ட மாட்டார்கள். அவ்வளவு வள்ளல் தன்மை அக்காலத்தில் அக்குடும்பத்தை ஊர்ப் பெருமக்கள் 'பணக்கார செட்டியார் வீடு' என்று மிகப் பெருமையுடன் பேசுவார்கள். மலருக்குள்ள 'உண்மையான மணம்' வீசுவது போல, அவரிடமுள்ள பணத்திற்குப் 'பொய்யான மணம்' வீசுவதை அக்காலத்தில் யான் காணும் மனப்பக்குவம் இல்லாவிடினும் இப்போது நினைந்து காண்கின்றேன்.

”பணம் இல்லாத ஏழைகளை எல்லாரும் இகழ்வார்கள். பொதுமக்கள் அத்தகையவரை 'வெங்கன்' என்று பெயர் சூட்டிக் கிண்டல் செய்வார்கள். 'பணம் இருக்கும் செல்வரை' பண இருப்பு ஒன்றையே காரணமாகக் கொண்டு ஈகை குணங்கள் அளவு கூட இல்லாதிருந்தும் கூட அவருக்கென்ன குறைவு? எள் அளவு கூட இல்லாதிருந்தும் கூட கை நிறைய காசு இருக்கிறது”[6] என்று சொல்லி மகிழ்வார்கள்.

”இல்லாரை எல்லரும் எள்ளுவர்; செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு” - (குறள். 752)

என்பது வள்ளுவரின் பொய்யாமொழி.

இவ்விடத்தில் ஒன்றை உன்னிப்பாக கருத வேண்டும்; சிந்திக்க வேண்டும். அறிவுடையராக வேண்டும் என்று முயன்றால் அதில் தவறுகள் நேரிடா; அறிவுடையராகத் திகழ்வதற்குச் சான்றிதழ்கள் பெறும் நிலைக்கு கொண்டு செலுத்திவிடும். ” குமுதம் உளவறிகுழு(Detective Team) பத்தாயிரம் ரூபாய் தந்து

காந்தி பெயரில் சென்னைப் பல்கலைக்கழக (Ph.D.) பட்டம் பெற்றதை நாடறியும். செய்தித்தாளில் வெளிவந்த செய்தி, அங்ஙனமே பணம் வெளிவந்த செய்தி, அங்ஙனமே பணம் சம்பாதிக்க வேண்டும் என்று முயன்றால் கையூட்டு முதல் எத்தனையோ தில்லுமுல்லுகளில் கொண்டு செல்ல வேண்டும். இவையெல்லாம் பண்டமாற்று முறை மாறி 'பண மாற்று முறை' நடைமுறைக்கு வந்தபிறகு ஏற்பட்ட அக்கிரமச் செயல்கள்."[7]

திருவள்ளுவர் 'பொருள் செயல்வகை' அதிகாரத்தில் கூறும் கருத்துகளை அறிந்து தெளிய வேண்டுமானால் உழைப்பையே பொருளாகக் கருதும் கருத்து வேண்டும். இல்லையேல், எப்படியாவது பணம் சேர்த்தவர்க்கே உலகத்தில் மதிப்பும் உண்டு என்று பொருள் தோன்றும். அறம் ஓதிய வள்ளுவர் பெருமானே இவ்வாறு பொருளைஎ பெரிதாகப் போற்றுகின்றாரே என்ற முரண்பாடு தோன்றும். அது தவறு, உழைத்து அற நெறியில் வந்த வந்த பொருளைப் பற்றியே அவர் இந்த அதிகாரத்தில் கூறுகின்றார் என்பதைக் கருத்தில் இருத்துதல் வேண்டும்.

இங்கும் பொருள் செயல் வகையை ஓதும்போது அறத்தை நன்கு வற்புறுத்துகின்றார். செய்யும் திறம் அறிந்து தீமை இல்லாதவழியில் சேர்ந்து பொருளாக இருக்க வேண்டும்.

கல்வி ஆராய்தல்

கல்வி உளவியல் கோட்பாடுகள் என்னும் தொடரில் கல்வியாவது ஏன் எதனைக் குறிக்கின்றது? உளவியல் எதனை உணர்த்துகின்றது? கோட்பாடுகள் யாவை? என்பவற்றை ஆராய்தல் வேண்டும்.

முதலில், கல்வியைப் பற்றிக் சிறிது ஆராய்வோம். ஒரு காலத்தில் கற்பித்தல் மட்டுமே கல்வி என்றும் படிப்பு, எழுத்து, கணிதம் ஆகிய மூன்றையும் குடிமையைப் பற்றிய சில உண்மைகளையும் பயிற்றுவித்தவே கல்வி என்றும்

கருதினர். இது முற்றிலும் சரி என்று சொல்ல முடியாது. அடிப்படைப் பாடங்களில் பயிற்ச்சி பெறுதல் மட்டும் கல்வியன்று; அ்்து அதனிலும் சாலப் பெரிது. அன்றியும் நீண்ட காலமாக, கல்வியில் மாணாக்கன் தான் கண்ட அறிவையும் மனப்பான்மைகளையும் எப்படியாவது உட்கொள்வதாகவும், கல்வி அவனுக்குள் ஊற்றப் பெறுவதாகவும் கருதப்பெற்றது. மாணாக்கனின் உள்ளம் ஒரு வெற்றிடமாகவும், அதை ஆசிரியர் அறிவுறுத்துணுக்குகளால் நிரப்புவதாகவும் கொள்ளப்பெற்றது. கல்வி என்பது நாம் ஒருவனுக்கு ஊற்றக்கூடிய பொருளன்று; ஊட்டக்கூடிய பொருளுமன்று அ்்தை அவனை அடைதல் வேண்டும்.

இன்றைய கல்வி ஆராய்ச்சிகளும் மக்களைப் பற்றி பிற துறைகளால் அறிந்தனவும் கல்வியானது மக்களின் நடத்தையை மாற்றும் ஒரு செய்முறை என்று காட்டுகின்றன. கல்வியில் மூன்று அடிப்படைக் கூறுகள் உள. அவை தனியாள், அவன் வாழும் சூழ்நிலை தனியாளுக்கும் சூழ்நிலைக்கும் இடையில் நிகழ்கின்ற இடைவினை மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரையில் அவனுக்கும் அவன் வாழும் சூழ்நிலைக்கும் இடையறாத இடை நிகழ்ச்சியும் இடைவினையும் நடைபெற்று வருகின்றன.

தனியாள் சூழ்நிலையால் பாதிக்கப் பெறுகின்றான். சூழ்நிலை அவனை மாற்றுகின்றது. அவன் இடையறாது இயற்றும் இடைவினைகளால் சூழ்நிலையும் மாற்றப் பெறுகின்றது. இந்த இடைவினைகளால் தான் கல்வி ஏற்படுகின்றது.

குழந்தை அழுகின்றது, தாய் அதனை எடுத்துப் பாலூட்டுகின்றாள். அழுகை நின்று போகிறது. பிறிதொரு சமயம் அழுகின்றது. இப்பொழுது பசியால் அல்ல. சிறுநீர் விட்டதால் ஆடை நனையவே குளிரால் அழுகின்றது. தாய் நனைத்த ஆடைகளை நீக்கி வேறு ஆடைகளை உடுத்துகின்றாள். படுக்கையையும் மாற்றுகின்றாள். அழுகை நிற்கிறது. அழுதால் பல நலன்களை

பெறலாம் என்ற அநுபவத்தைக் குழந்தை பெறுகின்றது ‘டம்வில்லி’ என்ற அறிஞரின் கருத்துப்படி ”கல்வி என்பது அதன் பரந்த பொருளில், தனியாள் தொட்டியிலிருந்து சுடுகாடு போகும் வரையில் பெறும் எல்லாச் செல்வாக்குகளையும் அடக்கி கொண்டுள்ளது”[8] என்பதாகும்.

குழந்தைகள் பள்ளிக்குச் செல்லும் முன்னரே வீட்டிலும் தெருவிலும் விளையாட்டின் மூலமும் அன்றாட வாழ்க்கையின் மூலமும் நாம் அறிவோம்.

நீங்காத நினைவுகள் (பணி ஏற்றல்)

திருமணம் ஆகி, ஐந்து ஆண்டுகள் சென்றுவிட்டன இதுகாறும் தனிக் குடும்பம் நடத்திய பழக்கம் இல்லை. உணவு விடுதிகளில் உணவு, மாமனார் வீட்டு உணவு என்ற முறையில்தான் என் வாழ்க்கை பொறுப்பற்ற முறையில் நடைபெற்று வந்தது. நடுநிலைப் பள்ளியில் தலைமையாசிரியனாக பணியேற்ற பிறகு கூட மூன்று மாத காலம் ‘மாணி வாழ்க்கை’ தான் நடுநிலைப் பள்ளியின் கட்டட அமைப்பு தமிழ் எழுத்து டவபைப் போல இருக்கும். மேற்பக்கப் பகுதியில் மூன்று அறைகள் இருந்தன. தென்புற ஓர் அறைக்குள் ஓர் உள்ளறை இருந்தது; இது தான் தொடக்கத்தில் தலைமையாசிரியர் அறையாக அமைந்தது. வடபுறம் ஓர் அறைக்குள் உட்புறமாக ஒரு நிரந்தரமான நூலகத்திற்குப் பயன்பட்டது. வடபுறமுள்ள பகுதியில் உள்ள இரண்டு அறைகள் குடும்பம் நடத்துவதற்கேற்ற படுக்கை அறை, கூடம், உண்ணும் அறை இரண்டு அறையை பின்புறமாக தாழ்வாரம் இறக்கி பின்புறமாக இரண்டு அறை பத்தடி இடம் விட்டுக் கழிப்பறைகள் அமைக்கப்பெற்றிருந்தன.

இவற்றை தவிர வடபுறப் பகுதியில் கீழ்க் கோடியில் சிறிய உள் அறையுடன் கூடிய ஓர் அறை இருந்தது. இது ஆசிரியர்கள் தங்கும் அறையாகப் பயன்பட்டது.

குடும்பத்திற்காக அமைந்த இரண்டு அறைகளுள் மேற்புறமாக இருந்த அறை என் இல்லாமாகப் பயன்பட்டது. மற்றோர் அறையில் கூடம் சற்று பெரிதாக அமைந்திருந்தால் அது வகுப்பறையாக பயன்படுத்தப் பெற்றது. பள்ளியிலேயே என் இல்லம் அமைந்தாலும் எனக்கு மக்கட்பேறு ஏற்பட்டதாலும் குடும்ப வேலைகள் அதிகமின்றி நான் துறையூரில் வாழ்ந்த ஒன்பாதாண்டுக் காலமும் ஒரு நாளில் 24 மணி நேரமும் பள்ளியின் முன்னேற்றத்திலேயே கழிந்தது. தூங்கும் போது கூடவா பள்ளி முன்னேற்றம்? என்று வினவலாம் ஆம். உண்மை தான். வெறும் புகழ்ச்சி இல்லை. என் முழுக் கவனமும் பள்ளியைப் பற்றியே இருந்தால் காணும் கனவுகளும் பற்றியே தான் இருக்கும். கட்டட மேற்பார்வை ஆடுகள மேற்பார்வை போன்றவை தான் கனவிலும் வரும். பள்ளித் தேவைக்காகப் பன்முறை பார்க்க எஞ்சி நிற்கும் காட்சிகள் கனவிலும் வரும்.

சா.கணேசன் இல்லம் எனக்கு ஓராண்டுக்கு முன்னரே நன்கு அறிமுகமான இடம். ஆகவே யாருடைய துணையுமின்றிக் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு அன்றைய பணிக்குத் தயாரானேன். காரைக் குடியில் கல்லுக்குட்டி என்ற இடம் தான் ஊருக்கு இதயம் போன்றது.

ஒரு சிறிய தெப்பக்குளம். அதைச்சுற்றி நான்கு திசையிலும் வீதிகள், வீதிகளின் இருமருங்கும் கடைகள், உணவு விடுதிகள், காய்கறிச் சந்தைகள் எல்லாம் இருந்தன. தென்கிழக்கு மூலையில் கொப்புடையம்மன் கோயிலும், மேலை வீதியில் கிருட்டிணன் ஆலையமும் உள்ளன. முதல் வேலையாக கொப்புடைய நாயகியின் திருக்கோயிலை அடைந்து அங்குள்ள கணேசப் பெருமானை வழிபட்டேன்.

கல்லூரிக்கு போகத் தயராக இருப்பதைப் பார்த்த திரு.கணேசன், "மிஸ்டர் ரெட்டியார், குதிரை வண்டி அமர்த்த வேண்டாம் கல்லூரிப் பேருந்துகள் மூன்று ஓடுகின்றன."[9] இவற்றில் ஏதாவது ஒன்றில் போகலாம். நீங்கள் 'இந்திரா

மருத்துகம் அல்லது கல்லுக்குட்டி' அஞ்சல் நிலையம் என்ற ஏதாவது ஒரு இடத்தில் நின்று கொண்டிருந்தேன். அப்போது பன்னிரண்டு ஆண்டுகட்குப் பின்னர் என்னுடன் திருச்சி புனித சூசையப்பர் கல்லூரியில் வேதியியல் பயின்ற திரு V.V.சுப்பிரமணியம் என்பவரைக் கண்டு மகிழ்ந்தேன். தான் இரண்டாடுகளாக அழகப்பர் கல்லூரியில் வேதியியல் விரிவுரையாளராகப் பணியாற்றுவதாகக் கூறினர். இருவரும் வேதியியில் பேருந்தில் ஏறிக் கொண்டே சென்றோம். இவரும் பயிற்ச்சிக் கல்லூரி அறிவியல் கட்டம் ஒன்றன் முதல் தளத்தில் இயங்குவதாக விளங்கினார். ஆகவே இருவரும் ஒரே இடத்தில் இறங்கினோம். கல்லூரி இயங்கும் இடத்தை காட்ட அங்குச் சென்றேன். சான்றிதழ்கள் பணியேற்கும் பொறுப்புக் கடிதம் இவற்றுடன் சென்றிருந்தேன்.

திரு.எஸ்.திருவேங்கடாச்சாரி அழகப்பர் (கலைக்) கல்லூரியில் பணியாற்றியவர். திரு.ஐ.என்.மேனனுக்கு உதவி புரிந்து கொண்டிருந்தார். எல்லோருமே அறிவியல், உடற்பயிற்சி, கைத்தொழில், ஓவியம் இதற்குரியவர்களைத் தவிர அன்றுதான் சேர்ந்தோம்.

திருப்பதி சென்று திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ் துறையில் விரிவுரையாளராக சேர்வதென உறுதியாயிற்று. புதிய பல்கலைக்கழகத்தில் தமிழ் விரிவுரையாளர் பதவி 1960-இல் தான் ஏற்பட்டது. நான் தான் தமிழ்த்துறையில் தொடக்கத்திற்கு பிள்ளையார் தான் தமிழ்த்துறையின் தொடக்கத்திற்கு பிள்ளையார் சுழி போட வேண்டியனவாக இருந்தேன். சென்னையில் இல்லத்தில் நடந்த பேட்டியில் துறை வளர்வதற்குரிய இருப்பினை துணைவேந்தர் பேச்சிலிருந்து உறுதி செய்து கொண்டேன். தியாக உணர்வும் உண்மையான தமிழ்பற்றும் இன்னல்களைத் தாங்கிக் கொள்ள கூடிய இதயமும் 'பலனை எதிர்பாராத கடமையைச் செய்' என்ற கண்ணனின் மறை மொழியில் நம்பிக்கையும் உள்ளவர்கட்கு முடியாத

காரியமும் உண்டோ? வினைதிட்பம் என்பது மனத்திட்டம் என்று வள்ளுவரும் கூறியுள்ளாரன்றே?

“எண்ணிய எண்ணியாங்

கெய்துப எண்ணியார்

திண்ணிய ராகப் பெறின்

என்ற மறைமொழியை”[10] - (நீதிநெறி விளக்கம். 52)

என் மனத்தில் இறுக்கிக் கொண்டு ஜீலை 31 தேதியன்று (1960) கரைமாநகரிலிருந்து புறப்பட்டேன். எத்தனை நாட்கள் அன்பு மனைவியும் அருமை செய்வர்களையும் பிரிந்து வாழ வேண்டி வருமோ என்ற ஏக்கம் தொடர்ந்து என் மனத்தில் அடிக்கமாக ‘வேங்கடம் மேவிய விளக்கு’ தான் அறியும் திருவேங்கடவன் கழகத்தில் தமிழ்த்துறையில் எம்.ஏ., பிஎச்.டி., முதலிய பட்டங்களை பெற வாய்பாக கொண்டேன்.

எந்தெந்த இருப்பூர்தி ஏறி எப்படிச் சென்றேன் என்பதை இப்போது நினைவு கூர முடியவில்லை. படுக்கை பெட்டியுடன் சென்றதை மட்டிலும் நினைத்து பார்க்க முடிகின்றது. தங்கும் அறைகள் கிடைக்கவில்லை. இப்போதுள்ள வசதிகள் இருபதில் ஒரு பகுதி கூட அன்று இல்லை. திருப்பதியில் எவரையும் முன்னரே அறிவேன். ஆகஸ்டு முதல் தேதி அதிகரை இரண்டரை மணிக்கு திருப்பதி அடைந்தேன்.

எந்தப் பொறுப்பிலிருந்தாலும் நேர்மையைக் கடைப்பிடித்தல், வைணவத்தில் ஆழ்ந்த பற்றுடைமை ஆழ்வார் பாசுங்களில் ஆழங்கால்படுதல், பிறசமயப் பற்று, அமைதியான போக்குடைமை சாதி வெறியின்மை, நாட்டு பற்றுடைமை-இவை-யணைத்தும் உருண்டு திரண்டு ஒன்றான தன்மையுடைய சான்றாளர் தாம் திரு.தி.மூ.நாராயணசாமி பிள்ளை. வழக்குரைஞர் தொழிலைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு வாழ்க்கையை நடத்தினாலும் பிற பொறுப்புகள் நாம்

அவருடைய வாழ்க்கையை மேம்படுத்தின. ஒல்லும் வகையெல்லாம் நேர்மையாக பணியாற்றினமையால் அவர்தம் வாழ்க்கை வளமாக அமைந்தது. அனைவராலும் போற்றப் பெறும் புகழும் அவரை வந்தடைந்தது.

திருச்சி மாவட்டக் கழகத் தலைவர். இந்து அறநிலையை வாரியத் தலைவர். பொதுப் பணியாளர் தேர்வு ஆணையத் தலைவர், அண்ணாமலைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் (ஆறு ஆண்டுகள்) தமிழ்நாடு கூட்டுறவு வாங்கித் தலைவா இன்னாரேன்ன பல பெரிய பொறுப்புகளை வகித்த பெரியார் இவர்.

இப்பொறுப்புகளை வகித்தபோது நேரிய போக்கையே கடைபிடித்தார் பல்லோர் போற்ற வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தார். இவர்தம் வாழ்க்கை பிறருக்கு எடுத்துக் காட்டாகவும் அமைந்தது.

அந்த காலத்தில் தலைவர் பார்வையிட வருகின்றார் என்றால் பள்ளியே கல கலந்து விடும் ஆசிரியர்கள் நல்ல ஆடையில் தோன்றுவார்கள்; வாரக் கணக்கில் முகச்சவரம் செய்து கொள்ளாதிருக்கும் கீழ் வகுப்பு ஆசிரியர்கள் கூட சுத்தமான முகத்துடன் காணப்படுவார்கள். மாணவர்கள் நலனில் அக்கறை காட்டியதால் புகழுடன் திகழ்ந்தார்.

மேனாடுகளின் அண்மை காலத்து இலக்கிய வரலாற்றை நோக்கினால் கவிதை வடிவத்தில் யாப்பு வடிவம் ஆட்டம் கொண்டது தெளிவாகும். வளர்ந்து வரும் புதிய சமுதாயத்தின் சிந்தனை வளர்ச்சியின் வேகத்திற்கேற்ப பழைய யாப்பு வடிவங்கள் இயைந்து கொடுக்க முடியாமல் தயங்கி நிற்பதைக் காண்கிறோம்.

இந்த வடிவங்களைத் தகர்த்தெறியும் கவிதையில் புதிய வாக்கிய அமைப்பை ஏற்கச் செய்யும் புது முயற்ச்சியாளர்கள் முன் வந்தனர். மொழியைப் புது முறையில் செயற்படச் செய்தால் தான் வளர்ந்து வரும் கருத்து செல்வ

வெளியீட்டிற்கு அஃது ஈடு கொடுக்க முடியும் என்றும் நம்பினர். இவர்கள் முயற்ச்சியில் தான் வசன கவிதை கட்டற்ற கவிதை வடிவங்கள் தோன்றலாயின. தமிழில் இத்தகைய வடிவங்கள் தோன்றுவதற்குப் பாரதியார் தான் 'வசன கவிதைகள்' என்ற தலைப்பில் பல கவிதைகளை வெளியீட்டு இம்முயற்ச்சிக்கு ஊக்கம் காட்டினார் என்று கருதலாம், "கொளருச் சென்ற வழி துன்னூரி இனிது செல்லுமாப் போலே"[11] இவற்றை முன்மாதிரியாக கொண்டு எண்ணற்ற வடிவங்களில் எண்ணற்ற புதுக்கவிஞர்கள் புதுக் கவிதைகள் படைத்தனர். மேனாட்டு கவிஞர்களாகிய டி.எஸ்.எலியட், எஸ்ரா பவுண்ட் போன்றவர்களில் படைப்புகளும் இவர்கட்கு ஒளி காட்டின. இதன் வளர்ச்சி, ஏற்றம், இறக்கம் முதலியவற்றை இந்நூலின் மூன்றாம் பகுதி வாயிலாக விளக்குகின்றது.

புதுக்கவிதைகளை பலர் வெறுக்கின்றனர் தூற்றுகின்றனர் இது தவறு புதுக்கவிதைத் துறையில் அதிகமாக செல்வாக்குடன் திகழ்பவர்கள் மரபுக்கவிதைகள் எழுதிப் புகழ்பெற்றவர்களே, இவர்கள் படைப்புகள்தாம் நிலைத்து வாழக்கூடியவை "குட்டுவதற்கோ பிள்ளை பாண்டியன் ஈங்கு இல்லை"[12] என்ற பாடலில் காட்டப் பெறும் எச்சரிக்கை இல்லாததால் புற்றீசல் போல் எண்ணற்றவர்கள் புதுக்கவிதைகள் எழுதத் தொடங்கி விட்டார்கள். இவர்கள் முயற்ச்சி பாராட்டத் தக்கதாயினும் இவர்களின் படைப்புகள் 'ஈசல் வாழ்வைத்தான்' பெறமுடியும் என்பதை இப்பகுதி கோடிட்டி காட்டுகின்றது. சிறப்பு புதுக்கவிதைகளும் படிப்போருக்குத் பாட்டநுபவம் தரும் என்றும் தெளிவாக பெற்றுள்ளது.

திருமந்திரம்

சேநநர்கள் உயர்வதற்குச் சாதனமான இரகசியங்கள் மூன்று அவை: திருமந்திரம், துவயம், சரமசுலோகம் என்பவை. இவற்றுள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் பெருமை பெற்று விளங்கும். திருமந்திரம் எல்லா

மந்திரங்களிலும் சிறந்து விளங்குவது; எல்லா வேதங்களின் சாரமானது; தீங்குகள் அனைத்தையும் போக்க வல்லது; எல்லாப் பலன்களையும் நல்க வல்லது; எல்லா உபாயங்களையும் தலைக்கட்டி வைக்க வல்ல ஒரு சாதனமாக இருப்பது. சேதநம், அசேதநம், ஈசுவரன் ஆகிய தத்துவங்களை வெளியிட வல்லது; வேறு மந்திரங்களின் உதவியின்றி எல்லாப் பலன்களையும் அளிக்க வல்லது; எல்லா மூர்த்திகளும் பொதுவானது. மாமுனிவர்களும் ஆழ்வார்களும் இந்த மந்திரத்தையே மிக விரும்பி இதன் பெருமையை அளவிலாது புகழ்ந்து பேசியுள்ளனர்.

எம்பெருமானிடம் கலியனால் ஆயுதப் பிரசவம் போல் வலிந்து பெறப்பட்டது. இம்மந்திரம் ஆயுதப் பிரசவத்தில் வெளியான குழந்தை மருத்துவரும் பிறரும் பாதுகாப்புடன் வளர்க்க வேண்டியவர்களாகின்றனர். இங்கு ஆயுதத்தை காட்டிப் பெறப்பட்ட மந்திரம் அனைவரையும் காப்பாற்ற வல்லது.

இங்ஙனம் பெருமை பெற்று விளங்கும் திருமந்திரம் எட்டு எழுத்துக்கள் கொண்டதாகும். உபநிடம் இந்த மந்திரத்தின் எழுத்துக்களைக் கணக்கிட்டு இந்த எட்டு எழுத்துகளும் சீமந் நாராயணைக் காட்டக் கூடியதென்று கூறி இதனை ஓதுபவரது பெருமையைப் பரக்கப் பேசியுள்ளது.

சமுசாரிகள் பகவானுக்கு அடிமைப் பட்டிருந்தலையே இயல்பாகப் பெற்றவர்கள் என்று சாத்திரங்கள் கூறும். இது 'சேஷப்பட்டிருத்தல்!'[13] என்று சொல்லப் பெறும். இந்த இயல்பை – நிலையை – எப்படியோ இவர்கள் மறந்து விடுகின்றனர். ஒரு காரணமும் இன்றியே ஆட்கொள்பவனாகிய பகவானுடைய இத் தன்மையும் மறந்து விடுகின்றனர். பகவானுடைய இத்தன்மையினால் அவனைச் சாத்திரங்கள் 'நிருபாதிக சேஷி' என்று குறிப்பிடும்.

பேரா.ந.சுப்புரெட்டியார் பார்வையில் தத்துவ கருத்துகள்

உயிரல்லாத உலகப் பொருள் அனைத்திற்கும் மூலப் பகுதியே (பிரகிருதியே) காரணமாகும். ஒரு பொருள் உண்டாவதற்கு மூன்று காரணங்கள் கூறுவதுண்டு. அவை முதற்காரணம், துணைக் காரணம், நிமித்த காரணம் ஆகும். மண் பானையாக வனையப்பெறுமிடத்து மண் முதற்காரணம் (உபாதானகாரணம்); அதாவது காரியமாக மாறுவது முதற்காரணம். இங்கு மண் பானையாக மாறிற்று. முதற்காரணமாக உள்ள ஒரு பொருளை மாற்றவல்ல கர்த்தாவை நிமித்த காரணம் என்று கூறுவர். இங்கு, பானையை வனையவல்ல குயவன் நிமித்த காரணம் ஆகின்றான். அவன் குடத்தை வனைவதற்குக் கருவியாகவுள்ள தண்டு, சக்கரம் முதலியவை துணைக்காரணம் (சகஹாரி காரணம்). இங்கு மண் பானையாகிற காரணமாவதற்கு மூன்று காணங்களும் வெவ்வேறு பட்டிருப்பதைக் காண்கின்றோம். இங்ஙனமின்றி உலகத்தோற்றத்திற்கு - உலகம் உண்டாகிய காலத்தில் - ஈசுவரனே மூவகைக் காரணங்களாக உள்ளான். அதாவது ஈசுவரனே படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழிலுக்கும் காரணமாகின்றான். இதுவே வைணவ தத்துவமாகும்.

> **"நினைந்த எல்லாப் பொருள்கட்கும்**
> **வித்தும்ஆய், முதலில் சிதையாமே**
> **மனம்செய் ஞாலத்து உன்பெருமை**
> **மாசு ணாதோ? மாயோனே"**[14]

- (திருவாய்.1.5.2)

மேற்கூரிய காரணங்களுள் இறைவன் உலகிற்கு முதற்காரணம் என்பது மிகவும் முக்கியமானது. இதனை தெளிவாக காண வேண்டும். காரணப் பொருள் பின் காரியப் பொருளாக மாறுவது, முதற் காரணம்

என்பது பொது விதியாகும். இங்கு இறைவன் இவ்வுலகப் பொருளாக மாறுவது முதற் காரணம்.

உலகத்து பொருள்கள் போலன்றி இறைவனை தன் நிலையில் சிறிதும் சிதைவின்றி இருந்து கொண்டே எல்லா பொருள்கட்கும் வித்தாக உள்ளான் என்பது கருத்தாகும். இங்ஙனம் இருத்தல் அவனுடைய ஆச்சர்ய சக்தியாகும். இத்தனையே திவ்யகவி பிள்ளைப் பெருமாள் அய்யங்கார் என்று மிக அழகான உவமை கலந்த பாடலால் விளக்குவர்.

ஈசுவரன் அனைத்திற்கும் ஆதாரமானவன்; அனைத்தையும் அடக்கி ஆள்பவன்; அனைத்தினுடைய பலனையும் அநுபவிப்பவன். மேலும் அசித்து (இவ்வுலகப் பொருள்) மாறுபாடடைவதற்கு இவனே காரணன்.

"கருமமும் கரும பலனும்
ஆகிய காரணன்"[15] - (திருவாய் 3.5:10)

என்ற திருவாய் மொழித் தொடரால் இதனை அறியலாம்.

"பவ்வநீர் உடையாடை ஆகச் சுற்றி
பார் அகலம் திருவடியா பவனம்
செவ்விமா திரம் எட்டும் தோளா அண்டம்
திருவடியா நின்றான்" - (திருவாய். 6.6:3)

என்பதில் அசித்தை மட்டிலும் உடலாகக் காட்டுவர். சத்த சத்துவம், மிச்ரத்துவம், சத்துவ குளியம் ஆகிய மூன்று பகுதிகளும் ஈசுவரனுக்கு உடலாயும் நிக்தியர் முக்தர் பக்தர் என்ற மூன்று வித ஆன்மாக்களும் ஈசுவரனுக்கு போக்கியமாயும் என்பது தெளிவாக அறியலாம்.

சரீர-சரீர பாவனை என்ற கருத்தை இவ்விடத்தில் விரிவாக விளக்குவது பொருத்தமாகும். உயிர் உடலில் இருந்து அதனைத் தரிக்க செய்கின்றது. உயிரின் றேல் உடல் வீழ்ந்து விடுதல் கண்கூடு. மேலும்

உயிர் தான் உடலை இயக்குகின்றது. உயிர் உடலுக்கு தலைவனாக உள்ளது. அங்ஙனமே இறைவன் உள்ளான் என்பதை விளக்குகின்றது.

அன்றியும், உடலினுள் உயிர் இருப்பதற்கும் உடல் உயிர் இரண்டினுள் இறைவன் இருப்பதற்கு மற்றொரு வேறுபாடும் உண்டு. உயிர் உடலினுள் இருக்கும் போது அவ்வுடலுக்குரிய வளர்ச்சி தேய்வுகள் (விகாரங்கள்) உயிருக்கு உண்டாவதில்லை. ஆனால் அவ்வுடைலை பற்றிய இன்ப துன்ப உணர்ச்சிகள் ஆகியவை உயிருக்கு உண்டு.

இதற்கு காரணம் 'பிரவேச ஹேது விசேடம்' என்பர் மெய்விளக்க அறிஞர்கள். ஆன்மா உடலினுள் கர்மம் அடியாக பிரவேசிக்கின்றது. இறைவனது கர்மம் அடியாக குமாரன் இச்சையாக பிரவேசித்தால் போகரூபமாயிருந்து, இதை எடுத்துக்காட்டால் மேற்கூறிய கருத்தை தெரிவிக்கலாம்.

மேற்குறிபிட்ட நான்கு வியுகங்களும் ஒவ்வொன்றும் மும்மூன்றாக பன்னிரண்டு கிளை வியூகங்களாக வேத தேவனிடமிருந்து நாரயணன் மாதவன் என்ற கிளைகளும் சங்கர்ஷணனிடம் கோவிந்தன், விஷ்ணு மது சூதனன் என்பவைகளும் அநிருத்தனிடமிருந்து இப்பன்னிரு திருமண் காப்பும் அவர்கள் திருமேனியில் குறிக்கும்.

"திருவேங்கடம் பற்றிய திருப்பதிசும் ஒன்றில்
மின் ஆர் முகில்சேர் திருவேங் கடம்மேய
என் ஆணை என் அப்பன் என் நெஞ்சில் உளானே"[16]

- (திரு. 1.10:6)

தேனே! திருவேங்கட மாமலை என் நெஞ்சினுள்ளே புகுந்தாயேப்

போக லொட்டேன். இந்த நிலை எம்பெருமானை அநுசந்தித்து மகிழ்வதைக் காணலாம்.

தண்ணீர் வேட்கை கொண்டவனுக்கு வேறு .இடங்கட்கு செல்ல வேண்டாதபடி தண்ணீர் தான் நிற்கும் இடத்தில் பூமிக் கடியில் இருந்தாலும் கொட்டும் குந்தானியும் கொண்டு கல்லினால் அல்லது நீர் கிடைக்காதிருப்பது போல, 'எம்பெருமானை கண்டு பற்ற வேண்டும்' என்று அவர் இருந்தும் கட்கிலி என்று நம்கண்களால் காண முடியாதபடி அட்டாங்க யோக முயற்சியால் இறைவன் கிட்டுபவன்.

திருக்குறள் - வாய்மொழி வாசகம் மற்றும் சமயவியல் சிந்தனைகள்

சமயமே - மெய்பொருளியலே மானிட வாழ்க்கையின் சிறந்த நிலை என்று கருதுவர் சான்றோர், திருக்குறள் ஒரு நாத்திக நூல் என்று இதுகாறும் எவராலும் நிறுவப் பெறவில்லை. ஏன்? தந்தை பெரியார் கூட திருக்குறளை ஒரு பகுத்தறிவு நூலாகவோ ஒரு நாத்திக நூலகவோ ஏற்க வில்லை. "கடவுள் வாழ்த்து" அடங்கிய "பாயிரம்" வள்ளுவர் பாடவில்லை என்ற கருத்துகூட உண்டு.

வாழ்க்கை நடைமுறைக்கு உகந்த கீதையை சமயவாதிகள் சிறைப்படுத்த முயல்வதைப் போலவே, திருக்குறளையும் சமயவாதிகள் சிறைப்படுத்த முயல்கின்றனர். ஆனால் படும் தொல்லைகள்

1. "திருவள்ளுவர் எந்த ஒரு இடத்திலும் தம்முடைய சமயச் சார்பு இன்னது என்பதை வெளிப்படையாகத் திட்டவட்டமாகப் புலப்படுத்திக் கொள்ள வில்லை.
2. இறை, மறை, இயல் தொடர்பாக அவர் கையாண்டுள்ள சொற்களையும் சொற்றொடர்களையும் பற்றாசாகக் கொண்டு

வலிந்தும் மெலிந்தும் - ஏன்? நலிந்தும் கூடத்தான் - தங்கட்குச் சாதமாகப் பயன்படுத்திக் கொள்ள முயல்கின்றனர்.

3. திருவள்ளுவர் வினை பற்றிய கொள்கையில் நம்பிக்கையுடையவர், இந்த நம்பிக்கை சமணத்திற்கும் பௌத்ததிற்கும் இல்லை.
4. திருவள்ளுவர் பிறப்பு - இறப்பு வட்டங்களில் நம்பிக்கையுடையவர், கிறிஸ்தவர்கட்கும் இஸ்லாமியர்கட்கும் இந்த நம்பிக்கை இல்லை.
5. சைவத்திற்கும் வைணவத்திற்கும் சித்தாந்த அடிப்படையில் வேறுபாடுகள் அதிகம் இல்லை.
6. திருவள்ளுவர் உலகு, உயிர், அறியாமை ஆகிய பொருள்களின் உண்மையை நம்புபவர்."[17]

இந்த நிலையில் திருவள்ளுவரின் உள்ளார்ந்த சமயச் சார்பு சைவமா? வைணவமா? என்று காண்பதில் இரண்டே காரணங்களைக் கொண்டு ஒரு முடிவுக்கு வரலாம்,

ஒன்று: கடவுள் வாழ்த்தில் வரும் 'எண்குணத்தான்' என்று சொல்வது சைவ - ஆகமங்களின் அடிப்படையில் தான் என்பதைப் பரம வைணவராகிய பரிமேலழகரே ஒப்புக் கொண்டுள்ளார்.

இரண்டு: 'அடியளந்தான்' கூர்ந்து நோக்கின் கீர்த்தி உடையவனாகத் தெரியவில்லை. இந்த நீக்குதல் முறையால் திருவள்ளுவரின் சமயச் சார்பு 'சைவமே' என்று அறுதியிட்டு உறுதிப்படுத்துவர் சைவச் சான்றோர்.

"சார்புணர்ந்து சார்புகெட வொழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய்" **- (குறள். 359)**

என்பன போன்ற குறள்களைக் கொண்டு திருவள்ளுவரின் சமயம் கடவுள் வாழ்த்தில் வரும் 'ஆதிபகவன்' என்ற சொற்கள் திருமாலுக்கே உரிமையாகக்

கூறுவர் வைணவப் பெரியோர்கள். “அந்தமில் ஆதியம் பகவன்” என்று திருவாய்மொழித் தொடரை சான்றாகக்,

‘எளிவரும் இயல்வினன்’ (1.2;3), ‘யாரும் ஓர் நிலைமையன் என அறிவொளிய எம்பெருமான்’(1.3;4), என்ற திருவாய்மொழிகளை இதற்கு அரணாக அமைத்து கொள்வர். இறைவனின் திருக்குணங்களுள் ‘சௌலப்பியம்’ என்பதை அடியார்கள் சிறப்பித்து கூறுவதும் இதனை வற்புறுத்தும் என்பர்.

இன்னும் .வை.மு.கோ. (எண்குணத்தான்) என்பதற்கே விஷ்ணுவின் எட்டுக் குணங்களையே எடுத்துக் காட்டுவர். ‘தாமரைக் கண்ணான்’ (1191), ‘அடியளந்தான்’ (610) என்ற இரண்டு பெயர்களும் திருமாலுக்கன்றி வேறு எத்தெய்வத்திற்கும் இல்லாமையை எடுத்துக்காட்டுவர். இக்கூறியவற்றால் திருவள்ளுவர் சமயம் வைணவமே என்று வியந்து கூறுவர்.

மலர்மிசை ஏகினான்(3) என்பதில் ‘மலர்’ என்பது தாமரை பூ. பகவான் புத்தர் பிறந்தவுடன் ஏழடி நடந்தார் என்றும் ஒவ்வொரு அடியை வைக்கும் போது தாமரைப்பூ தோன்றி அவருடைய பாதங்களை தாங்கிக் கொண்டன என்றும் பௌத்த நூல்கள் கூறுகின்றன. ஆகவே மலர்மிசை ஏகினான் என்பது புத்தரையே குறிக்கும்.

தாம் கண்ட அறநெறியை உலக மக்களுக்கு போதித்தார். அந்த போதனைக்குத் ‘தரும சக்கரம்’ என்பது பெயர் என்று பொத்த சமய நூல்கள் (எ.டு. மணிமேகலை) என்று கூறுகின்றனர். தர்ம பீடிகை போதனையை அறவாழி, புத்தருடைய வணங்கினார்கள். அறவாழி என்பது திருமால் ஏந்தியுள்ள ‘சுதர்சனம்’ என்ற சக்கரப் படையைக் குறிக்கா தோளின் என்று நிலை நாட்டுவார். சிலப்பதிகாரத்தில் கவுந்தியடிகள் ‘மலர்மிசை நடந்தோன் மலரயன்’ அல்லது என் தலைமிசை உச்சிதான் அருளிப் பொறாது,[18] என்று

கூறுவதையும், 'தண்டாமரை மேல் நடந்தான் தடந்தாள் வணங்கிக், கண்டேன் கிடந்தேன் கனவின்'[19] என்று கூறுவதையும் காட்டுவர்.

பொறிவாயில் ஐந்தவத்தான் என்ற தொடர் அருகக் கடவுளராகிய இருபத்து நான்கு தீர்தங்கரருக்கும் பொருந்தும். இந்த தீர்த்தங்ககாரர்கள் மனிதராகப் பிறந்து பொறிவாயில்கள் ஐந்தினையும் அளித்து பிறவி நீங்கி கடவுள் நிலையை அடைந்தனர் என்பது சமண சமயக் கொள்கை. ஐம்பொறிகளும் அளிக்க வேண்டியதோல்லையொன்றோ? வகுத்தான் எனப் பிற இடங்களில் வரும் பெயர்களும் குர்-ஆன் இறைவனைப் பற்றிக் கூறும் தன்மைகளை வெளிப்படுத்துகின்றன.கிறிஸ்தவ சமயக் கொள்கைகளில் ஒன்றும் திருக்குறளில் இருப்பதாக தெரியவில்லை என்கின்றனர். கிறிஸ்தவ அறிஞர்கள் பெருக்கத்து வேண்டும் பணிவு என்பதால் தாழ்ச்சியும் என்றும் உரியர் பிறர்க்கு என்று கூறுவர்.

இவ்வாறு சமயங்கள் சாஸ்திரங்கள் வேறுபட்டால் திருவள்ளுவரின் இரண்டடி குறள் அனைத்து மதத்தினரின் வாழ்வியல் கோட்பாடுகளையும், நடைமுறை வாழ்க்கைக்கு தேவையான கருத்துகளையுமே பேரா.ந.சுப்புரெட்டியார் அவர்கள் இந்நூலின் மூலம் எடுத்துரைக்கின்றார்

உடல் - நாடு ஒப்புமை

"நமது உடலை, பல மாநிலங்களைக் கொண்ட ஒரு நாட்டுடன் ஒப்பிடலாம். அவ்வாறு ஒப்பிட்டால் மாநிலங்கள் உடலிலுள்ள பல உள்ளுறுப்புகளுக்கு ஒப்பாகும்; உடலிலுள்ள உயிரணு நாட்டிலுள்ள ஒரு தனிப்பட்ட குடிமகனுக்கு ஒப்பாகும். ஆனால், உள்ளுறுப்புக்கள் மண்டலங்களுடன் இணைந்து செயற்படும்போது இந்த ஒப்புமை சரியாகப் பொருந்துவதில்லை."[20] எடுத்துக்காட்டாக, மூச்சு மண்டலம் என்பது மூக்கிலிருந்து நுரையீரல் வரையிலுமுள்ள உடற் பகுதியினுள் காற்று

நுழைவதற்கும் நுரையீரலிலிருந்து வாயுக்கள் அகற்றப் பெறுவதற்கும் துணையாகவுள்ள உள்ளுறுப்புகளினுடையவும் அமைப்புக்களினுடையவும் தொகுதியாகும். இனப் பெருக்கமண்டலத்தில் குழந்தையின் தோற்றத்திலிருந்து அதன் வளர்ச்சிவரையில் சம்பந்தப்பட்ட எல்லா உள்ளுறுப்புக்களும் அவற்றுடன் தொடர்புள்ள வழிகளும் அடங்கியுள்ளன.

மேற் கூறிய மண்டலங்களில் எதுவும் தனித்து இயங்க முடியாது. எனவே, ஒரு முறையில் எடுத்துக்காட்டாக மூச்சு மண்டலம் அல்லது இனப்பெருக்க மண்டலத்திலுள்ள உள்ளுறுப்புக்கள் இயங்குவதற்கு எல்லா மண்டலங்களும் செயற்பட வேண்டியுள்ளன. குருதியோட்ட மண்டலம் சரியான முறையில் குருதியை உடலெங்கும் அனுப்பாவிடில், மூச்சு மண்டலம் தொடர்ந்து இயங்க முடியாது. நுரையீரலிலிருந்து வரும் உயிரியம் இல்லாவிடில் இதயத் துடிப்பு இல்லாது போய்விடும். உடலுறுப்புக்க்ள ஒன்றோடொன்று கொண்டுள்ள நுட்பமான தொடர்புகளையும் எடுத்துக்காட்டுவதே நம் நோக்கமாகும்.

உணர்ச்சியின் தத்துவம்

"உடலுக்கும் உள்ளத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. இந்த உறவு நன்முறையில் இருந்தால் தான் நல்லுணர்வுகள் தோன்றும். அப்பொழுதுதான் கவிதையின் உயிர் நாடியாகவுள்ள கவிதை யுணர்ச்சியை நாம் பெறுதல் இயலும். நம்முடைய உடலிலுள்ள தூம் பீலாச்சுரப்பிகளும் தன்னாட்சி நரம்புமண்டலமும் நம்மிடம் உணர்ச்சிகள் எழுவதற்கு நிலைக்களன்களாக உள்ளன. இவை நன்முறையில் இயங்குவதனாலேயே உணர்ச்சிகளும் நன்முறையில் தோன்றுகின்றன. இடை மூளையிலுள்ள மேற்பூத்தண்டு என்ற பகுதியே இவற்றைச் சரிவர இயக்குவதில் முக்கிய பங்கு பெறுகின்றது. உணர்ச்சிகள் திரண்டு அமையும் பல்வேறு மேலீடான

மன உணர்ச்சிகளும் மீப்பண்புகளும் பல்வேறு வகைக் கவிதைகளைப் படிப்பதற்குக் காரணங்களாக அமைகின்றன. உளவியலார் உணர்ச்சிகளைப் பற்றிய பல்வேறு கொள்கைகளை வகுத்துள்ளனர். கவிதை அநுபவமாகும் முறையில் ஆறு படிகள் உள்ளன. உளவியலார் கூறும் உணர்ச்சிகளையே, பண்டைய தமிழர்கள், மெய்ப்பாடுகள் எனப் பாகுபடுத்தியுள்ளனர். உளவியலார் கூறும் நுட்பங்கள் தொல்காப்பியத்திலும் உள்ளன."[21] இவற்றையும் இவை போன்ற செய்திகளையும் பாட்டுத்திறன் என்னும் இந்நூலின் மூலம் உணரமுடிகின்றது.

முடிவுரை

இவ்வியலில் பேரா.ந.சுப்புரெட்டியார் அவர்கள், அறவாழ்வு வாழ்ந்து மேலும் படி ஏணியில் உயர வேண்டும் என்ற எண்ணத்தில் வள்ளுவர் பெருமானின் சிந்தையில் சிந்தனையில் எழுந்தது திருக்குறள். இத்திருக்குறளின் மூலம் உலக மனிதர்களின் வாழ்க்கை நெறிகளையும், நல்லொழுக்கங்களை வழிவகுத்துக் கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தியும்; சமய, சைவ, வைணவ, பௌத்த போன்ற மத கோட்பாடுகளை திருவள்ளுவரின் குறளடியுடன் ஒப்பிட்டு இவ்வியலினை ஆராய்ந்துள்ளார்.

நெறிப்படுத்தும் சமயம், நெஞ்சையள்ளும் தமிழ், நேர்மை விளங்கும் தத்துவம், மனநலம் உணர்த்தும் உளவியல் எனப் பல வண்ண மலர்கள் இவ்வியலில் மலர்ந்துள்ளன. வெறும் வரலாற்றுப் படைப்பாக இராமல் இலக்கிய மேற்கோளுடன் இதனை, இனிய காவியமாக்கியுள்ளார் பேரா.ந.சுப்புரெட்டியார்.

அடிக்குறிப்புகள்

1. வள்ளுவரின் வாழ்வியல் சிந்தனைகள், அதிகாரம்-58 பக்.எண்.115.
2. கல்வி உளவியல் கோட்பாடுகள் ‘இயற்கை கூற்று’ பக். எண்.29.
3. வள்ளுவரின் வாழ்வியல் சிந்தனைகள் (வ.வா.சி.) ‘வீரபாண்டியம்’ செய்.891.
4. நினைவு குமிழிகள் (நி.கு. 2), பக். எண்.141
5. மேலது., பக். எண்.142.
6. வள்ளுவரின் வாழ்வியல் சிந்தனைகள் (வ.வா.சி.) ‘பணப்பெருக்கம்’ பக். எண்.142.
7. மேலது., பக். எண்.144.
8. கல்வி உளவியல் கோட்பாடுகள் (க.உ.கோ.) பக்.எண்.2.
9. நீங்காத நினைவு குமிழிகள் (நி.கு. 2), பக். 2.
10. நீங்காத நினைவு குமிழிகள் (நி.கு. 4), பக். 2.
11. பாட்டுத்திறன் ‘புதுக்கவிதை தத்துவம்’ பக்.எண்.31.
12. மேலது., பக். எண். 32.
13. பரகாலன் பைந்தமிழ் பக்.பண்.16.
14. பரகாலன் பைந்தமிழ் ”முத்திநெறி” பக்.பண்.502.
15. பரகாலன் பைந்தமிழ் ”தத்துவ கருத்துக்கள்” பக்.பண்.505.
16. மேலது., பக். எண்.512.
17. உலகத்திருக்குறள் உயராய்வு மையம் நடத்திய நான்காவது திருக்குறள் மாநாட்டில் (17.03.1992) ஆய்வரங்கத்தில் படிக்கப்பெற்றது. (தி.வா.வா; ச.சி.) பக். எண். 138.
18. (தி.வா.வா; ச.சி.) ‘சிலப் நாடுகண்’ அடி. 204:5, பக். எண். 141.
19. (தி.வா.வா; ச.சி.) ‘நீலகேசி - அவையடக்கம்’ பக். எண். 141.
20. மானிட உடல் (மா.உ.), பக். 13.
21. பாட்டுத்திறன் முதற்பகுதி. பக்.33

ஆய்வு முடிவுரை

தமிழகம் நெடுங்காலப் பழைமையுடையது. ஆதலால் காலந்தோறும் அதன் நாகரிக வாழ்க்கையிலும் மொழியிலும் மாசுகள் படிதல் இயல்பு. அம்மாசுகளை நீக்கி மாசிலாமணிகளாக மாந்தரை விளங்க வைக்கும் பொருட்டே திருக்குறள் வழியில் பெரியோர் புரட்சிகளைச் செய்தனர்; அவர்கள் யாரும் திருக்குறள் உண்மைகளைச் சிதைக்க வில்லை. உண்மைகள் எழுத்தாலும் சொல்லாலும் மட்டும் துணியப்படுவன அல்ல; மரபால் துணியப்படுதலே உறுதி மிக்கது.

தமிழ் வளர்ச்சிக்கான சிறந்து நூல்களை வெளியிட தமிழக அரசின் நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் நிதியுதவி பெற்று பற்பல நூல்களை வெளிட்டுள்ளார் கவிஞர் ந.சுப்புரெட்டியார் அவர்கள்.

அறம், பொருள், இன்பம் இவற்றில் அறம் வீறு மிக்கது. அறமே வாழ்க்கைக்கு வேண்டிய சிறப்பையும் தரும், செல்வத்தையும் நல்கும்; இம்மூன்றினையும் வள்ளுவரின் அறநெறிகள் மூலமும், கவிதை புலம்பெற்ற கவிஞர்களின் வாயிலாக நட்பு, தாய்மை, சமயம், வாழையும் வள்ளுவமும் போன்ற நல்லொழுக்கத்திற்கு தேவையானவற்றை குறள்களின் அடிப்படையிலும், பட்டர் பிரானின் பாடல் வரிகளிலும் மிகச் சிறப்பாக ஆராயப்பட்டுள்ளது.

பேரா. ந.சுப்புரெட்டியார் அவர்களின் கருத்துகளுக்கு இணையாக கவிஞர்களின் கவிதை நடைகளையும், மனிதனின் வாழ்நாள் குறுகியது; இதில் பிணிகளும் முயற்சிகளும் பல. ஆதலால் கற்கத் தக்கவை மட்டும் கற்றால் போதுமென்பதும், கற்றவகையில் உடனுக்குடன் செயலறுதல் மிகுதியாயிருத்தல் வேண்டும். தமிழகம் நெடுங்காலப் பழைமையுடையது. ஆதலால் காலந்தோறும் அதன் நாகரிக வாழ்க்கையிலும் மொழியிலும்

மாசுகள் படிதல் இயல்பு. அம்மாசுகளை கவிஞர்களின் கவிதை நடை மூலமும், வள்ளுவரின் திருக்குறள் அதிகாரங்கள் மற்றும் பல அரிய வகை நூல்களின் மூலமும் கவிஞர்கள் இவ்வியலின் எடுத்துரைத்துள்ளார்.

இவ்வியலில் பேரா.ந.சுப்புரெட்டியார் அவர்கள், அறவாழ்வு வாழ்ந்து மேலும் படி ஏணியில் உயர வேண்டும் என்ற எண்ணத்தில் வள்ளுவர் பெருமானின் சிந்தையில் சிந்தனையில் எழுந்தது திருக்குறள். இத்திருக்குறளின் மூலம் உலக மனிதர்களின் வாழ்க்கை நெறிகளையும், நல்லொழுக்கங்களை வழிவகுத்துக் கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தியும்; சமய, சைவ, வைணவ, பௌத்த போன்ற மத கோட்பாடுகளை திருவள்ளுவரின் குறளடியுடன் ஒப்பிட்டு இவ்வியலினை ஆராய்ந்துள்ளார்.

நெறிப்படுத்தும் சமயம், நெஞ்சையள்ளும் தமிழ், நேர்மை விளங்கும் தத்துவம், மனநலம் உணர்த்தும் உளவியல் எனப் பல வண்ண மலர்கள் இவ்வியலில் மலர்ந்துள்ளன. வெறும் வரலாற்றுப் படைப்பாக இராமல் இலக்கிய மேற்கோளுடன் இதனை, இனிய காவியமாக்கியுள்ளார் பேரா.ந.சுப்புரெட்டியார்.

பன்னெடுங்காலமாக மரபு கொண்டு நிலை நின்று வருகின்ற வள்ளுவரின் வான்மறைக் கருத்துகளை அவற்றின் உறுதி தேர்ந்து சிதைக்காமல் தழுவி வாழ்வது நல்லோராகிய பெருமக்களின் கடமை. மேலும் திருக்குறள் காலத்தால் மாறுபடாத, தேயத்தால் பிறசூழலால் கிளர்ச்சி புரட்சிகளால் நிலை திரியாத மாபெரும் உண்மைகளையே தொகுத்துரைக்கும் நூலாகும்!

உண்மைகளை மறைக்கும் சில கால வேறுபாடுகள் உண்டு. அந்நிலையில் அத்தகைய காலமாசுகளையே சான்றோர் போக்குவர்;

போக்குவதற்குரியவை கால நிலைகளாகிய மாசுகளேயன்றி உண்மைகள் அல்ல. திருக்குறள் உண்மைகள் என்றுமே மாசுபடுபவன அல்ல.

பேராசிரியர் ந.சுப்புரெட்டியாரின் கல்விப் பணியையும், பிற கவிஞர்களின் கவிதை தரத்தினை உறுதிபடுத்தும் விதமாக செய்துள்ள ஆராய்ச்சிக் கருத்துக்களையும், அவர் இலக்கிய உலகத்திற்கு நல்கியுள்ள நூல்களையும் காணும் பொழுது பேராசிரியர் "ந.சுப்புரெட்டியார் அவர்களின் தமிழ் இலக்கியத் தொண்டு சாலச் சிறந்தது என்பதை அறிய முடிகின்றது.

இவ் ஆய்வேட்டினை சிறப்பாக அமைத்திட உதவிய ந.சுப்புரெட்டியார் 100 கல்வி அறக்கட்டளைக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

துணைநூற்பட்டியல்

முதன்மை சான்றாதாரம்

பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் - “வள்ளுவரின் வாழ்வியல் சிந்தனைகள்“
எண்.1, 3-ஆவது மாடி,
அசோக் நகர்,
சென்னை-600083.
முதற்பதிப்பு, சூன், 2004.

துணைமை சான்றாதாரங்கள்

பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் - ”திருக்குறள் தெளிவு”
தேன்மழைப் பதிப்பகம்,
34, கொத்தவால் தெரு,
ஆலந்தூர்,
சென்னை-600016.
முதற்பதிப்பு, நவம்பர், 1993.

பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் - ”இலக்கிய வகையின் வளர்ச்சியும் இக்கால இலக்கியங்களும்”
ஐந்திணைப் பதிப்பகம்,
279, பாரதி சாலை,
திருவல்லிக்கேணி,
சென்னை-600 005.
முதற்பதிப்பு, ஆகஸ்டு 1997.

பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் - "தமிழ் இலக்கியங்களில் - அறம்-நீதி-முறைமை"
ஐந்திணைப் பதிப்பகம்,
279, பாரதி சாலை,
திருவல்லிக்கேணி,
சென்னை-600 005.
முதற்பதிப்பு, டிசம்பர் 1988.

பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் - "முத்தமிழ்க் காவலர்"
கி.ஆ.பெ. விசுவநாதம்
மணிவாசகர் பதிப்பகம்,
8 சிங்கர் தெரு, பாரிமுனை,
சென்னை-600 108.
முதல் பதிப்பு, 16 நவம்பர் 1999.

பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் - "நினைவு குமிழிகள்"
பாகம் 1, பாரி நிலையம்,
184, பிரகாசம் சாலை,
சென்னை-600 108.
முதற்பதிப்பு, மே 1988.

பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் - "நினைவு குமிழிகள்"
பாகம் 2&3, பாரி நிலையம்,
184, பிரகாசம் சாலை,
சென்னை-600 108.
முதற்பதிப்பு, மே 1989.

பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் - "நினைவு குமிழிகள்"
பாகம் 4, பாரி நிலையம்,
184, பிரகாசம் சாலை,
சென்னை-600 108.
முதற்பதிப்பு, மே 1990.

பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் - "பரகாலன் பைந்தமிழ்"
பாரி நிலையம்,
184, பிரகாசம் சாலை,
சென்னை-600 108.
முதற்பதிப்பு, டிசம்பர் 1992.

பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் - "கல்வி உளவியல் கோட்பாடுகள்"
மணிவாசகர் பதிப்பகம்,
55, லிங்கி தெரு,
சென்னை-600 001.
முதல் பதிப்பு, டிசம்பர் 1989.

பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் - "கவிதை பயிற்றும் முறை"
மணிவாசகர் பதிப்பகம்,
183, பிரகாசம் சாலை,
சென்னை-600 001.
முதற்பதிப்பு, செப்டம்பர் 1983.

பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் - "வாழும் கவிஞர்கள்"
மெய்யம்மை பதிப்பகம்,
காரைக்குடி - 1,
சென்னை-600 014.
முதற்பதிப்பு, 1998.

பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் - "இல்லற நெறி"
தமிழ்ப் புத்தகாலயம்,
576, பைகிராப்ட்ஸ் ரோடு,
சென்னை-600 005.
முதற்பதிப்பு, டிசம்பர் 1964.

பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் - "காலமும் கவிஞர்களும்"
பாரி நிலையம்,
184, பிரகாசம் சாலை,
சென்னை-600 108.
முதற்பதிப்பு, நவம்பர் 1971

பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் - "மலரும் நினைவுகள்"
ஐந்திணைப் பதிப்பகம்,
279, பாரதி சாலை,
திருவல்லிக்கேணி, சென்னை-600 005.
முதற்பதிப்பு, டிசம்பர், 1989.

பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் - ”தமிழ் பயிற்றும் முறை”
எஸ்.ஆர். சுப்பிரமணிய பிள்ளை
பப்ளிஷர்ஸ்,
திருநெல்வேலி,
மறுபதிப்பு., மார்ச் 1964.

பாரதியின் பாஞ்சாலி சபதம் - ந.சுப்புரெட்டியாரின் எளிய வெளிப்பாட்டுத் திறன்

மதுரை காமராசர் பல்கலைக்கழக ஆய்வியல் நிறைஞர் (**M.Phil.**) பட்டத்திற்காக அளிக்கப்பெறும் ஆய்வேடு

ஆய்வாளர்

பெ.உமா மகேஸ்வரி

தேர்வு எண் **B8811343**

மேற்பார்வையாளர்

முனைவர் பா.நேருஜி எம்.ஏ., எம்.ஃ.பில்.,பி.எச்.டி.,

தமிழ்த்துறை - உயராய்வு மையம்

செந்தமிழ்க் கல்லூரி

மதுரை - 625 001

2020

நன்றியுரை

'பாரதியின் பாஞ்சாலி சபதம் - ந.சுப்புரெட்டியாரின் எளிய வெளிப்பாட்டுத் திறன்' என்னும் தலைப்பில் ஆய்வு மேற்கொள்ள அனுமதி வழங்கிய மதுரை காமராசர் பல்கலைக்கழகத்திற்கு என் நெஞ்சார்ந்த நன்றி.

நான் ஆய்வு மேற்கொள்ள வாய்ப்பளித்து ஊக்கமளித்த நான்காம் தமிழ்ச் சங்கம் மற்றும் செந்தமிழ்க் கல்லூரித் தலைவர் மற்றும் செயலாளர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

செந்தமிழ்க் கல்லூரி முதல்வர்(பொ.) முனைவர் கி.வேணுகா அவர்களுக்கும் துணைமுதல்வர் முனைவர் கோ.சுப்புலெட்சுமி அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என் ஆய்வுக்குச் சிறந்த ஆசானாக அமைந்து வழிகாட்டியதுடன் அவ்வப்போது அறிவுரைகள் வழங்கி, ஆய்வு சிறப்பாக அமைய உதவிய நெறியாளர் முனைவர் பா.நேருஜி எம்.ஏ., எம்.ஃபில்., பிஎச்.டி., அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

ஆய்விற்கு உதவிபுரிந்த ந.சுப்புரெட்டியார் அறக்கட்டளைக்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

செந்தமிழ்க் கல்லூரிப் பேராசிரியப் பெருமக்கள் அனைவருக்கும் என் நன்றி. கல்லூரி அலுவலர்களுக்கும் என் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் இந்த ஆய்வினை மேற்கொள்ள எனக்கு உறுதுணையாக இருந்த எனது அப்பா ச.பெருமாள், அம்மா பெ.மீனா, அக்கா செ.ராமதேவி, மாமா பெ.செல்வம், தம்பி பெ.கார்த்திக் ராஜா, பாப்பா செ.பிரதிக்ஸா ஆகியோருக்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாய்விற்குத் தேவையான நூல்களைக் கொடுத்துதவிய செந்தமிழ்க் கல்லூரி நூலகர் திருமதி. தி.பிருந்தா மற்றும் நூலக உதவியாளர் திருமதி. த.சுதா ஆகியோருக்கு என் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆய்வேடு சிறப்பாக அமையும் வண்ணம் நல்ல முறையில் கணிப்பொறியில் வடிவமைத்துக் கொடுத்த ஏகன் கணினி நிறுவனத்தாருக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெ.உமா மகேஸ்வரி

பொருளடக்கம்

ஆய்வு முன்னுரை

முன்னுரை

இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய தெ.பொ.மீனாட்சி சுந்தரனார், திரு.வி.கல்யாண சுந்தரனார், மு.வரதராசன், வ.சுப.மாணிக்கம் போன்ற பல்வேறு தமிழ்ச் சான்றோர்கள் தமிழ் இலக்கியத்திற்கும் தமிழ் மொழிக்கும் பன்முகப் பார்வையில் பயன் தரும் பல அரிய நூல்களை எழுதி, ஆக்கப்பூர்வமான தமிழ்ப் பணிகளை செய்துள்ளனர்.

இந்த வரிசையில் குறிப்பிடத்தக்க தமிழ்ச் சான்றோராக தமிழிலக்கியத்திற்கும், இலக்கணத்திற்கும் ந.சுப்புரெட்டியார் அவர்களின் தமிழ்ப் பணிகள் தமிழிலக்கிய வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்தவை.

ஆய்வுத் தலைப்பு

“பாரதியின் பாஞ்சாலி சபதம் - ந.சுப்புரெட்டியாரின் எளிய வெளிப்பாட்டுத் திறன்” என்பது இவ்வாய்வுத் தலைப்பாகும்.

தலைப்புத் தேர்வு

இளங்கலை, முதுகலை பயின்ற காலத்தில் பாரதியாரின் படைப்புகளில் ஒன்றான பாஞ்சாலி சபதத்தினைப் பயிலும்போது ஏற்பட்ட ஆய்வுச் சிந்தனைகளை ந.சுப்புரெட்டியார் அவர்களின் பாஞ்சாலி சபதம் ஒரு நோக்கு என்னும் நூலுடன் ஒப்பிட்டுப் பார்க்கின்ற விதமாக இத்தலைப்பானது தேர்வு செய்யப்பட்டுள்ளது.

ஆய்வு நோக்கம்

ந.சுப்புரெட்டியார் அவர்களின் ‘பாஞ்சாலி சபதம் - ஒரு நோக்கு’ என்னும் நூலானது மகாகவி பாரதியாரின் நூற்றாண்டு விழாவினையொட்டி மதுரை

சர்வோதய இலக்கியப் பண்ணை 1982ஆம் ஆண்டில் பதிப்பித்து வெளியிடப்பட்டது.

நூல் அறிமுகம், தமிழில் காவியங்கள், கதைக்கரு, காவியத்தின் ஒருமைப்பாடு, காவியத் தலைவி திரௌபதி, காவியத்தின் எதிர்நிலைத் தலைவன் துரியோதனன், பிற காவிய மாந்தர்கள், தெய்வீகக் கூறுகள், காப்பிய நடை, காவியத்தில் உருக் காட்சிகள், காவியம் உணர்த்தும் உண்மை என்னும் பதினொரு இயல்களைக் கொண்டதாகும். அவர் எழுதிய 'பாஞ்சாலி சபதம் - ஒரு நோக்கு' என்னும் நூலினை முதன்மை ஆதாரமாகக் கொண்டு இவருடைய எளிய வெளிப்பாட்டுத் திறனை ஆராய்ந்து மதிப்பீடு செய்வதே இவ் ஆய்வேட்டின் நோக்கமாகும்.

கருதுகோள்

பாரதியார் பாடல்களில் என்றும் நிலைபெற்று இருக்கும் பாஞ்சாலி சபதம் என்ற இச்சிறு காவியம் அவரின் புலமையை வெளிப்படுத்துகிறது. பாரதியின் பெரிய பாடல் இது.

தொல்காப்பியம், சங்கச் செய்யுட்கள், நாவல், காப்பியங்கள், பக்திப் பனுவல்கள் முதலான தமிழிலக்கியப் படைப்புகளைப் போலவே அப்படைப்புகளின் திறன்களை விளக்கியும் மதிப்பீடு செய்வதும் எழுதப் பெற்ற நூல்களும் இலக்கிய முக்கியத்துவம் பெற்றவையே. இவ்வகையில் பாரதியின் புதுமைப் பெண்ணாகிய பாஞ்சாலியையும் அவளுக்கு இழைக்கப்படும் கொடுமைகள் பற்றியும் காவியத்தில் பாரதி பயன்படுத்திய உத்திகள் பற்றி வித்தியாசமான முறையில் ந.சுப்புரெட்டியார் பாஞ்சாலி சபதத்தின் திறன்களையும் அதன் சமுதாய, பண்பாட்டு முக்கியத்துவத்தையும் விளக்கி

எழுதி தனது வெளிப்பாட்டுத்திறனை எளிமையாகவும் திறம்படச் செய்துள்ளார் என்பதே இவ் ஆய்வேட்டின் கருதுகோளாகும்.

ஆய்வு எல்லை

ந.சுப்புரெட்டியார் அவர்கள் பல துறைகள் சார்ந்த எண்பதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். இலக்கியப் படைப்பிற்கும் பெண்களின் வாழ்க்கை முறைக்கும் நெருக்கமான தொடர்புண்டு. பாஞ்சாலி என்ற கதாபாத்திரத்தினை முதன்மையாகக் கொண்டு பாரதி படைத்த பாஞ்சாலி சபதத்தினை ந.சுப்புரெட்டியார் அவர்கள் தனது ஆளுமைத் திறனை பயன்படுத்தி பாஞ்சாலி சபதம் ஒரு நோக்கு மதிப்பீடு செய்து வெளிப்படுத்துதலே இவ்ஆய்வு முயற்சியின் எல்லை ஆகும்.

ஆய்வு ஆதாரங்கள்

முதன்மைச் சான்றாதாரம்

ந.சுப்புரெட்டியார் அவர்கள் எழுதிய 'பாஞ்சாலி சபதம் ஒரு நோக்கு' என்னும் நூலே இவ்வாய்விற்குரிய முதன்மைச் சான்றுகளாகக் கொள்ளப்படுகிறது.

துணைமைச் சான்றாதாரங்கள்

இவ் ஆய்வுப் பொருள் தொடர்பாக இதுகாறும் வெளிவந்த திறனாய்வு நூல்கள், ஆய்வு நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள், ஆய்வுக் குறிப்புகள், ஆய்வேடுகள் துணைமைச் சான்றுகளாக இவ்வாய்விற்கு எடுத்துக் கொள்ளப் பெற்றுள்ளன.

ஆய்வு அணுகுமுறை

இவ் ஆய்வு உள்ளடக்கப் பகுப்பாய்வு முறையிலும், விளக்க முறை மற்றும் பகுப்பாய்வு முறை திறனாய்வு முறைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஒப்பியலில் அணுகுமுறை முதலான இலக்கிய ஆய்வு அணுகுமுறைகளும் மேற்கொள்ளப் பெற்றுள்ளன.

ஆய்வேட்டின் கட்டமைப்பு

இவ் ஆய்வு முன்னுரை, முடிவுரை நீங்கலாகப் பின்வரும் நான்கு இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளது.

இயல் - 1 : ந.சுப்புரெட்டியார் – அறிமுகம்

இயல் - 2 : தமிழ்க் காவியங்கள் - அறிமுகம்

இயல் - 3 : காவிய மாந்தர்கள்

இயல் - 4 : காவிய உத்திகள்

இயல் விளக்கங்கள்

ந.சுப்புரெட்டியார் அறிமுகம் என்னும் முதல் இயலினுள் ந.சுப்புரெட்டியாரின் பிறப்பு, வளர்ப்பு, கல்விநிலை, கல்வியில் அவர் மேற்கொண்ட முயற்சிகள், குடும்ப வாழ்க்கை, கல்லூரி வாழ்க்கை, அவரின் புலமைத்திறன், பாராட்டுகளும் விருதுகளும், வெளிநாட்டுப் பயணங்கள், சுப்புரெட்டியாரைக் கவர்ந்த சான்றோர்கள், அவர் ஆற்றிய சொற்பொழிவுகள், அவர் நிறுவியுள்ள அறக்கட்டளை என்பன குறித்த செய்திகள் நுணுக்கமாக விளக்கப்பட்டுள்ளன.

தமிழ்க் காவியங்கள் அறிமுகம் என்னும் இரண்டாம் இயலினுள் தமிழ்க் காப்பியங்களின் வளர்ச்சி, இதிகாசம், புராணம், காப்பியங்கள் வேறுபாடுகள்,

காப்பிய சிறப்புகள், காப்பிய வகைகள், தண்டியலங்காரத்தில் காப்பியக் கொள்கை, காப்பியத்தின் ஒருமைப்பாடும் கட்டமைப்பும், காப்பியம் பற்றிய அரிஸ்டாட்டில் கருத்து என்று காப்பியம் குறித்த கருத்துக்கள் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

காப்பிய மாந்தர்கள் என்னும் மூன்றாம் இயலினுள் காவிய மாந்தர்களும் படைப்புகளும், காவிய மாந்தர்கள், பாத்திரப் படைப்பின் சிறப்புகள், பாஞ்சாலி சபத காவிய மாந்தர்கள், திரௌபதி புதுமைப்பெண், முதன்மையானவள் திரௌபதி, எதிர்நிலைத் தலைவன், பிற காவிய மாந்தர்கள் என்று ந.சுப்புரெட்டியார் அவர்கள் குறிப்பிட்டுள்ள கதைப் பாத்திரங்கள் விளக்கமாக ஆராயப்பட்டுள்ளன.

காவிய உத்திகள் என்னும் நான்காம் இயலினுள் பாஞ்சாலி சபத அவல உத்தி, காப்பிய நடை, நான்கடியில் ஓரெதுகை பெற்று வருதல், காவியத்தில் படிமங்கள், கட்புலப் படிமங்கள், செவிப்புலப் படிமங்கள், சுவைப் புலப் படிமங்கள், நாற்றபுலப் படிமங்கள், தொடுப்புலப் (நொப்புலப்) படிமங்கள் என்று ந.சுப்புரெட்டியார் குறிப்பிடும் உத்திகளில் சிலவற்றை விரித்துக் கூறப்பட்டுள்ளது. மேலும் காவியம் உணர்த்தும் உண்மைகள், தெய்வீக கூறுகள் போன்றவை விளக்கமாக ஆராயப்பட்டுள்ளன.

ஆய்வின் இறுதியில் ஆய்வில் கண்ட முடிவுகள் அனைத்தும் முடிவுரையாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாய்வுக்குத் துணை நின்ற நூல்களின் பட்டியல் கொடுக்கப்பட்டுள்ளது.

இயல் - 1

ந.சுப்புரெட்டியார் அறிமுகம்

முன்னுரை

தனிப்பட்ட படைப்பாளர் ஒருவரின் படைப்பினை ஆய்வு செய்யும்பொழுது அவரைப் பற்றிய புரிதலைத் தருவது ஆய்வின் முதல்நிலையாகும். அவ்வகையில், சடகோபன் பொன்னடி என்று அழைக்கப்படும் ந.சுப்புரெட்டியார் அவர்களின் பிறப்பு முதல் சாதனைகள் வரை எடுத்தியம்புவதே இவ்வியலின் நோக்கமாகும். தனது சிறுவயதிலிருந்தே கல்வியில் ஆர்வம் மிகுந்தவராகவும், பன்முகத்தன்மை கொண்டவராகவும் இருந்தவர் ந.சுப்புரெட்டியார். தன்னுடைய வாழ்நாளில் பல்வேறு துன்பங்களை அனுபவித்திருந்தாலும் தமிழ் இலக்கியத்திற்குப் பெரிதும் பங்காற்றியுள்ளார். அத்தகைய சிறப்பு வாய்ந்த ஆசிரியரின் வாழ்க்கை வரலாறு குறித்த அறிமுகமாக இவ்வியல் அமைகிறது.

பிறப்பும் வளர்ப்பும்

“கல்வி கரையில கற்பவர் நாள் சில; மெல்ல நினைக்கின் பிணிபல” என்ற வாழ்வியல் உண்மைகளை முற்றும் உணர்ந்த பெருந்தகை, தமிழிலக்கியத்திற்குக் கிடைத்த அருங்கலைச் செல்வம், ‘ஸ்ரீ சடகோபன் பொன்னடி’ என்று போற்றப்படும் ந.சுப்புரெட்டியார் அவர்கள்.

திருச்சிராப்பள்ளி, திரு என்பது தமிழில் மரியாதையைக் குறிக்கும் சொல். சிரா என்பது ஜைன துறவியின் பெயராகும். இதனால் திருச்சிராப்பள்ளி என்ற பெயர் ஏற்பட்டதாகவும், மேலும் மூன்று தலைகொண்ட திரிசிரா (ராவணனின் மகன்) சிவனை வழிபட்டு தன் பாவத்தைப் போக்கிய தலம்

என்பதால் பெயர் வந்தது என்று கூறப்படுகின்ற, திரு.செவ்வந்திபுரம் பெயர் நாளடைவில் மருவி திருச்சி என்று அழைக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

தமிழகத்தின் மத்தியில் உள்ள மாவட்டம் மற்றும் நான்காவது பெரிய நகரமாகவும், பாறையின் மேலேயே அமைந்துள்ள மலைக்கோட்டை கோவில் போன்ற பல்வேறு சிறப்புகளைக் கொண்ட திருச்சி மாவட்டத்தில் 'ஞானியர்' பரம்பரையைச் சேர்ந்த ஞானி நல்லப்ப ரெட்டியாருக்கும், காமாட்சி அம்மாளுக்கும் மகனாக 27.08.1916இல் பிறந்தார் ந.சுப்புரெட்டியார் அவர்கள்.

"திருச்சி இலால்குடி வட்டத்திலுள்ள பெரகம்பியில் உள்ள அவரது தாய்மாமன் பண்ணை நல்லப்ப ரெட்டியாரின் 'பண்ணை வீடு' அவர் பிறந்த வீடாகும். பெரகம்பிக்கு அருகில் மேற்கில் ஆறு கல் தொலைவில் உள்ள கோட்டாத்தூர் ந.சுப்புரெட்டியாரின் தந்தை பிறந்த ஊராகும்.

1926 வரையில் பெரகம்பியில் வளர்ந்து பின்னர் கோட்டாத்தூர் குடிபெயர்ந்தார். அவரது தந்தைக்கும் தாய்மாமனுக்கும் ஏறக்குறைய ஒத்த வயதே. தாய்மாமன் பரம சாது எனினும் அவரது இல்லற வாழ்க்கை இரண்டு ஆண்டுகள்கூட இனிதாக அமையவில்லை. தனது பாட்டியின் செல்லப் பிள்ளையாக ந.சுப்புரெட்டியார் வாழ்ந்து வந்தார். தன்னுடைய மூன்று வயது நிறைவடையும் முன்னர் ஞானி நல்லப்ப ரெட்டியார் இறந்துவிட்டார்"[1]

சுப்புரெட்டியார் பண்ணையார் வீட்டுச் செல்லப் பிள்ளையாக வளர்க்கப்பட்டார். பாட்டியார் அவருக்காக மட்டுமே அரிசிச்சோறு, பருப்பு, குழம்பு, ரசம் ஆகிய உணவைச் சுவைபடச் செய்தார். திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துறைத் தலைவராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர்.

ஆரம்ப கல்வி நிலை

உடல், உள்ளம், மனவெழுச்சி, சமூக சிந்தனை மற்றும் ஆன்மீக சிந்தனைகள் போன்றவற்றை வளர்ப்பதில் கல்வி முதன்மையாக உள்ளது. ஒரு தனிமனிதனின் அறிவு, படைப்பாற்றல், மனவெழுச்சி, எதிர் உருவப்படம், பேச்சு வார்த்தை ஆகிய குணங்களை வழிகாட்டியாக இருந்து வளர்ப்பது தேவையாகிறது. வழிகாட்டியாக உள்ளதால்தான் தனி மனிதனின் வாழ்க்கையும், குறிக்கோள்களையும் அடைய அவர்களின் சக்தியையும் செயலையும் வழிப்படுத்தும் மனிதனின் அறிவு படைப்பாற்றல் பிரதிபலிப்பு, சக்தி போன்றவற்றை பெற வழிகாட்டியாக இருப்பதுவும், தொடக்கம் சிறப்பாக இருந்தால் முடிவும் சரியாகவும் சிறப்பாகவும் அமையும் என்பது நம்பிக்கை. அத்தகைய வகையில் சிறப்புமிக்க தொடக்கத்தைப் பெற்றவர் ந.சுப்புரெட்டியார் அவர்கள்.

'ஈவோன் தன்னை யீதலியற்கை

கொள்வோன் தன்னை கோடன் மரபு'

என்பதனால் ஈவோன் எனப்படும் ஆசிரியரை ஈவோனாக என்றும் அவர்தரும் கல்வியை ஏற்றுக் கொள்வதனால் மாணவரைக் கொள்வோன் என்றும் தொல்காப்பியம் விளம்பியுள்ளது. இங்கு ஈவோனாக திண்ணைப் பள்ளிக்கூட ஆசிரியர் இலிங்கச் செட்டியார் ஆவார். கொள்வோனாக ந.சுப்புரெட்டியாரும் பண்ணை நல்லப்ப ரெட்டியாரின் இல்லத்தில் வித்தியாப்பியாசம் (எழுத்தறிவித்தல்) என்னும் சடங்கினைத் தொடங்கி ந.சுப்புரெட்டியாருக்கு தொடக்க நிலைக் கல்வியை ஊட்டினார்.

"பழிப்பில் பல்லுரை பயின்ற நாவினன்

புகழ்ந்த மதியிற் பொருந்தும் துறையில்

தெளிந்த அறிவினன்”

என்பதனால் தான் கூறக் கருதும் பொருளின் பல்வேறு பரிணாமங்களை உணர்ந்து விளக்கமுற கூறவேண்டும் என்கிறது. எனவே தான் கூறக் கருதும் பொருளின் ஐயம் திரிபற தெளிந்த அறிவும், ஆசிரியருக்கு இன்றியமையாதது என்கிறது. மேலும் மாணவனது அறிவுத்திறன் அவன் புரிந்து கொள்ளும் முறை ஆகியவற்றினை அறிந்து அவன் ஏற்றுக் கொள்ளும் வகையில் ஒரு மனநல மருத்துவர் போல் ஆசிரியர் பாடம் கற்பிக்கும் முறை குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தகைய வகையில் இலிங்கச் செட்டியாரின் கல்வி முறையானது இன்றுவரை சிறப்புறக் கூறப்படுகின்றது.

ந.சுப்புரெட்டியாரின் தொடக்க நிலைக்கல்வி அனுபவத்தைக் குறிப்பிட்டுள்ளதால் இலிங்கச் செட்டியாரின் தொடக்க நிலைக் கல்வித் திட்டம் மிகச்சிறந்ததாகக் கொள்ளப்படுகிறது. உலகப் புகழ்பெற்ற டால்டனின் கல்வி முறைகளும் இலிங்கச் செட்டியாரின் கல்வி முறைகளுடன் ஓரளவு ஒப்பிடக் கூடியதாக உள்ளது.

இலிங்கச் செட்டியாரின் கல்வித் திட்டத்தில் வகுப்பறைகள், பாட வரையறைப் பகிர்வுகள் (Time – Table) தேர்வு மற்றும் வகுப்பு மாற்றங்கள் போன்றவை கிடையாது. வகுப்பாசிரியரும் கிடையாது.

டால்டன் திட்டத்தின்படி பயிற்சியின் நோக்கம் ஒவ்வொரு மாணவரின் குணாதிசயங்களை அதிகபட்சமாக கருத்தில் கொண்டு தனிப்பட்ட கல்விப் பணிகளை அமைப்பதாகும். டால்டன் திட்டம் பற்றிய பார்க்ரஸ்ட் தனது கல்வி

கோட்பாட்டையும் கோடிட்டுக் காட்டினார். அதில் அவர் தனது கொள்கைகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுள்ளார்.

1. சுதந்திரம்
2. பொறுப்பு
3. ஒத்துழைப்பு

சுதந்திரம் என்பது பொறுப்பைக் கையாள, தனக்கு என்ன தேவை, என்ன பாதை என்பதில் உள்ளது. ஒரு குழந்தை தான் விரும்பியதைச் செய்வதும் மாறாக அவர் கெட்ட பழக்கங்களுக்கும், சுய நலத்திற்கும் அடிமையாகி மற்றவர்களுடன் வாழத் தகுதியற்றவர்கள் ஆகாமல் சமூகத்தோடு ஒத்துப் போவதும் ஆகும்.

"ந.சுப்புரெட்டியார் காலத்தில் ஆசிரியர் (இலிங்கச் செட்டியார்) மஞ்சள் தடவிய அளவுப்படுத்தப்பட்டுத் தயாரித்த நான்கைந்து பனையோலை அடங்கிய ஒரு சிறுதட்டில் 'ஹரி : நமோச் சித்தம்' என்று எழுதித் தந்ததும் சர்க்கரை கலந்த காய்ச்சிய பாலில் ஏதோ மந்திரம் எழுதிப் பருகச் செய்தலும் அதன் மேற்படியேட்டில் எழுதியதைத் தனித்தனி எழுத்தை மூன்று சிறு வழிபாட்டிற்குப் பின்னரே நடைபெற்றதும் நினைவுக்கு வருகின்றது"[2] என தனது தன் வரலாற்று நூலான 'நினைவுக் குமிழிகள்' என்பதில் தமது தொடக்க நிலைக் கல்வி பற்றிய அனுபவத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

குடும்ப வாழ்க்கை மற்றும் கல்வி நிலை

ந.சுப்புரெட்டியார் அவர்கள் 1936இல் தம் தந்தை வழியில் ஒன்றுவிட்ட அத்தை மகளான செல்லபாப்பா அம்மையாரை மணந்தார். அவர்களுக்குப் பல்லாண்டுகள் மக்கட்பேறு இல்லை. 1949இல் இராமலிங்கமும் 1953இல்

இராமகிருஷ்ணனும் பிறந்தனர். இராமலிங்கத்திற்கு மிருணாளினி, அனுபமா என்ற இரு பெண்மக்கள் உள்ளனர். மிருணாளினி தன் கணவர் அரவிந்த விஷ்ணுராமனுடன் அமெரிக்காவில் ஒரே நிறுவனத்தில் உயர்பதவிகளில் பணியாற்றி வருகின்றனர்.

"மருத்துவக் கல்வியைப் பயின்ற டாக்டர் இராமகிருஷ்ணனும் அமெரிக்காவில் அரிசோனா மாநிலத்தில் முதியோர் மருத்துவராகப் பணியாற்றி வருகின்றார். இவர்தம் மகன் வேங்கடேசன் மருத்துவமும், இரண்டாம் மகன் பிரகாசு பொறியியலும் படித்து முடித்துள்ளார்"[3]

ந.சுப்புரெட்டியார் 1937 – 1939ஆம் ஆண்டுகளில் சூசையப்பர் கல்லூரியில் இளங்கலைப் பட்டம் பெற்றார். 1934 முசிறியில் அவருடைய உயர்நிலைப்பள்ளி கழிந்தது.

ந.சுப்புரெட்டியார் அவர்கள் கோட்டத்தூரில் நான்கு வருடங்களாக 1927 – 1930 கடிதத் தொடக்கப் பள்ளியிலும் சாமுவேல் பிள்ளை என்பவரால் நடத்தப்பெற்ற ஆங்கிலப் பள்ளியிலும் படித்தார்."[4] அங்கு அவரது உயர்நிலைப்பள்ளி ஆசிரியரான வி.கே.அரங்கநாத அய்யர் சேர்த்துவிட்டார்.

1931இல் ந.சுப்புரெட்டியார் முசிறியில் நான்காவது படிவம் படித்துக் கொண்டிருந்தார். கோட்டத்தூர் கழகத் தொடக்கப் பள்ளியில் வேலூர் வாத்தியார் சந்திரசேகரய்யர் என்னும் ஓராசிரியரே இருந்தார். அவருக்கு ஆங்கிலம் தெரியாது. ஆயினும் சோதிடம் நன்றாகத் தெரியும். 'சிவிக்ஸ்' மற்றும் 'கணிதம்' போன்றவை பாடநூல்களாகும். ஆனால் அவர் அவற்றைச் சொல்லித் தராமல் வாய்ப்பாட்டினை மனப்பாடம் செய்தல், கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் கணக்குகள், ரூபாய் அணா பைசா கணக்குகள், மேலும்

அருணகிரி அந்தாதி, அறப்பளீசுர சதகம், அரிச்சந்திர புராணம் ஆகியவற்றை மாணவர்களுக்கு சொல்லிக் கொடுத்தார். பின்பு சுப்புராய உடையார் என்னும் தலைமை ஆசிரியர் வந்தார். அவருக்கு ஆங்கிலம் நன்றாகத் தெரியும். எனவே மக்களிடம் செல்வாக்குப் பெற்றவராகவும் ஆனார். மேலும் நாட்டு வைத்தியமும் தெரிந்தவராக இருந்தார். அதனால் மக்களிடம் செல்வாக்குப் பெற்ற ஆசிரியராக விளங்கினார். ஆங்கிலத்தையும், வட்டிக் கணக்கையும், இலாப நட்டக் கணக்குகளையும் தன்னுடைய வீட்டில் தனிப்பாடமாகச் சொல்லிக் கொடுத்து மேலும் வருமானம் பெற்றார்.

“கோட்டத்தூர் கழகத் தொடக்கப் பள்ளியில் வேலூர் வாத்தியார், சந்திரசேகரய்யர், சுப்புராய உடையார், வி.கே.அரங்கநாத அய்யர்”[5] ஆகிய மூவரும் ந.சுப்புரெட்டியாருக்கு ஆசிரியர்களாகப் பணியாற்றினர். வேலூர் வாத்தியார் தொடக்க நிலை ஆசிரியராக தமிழ் மரபையொட்டிக் கற்பித்தவர். இவர் மாலையில் ஆங்கிலம் கற்றுக் கொடுத்தவிதம் ந.சுப்புரெட்டியாரை பெரிதும் கவர்ந்தது. பின்பு அங்கிருந்து மாற்றம் பெற்று சாமுவேல் பிள்ளை தனியாக நடத்தி வந்த ஆங்கிலப் பள்ளியில் சேர்ந்தார்.

துறையூரில் தன்னுடைய எட்டாவது படித்த காலத்தில்தான் தசம பின்னக் கணக்குகளைக் கற்றுக் கொண்டார். இதற்கெல்லாம் முன்பாக ந.சுப்புரெட்டியார் இலிங்கச் செட்டியார் காலத்தில் அறிவியல், புவியியல், சமூக இயல் போன்ற பாடநூல்கள் புழக்கத்தில் இல்லை. கா.நமச்சிவாய முதலியாரால் எழுதப்பெற்ற பாடநூல்களே இருந்தன. இலிங்கச் செட்டியார் தன்னுடைய மாணவர்கள் அறிவுக்கும், சுறுசுறுப்புக்கும் ஏற்ற வகையில் தனித்தனியே உலகநீதி, ஆத்திசூடி, கொன்றை வேந்தன், வெற்றி வேற்கை,

நல்வழி, நன்னெறி, விவேக சிந்தாமணி போன்ற நீதி நூல்களை கற்றுக் கொடுத்திருந்தார். பின்பு மாணவர்களுக்கு மணலில் எழுதும் பயிற்சியையும், எண்சுவடிகளை மனப்பாடம் செய்யவும் வைத்தார். தமிழும் தெலுங்கும் கற்பித்தார்.

சுப்புரெட்டியார் காலத்தில் நாட்டுப்புறங்களிலிருந்து வந்தவர்களுக்குப் பெரும்பாலும் ஆங்கில மொழியறிவு மிகக் குறைவாகவே இருந்தது. ஆசிரியர்களும் ஆங்கிலத்தில் எளிமையாக விளக்க முடியாமல் சிரமப்பட்டனர். ஆனால் இவர் கணிதத்தையும் வேதியியலையும் விருப்பப் பாடமாகப் பயிற்றிருத்தலால் மொழிச்சிக்கல் ஏற்படவில்லை.

நாடு விடுதலை பெறுவதற்கு முன்னர் அனைத்துப் பாடங்களும் ஆங்கிலத்திலேயே கற்பிக்கப் பெற்றன. அக்காலத்தில் உயர்திணைப் பள்ளி பயின்றவர்களுக்கு ஆங்கில மொழியறிவு தரமாக இருந்தது.

1934இல் பள்ளி இறுதித் தேர்வில் அறுபது விழுக்காடு மதிப்பெண் பெற்று இரண்டாவது மாணவராகத் தேர்ச்சி பெற்றார் ந.சுப்புரெட்டியார் அவர்கள்.

திருச்சி சூசையப்பர் கல்லூரியில் பேராசிரியர் ஸ்ரீநிவாசன் கணிதப் பாடத்தையும், காம்பெர்ட் என்னும் ∴பிரெஞ்சு சாமியார் இயற்பியல் பாடத்தையும் திறம்பட பயிற்றுவித்தனர். இடைநிலை வகுப்பில் வேதியியல் பேராசிரியர் கொடுத்த ஊக்கத்தினால் இளங்கலை பட்டப்படிப்பில் வேதியியலை முக்கியப் பாடமாகவும் கணிதம், இயற்பியலைத் துணைப்பாடமாக எடுத்துப் படித்தார்.

இருபத்தொரு வயதில் ந.சுப்புரெட்டியாருக்கு திருமணம் நடந்த போது திருச்சி கல்லூரியில் வேதியியல் பட்டப் படிப்பை பயின்றார். கணிதப் பாடத்திலும் நல்ல தெளிவு பெற்றவராக இருந்தார்.

ந.சுப்புரெட்டியார் எழுதிய நூல்கள்

ந.சுப்புரெட்டியார் எழுதியுள்ள நூல்கள் ஆசிரியர் தொழில், உளவியல், இலக்கியம், சமயம், தத்துவம் குறித்த விளக்க நூல்கள், திருத்தலப் பயண நூல்கள், திறனாய்வு நூல்கள், வரலாற்று மற்றும் தன் வரலாற்று நூல்கள், அறிவியல் நூல்கள், ஆராய்ச்சி நூல்கள் என வகைப்படுத்திக் குறிப்பிடலாம்.

வெளிநாட்டுப் பயணங்கள்

ந.சுப்புரெட்டியார் அறிவியல் துறைகளில் பெரும்புலமை பெற்றுப் பின்னர் தமிழ்ப் பேராசிரியராக வந்தவர். இவர் அமெரிக்கா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு அங்குள்ள மக்களின் சமூக, பண்பாடு சார்ந்த வாழ்வியல் நெறிமுறைகளை உற்றுக் கவனித்து தமது பயண அனுபவ நூல்களாக எழுதியுள்ளார். 2002ஆம் ஆண்டு அமெரிக்காவிலும் 2003இல் இலங்கையிலும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு ‘என் அமெரிக்கப் பயணம்’ மற்றும் ‘என் இலங்கைப் பயணம்’ எனும் பயண நூல்களையும் எழுதியுள்ளார். மேலும் 2005இல் சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளுக்கும் பயணம் மேற்கொண்டார்.

ந.சுப்புரெட்டியார் பங்கேற்ற குழுக்களும் பொறுப்புகளும்

தமிழகப் பல்கலைக்கழகங்கள், தமிழக அரசின் தமிழ் வளர்ச்சி செயல் திட்டங்கள், திருமலை – திருப்பதி தேவஸ்தானம் ஆகியவற்றில் பல்வேறு பொறுப்புக் குழுமங்களில் பங்கேற்ற ந.சுப்புரெட்டியார் தமிழுக்கு என பல்வேறு

சிறப்பான பணிகளை திறம்பட செம்மையாக செய்து காட்டியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

(அ)1953 - 1956ஆம் ஆண்டுகளில் சென்னைப் பல்கலைக்கழகத்தின் கல்வியியல் ஆலோசனைக் குழு உறுப்பினராகவும், கழகத்தின் பேரவை உறுப்பினராகவும் இருந்துள்ளார்.

(ஆ)திருப்பதி, திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் கல்வியியல் ஆலோசனைக் குழுவில் உறுப்பினராகப் பங்காற்றியவர். பல்கலைக்கழகத்தின் பேரவை உறுப்பினராகவும், பல்கலைக்கழக கல்லூரிகளில் உயர்நிலைத் தமிழ்ப்பாடம் (முதுகலைத் தமிழ், இளநிலை, முதுநிலை ஆய்வுகள்) தொடங்குவதற்கு ஓர் உறுப்பினர் ஆணையத்திலும் சில காலம் பணியாற்றியுள்ளார்.

ந.சுப்புரெட்டியார் அவர்கள் மேலும் திருவேங்கடவன் பல்கலைக்கழகம் மற்றும் மைசூர், பெங்களூர், கேரளப் பல்கலைக்கழகங்கள் பலவற்றிலும் பாடத்திட்டக்குழு உறுப்பினராகவும் ஒருங்கிணைப்பாளராகவும் பேராசிரியர் நியமனக்குழு உறுப்பினராகவும் செயலாற்றியுள்ளார். பல்கலைக்கழகங்களில் தேர்வாளராகவும் பணியாற்றியுள்ளார்.

புலமைத் திறன்

ந.சுப்புரெட்டியார் வேதியியல், இயற்பியல், அணுவியல், மின்னியியல், மின்னணுவியல், மனித உடலியியல், உயிரியியல் முதலான ஏழு அறிவியல் துறைகளில் முதுகலை அறிவியல் பட்டத்திற்கு நிகரான தரமான அறிவியல் புலமையைப் பெற்றவர்.

தமிழ், ஆங்கிலம், தெலுங்கு ஆகிய மொழிகளிலும் அம்மொழிகளின் இலக்கியங்களிலும் தேர்ந்த புலமையும், கூர்ந்த அறிவும் உடையவர். மேலும் ந.சுப்புரெட்டியார் அவர்களுக்கு வடமொழியிலும் சிறிதளவு அறிவுப் புலமை உண்டு”[6]

விருதுகளும் பாராட்டுகளும்

1. 1969இல் குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் ‘அருங்கலைக் கோன்’ என்ற பட்டத்தை வழங்கிச் சிறப்பித்துள்ளது.
2. 1993இல் பண்ருட்டி, வைணவ சபை ந.சுப்புரெட்டியார் அவர்களுக்கு ‘ஸ்ரீ சடகோபன் பொன்னடி’ என்னும் விருதினை வழங்கிச் சிறப்பித்துள்ளது.
3. 1993இல் மதுரை காமராசர் பல்கலைக்கழகம் ‘தமிழ் பேரவைச் செம்மல்’ என்னும் விருதினை வழங்கிக் கௌரவித்ததோடு, இப்பல்கலைக்கழகத்தின் கல்வி ஆலோசனைக் கழகத்தின் வாழ்நாள் உறுப்பினர் தகுதியையும் வழங்கிக் கௌரவித்துள்ளது.
4. 1995இல் தமிழக அரசு ந.சுப்புரெட்டியாருக்கு திரு.வி.க விருதினையும் ரூபாய் பத்தாயிரம் ரொக்கப் பணத்தையும் வழங்கிச் சிறப்பித்துள்ளது.
5. 1996இல் சென்னை ஆழ்வார் ஆய்வு மையம் ந.சுப்புரெட்டியாருக்கு இராமானுசர் விருதும் ரூபாய் இருபத்தைந்தாயிரம் ரொக்கப் பணமும் வழங்கிக் கௌரவித்துள்ளது.

6. 1996இல் சென்னை கம்பன் கழகம் ந.சுப்புரெட்டியாருக்கு பேராசிரியர் இராதாகிருஷ்ணன் விருதும் ரூபாய் ஆயிரம் ரொக்கப் பணமும் வழங்கிச் சிறப்பித்துள்ளது.
7. 1999இல் மதுரை காமராசர் பல்கலைக்கழகம் ந.சுப்புரெட்டியாருக்கு டி.லிட். கௌரவ டாக்டர் மதிப்புறு முனைவர் பட்டத்தை வழங்கிச் சிறப்பித்துள்ளது.
8. 1999இல் தமிழக அரசின் இயல், இசை, நாடகத்துறை 'கலைமாமணி' விருதினையும், மூன்று சவரன் தங்கப் பதக்கத்தையும் வழங்கிக் கௌரவித்துள்ளது.
9. 1999இல் காஞ்சியில் காஞ்சிப் பெரியவர் நூற்றாண்டு விழாக்குழு ந.சுப்புரெட்டியாருக்கு 'சேவா ரத்னா' விருதினையும், ரூபாய் ஆயிரம் ரொக்கப் பணத்தையும் வழங்கிச் சிறப்பித்துள்ளது.
10. 2000த்தில் துறையூர் நகராண்மைக் கழகம் இவர்தம் பணியைப் பாராட்டிச் சிறப்பு வரவேற்பு அளித்துக் கௌரவித்துள்ளது.
11. 2001இல் ந.சுப்புரெட்டியாருக்கு சி.பா.ஆதித்தனார் விருது மற்றும் ரூபாய் ஒரு இலட்சம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளது.
12. 2001இல் சென்னை, திருப் பெருந்திரு சோமசுந்தரர் குருவருள் அருட்பணி மன்றம் 'ஆய்வுத் தமிழரசு' என்ற விருதினையும் ரூபாய் மூவாயிரம் ரொக்கப் பரிசினையும் வழங்கிச் சிறப்பித்துள்ளது.
13. 2002இல் குருபழநி ஆதீனமும் திருக்குறள் பீடமும் குருகுலம் மதுராந்தகமும் இணைந்து ந.சுப்புரெட்டியாருக்கு 'பொதுமறைச்

செம்மல்' என்னும் விருதினையும், ரூபாய் இரண்டாயிரம் ரொக்கப் பணத்தையும் வழங்கிக் கௌரவித்துள்ளது.

14. சேலம் தமிழ்ச் சங்கம் ந.சுப்புரெட்டியாருக்கு 2003ஆம் ஆண்டில் 'தமிழ் வாகைச் செம்மல்' என்னும் விருதினையும் ரூபாய் பத்தாயிரம் ரொக்கப் பணத்தையும் வழங்கிச் சிறப்பித்தது குறிப்பிடத்தக்கது ஆகும்.

15. 1984இல் ந.சுப்புரெட்டியாருக்கு இராசா சர் முத்தையா வேள் விருதும் ரூபாய் ஐம்பதாயிரம் ரொக்கப் பணமும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது"[7]

ந.சுப்புரெட்டியாரின் தமிழ்ப் பற்று

ந.சுப்புரெட்டியார் அவர்கள் மாணவர்களுக்குத் தாய்மொழியாகிய தமிழ்மொழி வாயிலாகத்தான் அனைத்துப் பாடங்களையும் பயிற்றுவிக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளார். அவர்

"பயிற்றுப் பல கல்வி தந்து - இந்தப்

பாரை உயர்த்திட வேண்டும்"[8]

என்பது பாரதியாரின் கல்வித்திட்டம் இத்திட்டம் வெற்றிகரமாக நிறைவேற வேண்டுமானால் தாய்மொழியிலேயே எல்லாப் பாடங்களையும் கற்பித்தல் வேண்டும். விலைப்பாலை விட முலைப்பால் (தாய்ப்பால்) சிறந்ததல்லவா? கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் கூடத் தாய்மொழி வாயிலாகக் கற்பிக்கப்படும் நிலை ஏற்பட்டால்தான் எத்தனையோ விதங்களில் வீணடிக்கப்படும் ஆற்றல்கள் சரியான முறையில் பயன்படுத்தப்படும் என்று ந.சுப்புரெட்டியார் குறிப்பிட்டுள்ளார்.

“தாய்மொழியிலும், வடமொழியிலும் உள்ள சமயக் கருத்துக்களையும் அம்மொழிகளிலுள்ள கல்வெட்டுகள் போன்றவற்றையும்கூட ஆங்கிலத்தில் படிப்பதுதான் சிறப்பு என்று கருதும் குறுகிய எண்ணமும் நீங்கும்”[9] எனக் கூறுவதன்மூலம் தெளியலாம்.

ந.சுப்புரெட்டியார் அவர்கள் காரைக்குடி அழகப்பா ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பத்தாண்டுகள் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றி உள்ளார். மேலும் ‘தமிழ் பயிற்று முறைகள்’ குறித்து சிந்தித்துத் ‘தமிழ் பயிற்றும் முறை’ நூலினை எழுதியுள்ளார். மேலும் அவர் முசிறியில் 1934 மார்ச்சு மாதத்தில் அறுபது விழுக்காடு மதிப்பெண் பெற்று பள்ளி இரண்டாவது மாணவனாக தேர்ச்சி பெற்றார். அப்போது திருச்சி புனித சூசையப்பர் கல்லூரியில் கணிதத்தை சிறப்பு பாடமாகப் படித்துக் கொண்டிருந்த அரங்க சாமியின் உதவியால் அக்கல்லூரியில் சேர்ந்து தமிழ்ப் பேராசிரியராக விளங்கிய மு.நடேச முதலியாரிடம் தமிழ் இலக்கண, இலக்கியங்களைப் பயின்றார் ந.சுப்புரெட்டி அவர்கள்.

“திருச்சி கல்லூரியில் படிக்கின்ற பொழுது பல தமிழ் அறிஞர்களின் பேச்சு கேட்டு தமிழின் மீது ஆர்வம் கொண்டவராக விளங்கினார். அங்கு காசியப்ப ராவுத்தர் ஸ்டோர் அருகில் இருந்த நகர் மன்ற மைதானத்தில் (டௌன் ஹால்) சில பொதுக் கூட்டங்கள் நடைபெறும். அக்காலத்தில் பேச்சினால் என் மனத்தைக் கவர்ந்தவர்கள் கி.ஆ.பெ. விசுவநாதன், பெரியார் ஈ.வே.ரா, பட்டுக்கோட்டை அழகிரிசாமி, வல்லத்தரசு, ப.ஜீவானந்தம், நீலாவதி, இராம சுப்பிரமணியம் ஆகியோர். ஒருமுறை நான் குளித்தலையில் திரு.வி.க பேச்சைக் கேட்டதுண்டு. 1934இல் திருச்சி தேசியக் கல்லூரியில் பேராசிரியர்

சாரநாதன் முதல்வராக இருந்த காலத்தில் நீலாவதி அம்மையாரும் ஜீவானந்தமும் பேசிய புரட்சிகரமான இலக்கிய உரைகள் இன்னும் என் மனதில் ஒலிக்கின்றன. அக்காலத்தில் மிக்க புகழுடன் விளங்கிய மறைமலை அடிகள், ஞானியார் சுவாமிகள் இவர்களைப் பார்க்கவும் பேச்சுகளைச் செவிமடுக்கவும் நான் நற்பேறு பெறவில்லை. பெரகம்பி சிற்றூரில் பிறந்து திருச்சி வரை எட்டிய எனக்கு எத்தனையோ வாய்ப்புகள் இல்லாதொழிந்தன."[9]

இவ்வாறு ந.சுப்புரெட்டியார் அவர்கள் தனது கல்லூரிக் காலகட்டத்தில் பண கஷ்டத்தில் ராவுத்தர் ஸ்டோர் அருகில் சிறிய அறையில் தங்கியிருந்த போதிலும் இத்தகைய பெரும் அறிஞர்களின் பேச்சுக்களைக் கேட்டு தமிழ் ஊட்டம் பெற்றவர். மேலும் ந.சுப்புரெட்டியார் அவர்கள் நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார், பண்டிதமணி மு.கதிரேசன் செட்டியார் ஆகியோர்களின் இலக்கியப் பேருரைகளையும் கேட்டு மகிழ்ந்துள்ளார்.

நாமக்கல் வட்டம் வரகூரைச் சேர்ந்த 'வித்துவான்' பட்டம் பெற்ற இரா.கிருஷ்ணசாமியிடம் நன்னூல், காண்டிகை, யாப்பருங்கலம் ஆகிய நூல்களைப் பயின்றார். நாற்பத்தொரு ஆண்டுகள் தமிழ் இலக்கண இலக்கியங்களின் அகப்பொருளில் ஆழங்கால்பட்ட ந.சுப்புரெட்டியார், பத்தாண்டுகள் அகப்பொருளைத் தமிழ் முதுகலை மாணவர்களுக்குக் கற்பித்து அந்த அனுபவங்களின் அடிப்படையில் 1981இல் அகத்திணைக் கொள்கை என்ற திறனாய்வு நூலினை எழுதியுள்ளார். 'கல்விப் பருவம்', 'கல்வி கற்றல்' ஆகியன குறித்துச் சிந்தித்துப் பல நூல்களைத் தமிழில் எழுதினார். புதுமையான கடித உத்திகளைப் பயன்படுத்தி 'இல்லற நெறி' (1964),

‘முத்திநெறி’ (1982), ‘சைவ சமய விளக்கு’ (1982), ‘கல்வி உளவியல் கோட்பாடுகள்’ (1985) போன்ற நூல்களை இயற்றியுள்ளார். மேலும்,

தமிழ் பயிற்றும் முறை, கவிதை பயிற்றும் முறை, அறிவியல் பயிற்றும் முறை, கல்வி உளவியல் கோட்பாடுகள், யுனஸ்கோ : அறிவியல் பயிற்றும் மூல முதல் நூல் போன்றவை ஆசிரியர்களுக்குத் தேவையான கற்றல், கற்பித்தல், உளவியல் கோட்பாடுகளை விளக்கி ஐந்து நூல்களாக எழுதியுள்ளார் ந.சுப்புரெட்டியார் அவர்கள். மேலும் யுனெஸ்கோ நிறுவனம் வெளியிட்டுள்ள ‘அறிவியல் பயிற்றும் அடிப்படை நூல்’ ஆகியன தமிழ் வழிக் கல்வியின் முதன்மையையும் முக்கியத்துவத்தையும் தெளிவுபடுத்துகின்றன.

தமிழ் இலக்கிய வகைமைகளுள் சிறப்பிடம் பெறுவது கவிதைகளே. ந.சுப்புரெட்டியார் அவர்கள் அக்கவிதை கவிஞர்கள் தோன்றிய அல்லது தோன்றும் பின்புலத்தை அவர் ‘காலமும் கவிஞர்களும்’ என்னும் நூலில் தெளிவுபடுத்தியுள்ளார். இலக்கியங்களில் காணப்பெறும் நுட்பமான காதலுணர்வை விளக்கி ‘காதல் ஓவியங்கள்’ என்னும் நூலினையும், ‘அறிவின் விருந்து’ என்னும் நூலின் மூலம் இலக்கியம் கற்பவர் உணர்வைத் தூண்டி சிந்தனையையும் வளர்த்துள்ளார். ந.சுப்புரெட்டியாரின் தமிழ்ப் பணிகளுள் மிக அரியதாகக் கருதப்படுவது ‘முத்தொள்ளாயிர விளக்கம்’ என்னும் நூலாகும். கலிங்கத்துப்பரணியின் இலக்கியச் சிறப்புகளை விளக்கி நிகழ்த்திய சொற்பொழிவுகள் ‘பரணி பொழிவுகள்’ எனும் நூலாக வெளிவந்தன.

அறிவியல் தமிழின் தேவையையும் முதன்மையையும் விளக்கி ‘அறிவியல் தமிழ்’ என்னும் நூலினைத் தமிழ்ச் சமூகத்திற்கு அறிமுகப்படுத்தியுள்ளார். கம்பராமாயணமே ந.சுப்புரெட்டியாரின் உள்ளத்தை

ஈர்த்த காப்பியமாகும். இவ்வகையில் ‘கம்பனின் மக்கள் குரல்’ பண்பாட்டு நோக்கில் கம்பன் காவியம் என்னும் இரண்டு நூல்களாகும்.

ந.சுப்புரெட்டியார் அவர்கள் திருக்குறளுக்கென மூன்று வரிகளில் சுருக்கமான உரையினைத் தந்துள்ளார். ‘திருக்குறள் தெளிவு’ எனும் தலைப்பில் நூலாக வெளிவந்துள்ளது. மேலும் திருக்குறள் கருத்தரங்கு மலர், திருக்குறள் ஆய்வுக்கட்டுரை அடங்கிய ஆய்வு மலர் ஒன்றை வெளியிட்டுள்ளார். வாழ்வியல் நெறிமுறைகளை வள்ளுவர் காட்டும் முறைகளில் எளிமையாக ‘திருக்குறள் வாழ்வியல் சிந்தனைகள்’, ‘வள்ளுவர் காட்டும் வாழ்வியல்’ என்னும் இரு நூல்களிலும் திருவேங்கடம் தமிழுக்கு அளித்துள்ள பங்களிப்பு குறித்துத் ‘திருவேங்கடமும் தமிழ் இலக்கியமும்’ என்ற நூலினை ந.சுப்புரெட்டியார் எழுதியுள்ளார். அறிவியல் சிந்தனைகளில் பல்கலைக்கழகப் பேராசிரியர்களுக்கு நிகரானவர். தமிழ் இலக்கியம், சமயம், தத்துவம் ஆகியவற்றில் காணலாகும் அறிவியல் சிந்தனைகளையும் கருத்துக்களையும் விளக்கி அவர் ‘அறிவியல் நோக்கில் இலக்கியம்’ என்னும் நூலினை எழுதியுள்ளார். தமிழ் இலக்கியங்கள் அறத்திற்கும் நீதிக்கும் அளித்துள்ள பங்களிப்பு மிகுதி அவற்றை தமிழ் இலக்கியச் சான்றுகளைக் கொண்டு விளக்குவதற்காக ‘தமிழ் இலக்கியத்தில் அறம் நீதி முறைமை’ என்னும் நூலினை எழுதியுள்ளார். தமிழில் தோன்றி வளர்ந்துள்ள இலக்கிய வகைகள், அவற்றின் வளர்ச்சி, இக்கால இலக்கியத்தின் நோக்குகள், போக்குகள் ஆகியன குறித்து விளக்குவதற்காக ‘இலக்கிய வகையின் வளர்ச்சியும் இக்கால இலக்கியமும்’ என்னும் ஆய்விலக்கிய நூலினை எழுதியுள்ளார்.

‘பாவேந்தர் பாரதிதாசன் - ஒரு கண்ணோட்டம்’, ‘வாய்மொழியும் வாசகமும்’, ‘பல்சுவை விருந்து’, ‘புதுமைக் கவிஞர் சுப்பிரமணிய பாரதியார் – ஒரு கண்ணோட்டம்’ முதலான இலக்கிய நூல்களை ந.சுப்புரெட்டியார் எழுதியுள்ளார். காந்தியடிகளின் நெஞ்சம் விடு தூது’ என்னும் நூலும் இவ்வகையில் குறிப்பிடத்தக்கது ஆகும்.

ந.சுப்புரெட்டியார் எழுதிய பிற நூல்கள்

ந.சுப்புரெட்டியார் சமய, தத்துவ விளக்க நூல்கள் அனைத்தும் சைவ, வைணவ சமயங்களின் கொள்கை நெறி விளக்கங்களாகவே அமைந்துள்ளன. அவரது ‘திருப்பாவை விளக்கம்’, ‘அர்ச்சிராதி’, ‘ஐந்து ரகசியங்கள்’, ‘வைணவமும் தமிழும்’ போன்றவைகளாகும். அண்ணாமலை பல்கலைக்கழக வெளியீடான ‘கலியன் குரல்’, ‘கீதைக்குறள்’, ‘கண்ணன் எழில் காட்டும் கவிதைப் பொழில்’, ‘ஆண்டாள் பாவையும் அழகுத் தமிழும்’, ஐதீகம், இதிகாசம், சம்வாதம் ஆகியன குறித்தும் பல நூல்களை எழுதியுள்ளார். முக்திநெறி, ஆன்மீகமும் அறிவியலும் போன்றவற்றை எழுதியுள்ளார். மேலும் சமயம், தத்துவம் என்னும் பொருளமைதியில் இருபது நூல்கள் எழுதியுள்ளார்.

மலைநாட்டுத் திருப்பதிகள், தொண்டை நாட்டுத் திருப்பதிகள், பாண்டிய நாட்டுத் திருப்பதிகள், வடநாட்டுத் திருப்பதிகள், தமிழக அரசின் பரிசுகளைப் பெற்ற சோழநாட்டுத் திருப்பதிகள் முதலான திருத்தலப் பயண நூல்களையும் மேலும் சைவ சமயச் சான்றோர்கள் மேற்கொண்ட திருத்தலப் பயணங்களின் பெருமைகளையும் அவரது தேவாரப் பாடல்களின் சிறப்புகளை விளக்கி எழுதிய நூல்கள் ‘தம்பிரான் தோழர்’ (சுந்தரர்), ‘ஞானசம்பந்தர்’, ‘நாவுக்கரசர்’,

'மாணிக்கவாசகர்' எனும் நூல்கள் குறிப்பிடத்தக்கன. மேலும் என் அமெரிக்கப் பயணம், என் இலங்கைப் பயணம் என பயண நூல்களையும் எழுதியுள்ளார்.

தமிழ் இலக்கியப் பரப்பில் திறனாய்வு நூல்களின் எண்ணிக்கை மிகக் குறைவு என்றே குறிப்பிடலாம். இக்குறையைப் போக்கும் அளவிற்கு ந.சுப்புரெட்டியார் அவர்கள் புதிய பார்வையில் மூவர் தேவாரம், பல்சுவை இலக்கிய விருந்து எனப் பல திறனாய்வு நூல்களை எழுதியுள்ளார். தமிழ்க் கவிதையின் 'கவிதை அனுபவம்', 'பாட்டுத் திறன்' மிகச் சிறந்த திறனாய்வு நூலாகும்.

இலக்கணம் பயின்ற ந.சுப்புரெட்டியார் அவர்கள் 'தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை', 'அகத்திணைக் கொள்கைகள்' ஆகிய இரண்டு தொல்காப்பிய திறனாய்வு நூல்களாகும். 'கம்பன் படைத்த சிறுபாத்திரங்கள்', 'பண்பாட்டு நோக்கில் கம்பன் காவியங்கள்', 'அண்ணல் அனுமன்' ஆகிய மூன்று நூல்களும் கம்பராமாயணத் திறனாய்வு நூல்களாகும். 'புதுக்கவிதை நோக்கும் போக்கும்' என்னும் நூல் புதுக்கவிதை திறனாய்வு நூலாகும். 'கண்ணன் பாட்டுத்திறன்', 'பாஞ்சாலி சபதம் - ஒரு நோக்கு', 'குயில் பாட்டு – ஒரு மதிப்பீடு', தமிழ்நாடு அரசின் பரிசு பெற்ற நூலான 'பாரதீயம்' ஆகிய நூல்கள் பாரதியார் கவிதைகள் பற்றிய திறனாய்வு நூல்களாகும்.

மேலும் 'ஆழ்வார் ஆராவமுது', 'வீட்டுசித்தன் விரித்த தமிழ்', 'சடகோபன் செந்தமிழ்', 'பரகாலன் பைந்தமிழ்', 'பாவேந்தர் பாட்டுத்திறன்', 'பாண்டியன் பரிசு – ஒரு மதிப்பீடு', 'கவிஞர் வாலியின் அவதார புருஷன் - ஒரு மதிப்பீடு',

‘கவிஞர் வாலியின் பாண்டவர் பூமி – ஒரு மதிப்பீடு’ போன்றவை வசன கவிதை காப்பியத் திறன்களை எடுத்துரைக்கும் திறனாய்வு நூல்களாகும்.

ந.சுப்புரெட்டியார் அவர்கள் தமிழ் இலக்கியங்களில் காணலாகும் அறம், சமயம், தத்துவச் சிந்தனைகளை ‘அறிவியல் நோக்கில் இலக்கியம் சமயம் தத்துவம்’ என்ற திறனாய்வு நூலில் விளக்கியுள்ளார்.

இலக்கிய வகையின் வளர்ச்சியும் இக்கால இலக்கியங்களும்’, ‘கவிமணியின் தமிழ்ப்பணி – ஒரு மதிப்பீடு’, ‘மூவர் தேவாரம் - புதிய பார்வை’. இதனைத் தவிர ந.சுப்புரெட்டியார் ‘வாழும் கவிஞர்கள்’, ‘தந்தை பெரியார் சிந்தனைகள்’, ‘பல்சுவை விருந்து’ போன்ற திறனாய்வு நூல்களை எழுதியிருப்பது குறிப்பிடத்தக்கது.

‘வேமனார்’, ‘குரஜாட்’, ‘சி.ஆர்.ரெட்டி’, ‘தாயுமான அடிகள்’, ‘பட்டினத்தடிகள்’, ‘இராமலிங்க அடிகள்’, ‘பிரதிவாதி பயங்கரம்’, ‘அண்ணங்கராசாரிய சுவாமிகள்’, ‘தமிழ்க்கடல் ராய.சொக்கலிங்கனார்’, ‘முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம் ஆகிய வரலாற்று நூல்களையும், ‘நினைவுக் குமிழிகள் - நான்கு பகுதிகள்’, ‘மலரும் நினைவுகள்’, ‘நீங்காத நினைவுகள்’ போன்றவை தன் வரலாற்று நூல்களாகும். ந.சுப்புரெட்டியாரின் தன் வரலாற்று நூல்களில் எளிமை, உண்மை, நம்பகத்தன்மை ஆகியவற்றைக் காணமுடிகின்றது. மேலும் இவர் ஆழ்ந்த அறிவியல் புலமையுடையவராதலால் ‘மானிட உடல்’, ‘நமது உடல்’, ‘வாழையடி வாழை’ (Genetics – மரபியல்) ஆகிய நூல்கள் மனித உடலும் மரபியலும் சார்ந்தவை. மேலும் ‘அணுவின் ஆக்கம்’, ‘அதிசய மின்னணு’ அணுவியல் தொடர்பானவை. ‘இளைஞர்

வானொலி', 'இளைஞர் தொலைக்காட்சி', 'அணுக்கரு பௌதிகம்', 'அம்புலிப் பயணம்', 'தொலைஉலகச் செலவு' 'விண்வெளிப் பயணம்', 'இராக்கெட்டுகள்' போன்ற அறிவியல் நூல்களையும் 'இல்லற நெறி', 'அறிவியல் விருந்து' 'தமிழில் அறிவியல் - அன்றும் இன்றும்' 'தமிழில் அறிவியல் செல்வம்' என்னும் நூலினையும் எழுதியுள்ளார்.

ந.சுப்புரெட்டியாரின் அறக்கட்டளைச் சொற்பொழிவுகள்

ந.சுப்புரெட்டியார் தம் வாழ்நாளில் தமிழகப் பல்கலைக்கழகங்களில் பதினான்கு அறக்கட்டளைச் சொற்பொழிவுகளை நடத்தியுள்ளார். அவை அனைத்தும் செம்மைப்படுத்தப்பட்டு ந.சுப்புரெட்டியார் அவர்களாலேயே நூல்களாக வெளியிடப்பட்டன.

சொற்பொழிவுகள் அனைத்தும் தமிழ் இலக்கியம், வைணவ சமயம், தத்துவம் சார்ந்தது. தமிழ்ப் பல்கலைக்கழகங்களின் அறக்கட்டளைகளில் சிறப்புச் சொற்பொழிவுகளை நிகழ்த்தித் தாமே இருபத்தைந்தாயிரம் வீதத்தில் அளித்து ஒன்பது பல்கலைக்கழகங்களில் அறக்கட்டளைகளையும் நிறுவியுள்ளார்.

தொகுப்புரை

பல்வேறு நூல்களை உருவாக்கி, பல துறைகளில் சாதனைப் பெற்று பன்முகத் திறமை கொண்டவரின் இலக்கியப் படைப்பும், சாதனைகளும், விருதுகளும், அறக்கட்டளைகளும் நிறுவியவரின் வரலாறு மாபெரும் சாதனைக்குரியது ஆகும்.

அடிக்குறிப்புகள்

1. க.ஜோதிமணி, ந.சுப்புரெட்டியாரின் தமிழ்ப்பணிகள், ப.9
2. ந.சுப்புரெட்டியார், நினைவுக் குமிழிகள், பக். 19-20
3. க.ஜோதிமணி, ந.சுப்புரெட்டியாரின் தமிழ்ப்பணிகள், ப.13
4. ந.சுப்புரெட்டியார், நினைவுக் குமிழிகள், ப.63
5. மேலது.,ப.88
6. க.ஜோதிமணி, ந.சுப்புரெட்டியாரின் தமிழ்ப்பணிகள், ப.28.
7. மேலது.,ப.24
8. பாரதியார் கவிதைகள்
9. ந.சுப்புரெட்டியார், நினைவுக் குமிழிகள், ப.197.
10. மேலது., பக்.307-308

இயல் - 2

தமிழ்க் காவியங்கள் - அறிமுகம்

முன்னுரை

தமிழ் இலக்கிய வரலாற்றில் காப்பியங்களின் சிறப்பு குறிப்பிடத்தக்கது ஆகும். இதிகாசங்களும், புராணங்களும், காப்பியங்களும் நிலைபெற்றவையாகும். அந்நிலையில் காப்பியங்களின் வளர்ச்சி மற்றும் வகைப்பாடு, அவற்றின் சிறப்பு பற்றி ஆய்வதே இவ்வியலின் நோக்கமாகும்.

தமிழில் காவியங்கள்

தமிழ் இலக்கியம் பல வகைப்படும். தன்னுணர்ச்சிப் பாடல்கள், அகம், புறம் பற்றிய பாடல்களும் சங்க இலக்கியமாக மலர்ந்தன. அற நூல்கள் இலக்கியமாக வடிவம் கொண்டன. பிற்காலத்தில் பக்திப் பனுவல்கள், பக்தியின் அடிப்படையில் இலக்கியத்தன்மை பெற்றும் பெருமை கொண்டன. நல்ல நீதிகளை உள்ளடக்கிக் கதைபொதி பாடல்களாக அமைந்தவை காப்பியம் என்னும் இலக்கிய வகையாக மலர்ந்தன. இலக்கியம் கண்டதன் பின் இலக்கணம் இயம்புதல் என்னும் கருத்துப்படி இந்தக் காப்பிய இலக்கியங்கள் தோன்றிய பிறகு அவற்றுக்கான இலக்கண விதிகளை உள்ளடக்கிய இலக்கண நூல்கள் தோன்றின.

தமிழில் காலந்தோறும் தோன்றிய இலக்கியங்களை காப்பியம், இதிகாசம், புராணம், பெருங்காப்பியம், கதைப்பாடல் எனத் தமிழறிஞர்கள் வகைமைப்படுத்தியுள்ளனர்.

ந.சுப்புரெட்டியார் அவர்கள் ஒரு மொழியின் வளத்தை அம்மொழியிலுள்ள காப்பியங்களே புலப்படுத்தும் என்கிறார். “பண்டைக்

காலந்தொட்டு வளம் மலிந்த நம் தமிழ்மொழியில் அளவிறந்த காவியங்கள் உண்டாயின. காவியங்களை (காப்பியங்களை) இலக்கண நூல்கள் 'பொருள் தொடர்நிலைச் செய்யுட்கள் என்று குறிப்பிடும் என்றும் தொல்காப்பியத்தில் 'தோல்', 'விருந்து' போன்ற பெயர்களால் குறிப்பிடப்படும். காப்பியங்கள் இன்று வழக்காறு அற்றுப் போயின என்று குறிப்பிட்டுள்ளார். மேலும் கி.பி.ஏழாம் நூற்றாண்டு வரையில் தோன்றிய காப்பியங்கள் பெரும்பாலும் அகவல் நடை அமையப்பெற்றன. அதற்கு பின்னர் தோன்றிய காப்பியங்களில் பாவினங்கள் பயின்று வருவதையும் காணலாம்"[1]

தனிப்பாடல்கள், நாடகம், காப்பியம் என இலக்கியப் படைப்புகள் பல வகைப்படினும் ஒரு பண்பாட்டின் பழம்பெரும் பெட்டகமாகக் காப்பியத்தைக் கருதுவது திறனாய்வு மரபு. காப்பியங்கள் அனைத்தும் வெவ்வேறு காலகட்டங்களில் தோன்றியுள்ளன.

சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, கம்பராமாயணம், பெரிய புராணம், கலிங்கத்துப்பரணி, பல்வேறு தலப்புராணங்கள் போன்ற காப்பியங்களையும் பிற சமய அறிஞர்களால் அண்மைக் காலத்தில் இயற்றப்பட்ட தேம்பாவணி, இரட்சண்ய யாத்திரிகம், சீறாப் புராணம் போன்றவைகளையும் வரலாற்று வரிசையில் வைத்து நோக்கினால் அவற்றிடையே உள்ள பொதுத்தன்மை விளங்கும் என்கிறார் சுப்புரெட்டியார்.

சீவகசிந்தாமணி விருத்த யாப்பில் தோன்றிய முதல் காப்பியமாகும். அதனைத் தொடர்ந்து வந்த காலங்களில் கம்பராமாயணமும், பெரிய புராணமும் விருத்த யாப்பிலேயே தோற்றம் பெற்றன. தமிழில் மகாபாரதமும், கம்பராமாயணமும் மிகச்சிறந்த இதிகாசங்களாகக் கருதப்படுகின்றன.

இதிகாசம், புராணம், காப்பியங்கள் - வேறுபாடுகள்

கடவுளர்களையும் கடவுளின் அம்சம் ஆனவர்களையும் மானிடராகப் பிறந்து பல தெய்வீகச் செயல்களை ஆற்றி இறுதியில் தெய்வீக நிலை எய்தியவர்களைப் பற்றியும் விரிவாகப் பேசுவன இதிகாசங்கள் எனப்படும்.

பாரதம், இராமாயணம் என்ற இரண்டும் இதிகாசம் எனப்படும். இதில் இடம்பெறுகின்ற பெரும்பாலான கதாபாத்திரங்கள் கடவுளின் அம்சம் ஆனவர்களாகவும் மானிடராகப் பிறந்து தெய்வீகச் செயல்களை ஆற்றித் தெய்வீக நிலை அடைந்தவர்களாகவே நிலைபெறுகின்றனர்.

கடவுளர் பற்றிய புராணங்களில் தெய்வங்கள் தெய்வீக நிலையில் நின்று செயல்படுகின்றன. தெய்வங்களின் அற்புதச் செயல்கள் ஒரு தலத்தைச் (இடத்தைச்) சார்ந்து அமைகின்ற போது அதைப் பற்றிக் கூறும் கதைப்பாடல்கள் தலபுராணங்கள் என்று பெயர் பெறுகின்றன. பெருங்காப்பியத்திற்கும் காப்பியத்திற்கும் புராணத்திற்குமுரிய வேறுபாடுகள் வெண்பா பாட்டியலில்,

‘கருதுசில குன்றினுமக் காப்பியமா மென்பர்
பெரிதறமே யாதி பிழைத்து – வருவதுதான்
காப்பியமாகும் குலவரவு காரிகை
யாப்பிற் புராணமே யாம்’ (நூ.43)

என்று வெண்பா பாட்டியலில் ‘குலவரவு’ முதலியனவற்றைக் காட்டுவது புராண கதையாம்’ என்பது பழையவுரை. இந்த அமைப்பு வடமொழியிலும் காணப்படுவதே. ‘புராண பஞ்ச லட்சணம்’ என்பது அமரம். பஞ்ச லட்சணம் பாவை என்பதை,

‘ஸ்ர்க்கஸ்ச ப்ரதி ஸ்ர்க்சஸ்ச வம்ஸோ மற்வந்தராணிச

வம்ஸாது சரிதம் சைவ புராண பஞ்சலகூஷம்'

என்ற ஸ்லோகத்தின்வழி அறியலாம். இதுபற்றி திவாகரத்தில்

'காவிய வியற்கை விரிக்குங் காலை
ஆரியம் தமிழால் நேரிதி னடக்கி
உலகின் தோற்றமும் ஊழியின் இறுதியும்
அலகுசால் தொண்ணூற் றறுவர தியற்கையும்
வேத நாவின் வேதிய ரொழுக்கமும்
ஆதிக் காலத் தரசர தியற்கையும்
அவ்வவர் நட்டால் அறிவு மாற்றலும்
ஆடியும் பாடியும் அறிவரக் கிளத்தல்' (176)

என்று கூறப்படுகிறது. இப்பகுதி புராணத்தின் இலக்கணத்தைக் கூறுவதாக அமைந்துள்ளது.

புராணம் என்பதன் கருத்து நாளடைவில் விரித்துக் கொண்டே வந்து பெரியோர்களது வரலாற்றினையும் ஸ்தல சிறப்புக்களையும் உள்ளடக்கியதாக தற்காலத்தில் வளர்ந்து வந்துள்ளது.

"பிரபந்தம், காவியம் இவ்விரண்டிற்குமுரிய தொடர்பில் நுட்பமான வேறுபாடுகள் காணப்படுகின்றன. தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்கள் கூறப்பட்டுள்ளன. இவற்றுள் ஒன்று காப்பியம் பிறிதொன்று பெருங்காப்பியம். எனவே 'பிரபந்தம்' இலக்கியச் சுவைபட இயற்றிய நூல்களுக்கெல்லாம் ஒரு பொதுப்பெயர் என்பது விளங்கும். இது முற்கால வழக்கு. தற்காலத்தில் காப்பியமும் பெருங்காப்பியமும் புராணமும் ஒழிந்த ஏனைச் செய்யுள் இலக்கியங்களுக்கே இப்பெயரை வழங்குகிறோம். உதாரணமாக சிந்தாமணியைப் பிரபந்தமென்று சொல்லமாட்டோம். காப்பியம் அல்லது பெருங்காப்பியம் என்று வழங்குவோம். இவ்வாறே பரணி, பிள்ளைத்தமிழ்,

கலம்பகம் முதலியவற்றைக் காப்பியம் என்று தமிழில் வழங்குவதில்லை. பிரபந்தமென்றே கூறுவோம். கவி இயற்றிய அனைத்தும் காவியம் என்ற பெயர்க்கு உரியதே எனினும் தமிழ் வழக்கில் சுருங்கிய பொருள் ஏற்பட்டுவிட்டது."[2]

காப்பியம்

அறம், பொருள், இன்பம், வீடுபேறு இந்த நான்கு உறுதிப் பொருள்களை கொண்டு வருவது பெருங்காப்பியம் ஆகும். இவற்றில் ஏதேனும் ஒன்று குறைந்து வந்தால் அது சிறுகாப்பியம் எனப்படும்.

சிறப்புமிக்க மனிதப் பாத்திரங்கள் நல்வினை தீவினைப் பலன்களை உலக வாழ்க்கையில் அனுபவித்து நல்வினை ஆற்றி, இறுதியில் இறவா இன்பமாகிய இறைநிலை எய்துதல் பற்றி விரிவாகச் சிறப்பித்துக் கூறுவனவே காப்பியங்கள் எனப்படுகின்றன. இரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து தொடங்கியதே காப்பியங்கள் சிலப்பதிகாரம், மணிமேகலை அக்காலகட்டத்திலேயே தோற்றம் பெற்றன. எனவே இவை தமிழின் முதற்காப்பியமாகவும் இரட்டைகாப்பியமாகவும் மேலும் ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றாகவும் வைத்துப் போற்றப்பட்டன. இதனைத் தொடர்ந்து பல்வேறு காப்பியங்கள் தோன்றின.

"கம்பராமாயணம், பெரியபுராணம் போன்ற காப்பியங்கள் விருத்த யாப்பில் எழுந்தன. காப்பிய நடையில் எழுந்த தல புராணங்களில் ஒன்றிரண்டைத் தவிர அனைத்தும் வெறும் 'செய்யுட் குவியல்களாகக்' காட்சி அளிக்கின்றனவேயன்றி, அவற்றில் கவிதை நயமும் இல்லை. காப்பியச் சுவையும் இல்லை என்கிறார்"[3] ந.சுப்புரெட்டியார் அவர்கள்.

இஸ்லாமிய மற்றும் கிறிஸ்தவ காப்பியங்களில் பழைய முறையினை கையாண்டுள்ளதனால் ஓரளவு காணமுடிகின்றது என்றும் சிந்தாமணிக்குப் பின் எழுந்த காப்பியங்கள் யாவும் அதனை முன்மாதிரியாகக் கொண்டே உருவாக்கப்பட்டன என்றும், அதனைப் போலவே கலிங்க நாட்டுப் படையெடுப்பைப் பொருளாகக் கொண்டு தாழிசையால் எழுதப்பெற்ற முதற்காப்பியம் 'கலிங்கத்துப்பரணி' ஆகும். கலிங்கத்துப்பரணியை அடுத்து எழுந்த பரணி நூல்கள் யாவும் அதனைப் போல சிறப்பாக அமையவில்லை என்கிறார் ந.சுப்புரெட்டியார் அவர்கள்.

"ஒரு பொருளைக் காப்பியமாகத் தீட்டுவதற்குப் புலமைத்திறம் மிகவும் இன்றியமையாதது. புலமையில் வல்லன் ஒருவனே அழகுக்கினிய காப்பியமாக்க முடியும்"[4] என்று விரிந்துகொண்டே வந்த இலக்கிய வளர்ச்சியே காப்பியத்தில் முழுமை எய்தியது.

"காப்பியம் ஆங்கிலத்தில் EPIC எனப்படுகிறது. இச்சொல் EPOS என்ற கிரேக்கச் சொல்லின் அடிப்படையில் உருவானது"[5]. இதற்குச் சொல் அல்லது பாடல் என்பது பொருள். "காவியம் என்னும் வடசொல்லின் தமிழ் வடிவமே காப்பியம் எனக் கொள்வதுண்டு. காவியம் என்பது கவியினால் செய்யப்பட்டது எனப்பொருள் தரும். காப்பியம் என்பதை காப்பு + இயம் என்றும் பிரித்துப் பொருள் காணலாம்"[6]. இப்பெயர் தொடக்கத்தில் இலக்கண நூல்களைச் சுட்டுவதற்காகவே அமைந்தது. இடைக்காலத்தில் வடமொழித் தொடர்பால் ஒருவகை இலக்கிய வடிவத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது என்பர். காப்பியத்தைத் தொடர்நிலைச் செய்யுள் எனவும் குறிப்பர். காவியம், காப்பியம் என்னும் இவ்விரு சொற்களும் சில தமிழ்க் காப்பியப் பெயர்களிலும்

அமைந்திருக்கின்றன. காவியம் என்பது யசோதர காவியம், நாக குமார காவியம், இயேசு காவியம், இராவண காவியம் என்றும் கண்ணகி புரட்சிக் காப்பியம், கற்புக் காப்பியம் என்றும் குறிப்பிடப்படுகின்றது.

ந.சுப்புரெட்டியார் அவர்கள் பாஞ்சாலி சபதம் காப்பியப் படைப்பில் பாரதியின் சிறந்த வெற்றியென்று சொல்வது எள்ளளவும் மிகையாகாது என்கிறார். காப்பியங்கள் மேலும் ஐம்பெருங்காப்பியம் ஐஞ்சிறுகாப்பியம் என்று இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

“ஐம்பெருங் காப்பியம் என்னும் வழக்கு முதன்முதலில் நன்னூல் மயிலை நாதர் உரையில் காணப்படுகின்றது”[7] கந்தப்ப தேசிகர் இயற்றிய திருத்தணிகை உலாவில் இவ்வைந்து காப்பியங்களையும் குறிப்பிடுகின்றது. மேலும்

‘பற்றாம் இலக்கணநூற் பாவும் நூற்பா அறிந்து
கற்றார் வழங்கு பஞ்ச காவியம்’ (நன்னூல் சூ.187)

பஞ்சகாவியம் என்பது தமிழில் ஐம்பெருங்காப்பியம் எனவும் அழைக்கப்படுகின்றது. இது தமிழ்விடுதூது என்ற பிரபந்தத்தில் காணப்படுகின்றது. பல்வேறு ஆசிரியர்களால் பல சமயங்களில் காப்பியங்கள் இயற்றப்பட்டுள்ளன. அவையாவன சிலப்பதிகாரம், சீவக சிந்தாமணி, சூளாமணி போன்ற சமண சமய காப்பியங்களை முறையே இளங்கோவடிகள், திருத்தக்க தேவர், தோலாமொழித்தேவர் ஆகியோர் இயற்றியுள்ளனர். மேலும் பௌத்த சமயத்தில் மணிமேகலை, குண்டலகேசி ஆகியவற்றை சீத்தலைச் சாத்தனார் மற்றும் நாதகுத்தனார் இயற்றியுள்ளனர். வைணவ சமயத்தில் இராமாயணமும், மகாபாரதமும் முறையே கம்பர் மற்றும் வில்லிப்புத்தூராரால் இயற்றப்பட்டது.

சேக்கிழாரால் பெரியபுராணமும் பரஞ்சோதி முனிவரால் திருவிளையாடற் புராணமும், உமறுப்புலவரால் இஸ்லாமிய காப்பியமான சீறாப்புராணமும், எச்.ஏ. கிறிட்டின பிள்ளை மற்றும் வீரமாமுனிவரால் கிறித்தவக் காப்பியங்கள் முறையே இரட்சண்ய யாத்திரிகம் மற்றும் தேம்பாவணியும் இயற்றப்பட்டன.

இதிகாசங்களிலிருந்து ஏதேனும் ஒரு பகுதியை எடுத்துக்கொண்டு, விரிவாக்கிக் காப்பிய வடிவில் தருவதை (இயற்றுவதை) கண்டகாவியம் என்று வடமொழி அறிஞர் குறிப்பிடுவர். இத்தகைய போக்கு தமிழிலும் காணப்படுகிறது. நைடதம் (அதிவீர ராமபாண்டியர்) நளவெண்பா (புகழேந்திப் புலவர்) குசேலோபாக்கியானம் (வல்லூர் தேவராசப்பிள்ளை) அரிச்சந்திரபுராணம் (நல்லூர் வீரைகவிராயர்) பாஞ்சாலி சபதம் (பாரதியார்) போன்றவை எடுத்துக்காட்டு ஆகும். இதுவரை தமிழில் ஏறத்தாழ 150 காப்பியங்கள் உருவாகியுள்ளன. தமிழ்க் காப்பியங்களின் அமைப்புக்கு எடுத்துக்காட்டாக முதலில் தோன்றிய இளங்கோவடிகள் இயற்றிய சிலப்பதிகாரத்தினை குறிப்பிடலாம். மகளிர் காலில் அணியும் சிலம்பால் அமைந்த நூல் ஆதலின் சிலப்பதிகாரம் எனப் பெயர் பெற்றது. கண்ணகி மற்றும் பாண்டிமாதேவியின் காற்சிலம்பு கதைக்கு அடிப்படையானவை. மூன்று காண்டங்களையும் முப்பது காதைகளையும் கொண்டது. சோழ நாட்டில் உள்ள புகார் நகரில் பிறந்த கண்ணகி, பாண்டிய நாட்டு மதுரையை அடைந்து கணவனை இழந்து, சேரநாட்டில் புகுந்து தெய்வமாகியதே சிலப்பதிகாரக் கதையாகும். இதனைச் சமணக் காப்பியம் என்பர். இவ்வாறு தமிழ்க் காவியங்களின் அமைப்பு காணப்படுகின்றது. மேலும் காப்பியம் என்பது ஓர்

இலக்கிய வகை வாய்மொழி இலக்கியம். தன்னுணர்ச்சிப் பாடல்கள், கதைப்பொதிப் பாடல்கள்.

அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கனுள் ஒன்றேனும் இரண்டேனும் மூன்றேனும் குறைந்து வருவது சிறுகாப்பியமாகும்.

"அறமுதல் நான்கினுங் குறைபாடுடையது
காப்பியம் என்று கருதப் படுமே" (தண்டி.நூ.10)

பெருங்காப்பியமும் சிறுகாப்பியமும் ஒருவகைச் செய்யுளாலும் பலவகைச் செய்யுள்களாலும் உரைநடையிலும் கலந்து பிறமொழி கலந்தும் வரலாம் என்பதை

"அவைதாம்
ஒருதிறப் பாட்டிலும் பலதிறப் பாட்டிலும் உரையும்
பாடையும் விரவியும் வருமே"

இவ்வாறு தண்டியலங்காரம் காப்பிய இலக்கணத்தை விவரிக்கிறது.

பாவிகம்

காப்பியத்தினுடைய பண்பே பாவிகம் என்பதை,

"பாவிகம் என்பது காப்பியப் பண்பே" (நூ.91)

என்று கூறப்பட்டுள்ளது.

காப்பிய வகை

காப்பியம் என்றாலே தமிழர்களுக்குச் சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி முதலான ஐம்பெருங் காப்பியங்களும் ஐஞ்சிறு காப்பியங்களுமே நினைவுக்கு வரும். இதனைத் தொடர்ந்து பெரியபுராணம், கம்பராமாயணம், வில்லிபாரதம் போன்றவைகள் தோன்றின. இருபதாம் நூற்றாண்டில் பாரதியின் பாஞ்சாலி சபதம், பாரதிதாசனின் பாண்டியன் பரிசு, புலவர் குழந்தையின் இராவண

காவியம், கண்ணதாசனின் இயேசு காவியம் போன்றனவும் காப்பியங்களாகக் கருதப்படுகின்றன.

மேலை இலக்கிய காப்பிய வகை

கிரேக்கம், லத்தீன், பாபிலோனியம் முதலிய பழைமை வாய்ந்த மொழிகளில் காப்பியங்கள் எழுந்துள்ளன. அவை,

1. முன்முறைக் காப்பியம் (Primitive or oral epic)
2. வழிமுறை அல்லது கலைக்காப்பியம் (Secondary or literary epic)
3. வீரயுகக் காப்பியம் (Chivalric epic)
4. வீரயுகக் காதல் காப்பியம் (Chivalric Romance)
5. காதல் காப்பியம் (Romance epic)
6. நகைச் சுவைக் காப்பியம் (Burlesque epic)

கலைத்தன்மை பெறாத அதே நேரத்தில் உணர்ச்சிப் பெருக்காகக் கவிஞனால் தங்குதடையின்றி வாய்மொழி மரபில் பாடப்பட்டு வருவன முன்முறைக் காப்பியம்.

இதனை அடுத்துத் தோன்றுவன கலைக்காப்பியம். இவற்றில் கவிஞனின் சிந்தனைக்கும் கற்பனைக்கும் இடம் உண்டு. தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு கருத்தியலில் இவ்வகைப் படைப்புகள் சிறப்பான இடத்தைப் பெறுகின்றன.

வீரயுகக் காப்பியங்களில் வீரதீரச் செயல்கள், அற்புத ஆற்றல்கள், உணர்ச்சிப்பூர்வமாக மிகையான கற்பனையுடன் வெளியிடப்பெறும்.

வீரயுகக் காதல் காப்பியங்களில் காதல், காதலுக்காகப் போராடும் மிகப்பெரிய போராட்டம் முதன்மைப்படுத்தப்பெறும்.

“நகைச்சுவைக் காப்பியங்களில் கிண்டலும் கேலியும் நிறைந்தது. தன்னேரில்லாத் தலைவனாக உருவகப்படுத்தப்பட்ட காப்பியத் தலைவன்

இங்குக் கிண்டலுக்கும் கேலிக்கும் உரியவனாக, ஆளுமையில் தரம் தாழ்ந்தவனாகச் சித்தரிக்கப்படுவான்"[8]

ந.சுப்புரெட்டியார் அவர்கள் மேலை நாட்டுக் காப்பிய பிரிவு என்ற அடிப்படையில் இரண்டு வகையாக பிரித்துக் காண்பித்துள்ளார்.

1. தேசியக் காப்பியங்கள் (National or Authentic Epics)
2. இலக்கியக் காப்பியங்கள் (Literary or Artificial Epics)

தேசியக் காப்பியங்களில் ஒரு நாட்டைச் சார்ந்த ஒரு வீரனின் வீரச் செயல்களையும் வெற்றிச் சிறப்புகளையும் பற்றியே கூறிச் செல்லும் என்றும் எண்ணற்ற கட்டுக்கதைகளுடன் (legend) அவ்வீரர்களையும் சுற்றி இயங்கும். மேலும் கவிஞன் தன் காவியத்திற்கு அழியாத்தன்மையை அளித்து அவற்றைப் பாதுகாப்பான். இதற்கு எடுத்துக்காட்டாக இலியத் (Iliad), நிபுலன்ஜென்லைத் (Nibulengilied), பயோசுல்ஃப் (Beowulf) என்பனவற்றை எடுத்துக்காட்டாகக் குறிப்பிடுகிறார்.

இலக்கியக் காப்பியங்கள் (Literary or Artificial Epics) இவற்றில் பெருங்காப்பிய பண்புகள் கொண்டிலங்கினும் கவிஞன் தன் நாட்டைப் பற்றியோ தன் நாட்டைச் சார்ந்த வீரன் ஒருவனைப் பற்றியோ சிறப்பிக்க வேண்டுமென்ற அக்கறை இல்லாமல் ஏதாவது ஒரு புராணக் கதையிலுள்ள (Mythology) வீரனைக் காப்பியத் தலைவனாகக் கொண்டு காவியத்தைப் படைக்கலாம் என்கிறார். மில்ட்டனின் துறக்க இழப்பினை (Paradise Lost) ஒரு எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம் என்கிறார்.

தமிழ் இலக்கியத்தில் காணப்படும் பெருங்காப்பிய அமைப்பு முறையானது மேனாட்டு இலக்கிய வரலாற்றிலும் காலத்திற்கேற்றவாறு மாற்றம்

அடைந்துள்ளதைக் காணலாம் என்றும் மேனாட்டு ஆசிரியர்கள் அனைவருமே ஹோமரையும், வர்ஜிலையும் முன்மாதிரியாகக் கொண்ட காப்பியங்களைப் படைத்தனர் என்றும் மகாகவிஞரான மில்டன் இவர்களைப் பின்பற்றியே தன்னுடைய துறக்க இழப்பினைப் படைத்தாரெனினும் அவருக்கு முன்பிருந்த கவிஞர்களைவிட அழியாப் புகழ்பெற்றார் என்கிறார் ந.சுப்புரெட்டியார்.

மேனாட்டு அறிஞர்கள் பெருங்காப்பியங்கள் பற்றிக் கூறியுள்ள கருத்துக்களையும் தண்டியார் கூறும் கருத்துக்களையும் அடிப்படையாகக் கொண்டு பாஞ்சாலி சபதத்தை ஆராய்ந்து கூறியுள்ளார் ந.சுப்புரெட்டியார் அவர்கள்.

1. தேர்ந்தெடுக்கும் கதைப்பொருள்
2. நிகழ்ச்சிகளின் புணர்ப்பு
3. காப்பியத்தின் ஒருமைப்பாடு
4. கதை மாந்தர்களின் படைப்பு
5. தெய்வீக சம்பந்தமான கூறுகள்
6. காப்பிய நடை

தண்டியாரின் கருத்துக்களை மேலே குறிப்பிட்டுள்ள ஆறு கருத்துக்களுடன் ஒப்பிட்டுக் குறிப்பிட்டுள்ளார்.

நம்முடைய தமிழ்மொழியில் உள்ள காப்பியங்களை ஆராய்ந்து பார்த்தோமேயானால் வடமொழியில் எழுதப்பெற்ற இதிகாசங்களான இராமாயணமும் மகாபாரதமும் சங்க இலக்கியத்தில் கதை நிலையில் இடம்பெற்ற போதிலும் மகாபாரதம், சங்க காலத்திலே முழுமையாகத் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கலாம் எனக் கருத இடமுண்டு. கி.பி.ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்த சின்னமனூர்ச் செப்பேட்டில்,

> “மா பாரதம் தமிழ்ப் படுத்தும்
> மதுராபுரிச் சங்கம் வைத்தும்”[9]

எனக் குறிப்பு உள்ளது. எனவே சங்க கால பாண்டிய வேந்தர்கள் மகாபாரதத்தினை தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டு தமிழ்ச் சங்கத்தை மதுரை நகரிலே நிறுவினர் என அறிய முடிகிறது. ஆனால் அந்த நூல் தற்சமயம் கிடைக்கவில்லை.

பல்லவர் காலத்தில் பெருந்தேவனார் மகாபாரதத்தினைத் தழுவி பாரதவெண்பா என்ற நூலைத் தமிழில் இயற்றினார். கி.பி.15ஆம் நூற்றாண்டில் வில்லிப்புத்தூர் ஆழ்வாரும் கி.பி.18ஆம் நூற்றாண்டில் நல்லாப் பிள்ளையும் மகாபாரதத்தினை தழுவி நல்லாப்பிள்ளை பாரதம் தமிழில் எழுதினர். இருபதாம் நூற்றாண்டில் பாரதியார் மகாபாரதத்தின் ஒரு பகுதியை மையமாகக்கொண்டு பாஞ்சாலி சபதத்தை இயற்றினார்.

இராஜாஜி மகாபாரதத்தினை வியாசர் விருந்து என்ற பெயரில் உரைநடை வடிவில் தமிழ்ப்படுத்தியுள்ளார். வால்மீகி இராமாயணத்தைத் தழுவிக் கம்பர் இராமாவதாரத்தை (கம்பராமாயணம்) இயற்றினார். இராஜாஜி இராமாயணத்தை உரைநடையில் சக்கரவர்த்தி திருமகன் என்ற பெயரில் எழுதியுள்ளார்.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆங்கிலம் கற்ற தமிழர்கள் பிற நாட்டு இலக்கியப் படைப்புகளுடன் அறிவியல், கலையியல், சமூக அறிவியல் நூல்களையும் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடுவதில் முனைந்து செயல்பட்டனர். இதனால் தமிழ்மொழி மட்டும் அறிந்த மக்களிடையே, உலக இலக்கிய அறிவு சென்றடைந்தது. பிறமொழி நூல்களைக் கற்று அவற்றைத் தமிழ்மொழியில் மொழிபெயர்த்து வெளியிட வேண்டும் என்ற மனநிலை

தமிழர்களிடம் உருவானது. எனவேதான் தமிழ்த்தாய் பற்றி பாடவந்த பாரதியார்,

‘புத்தம் புதிய கலைகள் - பஞ்ச
பூத செயல்களின் நுட்பங்கள் கூறும்
மெத்த வளருது மேற்கே – அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை’

என்று மேலை நாட்டு மொழிகளுடன் தமிழை ஒப்பிட்டுப் பார்த்து வேதனைப்படுகின்றார். இந்த அவல நிலையை மாற்றியமைத்திடச்

‘சென்றிடுவீ ரெட்டுத் திக்கும் - கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்திங்குச் சேர்ப்பீர்’

என்று மொழிபெயர்ப்பு நூல்களை வெளியிட ஆணையிடுகிறார். தமிழைப் பற்றிப் பாடுகின்ற பாரதியார் தமிழ்மொழி வளர்ச்சியடைய மொழிபெயர்ப்பு மிகத் தேவையானது எனக் கருதுவதனால்

‘பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும்’

என்று அழுத்தமாகப் பாடியுள்ளார். மேலும் அவர்

‘தேமதுரத் தமிழோசை உலகமெங்கும்
பரவும் வகை செய்தல் வேண்டும்’

என்று தமிழிலக்கியப் படைப்புகள் உலக மொழிகளில் மொழிபெயர்க்க வேண்டும் என்ற விருப்பத்தினை வெளிப்படுத்தியுள்ளார்.

ஆங்கிலேய வல்லரசு எதிர்ப்புக் கவிஞரான பாரதியார். தமிழ் மொழி வளர பிறமொழி இலக்கியங்களைத் தமிழில் மொழிபெயர்த்தலும் தமிழிலக்கியப் படைப்புகளைப் பிறமொழிகளில் மொழிபெயர்த்தலும் ஆகிய இரு செயல்களையும் செய்ய வேண்டுமெனக் குறிப்பிட்டுள்ளது பாரதியாரின்

அறிவியல் பார்வையினைப் புலப்படுத்துகின்றன. மொழிபெயர்ப்புக் குறித்து அக்கறையுடன் பாடிய முதல் தமிழ்க் கவிஞர் பாரதியார் ஆவார். அப்படிப்பட்ட பாரதியாரின் பாஞ்சாலி சபதத்தைப் பண்ணோடு பாடினால் கேட்போர் கிறுகிறுத்துப் போவார் என்றும் அந்தக் கிறுக்கில் இலக்கியச் சுவையின் போதை ஏறுவதற்கும் குறையிராது; கள்வெறி கட் குடியர்களை மேலும் மேலும் கட்குடியில் கொண்டு செலுத்துவதுபோல் இந்தப் 'போதை இலக்கியத்தை – குறிப்பாகப் பாரதியாரின் கவிதைகளை அநுபவித்துப் படிப்பதில் கொண்டு செலுத்தும் என்பதற்கு ஐயமில்லை என்று ந.சுப்புரெட்டியார் அவர்கள் தன்னுடைய நூல் முகவுரையில், "மேலும் பல ஆண்டுகளாகப் 'பாஞ்சாலி சபதத்தை'ச் சுவைத்து மகிழ்ந்தவன் யான். நான் சுவைத்த முறையை யெல்லாம் நான் பெற்ற அநுபவத்தையெல்லாம் - பாரதியாரின் நூற்றாண்டில் எழுத்து வடிவில் அமைக்க முயன்றுள்ளேன் என்றும் என் முழு அநுபவமும் பாஞ்சாலி சபதம் ஒரு நோக்கு எனும் நூலில் வெளிவந்ததா என்பது ஐயமே"[10] என்றும், ஏதோ முயன்றுள்ளேன் என்று தன்னுடைய எளிமைத் தன்மையை வெளிப்படுத்தியுள்ளார் ந.சுப்புரெட்டியார்.

பாஞ்சாலி சபதம்

பாரதியார் இயற்றியுள்ள பாஞ்சாலி சபதம் இருபதாம் நூற்றாண்டில் உருவான ஒரு தமிழ்க் காப்பியம். தருமன் இந்திரப் பிரத்தத்தில் இராசூய பெருவேள்வி செய்து முடித்த பிறகு துரியோதனன் முதலிய கௌரவர்கள் அத்தினாபுரத்தில் மண்டபம் கட்டி பாண்டவர்களுக்கு அழைப்பு அனுப்பி சூழ்ச்சி செய்து வரவழைத்து, சகுனியின் மூலமாக வஞ்சக எண்ணத்துடன் சூதுக்கிழுத்து பாண்டவர்களையும், பாஞ்சாலியையும் அவமானப்படுத்தி

அதனால் அவர்களுக்கு ஏற்பட்ட கோபத்தின் விளைவாக சபதம் செய்கின்ற கதைப் பகுதியைக் காப்பியப் பொருளாகக் கொண்டு பழைய கதைக்கு புதிய வடிவம் தரப்பட்டதும் தன்னுடைய காவியம் எளிய பதங்கள், எளிய நடை; எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய சந்தம்; பொதுஜனங்கள் விரும்பும் மெட்டு; தமிழ் மக்கள் எல்லோருக்கும் நன்கு பொருள் விளங்கும்படி எழுதுவதுடன் காவியத்துக்குள்ள நயங்கள் குறைவுபடாமலும் பாஞ்சாலி சபதத்தை தமிழ் ஜாதிக்குப் புதிய வாழ்வு தர வேண்டுமென்று கங்கணங் கட்டி நிற்கும் பராசக்தி என்னை இத்தொழிலிலே தூண்டினாள் என்று பாரதியார் தனது முகவுரையில் குறிப்பிட்டுள்ளார். இதனை ந.சுப்புரெட்டியார் அவர்கள் மிகச் சிறப்பாக திருவாய்மொழியை அருளிய நம்மாழ்வார் பாசுரங்களுடன் ஒப்பிட்டுக் குறிப்பிட்டுள்ளார்.

‘பாட்டினிலே சொல்வதும் அவள் சொல்லாகும்
பயனற்றி உரைப்பாளோ? பாராய் நெஞ்சே!
கேட்டது நீ பெற்றிடுவாய். ஐய மில்லை;
கேடில்லை தெய்வமுண்டு, வெற்றியுண்டு’

என்று பாரதியார் குறிப்பிட்டுள்ளதை ந.சுப்புரெட்டியார் அவர்கள் மேலும் மகாகவிகள் எல்லோரும் தத்துவப் போதனம் செய்யும் நோக்கத்துடன் காவியம் எழுதுகின்றார்கள். அவ்விதம் எழுதும் போது கவிதைகளில் சிலர் ஒரே விஷயத்தை அதிக மாறுபாடில்லாமல்கூட எழுதிவிடலாம். அவர்களுக்குத் தெரியாமலேயே ஒருவர் கூறிய விஷயத்திற்கும் மற்றொருவர் கூறிய விஷயத்திற்கும் நெருங்கிய தொடர்பு ஏற்படலாம் என்றும் மகா கவிஞர்களை தூற்றுவது சரியான முறையல்ல. இந்தக் கூற்றினை அடிப்படையாகக்

கொண்டே பாஞ்சாலி சபதத்தினைக் காணல் வேண்டும் என ந.சுப்புரெட்டியார் அவர்கள் குறிப்பிடுகிறார்.

'பழையன கழிதலும் புதியன புகுதலும்

வழுவல கால வகையி னானே' (பவணந்தி முனிவர்)

என்பதற்கு இணங்க படைக்கப்பட்டதே பாஞ்சாலி சபதம் ஆகும். பழைய கதைகளைக் கையாண்டு அதற்குப் புதுஉருவமும் புத்துயிரும் கொடுத்துக் காப்பியத்தைப் படைப்பது ஒரு கவிஞனின் தனிச்சிறப்பாகும். ஆனால் அது அவ்வளவு எளிதான செயல் அன்று என்றும் உயிரொளி வீசும் கவிதா சக்தியைப் பெற்ற பெரிய கவிஞர்களால்தான் அவ்வாறு செய்ய முடியும் என்கிறார் ந.சுப்புரெட்டியார் அவர்கள். இதைப் போலவே விவிலியத்தில் காணப்படும் செய்திகளைத் தொகுத்து வழிநூலாக இயற்றப்பட்டது. விவிலியத்தில் காணப்பெறும் சாத்தானின் வீழ்ச்சியைக் குறித்து அழியாப் புகழுடன் விளங்கும் காப்பியத்தையும் ஜூலியஸ் சீசர், நாலாம் ஹென்றி, ஐந்தாம் ஹென்றி, இரண்டாம் ரிச்சர்ட் போன்ற கவிஞர்களால்தான் இறவாத புகழுடைய காவியங்களை இயற்ற முடியும் என்கிறார் ந.சுப்புரெட்டியார்.

"ஆங்கிலத்தில் paradise lost (சுவர்க்க நஷ்டம்) என்ற இதிகாசம் உள்ளது. மில்டன் என்ற பெருங்கவிஞர் இயற்றியது. இது பைபிளின் கதையைப் பின்பற்றி எழுதிய ஒரு வழிநூலாகும். எனினும் இதற்கு மதிப்பில்லையென்று யாரேனும் கூறத் துணிவார்களா? இவ்வகை இலக்கியங்களை 'ஸெகண்டரி எபீக்' என்று ஆங்கில ஆராய்ச்சியாளர்கள் கூறுவர். நாம் இவற்றை 'வழிமுறை இதிஹாஸம்' என்று வழங்கலாம்."[11]

மில்டன் மற்றும் ஷேக்ஸ்பியர் போலவே பாரதியும் கவிதைச் சுவையுடனும், நாடகப் பண்புகளுடன் புதிய கருத்துக்களுடன் இரண்டாயிரத்து ஐந்நூற்றுக்கு மேற்பட்ட அடிகளையுடைய பாஞ்சாலி சபதம் என்னும் மிகச்சிறந்த காப்பித்தைப் படைத்துள்ளார்.

பாஞ்சாலி சபதம் ஒரு காப்பியமாகுமா? நமது காப்பித்துக்குரிய இலக்கண முறைகளுடன் பொருந்துமா? தன்னுடைய திறமை, பாரதியார் எவ்வாறு காட்டியுள்ளார் என்பதையும் தண்டியலங்கார பெருங்காப்பிய இலக்கணத்துடன் ஒப்பிட்டுக் கூறியுள்ளார் ந.சுப்புரெட்டியார் அவர்கள்.

"பெருங்காப்பிய நிலை பேசுங் காலை
வாழ்ந்து வணக்கம் வருப்பொருள் இவற்றினொன்(று)
ஏற்புடைத் தாகி முன்வர இயன்று
நாற்பொருள் பயக்கும் நடைநெறித் தாகித்
தன்நிகர் இல்லாத் தலைவனை யுடைத்தாய்
மலைகடல் நாடு வளநகர் பருவம்
இருசுடர் தோற்றம் என்(று) இணையன புனைந்து
நன்மணம் புணர்தல் பொன்முடி கவித்தல்
பூம்பொழில் நுகர்தல் புனல் விளை யாடல்
தேம்பிழி மதுக்களி சிறுவரைப் பெறுதல்
புலவியிற் புலத்தல் கலவியற் களித்தல் என்(று)
இன்ன புனைந்த நன்னடைத் தாகி
மந்திரம் தூது செலவு இதி(ல்) வென்றி
சந்தியில் தொடர்ந்து சருக்கம் இலம்பகம்
பரிச்சே நம் என்னும் பான்மையின் விளங்கி
நெருங்கிய சுவையும் பாவமும் வரும்பக்
கற்றோர் புனையற் பெற்றிய தென்ப"[12]

என்று கூறும் மற்றும்

‘கூறிய உறுப்பில் சில குறைந்து இயலினும்

வேறுபா(டு) இன்(று) என விளம்பினர் புலவர்’

என்று கூறும் தண்டியலங்காரம் மேலும் இதற்கு ஒரு புறநடையாக,

‘ஒருதிறப் பாட்டிலும் பலதிறப் பாட்டிலும்

உரையும் பாநடையும் விரவியும் வருமே’

என்று காப்பியங்களின் யாப்பைக் குறித்துப் பேசும். உரைநடையும் பாநடையும் விரவி வரும் காப்பியத்தைத் தொல்காப்பியம் ‘தொன்மை’ என்று குறிப்பிடும். வடமொழியில் இதனை தண்டியாசிரியர் தான் இயற்றிய காவிய தர்சத்தின் முதற் பரிச்சேதத்தில்

‘ஸர்க்க பந்தோ மஹா காவ்ய முச்யதே தஷ்ய லக்ஷணம்’

என்ற 14 முதல் 19 வரையுள்ள ஸ்லோகங்களின் மொழிபெயர்ப்பாகி ஒரு சில குறைந்து வரினும் பெருங்காப்பியம் என்கிறார்.

பாரதியார் வேதத்தில் குறிப்பிடப்படும் பிரும்மத்தையே ‘ஓம்’ என்று வணங்கி தண்டியாரின் கருத்துப்படி இறைவாழ்த்துடன் தொடங்கியுள்ளார். ஓம் என்பது இந்தப் ‘பிரும்மம்’ அதாவது ஓம் என்ற சொல்லுக்கு ‘ஆம்’ என்ற அங்கு இங்கு என்றில்லாமல் எங்கும் நிலைத்திருத்தல் என்பது பொருளாகும். வேதத்தில் பிரம்மத்திற்கு ஓம் என்ற திருப்பெயர் கொடுக்கப்பட்டுள்ளது. தமிழ்க் காப்பியங்கள் பிரம்மத்தை அடிப்படையாகக் கொண்டது. அதனை பாரதியார் மேற்கொண்ட புதுமையாகும் என்கிறார் ந.சுப்புரெட்டியார் அவர்கள். மேலும் அவர் பாஞ்சாலி சபதத்தை காப்பிய இலக்கணத்தைப் பொருத்திப் பார்க்குமிடத்தில் நாற்பொருளாகிய அறம், பொருள், இன்பம், வீடு அறக்கருத்துக்களை வளர்க்குமிடத்து சூதாடலால் வரும் தீமைகளைப் பற்றி திருதராட்டிரன் துரியோதனனிடம் கூறுகின்ற செய்தியை,

‘போச்சுது! போச்சுது பாரத நாடு

போச்சுது நல்லறம்; போச்சுது வேதம்!

ஆச்சரி யக்கொடுங் கோலங்கள் காண்போம்;

ஐய இதனைத் தடுத்தல் அரிதோ’

என்று திருதிராட்டிரன் சூதாடலால் வரும் தீமைகளை எண்ணி வருந்துகிறான். மேலும் சகுனியும் துரியோதனனும் தருமனை சூதாடச் சொல்லும் பொழுதும் தீமை நடைபெறுகின்றது. மேலும் திருதிராட்டிரன், ‘இருமையும் கெடுக்கும் இழி தொழில்’ என்று சகுனியிடம் கூறுகிறார்.

பாஞ்சாலி சபதத்தைப் படிக்கின்ற அனைவருக்கும் இன்பம் - இலக்கிய இன்பம் - பயப்பதை ஆகியவற்றினை உணர்கிறோம் என்று ந.சுப்புரெட்டியார் அவர்கள் குறிப்பிடுகிறார்.

மணிமேகலை காப்பியத்தில் கோவலன் - மாதவி தம்பதியின் மகள் மணிமேகலை. அவள் புத்தத் துறவியாகி மக்களின் பசியைப் போக்குவதையே தன் கடமையாகக் கொண்டு வாழ்ந்தவள். காப்பியத்தின் தன்னிகரில்லாத் தலைவியாகக் கருதப்பட்டாள்.

‘தன்னிகர் உயர்ச்சி யல்லான் காப்பியத் தலைவன் ஆக

முன்னவர் மொழிந்தது’ (திருவிளையாடற்புராணம்)

என்று பரஞ்சோதி முனிவர் இயற்றிய திருவிளையாடற்புராணம் என்ற நூல் கூறுகின்றது. மேலும் ந.சுப்புரெட்டியார் அவர்கள் பாஞ்சாலி சபதம் நூலின் தலைவியை சிலப்பதிகாரத் தலைவியான கண்ணகியுடன் ஒப்பிட்டுத் தன்னிகர் இல்லாத் தலைவியராகக் குறிப்பிட்டுள்ளார்.

‘அத்தின புரமுண் டாம்; - இவ்

வவனியி யேயதற் கிணையிலை யாம்

பத்தியில் வீதிகளாம்; - வெள்ளைப்

பனிவரை போற்பல மாளிகையாம்’

ந.சுப்புரெட்டியார் அவர்கள் வருணனையில் சோலைகள், வாவிகள், வேள்விச் சாலைகள், மந்திர கீதங்கள் முழங்கும் இடங்கள், சாத்திர ஆராய்ச்சிக் கழகங்கள் முதலியவை காட்டப்பெறுவதாகவும், இந்த நிலையானது அத்தினாப்புரத்திலிருப்பதாக காட்டியுள்ளார். மேலும் கவிஞர் மேற்கொண்ட மரபு பற்றியும் ஆனால் காப்பியத்தில் சுட்டப்பெறும் தீயவற்றையும் மறைக்காது காட்டுகின்றார் கவிஞர். இதுவும் பாரதியாரின் புதுமைகளில் ஒன்று என்று சிறப்பித்துக் கூறியுள்ளார். மேலும் வளநகர் சிறப்பித்துக் காட்டப்பெறுகின்றது.

விதுரன், தன் மனப்போக்குக்கு எதிராகத் தானே பாண்டவர்களை அழைக்கப் போக நேரும்போது நாட்டின் வளத்தை நோக்கியும், அஃது அண்மையில் குருதி வெள்ளம் ஓடும் அமர்க்களமாகப் போவதையும் நினைத்து வருந்தித் தனக்குள்ளே கூறி இரங்கும் காட்சிகளை மிக நேர்த்தியாக பொருத்திக் காட்டியுள்ளார் ந.சுப்புரெட்டியார் அவர்கள்.

‘வீரமொடு மெய்ஞ்ஞானம் தவங்கள் கல்வி
வேள்வியெனும் இவையெல்லாம் விளங்கும் நாடு
சோரமுதற் புன்மையெதுந் தோன்றா நாடு
தொல்லுலகின் மணிமுடிபோல் தோன்றும் நாடு
பாரதர்தம் நாட்டினிலே நாச மெய்தப்
பாவியேன் துணைபுரியும் பான்மை என்னே’

என்ற கவிதையில் நாடகத் தன்மையும் நாட்டு வளமும் பெருமையும் இவற்றில் காட்டப் பெறுவதாக குறிப்பிட்டுள்ளார். மேலும் பாண்டவர்கள் அத்தினபுரத்திற்கு வரும் வழியில் ‘பார்த்தனன் பாஞ்சாலிக்குப் படுஞாயிற்றின் அழிவைக் காட்டுவதாக’ அமைந்த பகுதியில் இரு சுடர்த் தோற்றத்தில் ஒரு சுடர்த்

தோற்றம் அற்புதமாகக் காட்டப்பெறுகின்றது. அதில் இரு பாடல்களை விளக்கி மிக அருமையாக விளக்கிக் கூறியுள்ளார்.

"கணந்தோறும் வியப்புக்கள் புதிய தோன்றும்
கணந்தோறும் வெவ்வேறு கனவு தோன்றும்;
கணந்தோறும் நவநவமாம் களிப்புத் தோன்றும்;
கருதிடவும் சொல்லிடவும் எளிதோ! ஆங்கே
கணந்தோறும் ஒருபுதிய வண்ணம் காட்டிக்
காளிபரா சக்திஅவள் களிக்குங் கோலம்
கணந்தோறும் அவள்பிறப்பாள் என்று மேலோர்
கருதுவதன் விளக்கத்தை இங்குக் காண்பாய் (149)
"அடிவானத் தேஅங்கு பரிதிக் கோளம்
அளப்பரிய வரைவினொடு சுழலக் காண்பாய்
இடிவானத் தொளிமின்னல் பத்துக் கோடி
எடுத்தவற்றை ஒன்றுபட உருக்கி வார்த்து,
முடிவான வட்டத்தைக் காளி ஆங்கே,
மொய் குழலாய், சுற்றுவதன் மொய்ம்பு காணாய்!
வடிலான தொன்றாகத் தகடி ரண்டு
வட்டமுறச் சுழுலுவதை வளைத்து காண்பாய்"[13]

இவை படிப்போரை எல்லையற்ற இலக்கியச் சுவையில் ஈடுபடுத்துவதை அறியலாம் என்கிறார். மேலும் தண்டியார் கூறும் மந்திரம் தூது, செலவு இகல் இவற்றில் 'மந்திரம்' என்பது, துரியோதனன் சபையில் சகுனியோடு பாண்டவர்கட்குத் தீங்கிழைக்கும் சதி ஆலோசிக்கப் பெறுவதையும், திருதராட்டிரன் அதனைக் கடிவதையும் போன்ற நிகழ்ச்சிகளைக் குறிப்பதாகக் கொள்ளலாம். பாண்டவர்கள் அத்தினபுரத்திற்குப் பயணப்பட்டு வருதல் 'செலவு' என்பதனால் உணர்த்தப்படுகின்றது. பாண்டவர்களை அழைப்பதற்காக விதுரன் இந்திரப்பிரத்தத்திற்கு வருதலைத் 'தூது' என்று குறிப்பிடுவதாகக் கொள்வதில்

தவறு ஏதும் இல்லை என்று குறிப்பிடுகிறார் ந.சுப்புரெட்டியார் அவர்கள். இதன்மூலம் ந.சுப்புரெட்டியாரின் எளிய வெளிப்பாட்டுத் திறனை அறிய முடிகிறது.

"பாரதியின் காப்பியம் அழைப்புச் சருக்கம், சூதாட்டச் சருக்கம், அடிமைச் சருக்கம், துகிலுரிதற் சருக்கம், சபதச் சருக்கம், இலம்பகம் பரிச்சேதம்' என்னும் பான்மையின் விளக்கி என்ற தண்டியாசிரியரின் விதியை யொட்டித்தான் அமைந்துள்ளது என்று கருதலாம். மேலும் இக்காப்பியத்தில் கருணம், ரௌத்திரம், வீரம் போன்ற சுவைகளையும் உணர்ச்சியுடன் படிக்கும் போது உணர்ந்து மகிழலாம். தண்டியார் கூறும் காப்பிய உறுப்புகள் குறைந்து வரினும் குற்றம் இல்லை என்ற புறனடையும் இஃது ஒரு சிறந்த காப்பியம் என்பதை அரண் செய்கிறது"[14] என்று ந.சுப்புரெட்டியார் அவர்கள் தண்டியலங்காரம் குறிப்பிடும் பெருங்காப்பிய இலக்கணத்துடன் ஒப்பிட்டு பாஞ்சாலி சபதத்திற்கு மேலும் சிறப்புச் சேர்த்துள்ளார்.

காவியத்தின் ஒருமைப்பாடும் கட்டமைப்பும்

காவியத்தின் ஒருமைப்பாடு என்ற குறிக்கோள் (Idea of Unity) அரிஸ்டாட்டில் காலத்திலிருந்தே சிறப்பாக கருதப்பெறும் விதியாகும்.

ஒரு சந்தர்ப்பத்தின் விளைவாகத் தோன்றி வளர்ந்து தெளிந்த அமைதியுடன் முடிவடைதல் வேண்டும். அரிஸ்டாட்டில் கருத்துப்படி தொடக்கம், நடு, முடிவு இருத்தல் வேண்டும். மேலும் துன்பியல் நாடகத்தைப் போலவே காப்பியத்தில் ஒரு தொடர் நிகழ்ச்சி (organic action) வளர்ச்சி பெறுதல் வேண்டும்.

தொடக்கம்

பாரதியாரின் பாஞ்சாலி சபதமும் அழைப்புச் சருக்கம், சூதாட்டச் சருக்கம், அடிமைச் சருக்கம், துகிலுரிதற் சருக்கம், சபதச் சருக்கம் போன்ற ஐந்து சருக்கங்களையும் மேலும் தண்டியாசிரியரின் இலக்கணக் கருத்துப்படி 'சருக்கம், இலம்பகம், பரிச்சேதம்' என்னும் பான்மையை விளக்கிக் கூறியுள்ளது.

தருமன் சக்கர்வர்த்தியாக உயர்ந்ததும் பல்வேறு பரிசுப் பொருட்களையெல்லாம் கொண்டுவந்து புவி மன்னர்களெல்லாம் குவிந்த நிகழ்ச்சிகளை எண்ணி எண்ணி மனம் புழுங்கிப் பொறாமையால் இருப்பதை பாரதியார் மிகவும் அற்புதமாகக் காட்டியுள்ளதாக ந.சுப்புரெட்டியார் அவர்கள் குறிப்பிட்டுள்ளது அவரது ஆளுமை திறனை வெளிப்படுத்துகிறது. மேலும்,

'என்றிவ் வாறு பலபல எண்ணி

ஏழை யாகி இரங்குத லுற்றான்'

துரியோதனன் அப்போதுதான் பாண்டவர்கள் மீது கொண்ட பொறாமையை சகுனியிடம் எடுத்துரைக்கும் காட்சியும் அங்குள்ள அனைவரும் அவனது பொறாமைத் தீயை வளர்ப்பதுவும் சூதாட்டச் சருக்கத்தில் கதை முளைவிட்டு வளரத் தொடங்குகின்றது.

இதேபோல் இராமாயணக் கதையின் முற்பகுதியாக விளங்குவது மந்தரை சூழ்ச்சியாகும். அதற்கு முன்பு நிகழும் நிகழ்ச்சிகள் அம்முதல் பகுதிக்கு துணைநிற்கின்றன. இராமன் அரசு துறந்து காடுபுகுதலும், முனிவர்களைச் சந்தித்தலும் இம்முதற் பகுதியின் விளைவுகளாகும்.

‘வில்லுறு போர்த்தொழி லாற் - புவி

வென்றுதங் குலத்தினை மேம்படுத்தீர்!

வல்லுறு சூதெனினும் போர் — தனில்

வலிமைகள் பார்க்கும் வருதி’

சூதுப் போருக்கு சகுனி தருமனை அழைப்பது தருமன் மறுப்பதுவும், சகுனியின் ஏச்சும், தருமன் நீதியுடன் கூடிய மறுமொழியும், வல்லுக்கு அழைப்பதும் இறுதியில் தருமன் சூதாடுவதும் அதனால் அனைத்துப் பொருள்களையும் இழப்பதுவும், நாட்டை வைத்து ஆடுமாறு கேட்டதால் விதுரன் ஆட்டத்தை நிறுத்துமாறு கூறும் உருக்கமான பேச்சு போன்ற விறுவிறுப்பான நிகழ்ச்சிகளால் கதை விரைந்து வளரத் தொடங்குகிறது. அரிஸ்டாட்டில் கூறும் தொடக்கம் இங்கு அமைந்திருத்தலைக் காணலாம்.

அடிமைச் சருக்கத்தில் கதை நன்கு வளர்ச்சி பெறுகின்றது. விதுரனின் உருக்கமான அறிவுரைக்குத் துரியோதனன் சிற்றப்பன் என்ற முறையையும், தந்தை அமைச்சரவையில் ஒரு முக்கியமான அமைச்சன் என்பதையும் பாராமல்,

‘நன்றி கெட்ட விதுரா! — சிறிதும்

நாண மற்ற விதுரா

தின்ற உப்பினுக்கே — நாசம்

தேடு கின்ற விதுரா

அன்று தொட்டு நீயும் - எங்கள்

அழிவு நாடு கின்றாய்’

என்றெல்லாம் மரியாதைக் குறைவாக துரியோதனன் ஏச்சுப் பேச்சுக்கு விதுரன் வாய்மூடி தலைகுனிந்து தன் இருக்கையில் அமர்ந்திருந்தது கதையின் வளர்ச்சி ‘ஆமை வேகம்’ கொண்டாலும் மீண்டும் சூதாட்டம் தொடங்கும் போது

சூடு பிடிக்கின்றது என்று ந.சுப்புரெட்டியார் அவர்கள் சிறப்புடன் விவரித்துக் கூறியுள்ளார். மேலும் இந்த சூதாட்டத்தின் ஆயிரக்கணக்கான நீதிகளையெல்லாம் உணர்ந்து தருமன் நாட்டை இழத்தலை,

'தேயம் வைத்தி ழந்தான்; சீச்சீ!
சிறியர் செய்கை செய்தான்'

என்று கவிஞர் காட்டுவார் என்றும் அடுத்து தனது சகோதரர்களையும், தன்னையும் வரிசையில் பணயமாக வைத்து இழந்துவிட்டார் தருமன். இந்நிலையில் சகுனி பேசுகையில்,

"இன்னும் பணயம் வைத் தாடுவோம்; - வெற்றி
இன்னும் இவர்பெற லாகுங் காண்
பொன்றும் குடிகளும் தேசமும் - பெற்றுப்
பொற்போடு போதற் கிடமுண்டாம் - ஒளி
மின்னும் அமுதமும் போன்றவள் - இவள்
மேவிடு தேவியை வைத்திட்டால் - (அவள்)
துன்னும் அதிட்ட முடையவள் - இவர்
தோற்ற தனைத்தையும் மீட்டலாம்"[15]

இந்தப் பேச்சுடன் இந்தச் சருக்கம் முடிவடைகின்றது கதையின் நடுவை இங்கு காணமுடிகின்றது என்கிறார் ந.சுப்புரெட்டியார்.

இராமாயணத்தில் சூர்ப்பனகை சூழ்ச்சியில் தொடங்கி, கரதூடணர் வதையும், இராமன் சுக்ரீவன் நட்பும் இவ்விடைப் பகுதியின் விளைவுகளாகும். மேலும் இலங்கைப் படையெடுப்பின் மூலமாக இராவணன் கொல்லப்படும் நிகழ்ச்சி கதையின் இறுதிப் பகுதியாகும். பரம்பொருள் இராமனாக அவதரித்ததன் நோக்கம் நிறைவேற்றப்படுகின்றது. அரக்கர்களின் அழிவும் நல்லவர்களின் வாழ்வாக அறத்தின் வெற்றியாக அமைகின்றது.

உச்சம்

பாஞ்சாலி சபதத்திலும் துகிலுரிதல் சருக்கத்திலும் சபதச் சருக்கத்திலும் கதையின் உச்ச நிலை காண்கிறோம். துகிலுரிதல் சருக்கத்தில் திரௌபதியைப் பணயமாக வைத்து இழத்தல் கௌரவர்கள் அடைந்த மகிழ்ச்சி, துரியோதனனின் மட்டற்ற மகிழ்ச்சி, அவன் பாஞ்சாலியை மன்றுக்கு அழைத்துவருமாறு விதுரனைக் கேட்டல், விதுரனின் அறிவுரை, தேர்ப்பாகனை இருமுறை அனுப்பியும் அவனால் திரௌபதியை அழைத்துவர இயலாமை, துச்சாதனனை அனுப்புதல் - இவை யாவும் துகிலுரிதல் சருக்க நிகழ்ச்சிகளாக அமையும் கதையின் உச்ச நிலையை அடையத் துணைசெய்கின்றன. அடுத்துவரும் சபதச் சருக்கத்தில் திரௌபதியைத் துச்சாதனன் கூந்தலைப் பற்றி இழுத்துவரல், ஊரவர் இக்காட்சியைக் கண்டு நெஞ்சங் கலங்குதல், அரசவையில் கல் நெஞ்சமும் உருகுமாறு திரௌபதி நீதி கேட்டு அழுதல், வீடுமனின் கையாலாகாத பேச்சு, திரௌபதி மறுமொழி, வீமன் வெகுண்டு தருமனின் கையை எரிப்பதற்குச் சகாதேவனை எரிதழல் கொண்டு வருமாறு ஏவுதல், அருச்சுனன் வீமனை அமைதிப்படுத்தல், விகர்கணின் எச்சரிக்கை, துச்சாதனன் பாஞ்சாலியின் ஆடையைக் களையத் தொடங்குதல், பணயப் பொருளாகத் தன்னையும், தம்பியரையும் வைத்து இழந்தது குறித்து வீமன் மிகவும் கவலையுற்ற தருமனைப் பார்த்து சுடுசொற்களை வீசினான்.

'சூதர் மனைகளிலே – அண்ணே
தொண்டு மகளிருண்டு
சூதர் பணயம் என்றே – அங்கு ஓர்
தொண்டச்சி போவதில்லை
என முழங்குகிறான் வீமன்

தவறு செய்துவிட்டாய் - அண்ணே

தருமம் கொன்று விட்டாய்'

என்று வீமன் கூறியதோடு மட்டுமில்லாமல் பாஞ்சாலியை வெறும் கள்ளத்தால் அடையவில்லை என்றும் சூதாட்டத்தில் வெற்றி பெறவில்லை. வீரத்தினால் வென்றோம் என்று தருமனைப் பார்த்து கேட்கிறான் வீமன். சூதில் பணயமாக நாட்டையும் எங்களையும் வைத்தீர்! அடிமையாக்கினீர் அதையும் பொறுத்தோம். ஆனால்,

'துருபதன் மகளை – திட்டத்

துய்மன் உடன் பிறப்பை

இருபகடை என்றாய் - ஐயோ

இவர்க்கு அடிமை என்றாய்'

எனத் தருமனை நோக்கிக் கடும் சொற்களை வீசினான். மேலும் சகாதேவனைப் பார்த்து,

'இது பொறுப்பதில்லை – தம்பி
எரிதழல் கொண்டுவா
கதிரை வைத்திழந்தான் அண்ணன்
கையை எரித்திடுவோம்'

என்று தருமன் செயலை நினைத்து பொறுக்க முடியாதவனாக வீமன் சினந்தது - இவ்வாறு பேசினான். அப்போது தருமன் மீது கடும்கோபம் கொண்ட வீமனைப் பார்த்து அர்ச்சுனன் பேசுகிறான்.

"வீமனே! என்ன வார்த்தை சொன்னாய்? யார்

முன்னே இதைச் சொன்னாய்? சினம் பொருந்திய

நீ உனது அறிவைப் புதைத்ததாலே மூன்று உலக

நாயகனான தருமனைச் சினந்து

இவ்வாறு பேசுகிறாய். கோபம் கொள்ளாதே.

தருமத்தின் வாழ்வுதனைச் சூது கவ்வும்

தருமம் மறுபடி வெல்லும் எனும் இயற்கை

மருமத்தை நம்மாலே உலகம் கற்கும்
வழிதேடி விதி இந்தச் செய்கை செய்தான்
கருமத்தை மேன்மேலும் காண்போம் இன்று
கட்டுண்டோம் பொறுத்திருப்போம் காலம் மாறும்
தருமத்தை அப்போது வெல்லக் காண்போம்
தனுவுண்டு காண்டீபம் அதன்பேர்”[16]

என்று தருமத்தின் வாழ்வைச் சூது விழுங்கும். ஆனால் தருமம் மறுபடியும் எப்படியாவது வெற்றி பெற்றே தீரும். இது இயற்கை உண்மை. அதுவரை நாம் பொறுமையாக இருப்பதே நல்லது. கோபம் வேண்டாம் என்று சொல்லி வீமனை அமைதிப்படுத்தினான். பின்பு மன்றத்தில் உள்ளவர்களை விதுரன் எச்சரிக்கை விடுகிறான்.

பாஞ்சாலியின் ஆடையைக் களையத் தொடங்குதல், கண்ணனின் திருவருளால் துகில் எண்ணத்திலடங்காத நிறங்களைக் கொண்டு புதுப்புதுக் கோலங்களாக பொன்னிழையும் பட்டிழையும் கொண்டதாக வளரத் தொடங்குதல் இவை விரைந்து தொடர்ந்து நடைபெறும் வரையிலும் கதைச் சிறப்பினையும் உச்சத்தையும் எடுத்துக் காணலாம்.

முடிவு

இறுதிச் சருக்கமாக சபதச் சருக்கத்தில் வீமன், அருச்சுனன், திரௌபதி ஆகியோர் சபதம் செய்தல். வீமன் துரியோதனனையும், துச்சாதனனையும் போர்க்களத்தில் இங்குள்ள தேவர்கள்மீது ஆணை. பராசக்தி மீது ஆணை, பிரமதேவனின் மீது ஆணை, கண்ணன் மீது ஆணை என இறைப் பெருமக்கள் மீது ஆணையிட்டு, போர்க்களத்தில் இவர்கள் இருவரது இரத்தத்தைக் குடிப்பேன்! இது உலகில் அனைவரும் காண்பீராக என்று சபதம் எடுத்தான்.

அருச்சுனனும் வீமனைத் தொடர்ந்து பாதகனான கர்ணனைப் போரில் வெல்வேன் என்று சபதம் மேற்கொண்டான்.

இறுதியில் பாஞ்சாலி சபதம் செய்தாள். ஆம். பராசக்தி மீது ஆணையிடுகின்றேன். பாவி துச்சாதனனை என் கணவன் வீமன் கொன்ற பின்னர் அவன் உடம்பிலிருந்து ஊறியெழும் ரத்தத்தையும் பாழ்பட்டுப் போன துரியோதனன் உடம்பு ரத்தத்தையும் கலந்து என் கூந்தலில் பூசுவேன். அதன் பின்னரே என் கூந்தலில் நறுநெய் பூசி கூந்தலை முடிப்பேன். அதுவரையில் என் கூந்தலை முடிக்கமாட்டேன் என்று பாஞ்சாலி சபதம் செய்தாள் ஆகிய நிகழ்ச்சிகளில் கதை 'முடிவு' தென்படுகிறது. சபதங்களினால் கதையின் விளக்கம் தெளிவாக்கப்படுகிறது. 'பாஞ்சாலி செய்த சபதம் காவியத்தின் பெயராகவே அமைந்து விடுகிறது'.

பாஞ்சாலி நாட்டு தவப்பயன் தான் பாஞ்சாலி பஞ்ச பாண்டவர்களின் உயிர்போன்றவள்.

'படிமிசை இசையுறவே – நடை
பயின்றிடும் தெய்வீக மலர்கொடியைக்
கடிகமழ் மின்னுருவை – ஒரு
கழனியைக் கனவினைக் காதலினை
வடிவுறு பேரழகை - இன்ப
வளத்தினைச் சூதினிற் பணயம் என்றே'

என வரும் பாடலில் பாரதியார் காப்பியத்தின் தலைமை மாந்தர் பாஞ்சாலியே அடிமைத் தளையைத் தகர்க்க எழும் பராசக்தியாக அதாவது பாரதச் சக்தியாக பாரதியாரால் படைக்கப்பட்டவள் பாஞ்சாலி. ந.சுப்புரெட்டியார்

அவர்களும் பெண்மைக்கு தாய்க் குலத்திற்கு ஏற்றங்காட்டிய தமிழ் இலக்கிய கருத்தில் கொண்டவள் பாரதி என்றும்

'பெண்மை வாழ்கவென்று
கூத்திடுவோ மடா!'

என்று பெண்மையைப் போற்றுபவர் பெண் பெயரால் காவியத்தை வழங்கினார் என்பது பொருத்தமாகும்.

அரிஸ்டாட்டில் கருத்துப்படி மேலே குறிப்பிட்ட நிகழ்வுகளின் அடிப்படையில் தொடக்கம், நடு, முடிவு என்ற பான்மையில் முப்பகுதிகளும் இணைந்து ஒன்றோடொன்று இணைந்து முழுக்கல்லில் செதுக்கிய சிற்பத்தைப் போன்று முழுமைக்காட்சி அளிக்கின்றது என்கிறார் ந.சுப்புரெட்டியார். இதன்மூலம் அவரது காப்பிய வெளிப்பாட்டுத்திறன் அறியலாகுகின்றது.

அரிஸ்டாட்டில் கருத்து

தேவையில்லாத தொடர்பில்லாத நிகழ்ச்சிகளை எல்லாம் நீக்கிவிட்டு ஒன்றோடு ஒன்று தொடர்புடையவைகளை மட்டும் கோர்த்து ஹோமர் காப்பியங்களைப் படைத்துள்ளார். இலியட் காப்பியமும், ஒடிசி காப்பியமும் ஒரே ஒரு முழுமையான பொருளைப் பற்றித்தான் பேசுகின்றன என்று கருதுமாறு மையக் கதையைச் சுற்றி நிகழ்வுகளைத் தொடர்ச்சியாக அமைத்துள்ளார்.

"போலச் செய்யும் முறையில் படைக்கப் பெறும் கலைப்படைப்புகள் அனைத்தும் ஒரு முழுப்பொருள் (An organic whole) எனத் தோன்றுமாறு படைக்கப்படுகின்றன. கவிதைகளையும் போலச் செய்யும் முறையில் படைக்கப் பெறுதல் வேண்டும். எடுத்துக் கொண்ட மையக் கதை முழுமை வாய்ந்ததாக

அமைய அதனைச் சுற்றிப் பின்னப்படும் கிளைக்கதைகளும் மையக் கதையிலிருந்து பிரித்துக் காண முடியாவாறு கட்டமைப்பு நிலையில் ஒன்றிட வேண்டும். இவற்றுள் ஒன்றை நீக்கினாலும் இடம் மாற்றி அமைந்தாலும் அதன் முழுமைத் தன்மை சிதைந்து கட்டமைப்பு குலைந்துவிடும். நீக்கிவிட்டாலும், சேர்த்துக் கொண்டாலும் அதன் முழுமைக்கு எவ்வித தீங்கும் விளைவிக்காத கிளைக்கதை அதன் கட்டமைப்போடு உயிர்த் தொடர்புடைய உறுப்பாக விளங்க முடியாது”[17] பாரதியும் பாஞ்சாலி சபதத்தை மகாபாரத கதையிலிருந்து ஒரு பகுதியை எடுத்துக் கையாண்டுள்ளார். இதே போல,

“காப்பியத்தின் மையக் கதைப்பின்னலை அடிப்படையாக வைத்து எழுந்த பாரத நூல்களைத் தவிர, மூல பாரதத்தில் உள்ள கிளைக்கதைகளை மட்டும் தனித்தனியாகத் தந்த இலக்கிய முயற்சிகளும் தமிழில் படைக்கப்பெற்ற கிளைக்கதைகள் மரபு சார்ந்த கவிதை நூல்களாகவும், மக்கள் இலக்கியம் எனப் போற்றப்படும் நாட்டுப்புறக் கதைகளாகவும் மலர்ந்துள்ளன. அவற்றுள் நளவெண்பா, நைடதம், புரூரவ சரிதை, புரூரவ நாடகம், மாரிவாயில், பாஞ்சாலி சபதம் ஆகிய மரபுசார் நூல்களும், பாரத அம்மானை, அல்லி அரசாணி மாலை, பவளக் கொடி மாலை, புலந்திரன் தூது, அபிமன்னன் சுந்தரி மாலை, ஏணி ஏற்றம், அரவான் அம்மானை, கர்ண மகாராசன் சண்டை, குருட்சேத்திர மாலை, பொன்னுருவி மசக்கை; ஆரவல்லி - சூரவல்லி கதை போன்ற நாட்டுப்புற அல்லது நாட்டார் கதை இலக்கியங்களும் அடங்கும்”[18]

மகாபாரதத்தின் ஒரு பகுதியாக இருக்கும் பாஞ்சாலி சபதத்தை பண்ணோடு பாடினால் கேட்போர் கிறுகிறுத்துப் போவார் என்றும் இதனைப் பல

ஆண்டுகளாகப் படித்து ந.சுப்புரெட்டியார் அவர்கள் மிகச்சிறப்பாகத் திறனாய்வு செய்துள்ளார்.

அரிஸ்டாட்டில் காப்பியக் கதையின் பாடுபொருளை ஆழமாகவும் மற்றும் வற்புறுத்தும் உத்தியாக கிளைக்கதையைக் கருதினார். காப்பியக் கதையோடு நன்கு ஒன்றாத எளிதில் பிரித்தெடுக்கக் கூடிய கிளைக் கதைகளும் உண்டு என்பதை அவரின் கூற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

தொகுப்புரை

இரண்டாவது இயலாக அமைந்துள்ள தமிழ்க் காப்பியங்கள் அறிமுகம் காப்பியங்களின் நிலைகளையும் மேலை நாட்டு காப்பியச் சிறப்புகளையும் சிறப்புறக் கூறுகிறது.

அடிக்குறிப்புகள்

1. ந.சுப்புரெட்டியார், பாஞ்சாலி சபதம் - ஒரு நோக்கு, ப.8
2. சண்முகசுந்தரம்(தொ.ஆ), வையாபுரியம் தொகுதி – 2, ப.6
3. ந.சுப்புரெட்டியார், பாஞ்சாலி சபதம் - ஒரு நோக்கு, ப.9
4. காப்பிய கட்டுரைகள், ப.18
5. ந.சுப்புரெட்டியார், பாஞ்சாலி சபதம் - ஒரு நோக்கு, ப.2
6. சண்முகசுந்தரம்(தொ.ஆ), வையாபுரியம் தொகுதி – 2, ப.7
7. மேலது.,ப.8
8. kavithaikal.blogspot.com
9. பாண்டியர் செப்பேடுகள் பத்து, ப.10
10. ந.சுப்புரெட்டியார், பாஞ்சாலி சபதம் ஒரு நோக்கு நூல்முகம்,
11. வையாபுரியம் தொகுதி – 2, ப.12
12. ந.சுப்புரெட்டியார், பாஞ்சாலி சபதம் ஒரு நோக்கு, ப.12
13. மேலது., ப.48
14. மேலது., பக். 17-18
15. மேலது., ப.23
16. மேலது., ப.28
17. Chatto of wind, SH.Butcher,p.25
18. அ.மணவாளன், இலக்கிய ஒப்பாய்வு காப்பியங்கள், ப.222

இயல் - 3

காப்பிய மாந்தர்கள்

முன்னுரை

ஒரு காப்பியம் சிறப்படைய அதில் இடம்பெறும் காப்பிய மாந்தர்களும், அவர்களைச் சுற்றி நடைபெறும் நிகழ்வுகளே ஆகும். அத்தகைய நிலையில் பாஞ்சாலி சபதத்திலும் பிற காப்பியங்களிலும் மாந்தர்களின் சிறப்பினை விளக்கிக் கூறுவதே இவ்வியலின் நோக்கமாகும்.

காவிய மாந்தர்களும் படைப்புகளும்

காப்பியங்கள் பெரும்பாலும் கதை கூறும் போக்கில் அமைந்திருந்தாலும் அக்காப்பியங்களில் இடம்பெறும் நிகழ்ச்சிகள் காப்பியத்தில் இடம்பெறும் மாந்தர்களின் இயல்புகள், செயல்பாடுகள் காப்பியத்தைப் படிப்பவர்களின் மனமாற்றத்தையும் உள்ள எழுச்சியையும் ஏற்படுத்துவனவாக அமைகின்றன.

தமிழின் பெருமையைப் பறை சாற்றியவை தமிழ் இலக்கியங்கள், சங்க இலக்கியங்கள், அற இலக்கியங்கள், காப்பிய இலக்கியங்கள், பக்தி இலக்கியங்கள் எனத் தொடர்ந்து இன்றைய நவீன இலக்கியங்கள் வரை ஒவ்வொரு படைப்புகளும் தன்னளவில் தனித்துவம் பெற்றனவாக விளங்குகின்றன. உலக மொழிகளில் தொன்மைக் காப்பியங்கள் யாவும் தெய்வத்தன்மை வாய்ந்த புராணத்தோடு தொடர்புபடுத்தப்பட்டுள்ளன.

‘யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல்
வள்ளுவர் போல் இளங்கோவைப் போல்
பூமிதனில் யாங்கனுமே பிறந்ததில்லை
உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை’

என்று பாரதியார் பாராட்டிய முப்பெரும் தமிழ்ப் புலவர்கள் வாழ்வுக்கு வழிகாட்டும் அறக்கருத்துக்களைத் தொகுத்துக் கூறிய அறநெறியண்ணல், அதே நெறியில் புதுமை வாழ்வு கண்டவர்.

தொன்மைக் காப்பியங்களின் தலைமை மாந்தர்கள் அன்றைய சமூகத்தின் முன்மாதிரிகளாகவும், வீரதீரச் செயல்களில் சிறந்து விளங்குபவர்களாகவும் விளங்கிநிற்றலை அறியலாம். காவியத்தில் மாந்தர் படைப்பாக்கம் என்பது மிக முக்கியம்.

காப்பியத்தில் இடம்பெறும் மாந்தர்கள் வாயிலாகவே படைப்பாளர் தன் உள்ளக் கருத்தினை வெளிப்படுத்துவார். கவிஞனின் எண்ணத்தின் பிரதிபலிப்பாகவும், கவிஞன் கருத்துணர்வின் புலப்பாடாகவும் பாத்திரங்கள் விளங்குகின்றன. இதனால் காப்பியங்களில் இடம்பெறும் மாந்தர்கள் படைப்பாக்கத்திலே பல்வேறு புலனெறிக் கூறுகளைப் படைப்பாளர் பயன்படுத்துகின்றார்.

காப்பிய மாந்தர்கள் சமூகத்தின் பிரதிநிதியாக இருந்தாலும் அவர்களுக்குள் ஒரு மேன்மைத் தன்மை, உயர்பண்பு, தனிச்சிறப்பு பெருகி நிற்பது காப்பியத்தின் பொதுத்தன்மை.

பாஞ்சாலி சபதம், சிலப்பதிகாரம், மணிமேகலையிலும் இடம்பெற்றுள்ள மாந்தர்களில் பெண்களுக்கு முக்கியத்துவம் தந்து படைக்கப்பட்டுள்ளது. உலகில் தொன்மை மொழிகளின் காப்பியங்கள் பலவற்றிலும் ஆண் மாந்தர்களைக் காப்பியத் தலைவர்களாக விளங்கி நிற்க தமிழில் மட்டுமே பெண் மாந்தர்கள் படைக்கப்பட்டு அதிலும் தெய்வீகத் தன்மையுடன் படைக்கப்பட்டிருப்பது சிறப்புக்குரியது ஆகும்.

பாஞ்சாலி சபதம், சிலம்பு, மேகலை போன்றவற்றில் அவர்களின் குணவியல்புகள், அவர்களது பாத்திரப்படைப்பாக்க நிலைப்பாடுகளை எடுத்துரைப்பதாகவும் அமைகின்றது.

காவிய மாந்தர்கள்

காப்பியத்தில் இடம்பெறும் தலைமக்கள் தங்களது சுயநலத்திற்காக வாழாது பொதுநலத்திற்காகத் தன்னலத்தையும் சமயத்தில் தன் வாழ்க்கையையும் தியாகம் செய்யத் தயாராக இருக்க வேண்டும்.

காப்பியத்திற்குத் தலைவன், தலைவி மட்டுமே இருந்துவிட்டால் போதாது அவனுக்குத் துணை நின்று காப்பியக் கதையை நடத்தப் பல்வேறு பாத்திரங்கள் தேவைப்படுகின்றன. இப்பாத்திரங்கள் பல்வேறு பண்புகளின் குறியீடாக அமைந்திடல் வேண்டும். பாத்திரப் படைப்பு என்பது காப்பியத்திற்கு மிகத் தேவையான ஒன்று. இப்பாத்திரங்களின் படைப்பு தெளிவாகவும், நயமாகவும் வருணிக்கப் பெறுதல் வேண்டும். இதன் மூலம் மனித சமூகத்தின் பன்முகப்பட்ட எண்ணங்கள், சிக்கல்கள் போன்றவற்றை ஒருமுகப்படுத்தி வாழ்வியலின் முழுப் பகுதியையும் ஒரு குறிப்பிட்ட கதை கொண்டுவந்து விடலாம்.

அத்தகைய வகையில் பாஞ்சாலி சபதம் மிகச் சிறப்பான காப்பியமாகும். இதில் படைக்கப்பட்டுள்ள பாத்திரங்கள் வேறுபட்ட பண்புகளையும், தனித்துவச் சிறப்புடைய பாத்திரங்கள் ஆகும்.

“பாத்திரப் படைப்பில்தான் காப்பியத்தின் வெற்றியே அமைகின்றது. இவை நாடகவியல் முறைக் காப்பியக் கவிஞனின் புலமைத் திறத்தால்

வடித்துத் தரப்பட வேண்டும். இன்றேல் காப்பியம் வெறும் வரலாறாக கற்பனையியல் காப்பியப் படைப்பாக அமைந்துவிடும்”[1]

இதனைப் போலவே காப்பியத்தின் முக்கியக் கூறுகளாகத் தா.ஏ.ஞானமூர்த்தி “காப்பியத்திற்குத் தேவையானவை கதை, பாத்திரம், கிளைக்கதை என்பன. இம்மூன்றிலும்கூட மிக முக்கியமான ஒன்று பாத்திரப் படைப்பே என்பது அவர்களின் கருத்து. பல்வேறுபட்ட பாத்திரங்களே காப்பியத்திற்கு உயிரூட்டுகின்றன. காப்பியத்திற்குப் பொலிவும் உணர்ச்சியும் ஊட்டுவதோடு வாசகருக்குச் சுவையூட்டி மகிழ்ச்சிப்படுத்தப் பாத்திரங்கள் துணைநிற்கின்றன. அதோடு மட்டுமின்றிக் கவிஞன் தன் உணர்ச்சியை வெளிப்படுத்தும் களனாகவும் இப்பாத்திரங்கள் அமைகின்றன”[2] என்கிறார்.

தொல்காப்பியத்திலும் இலக்கண அடிப்படையில் வாழும் மக்களும் பாத்திரங்களாகவே அழைக்கப்படுகின்றன. அகப்பாடல்களில்,

‘சுட்டி ஒருவர் பெயர் கொள பெறாஅர்’

என்று பாத்திரங்களின் பெயர்கள் சுட்டவில்லை எனினும் பொருளதிகாரம் முழுமையும் இப்பாத்திரங்கள் குறித்துச் சுட்டியுள்ளனர். அவர்கள் தலைவன், தலைவி, பாங்கன், தோழி, நற்றாய், செவிலி, காமக்கிழத்தி, அறிவர், கூத்தர், விறலியர், பாணர், பாடினி, இளையர், பார்ப்பார் ஆகியோர் ஆவார். இம்மாந்தர்கள் ஒவ்வொருவரின் பண்புகளைப் பற்றியும் தொல்காப்பியம் விளக்கியுள்ளது. கதை பாத்திரங்களால் சிறப்புறுவதைத் தற்காலக் கதைகளிலும் நாடகங்களிலும் காண முடிகின்றது.

தமிழில் காப்பிய மாந்தரைப் படைக்கும் ஆற்றலில் முதல் காப்பியமான சிலப்பதிகாரமும், மணிமேகலையும் ஆகும். இராமாயணம், மகாபாரதம்

போன்றவையும் சிறந்து விளங்குகிறது. மகாபாரதத்தில் இருந்து உருவான பாஞ்சாலி சபதமும் திரௌபதி என்ற பாஞ்சாலியை அடிப்படையாகக் கொண்டே பெயர்பெற்றது. பாத்திரங்களை ஆராய்வதற்கு முன்பு படைப்பாளியின் நோக்கத்தை அறிந்துகொள்ள வேண்டும். காப்பிய நிகழ்ச்சிகளில் எல்லாப் பாத்திரங்களும் ஒரே அளவில் பங்கு கொள்வதில்லை. சில பாத்திரங்கள் தொடக்கத்திலிருந்து இறுதி வரை உருவாகின்றன. அவ்வாறு தொடரும் பாத்திரங்கள் முதன்மைப் பாத்திரங்கள் எனப்படுகின்றன.

“காப்பியங்களில் கடவுளர் முதல் சாதாரணமாகத் திரியும் போக்கிரி வரையுள்ள அனைத்துப் பாத்திரங்களும் இடம்பெறுவது சிறப்பு”[3] என்கிறார் இரா.காசிராசன். பாஞ்சாலி சபதத்தில் பாஞ்சாலி ஒரு சாதாரணமானவளாக ஆரம்பித்து கடவுளாக்கப்படுகிறாள். மேலும் கிருஷ்ணன் கடவுளின் அவதார புருஷனாகவே கருதப்படுகிறார்.

நீண்ட சிக்கல் மிகுந்த ஒரு முக்கியச் செயலை விவரிக்கும் காப்பியங்களும் பல பாத்திரங்கள் தேவைப்படுகின்றன. எனவே காப்பியங்களைப் படைப்பவர்கள் தன் போக்கிலேயே பாத்திரப் பண்புகளை அமைத்துக் கொள்வர்.

அரிஸ்டாட்டில் பாத்திரப் படைப்பு பற்றிக் குறிப்பிடுகையில் நான்கு கருத்துக்களைத் தெளிவுப்படுத்துகிறார்.

“படைக்கப்படும் பாத்திரம் சிறப்பாக, நல்லனவாக அமைதல் வேண்டும். இவை கால, இடச் சூழலுக்கு ஏற்ப பொருத்தமாகப் படைக்கப் பெறுதல் வேண்டும். படைக்கப்பெற்ற பாத்திரம் உண்மையில் வாழ்ந்த ஒரு மனிதனின் பதிலாள் என்ற உணர்வினைத் தோற்றுவித்து மனித வாழ்க்கையோடு

நெருங்கியத் தொடர்பு கொண்டிருக்க வேண்டும். முழுவதும் கற்பனை மாந்தராக அமைதல் கூடாது. படைக்கப் பெற்ற பாத்திரம் இறுதிவரை நிலைத்த பண்புடையதாக அமைதல் வேண்டும்”[4] என்று அரிஸ்டாட்டில் பாத்திரப் படைப்புக்கு மிகத் தேவையானது என்று கருதுகிறார்.

“ஒரு காப்பியத்தில் பல பாத்திரங்கள் படைக்கப்பட்டாலும் எல்லாம் ஒன்று போல இருக்கக் கூடாது. ஒவ்வொரு பாத்திரமும் ஒவ்வொரு நிலையில் வேறுபட வேண்டும்”[5] என்பார் தா.ஏ.ஞானமூர்த்தி. பாஞ்சாலி சபதத்திலும் காவியத் தலைவி திரௌபதி எதிர்த் தலைவன் துரியோதனன் எனப் பல்வேறு பாத்திரங்கள் வெவ்வேறு நிலைகளில் படைக்கப்பட்டுள்ளன.

மேலும் அவர் துன்பியல் பாத்திரப் படைப்புகளே அவலத் தலைவனே பெரிதும் வாசகர் கவனத்தை ஈர்க்கின்றன. அவனுடைய வாழ்க்கையே உலக வாழ்வின் மிகச் சிறந்த குறிக்கோளை வளர்க்கும் நிலையில் அமைகின்றது என்கிறார். “பாத்திரப்படைப்பு, நலன், வருணனை மூலம் விளக்கப்படுவதைவிட செயல்பாடுகளின் மூலம் விளக்கப்படுவதே சிறப்பு எனக் கருதுகிறார் எஸ்.வையாபுரிப்பிள்ளை”[6]

துரியோதனன் போன்ற கொடுமைத் தன்மை மிக்க பாத்திரமாயினும், அவை காப்பியத்திற்கு ஒரு நல்ல காட்சி அமைப்பினை, சூழலை உருவாக்கித் தருவனவே. அவை கவிஞனின் ஒரு சோதனைக் களமாக அமைவதோடு காப்பிய வளர்ச்சிக்கும் துணைபுரிகின்றன.

காப்பியப் பாத்திரங்களைப் படைக்கின்றபோது எந்தவிதமான விருப்பும் வெறுப்பும் அவற்றின்மேல் செலுத்தக் கூடாது. காப்பியப் பாத்திரப் படைப்பின் தன்மையே அப்பாத்திரத்தின் நற்பண்புகளையும் தீய பண்புகளையும்

படைத்துக் காட்டுவதிலேதான் அமைந்து கிடக்கிறது. காப்பியப் புலவன் தன் பாத்திரத்தைக் கடைசிவரை புகழ்வதோ அல்லது இகழ்வதோ சுவை தராது. இப்புகழ்ச்சியும் பாத்திரத்திற்குப் பாத்திரம் வேறுபட்டு அமைதல் வேண்டும்"[7] என்பர். இவ்வகையில் பாரதியின் பாஞ்சாலி சபதத்தில் இடம்பெற்றுள்ள கதை மாந்தர்களையும் அவர்களது பண்புகளையும் மாற்றமடையச் செய்யாமல் கொடுத்துள்ளார்.

துரியோதனனின் தீய பண்பானாலும், தருமன் மற்றும் பாஞ்சாலி போன்ற நற்பண்புகளை உடையவரானாலும் உள்ளதை உள்ளவாறு கூறி காவியத்தைச் சிறப்படையச் செய்துள்ளார்.

பாத்திரப் படைப்பின் சிறப்புகள்

"படைப்பாளரின் மன ஓட்டத்திலிருந்து புறப்படும் உயிர்த்துடிப்பே பாத்திரப் படைப்பு"[8] என்பார் அகிலன். ஒரு கதையினது கரு மற்றும் அதன் நடையைவிட பாத்திரப் படைப்புதான் படிப்பவரின் நெஞ்சை அள்ளும் ஆற்றல் பெற்றதாகும். இதனை, "கலையினை மிக்க தரமுடையதாகவும் பயனுடையதாகவும் செய்வது பாத்திரப் படைப்பைப் பொறுத்துள்ளது. நாம் படித்த கதைகளையும் கதைக் கோப்பையும் நாளடைவில் நாம் மறந்து விடுவோம். ஆனால் அதன் பாத்திரங்களே நெஞ்சில் நிலையாக இருக்கும்"[9] என்று தா.ஏ.ஞானமூர்த்தி குறிப்பிடுகிறார்.

சமூகத்தோடு முட்டி மோதிப் பலருடன் பழகிப் பெற்றுக் கொள்கின்ற அனுபவத் தெளிவுடைய ஒருவராலேயே கதை மாந்தர்களை நேரடியாக வார்க்க முடியும். அவன் தனது படைப்பினூடே உலாவ விடுகின்ற கதைமாந்தர் அன்றாடம் வாழ்வில் நாம் காணுகிறவர்களாக, பழகுகிறவர்களாக

அமையும்போது படைப்பாளியும் வெற்றியடைகிறான். அதனைப் படைப்பவனும் திருப்தி அடைகிறான்.

கதைமாந்தரே கதையை நகர்த்திச் செல்பவராதலின் வாசகனின் மனதில் அவர்கள் இடம்பிடித்துவிடுகின்றனர்.

"அனுபவங்களைத் தொகுத்துப் பார்க்கும் தன்மைக்கும், தத்துவத்திற்கும் நேரடியான தொடர்பு இருப்பதாகத் தெரிகிறது. எப்படி ஒரு அனுபவத் துளியின் சாராம்சத்தை அனுபவ முழுமையின் பிரதிநிதியாகப் படைப்பாளி காண்கிறான். பெரும்பாலும் உள்ளுணர்வில்தான் அவன் அதற்குத் தர்க்க ரீதியான காரணம் எதையும் கூறமாட்டான். அப்படைப்பின் உணர்வொழுங்கின் மூலமே அவன் அதை நிறுவுகிறான்"[10] என்னும் ஜெயமோகனின் கூற்று இதனைத் தெளிவுபடுத்துகின்றது.

பாரதியார் அவர்கள் திரௌபதியை பராசக்தியாகக் காண்கிறார் போலும் என்று ந.சுப்புரெட்டியார் அவர்கள் குறிப்பிட்டுள்ளார். சுதந்திரப் போராட்ட காலத்தில் பெண் அடிமைத்தனத்தை எதிர்த்தே 'பாஞ்சாலி சபதம்' என்னும் சிறப்பான காவியத்தைப் படைத்திருக்கிறார்.

கதைப் போக்கில் மேல் நாட்டுக் காப்பியங்களுக்கும் கீழ்நாட்டுக் காப்பியங்களுக்கும் வேற்றுமை உண்டு. மேல் நாட்டுக் காப்பியங்கள் ஒரு தலைவனை நடுவாகக் கொண்டு இயங்குகின்றன. தலைமகனே கதைக்கு உயிராய் நின்று கதையை நடத்திச் செல்கிறான். மகாபாரதம் சிறப்பிக்கும் திரௌபதி (பாஞ்சாலி) போன்றோ இராமாயணம் போற்றும் சீதையைப் போன்றோ அல்லது சிலப்பதிகாரம் தெய்வமாக்கும் கண்ணகி போன்றோ ஒரு பெண்ணை மேல்நாட்டுக் காப்பியங்களில் காண இயலாது. பெண் நடுநின்று

கதையை நடத்தும் அமைப்பு மேல்நாட்டுக் காப்பியங்களில் இல்லை என்கிறார் வி.அய்.சுப்ரமணியன்.

முதன்மை மாந்தர் எனச் சொல்லப்படுபவர் கதைத் தலைவர்கள் எனவும் இக்காலத்தில் சொல்லப்படுகின்றன. காப்பியத் தலைவர்களுக்கும் தற்கால நவீனப் புனைக்கதைகளில் வரும் கதை தலைமாந்தர்களுக்கும் மிகுந்த வேறுபாடுண்டு.

பாஞ்சாலி சபதம் காவிய மாந்தர்

தலைசிறந்த உலகத்துப் பெருநாவல்களை எல்லாம் நாம் நினைக்கிற போது முதலில் நம் நினைவுக்கு வருவது அந்நாவல்களின் கருவோ, கதைப்பின்னலோ, பிறவோ அல்ல; கதை மாந்தர்களே. பிளாட்பர்ட்டின் பவாரியும், ஹார்டியின் டெஸ்ஸமும், தகழியின் கருத்தம்மாவும் இப்பொழுது நினைத்தால்கூட நம்மெதிரே நிற்பது போன்றே பிரமை உண்டாகிறதல்லவா என்னும் இராமலிங்கத்தின் கூற்றும் வலியுறுத்துவதை அறியலாம்.

“காப்பியத்தில் இடம்பெறும் பாத்திரம் மட்டுமே முக்கியம் என்று கருதினால் அது நடைச்சித்திரமாக அமைந்துவிடும். “பாத்திரத்தைக் காட்டுவதன்று முக்கியம். பாத்திரத்தின் அல்லது பாத்திரங்களின் இயக்கத்தால் ஏற்படும் உணர்வு நிலையைக் காட்டுவதுதான் முக்கியமாகும்”[11] என்பார் கா.சிவத்தம்பி என்று பாத்திரங்களை தலைசிறந்ததாக காட்டுவதே சிறப்பு என்ற வகையில், பாஞ்சாலி சபதத்தில், கதையின் வளர்ச்சிக்கும் தொடர்வோட்டத்திற்கும் திரௌபதியே இன்றியமையாத நிலைகளில் அமைகிறாள். இக்கதை தொடக்கத்திலிருந்து இறுதிவரை பாஞ்சாலியே முதன்மைப் பாத்திரமாக வந்துபோகிறாள்.

பாஞ்சாலி சபதம் காட்டும் பாத்திரங்களாவன

1. பாஞ்சாலி
2. துரியோதனன்
3. திருதராட்டிரன்
4. தருமன்
5. விதுரன்
6. அருச்சுனன்
7. சகுனி
8. துச்சாதனன்
9. கர்ணன்
10. விகர்ணன்
11. வீடுமன்
12. சகாதேவன்
13. பீஷ்மன்
14. சேவகன்

இவ்வாறு ந.சுப்புரெட்டியார் அவர்கள் பாஞ்சாலி சபதக் கதாபாத்திரங்களை வரிசைப்படுத்தி அவர்களைப் பற்றி விளக்கிக் கூறியுள்ளார்.

திரௌபதி புதுமைப்பெண்

பாரதியார் படைத்திருக்கும் பாஞ்சாலி அவர் கனவு கண்ட புதுமைப்பெண்ணின் வடிவம்.

‘நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்
திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்
செம்மை மாதர் திறம்புவ தில்லையாம்’
‘ஞான நல்லறம் வீர சுதந்திரம்
பேணு நற்குடிப் பெண்ணின் குணங்களாம்’

காலங்காலமாகப் பேசப்பட்டு வந்த அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்னும் மரபுவழியான குணங்களை மாற்றி,

'நாணும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்'

என்று புதுமையாகப் பாடியுள்ளார் பாரதியார். மேலும் புதுமைப் பெண்ணின் சொற்களும் செயல்களும் எத்தகையனவாய் இருக்க வேண்டும் என்பதை அழகுறச் சுட்டிக்காட்டியுள்ளார். மேலும்,

'அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல்

நிச்சமும் பெண்பாற் குரிய என்ப'

என்று தொல்காப்பியம் குறிப்பிடும் தலைமகட்கு உரியதோர் இலக்கணத்தைத் தனது படைப்பில் மாற்றியமைத்துள்ளார் பாரதி.

ந.சுப்புரெட்டியார் அவர்கள் காவியத்தலைவி திரௌபதியை கண்ணகியுடன் ஒப்பிட்டுக் குறிப்பிட்டுள்ளார். பாரதியின் எதிர்பார்ப்பு, ஏக்கம், கனவு, கற்பனை, குறிக்கோள், வேட்கை ஆகிய அனைத்தையும் சம விகிதத்தில் கலந்து உருவாக்கிய ஒரு புதுமைப் பெண்ணே பாஞ்சாலி ஆவாள். அப்படிப்பட்ட பெண்ணை,

"சிலப்பதிகாரத்திற்குக் கண்ணகி காவியத் தலைவியாக அமைவதுபோல் திரௌபதி இச்சிறு காவியமாகிய 'பாஞ்சாலி சபதத்திற்குக்' காவியத் தலைவியாக அமைகிறாள். 'உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்தலும்' என்ற உண்மை சிலம்பில் அமைந்து கிடப்பதை அறிவோம். காவியத்திலேயே இளங்கோவடிகள் கண்ணகிக்கு கோயில் எடுத்த செய்தியைக் காட்டுகிறார். இக்காவியத்திலோ அல்லது பாரதத்திலோ திரௌபதிக்கு கோயில் எடுத்த செய்தியைக் கவிஞர்கள் குறிப்பிடாவிடினும் நாடெங்கும் பலவிடங்களில்

'திரௌபதி அம்மன் கோயில்' என்றிருப்பதைக் காண்கிறோம். சில இடங்களில் 'தீ மிதித்தல்' என்ற விழாவும் இத்திருக்கோயில்களில் நடைபெற்று வருவதையும் காண்கிறோம்"[12] என்று ந.சுப்புரெட்டியார் அவர்கள் குறிப்பிடுகிறார்.

பாரதியார் பாஞ்சாலியை புதுமைப் பெண்ணாகத் தன்னைச் சூதாட்டத்தில் பணயப் பொருளாக வைத்தான் என்பதை கேள்விப்பட்டதும் பொங்கி எழுகிறாள். தன்னை அழைத்துச் செல்ல வந்த தேர்ப்பாகனிடம் நியாய நுணுக்கங்களைக் கேள்வியாக்குகிறாள். பாண்டவர்கள் தம்மை இழந்த பின்னர் என்னைப் பணயம் வைத்தனரா அல்லது முதலில் என்னை இழந்து பின்பு தன்னைப் பணயம் வைத்தனரா எனக் கேட்கிறாள்.

'நாயகர் தாந்தம்மைத் தோற்றபின் - என்னை
　　நல்கும் உரிமை அவர்க்கில்லை
தாயத்தி லேவிலைப் பட்டபின் - என்ன
　　சாத்திரத் தாலெனைத் தோற்றிட்டார்?'

என்று தனது கேள்விக்குப் பதிலளிக்க இயலாமல் திணறும் தேர்ப்பாகனைத் திருப்பி அனுப்புகிறாள். இதனைப் பார்க்கையில் கண்ணகி தனது கணவன் கள்வன் அல்ல என்பதை நிரூபிப்பதற்காக வாதாடும் அறிவுத்திறமை வெளிப்படுகின்றது.

'படிமிசை இசையுறவே — நடை
பயின்றிடும் தெய்வீக மலர்க்கொடி'

என்ற தொடர் நாடு முழுவதும் இப்பெருமாட்டிக்கு கோயில் அமைந்துள்ள செய்தியைக் குறிப்பிடுவதாகக் கொள்ளலாம். மேலும் திரௌபதி போலவே சீதையும் உலகத்தோரின் இதயத்தைக் கவர்ந்தவள் என்கிறார்.

இங்ஙனம் தனக்கு இழைக்கப்பட்ட அநீதியை எதிர்த்துப் போராடத் துணியும் வீரப் பெண்ணாகவே படைத்துள்ளார். மகாபாரதத்தில் எத்தனையோ பகுதிகள் இருக்கின்றன. ஆயினும் பெண்ணின் எழுச்சியை எடுத்துக் கொண்டு ‘பாஞ்சாலி சபதம்’ என்று ‘சூதுப் போர்ச் சருக்கம்’ பெண்கள் வீறு கொண்டு எழ வேண்டும் என்பதனால் மகாகவி பாரதியார் தன்னுடைய கவனமும் கருணையும் எல்லாமே பாஞ்சாலியின் மேல் மட்டும் செலுத்தியிருக்கிறார். இந்த வழியிலே ந.சுப்புரெட்டியார் அவர்களும் பாத்திரங்களை பாஞ்சாலி சபதத்தில் திறனாய்வு செய்யும் பொழுது பாஞ்சாலிக்கே அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளார் என்பது சிறப்புக்குரியதாகும்.

முதன்மையானவள்

சிலப்பதிகாரக் கண்ணகி திரௌபதியுடன் ஒப்பிடத்தக்க பாத்திரமாகிறாள் என்று டாக்டர் சி.ஆர்.ரெட்டி குறிப்பிடுவதை புகார்க் காண்டத்தில் கண்ணகியை மிக அமைதியான பெண்ணாகவும் அதே நேரத்தில் சாலினியை ஆவேசமுற்ற பெண்ணாகவும் இளங்கோவடிகள் காண்பிப்பதைக் குறிப்பிட்டுள்ளார்.

கண்ணகியைப் போலவே தொடக்கத்தில் திரௌபதியும் அமைதியானவளாகக் காணப்படுகிறாள் என்று திரிதராட்டினது அழைப்பைத் தெரிவிப்பதற்காக இந்திரபிரத்தம் வரும் விதுரனை வரவேற்கும் கட்டத்திலேயே முதன்முதலாக திரௌபதியைக் காட்டுகின்றார்.

‘குந்தி எனும்பெயர்த் தெய்வாந் தன்னைக்
 கோமகன் கண்டு வணங்கிய பின்னர்
வெந்திறல் கொண்ட துருபதன் செல்வம்
 வெள்கித் தனைகுனித் தாங்குவத் தெய்தி
அந்தி மயங்க விசும்பியைத் தோன்றும்

ஆசைக் கதிர்மதி யன்ன முகத்தை

மந்திரத் தேர்ந்ததோர் மாமன் அடிக்கண்

வைத்து வணங்கி வனப்புற நின்றாள்”[13]

என்று அடக்கமான திரௌபதி குந்திதேவியை விதுரன் வணங்கிய பின்னர் துருபதன் செல்லம் விதுரனை வணங்கினாள் என்ற இடத்தில் காட்டுகிறார்.

மேலும் வாதம் புரிவதிலும் நீதிகளை எடுத்துக் காட்டுவதிலும் அவையில் துணிவாகப் பேசுவதிலும் இவளையொத்த பாத்திரம் கண்ணகியென்று ந.சுப்புரெட்டியார் அவர்கள் குறிப்பிடுகிறார்.

பாஞ்சாலி சபதம் - வடமொழி வியாச பாரதம், வில்லிபாரதம் ஆகியவற்றின் தன்மையிலிருந்து மாறுபட்டுத் தமிழ்ச் சூழலுக்கு ஏற்கப் படைக்கப்பட்டிருப்பதை ந.சுப்புரெட்டியார் அவர்கள் பெண்ணுரிமையைப் பெண் வாயாலேயே கேட்க வைத்திருக்கிறார் பாரதி என்பதைக் குறிப்பிட்டுள்ளார்.

பாண்டவர்களின் பெருமையைக் கண்டு பொறாமை கொண்டான் துரியோதனன். தனக்குச் சேரவேண்டிய புகழ் தருமனுக்குச் செல்வதை நினைத்துக் கோபம் கொண்டான் துரியோதனன். பாஞ்சாலி பலர் கூடியிருக்கும் அவையில் துரியோதனனைப் பார்த்துச் சிரித்ததும் கேலி செய்ததும் மீண்டும் துரியோதனனைக் கோபமூட்டியது. தன் மாமன் சகுனியின் மூலமாகப் பாண்டவர்களை வஞ்சனையாகச் சூதாட்டத்தில் ஈடுபடுத்தி நாட்டையும் பொருளையும் அபகரித்து காட்டுக்கு அனுப்பி வாழுமாறு செய்து விடுகிறான். இந்நிலையில் பணயப் பொருளாகத் தன்னை வைத்து விளையாடிய பாண்டவர்களைப் பார்த்து எதிர்ப்புக் குரல் கொடுக்கிறாள் பாஞ்சாலி. அடிமையாக்கப்பட்ட பாஞ்சாலியைத் துகிலுரிதலிலும் கண்டதும் வீமன், அர்ச்சுனன், பாஞ்சாலி ஆகிய சபதங்கள் பற்றி இந்நூல் அமைகின்றது.

பாரதப் பெண்ணாக பாஞ்சாலி, தர்மத்தின் தலைவன் தர்மன், வீரத்தின் தவப்புதல்வன் வீமன், மன்மதனாக கருதப்படுபவனும் வில்வித்தையில் சிறந்தவனாக அர்ச்சுனன், மேலும் நகுலன், சகாதேவன் போன்றோர்களும்.

பாரதப் போரின் முக்கியப் பாத்திரப் படைப்புகளாக துரியோதனன், துச்சாதனன் போன்றோர் கருதப்படுகின்றனர். பாஞ்சாலியின்,

'பாவி துச்சாதனன் செந்நீர் – அந்தப்
பாழ்ந்துரியோதனன் ஆக்கை இரத்தம்
மேவி இரண்டுங் கலந்து – குழல்
மீதினிற் பூசி நறுநெய் குளித்தே
சீவிக் குழல் முடிப்பேன் யான்'

என்று அவளின் சபதமே கதைக்கு வித்தாகவும் கருவாகவும் அமைகின்றது.

மூடன் துச்சாதனன் பாஞ்சாலியின் கூந்தலைப் பற்றிச் சபைக்கு இழுத்துச் சென்றான். அங்கும் திரௌபதி கூடியிருந்தோர் முன்பு நீதி கேட்கிறாள்.

'ஆடவருக்கு ஒப்பில்லை மாதர்
ஒருவன் தன் தாரத்தை விற்றிடலாம்
தானம் என வேற்றவர்க்குத் தந்திடலாம்'

என்று கூறியிருப்பதனால் 'தீங்கு' எனத் தெரிந்தும் 'தடுக்கும் திறம்' இல்லை என வீட்டுமாச்சாரியன் சொல்வதையும், அவமானம், ஆவேசம், இயலாமை அனைத்தும் ஒன்றுசேர வெடிப்புறப் பேசுகிறாள் பாஞ்சாலி.

'பெண்பாவம் அன்றோ? பெரிய வகை கொள்வீர்'

எனத் தனக்கு இழைக்கப்பட்ட அநீதியை, கொடுமையை எதிர்த்து ஆவேசமாகக் குரல் எழுப்பினாள். கண்ணனை அவள் வாழ்ந்த காலத்தில் தெய்வம் என்று நினைத்தவர்களுள் திரௌபதியும் ஒருத்தி. தன்னால்

துச்சாதனனின் செயலிலிருந்து விடுவித்துக் கொள்ள அவையார் கையாலாகாத கபோதிகள் என்றும் கண்ணனைச் சரணடைகிறாள் என்பதை,

‘உட்சோ தியிற் கலந்தாள் - அன்னை
உலகத்தை மறந்தாள் ஒருமை யுற்றாள்’

என்று சரணாகதித் தத்துவம் இரத்தினச் சுருக்கமாகக் காட்டப்படுவதாக ந.சுப்புரெட்டியார் அவர்கள் பலனும் கையிலங்கு நெல்லிக்கனியாகக் கிடைத்துவிடுகின்றது என்கிறார்.

‘கண்ண பிரானருளால் - தம்பி
        கழற்றிடக் கழற்றிடத் துணிபுதிதாய்
வண்ணப்பொற் சோலைகளாம் - அவை
        வளர்ந்தன, வளர்ந்தன, வளர்ந்தனவே’

என்று கண்ணனின் அருளால் கற்புக்கரசி மானங்காக்கப் பெறுகிறாள்.

‘மரபுக்குத் தேவன் கண்ணன் பதத்தானை
காமனைக் கண்ணழ காலே – சுட்டுக்
காலனை வென்றவன் பொன்னடி மீதில்
ஆணையிட்டிஃதுரை செய்வேன் - இந்த
ஆண்மை யல்லாந்துரி யோதனன் றன்னை
பேணு பெருங்கன லொத்தாள் - எங்கள்
பெண்டு திரௌபதியை தொடைமீதில்
நாணின்றி வந்திரு என்றான் - இந்த
நாய் மகனாந்துரி யோதனன் றன்னை
மாணற்ற மன்னர்கண் முன்னே – என்றன்
வன்மையி னால்யுத்த ரங்கத்தின் கண்ணே
தொடையைப் பிளந்துயிர் மாய்ப்பேன் - தம்பி
சூரத் துச்சாதனன் தன்னையு மாங்கே
கடைப்பட்ட தோள்களைப் பிய்ப்பேன் - அங்குக்
கள்ளென ஊறு மிரத்தங் குடிப்பேன்
நடைபெறுங் காண்பருலகீர்”[14]

என்று வீமன் பாஞ்சாலியை இகழ்ந்ததற்காக பழிவாங்குவேன் என்றும்

“பார்த்தனெழுந்துரை செய்வான் - இந்தப்
பாதகக் கர்ணனைப் போரில் முடிப்பேன்
தீர்த்தன் பெரும் புகழ் விஷ்ணு – எங்கள்
சீரிய நண்பன் கண்ணன் கழலானை
கார்த்தடங் கண்ணி எந்தேவி – அவள்
கண்ணிலும் காண்டிவ வில்லினும் ஆணை
போர்த் தொழில் விந்தைகள் காண்பாய் - ஹே
பூதலமே! அந்தப் போதினில் என்றான்”[15]

என்று கண்ணனை முன்னிலைப்படுத்தி அர்ச்சுனனும், வீமனும் பராசக்தியை வேண்டி சபதம் செய்கின்றான். பாஞ்சாலி சபதத்தின் முக்கிய சபத பாத்திரங்களாக கருதப்படுகின்றன.

‘பெண்ணடிமை தீர்ந்தாலே நாடு விடுதலை அடையும்’ எனும் கருத்தினை வலியுறுத்தவே பாரதி பாஞ்சாலி சபதத்தை உருவாக்கினார்.

பல நாட்டு அரசர்கள் அமர்ந்திருக்கும் அவையில் ஒரு பெண் தனக்கு ஏற்பட்ட அவமானத்தைத் துடைக்க வேண்டி அவிழ்க்கப்பட்ட என் கூந்தலை முடிக்க மாட்டேன் என்று சபதம் செய்கிறாள். மேலும் வீமன், அருச்சுனன் போன்றோரின் சபதம் இடம்பெற்றிருந்தும் அதனை விடுத்து, வீழ்ந்து கிடக்கும் பெண் சமூகத்திலிருந்து சபதம் மேற்கொள்ளும் ஒரு குரலாகப் பாஞ்சாலியின் சபதத்தை அமைத்திருப்பது மிகவும் சிறப்பானதாகிறது.

ந.சுப்புரெட்டியார் அவர்கள் பாஞ்சாலியைப் பற்றிக் குறிப்பிடும் இடத்தில் டாக்டர்.சி.ஆர்.ரெட்டியின் ஒப்பீட்டு முறைகளை மிக அழகாகவும் ஆழமாகவும் திறனாய்வு செய்துள்ளார்.

சிலப்பதிகார கண்ணகி திரௌபதியுடன் ஒப்பிடத்தக்க பாத்திரமாகின்றாள் என்கின்றனர். புகார்க் காண்டத்தில் கண்ணகி மிக அமைதியான பெண்ணாகக் காண்கிறோம் என்றும்,

'போரில் ஆர் திருவினாள்
புகழ்உடை வடிவு என்றும்
தீது இலா வடமீனின்
திறம் இவள் திறம் என்றும்
மாதரார் தொழுது ஏத்த
வயங்கிய பெருங்குணத்துக் காதலாள்'

என்று கண்ணகியை அமைதியாகக் காட்டி சாலினியை ஆவேசமுற்ற பாத்திரமாகக் காட்டுவார் இளங்கோவடிகள்.

'இவளோ கொங்கச் செல்வி
குடமலை ஆட்டி'

மேலும் கண்ணகியை அடைக்கலம் தந்தபோது நடந்த செய்திகளைச் சிறப்புறக் கூறியுள்ளார்.

தலைவர் என்ற நிலையில் கவிஞன் வடிக்கும் புனைவு இது. இதுபோல சிலப்பதிகாரத்திற்குக் கண்ணகி காவியத் தலைவியாக அமைவது போல திரௌபதி இச்சிறுகாவியமாகிய பாஞ்சாலி சபதத்திற்குக் காவியத் தலைவியாக அமைகிறாள்.

காவியத்திலேயே இளங்கோவடிகள் கண்ணகிக்கு கோயில் எடுத்த செய்தியைக் காட்டுகின்றார். ஆனால் பாஞ்சாலி சபதத்தில் திளௌபதிக்கு கோயில் எடுத்ததாகச் செய்திகள் குறிப்பிடப்படவில்லை. எனினும் நாடெங்கும் 'திரௌபதி அம்மன் கோயில்' என்றிருப்பதையும் சில இடங்களில் 'தீ மிதித்தல்' என்ற விழாவும் இக்கோயில்களில் நடைபெற்று வருகின்றது.

பாரதியார் நமக்கு இப்பத்தினித் தெய்வத்தை இவ்வாறு அறிமுகம் செய்து வைப்பார்.

'வடிவுறு பேரழகை - இன்ப
வளத்தினைச் சூதினில் பணயம் என்றே
கொடியவர் அவைக்களத்தில் - அறக்
கோமகன் வைத்திடல் குறித்து விட்டான்'

என்று சூதில் இவள் பணயப் பொருளாக வைக்கப் பெறுவதைக் காட்டும் இடத்திலும் 'ஐவர் பூவை' என்றும் பாரதியார் குறிப்பிடுவதாக ந.சுப்புரெட்டியார் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

'படிமிசை இசையுறவே – நடை
பயின்றிடும் தெய்வீக மலர்க்கொடி'

என்ற தொடர் நாடு முழுவதும் இப்பெருமாட்டிக்குக் கோயில் அமைந்துள்ளதைக் குறிப்பிடுவதாகக் கொள்ளலாம் எனக் குறிப்பிட்டுள்ளார் ந.சுப்புரெட்டியார் அவர்கள். மேலும் "பல்லாண்டுகளாக ஆந்திரப் பல்கலைக்கழகத்தை நிறுவக் காரணமாக இருந்தவரும், அதன் துணைவேந்தர் பதவியைப் பல்லாண்டுகள் அணி செய்தவருமான டாக்டர் சி.ஆர். ரெட்டியவர்கட்குத் தெலுங்கு மகாபாரதத்தில் தனி ஈடுபாடு உண்டு. அங்ஙனமே திரௌபதி என்ற பாத்திரமும் இவருடைய தனிப்பற்றுக்குரியவளாக இருந்தாள். பஞ்சமி என்ற தம்முடைய ஐந்து கட்டுரைகள் கொண்ட நூலில் சேர்க்கப் பெற்றுள்ள கட்டுரையொன்றில் சீதையையும் திரௌபதியையும் அறிவுக் கூர்மையுடன் ஒப்பிட்டு ஆய்ந்துள்ளார்"[16]

எதிர்நிலைத் தலைவன்

"இராமகாதையில் இராவணன் எதிர்த்தலைவனாக அமைந்திருப்பது போல 'பாஞ்சாலி சபதம்' என்ற இச்சிறு காவியத்திற்கும் துரியோதனன்

எதிர்நிலைத் தலைவனாக அமைகின்றான். காவியத்தில் நடைபெறும் அடாத செயல்கட்கெல்லாம் இவனே பெருவிசையாக – முதன்மைக் கருவியாக அமைந்திருப்பதால் இவனை எதிர்நிலைத் தலைவனாகக் கொள்வது பல்லாற்றானும் பொருந்தும். இவன் கண்ணிலான் - திருதிராட்டிரனுக்கு முதல் மகன். திருதராட்டிரன் நல்ல அமைச்சர் அவையைக் கொண்டு நல்லாட்சி புரிய முயன்றாலும் அனைத்துச் செயல்களிலும் இவன் கைதான் ஓங்கி நின்றது"[17] என்கிறார் ந.சுப்புரெட்டியார் அவர்கள்.

பெண்ணுக்கு (சீதைக்கு) இராவணன் இழைத்த அநீதியால் விளைந்த போர் இராமாயணத்தை உருவாக்கியது. பாஞ்சாலிக்கு துரியோதனன் இழைத்த அநீதியால் போர் நடந்து மகாபாரதம் உருவாயிற்று.

'மில்டனின் சாத்தான்
கம்பனின் இராவணன்
ஹோமரின் நூற்றுக்கணக்கான படைவீரர்கள்
பாரதத்தில் ஆயிரக்கணக்கான படைவீரர்கள்'

இராவணன், சாத்தான், துரியோதனன் போன்றோர் காப்பியங்களில் எதிர்நிலைப் பாத்திரங்களாக உள்ளனர். ஆனால் இவர்கள் மூவரும் தீமைக்கே உரிய பாத்திரங்களாக அல்லாமல் கவிஞர்கள் நல்ல பண்புகளும் தீய பண்புகளும் நிறைந்தவர்களாகப் படைக்கப்பெறுகின்றனர்.

அறிவிலும் பெருவீரனாகவும் படைக்கப்பட்டிருக்கின்றனர். ஆனால் பெண்ணுக்கு இழைத்த அநீதி காரணமாகத் தீயவர்களாக்கப்பட்டுள்ளனர்.

துரியோதனன் 'தீய குணங்களின் இருப்பிடமாகத் திகழ்பவன்' என்றும் 'வணங்காமுடி', 'காலி', 'முடி பணிவு அறியான்' என்று கூறப்படுபவன்.

நெஞ்சத் துணிவுடைய இவன் உடல் வலிமையும் எல்லா நலன்களையும் பெற்றவன்தான் துரியோதனன். ஆயிரம் யானை வலி கொண்டவன்.

‘பாண்டவர் முடியுயர்த்தே இந்தப்
பார்மிசை யுலவிடு நாள்வரை, நான்
ஆண்டதோர் அரசாமோ? எனது
ஆண்மையும் புகழுமோர் பொருளாமோ?
காண்டகு வல்லுடையோன் - அந்தக்
காளை அருச்சுனன் கண்களிலும்
மாண்டகு திறல்வீ மன்-தட
மார்பிலும் என திகழ் வரைந்துளதே!’

என்பது துரியோதனனின் பொறாமையைக் காட்டும் அழகிய சொல்லோவியம் என ந.சுப்புரெட்டியார் அவர்கள் பொறாமையால் ஏற்பட்ட நெஞ்சக் குமுறலைச் சகுனியிடம் எடுத்துக் கூறுவதைக் குறிப்பிடுகிறார். மேலும் சகுனி தருமனை நாட்டை வைத்து ஆடுமாறு கூறியதைக் கேட்பதும் விதுரன் அறிவுரை கூறினார். அதற்கு மனம் பொறுக்காத துரியோதனன் நன்றி கெட்ட விதுரா, நாணமற்ற விதுரா என்றெல்லாம் மரியாதைக் குறைவாக சிற்றப்பனென்றும் முக்கியமான அமைச்சர் என்றும் பாராமல் ஏசிபேசுமிடத்து இவனுடைய கீழ்த்தரப் பண்பினைக் காண முடிகின்றது என்று சுப்புரெட்டியார் அவர்கள் துரியோதனனின் கீழ்த்தரமான எண்ணத்தை விவரித்துக் காண்கிறார்.

திருதராட்டிரன் மற்றும் காந்தாரியின் நூறு மகன்களுள் மூத்த மகன் துரியோதனன். நட்பிற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கியவன். இவனின் உற்ற தோழனாக கர்ணன் இருப்பது சிறப்பு. கௌரவர்களில் மூத்த சகோதரன் ஆவார்.

காப்பியத்தின் இறுதிக் கட்டத்தில் வீமனால் தொடையறுக்கப்பட்டுக் கொல்லப்படுகின்றான். எனினும் துரியோதனனை அயோக்கியனாக மட்டுமே காட்டவில்லை என்பதை,

‘மன்னர்க்கு நீதி ஒருவகை; - பிற
மாந்தர்க்கு நீதிமற் றோர்வகை’

என்று இவன் தனது மறத் தொழிலுக்கு பொறாமைக்கும் ஓர் அரசியல் தத்துவத்தையே அடிப்படையாக வைத்துக் கொண்டு செயலாற்றுவதாக பாரதி துரியோதனனை அறிமுகம் செய்யும் சிறப்பினைக் குறிப்பிடுகிறார் ந.சுப்புரெட்டியார்.

அரசியல் கொள்கைத் துளிகளை இக்காலத்தில் மெக்கிய வல்லி, ஹிட்லர், முஸ்ஸோலினி போன்றோருக்கும் துரியோதனனுக்கும் மிகையானவன் என்று எண்ணும்படிச் செய்துள்ளார்.

“மில்டனும் இதேபோல் தன்னுடைய தோல்வியின் உண்மையான காரணத்தை சாத்தான் உணரவில்லை. மில்டன் முதலிரு படலங்களில் வருணிக்கும் போது இதுவரை உலகில் இல்லாத மாபெரும் போர்வீரனாகக் காட்டுகிறார். சந்திரனையொத்த கேடயமும், மாபெருந் திமிங்கலத்தை ஒத்த உடலையும் நெடி துயர்ந்த மரங்களிலும் உயர்ந்த ஈட்டிப் படைப்பினையும் உடையவனாக வருணிக்கப்படும் சாத்தான் கிரேக்கம் முதலாகிய பண்பாடுகள் கண்டிராத அளவுக்கு மிகப்பெரிய வீரனாகக் காட்டப்படுகிறான். தன்னோடு வீழ்ந்த தோழர்களின் துன்பத்தைப் போக்குவதற்காக அவன் ஆற்றும் சொற்பொழிவுகள் கேட்போரை பிணிக்கும் தன்மையனவாய் உள்ளன. அவனுடைய பேச்சாற்றலின் முன் கிரேக்கப் பெரும் பேச்சாளர்கள் எல்லாம் வலியிழந்து நிற்பர். இவ்வாறு பழம்பெரும் நாகரீகங்கள் தத்தம் மாவீரர்களுக்கு

உரியனவாகக் காட்டிய உடல்வீரம், அறிவுத்திறன் ஆகியவற்றை எல்லாம் சாத்தானுக்கும் அளித்து அவனை ஒரு மாபெரும் மக்கள் தலைவன் போன்று காட்டுகின்றார் மில்டன்”[18]

பாஞ்சாலி சபதத்தின் எதிர்நிலைத் தலைவனாக துரியோதனனைக் கொண்டு வந்திருப்பதையும் காணலாம். கம்பரின் இராமாயணத்தில் இராவணன் கதாபாத்திரமும் இவ்வாறே அமைகின்றது.

பிற காவிய மாந்தர்கள்

காப்பியத்தின் சிறப்பானது காப்பிய மாந்தர்களின் நடையோட்டத்தின் மூலமாகவே சிறப்பிக்கின்றன. பாரதத்திலுள்ள காப்பிய மாந்தர்களின் குணநலன்கள் பற்றி நாம் ஓரளவு நன்றாகவே அறிந்துள்ளோம். ஆனால் ‘பாஞ்சாலி சபதத்தில்’ பாரதி அவர்கட்குப் புது மெருகு ஊட்டியிருப்பதில் ஒரு தனிப்பிட்ட உயிர்த் தத்துவம் மிளிர்கின்றது என்று பாரதி காட்டும் காப்பிய மாந்தர்களைப் பற்றியும் குணநலன்களைப் பற்றியும் ந.சுப்புரெட்டியார் அவர்கள் சிறப்பாக பாரதியார் உத்தமனாகக் காட்டிய திரிதராட்டிரனை ந.சுப்புரெட்டியார் அவர்கள் அயோக்கியனாகவே காட்டுகிறார்.

‘மகன் மொழி நயந்து கேட்டு
வாழ்வுறு தந்தை தானும்
மிகநயந் துருகி நல்ல
வரகினால் வெல்ல றுற்றீர்!
அகநெடும் போல்செய் தாலும்
ஐவரை அடக்கொ ணாது
சகுனியை யன்றி வேளார்
தரவல்லார் தரணி’ என்றான்

புறக்கண் செயல்படாவிட்டாலும் சிந்தித்துச் செயல்படும் அகக்கண் கொண்டவன் என பாரதி பாராட்டியவர் தந்தையை கேட்காமலேயே அரண்மனை கட்டி அதற்கு சூழ்ச்சி செய்யத்தான் பாண்டவர்களை அழைக்கின்றார் என்பதை அறிந்தும் மகிழ்ச்சியடைந்து அழைக்க விதுரனையே அனுப்பி வைக்கின்றார். மேலும் அவனிடம் உள்ள சில நல்ல பண்புகளையும் தமது படைப்பில் குறிப்பிட்டுள்ளார். தன்னுடைய அறிவுரைகளை மகன் ஏற்கவில்லை என்பதனாலேயே, மைந்தன் கருத்துக்கு

‘விதி! விதி! விதி. மகனே! இனி
வேறெது சொல்லுவன் அட மகனே
கதியுறுங் கால உன்றோ - இந்தக்
கயமக னெனைச் சரிந்துவிட்டான்
கொதுயுறு முள வேண்டா; - நின்றன்
கொள்கையின் படிஅவர் தமை அழைப்பேன்
விதியுறு மனைசெல் வாய்’

என்று பாண்டவர்களை விருந்துக்கு அழைத்து வருமாறு விதுரனைத் தூது அனுப்பி வைக்கின்றான்.

தருமன் இவன் பாண்டவர் ஐவர்களில் மூத்தவர் வில்லிபாரதத்தில் ‘ஞானக் கஞ்சுகன்’ என்று போற்றப்படுபவன்.

‘நூல்வ கைபல தேர்ந்து தெளிந்தோன்
மெய்ய றிந்தவர் தம்மு ளுயர்ந்தோன்’
‘குன்றினிலே ஏற்றிவைத்த விளக்கைப் போலக்
குவலயத்திற் களம்காட்டித் தோன்றினாய்’

என்று அறவுணர்வு மிக்கவன், கவளாடல் என்ற தீச்செயலை செய்யக் கூடாது என மனவருந்துபவனாகவும் சகுனியே இவரை ‘அறத் தோன்றல்’ என்றுச் சிறப்பு செய்யும் பெருமைக்குரியவன்.

திருதராட்டிரன் அமைச்சரவையில் இருந்த நல்லவர்களில் ஒருவன் ‘வென்றில் விதுரன், மெய்ந்நெறியுணர் விதுரன் என அழைக்கப்படுபவர். பாண்டவர்கள்பால் பேரன்பு கொண்டவர்.

வீமன் ஒளிவு மறைவு இல்லாமல் திரெளபதிக்கு உதவுபவன். மேலும் இவர் எளியவர், வலுவற்றார் போன்றவர்க்கு உதவக்கூடிய நல்ல மனம் படைத்தவர் என்றும் கண்ணனின் திருவருளால் திரெளபதிக்கு சேலை வளரத் தொடங்குகின்றது. துச்சாதனன் சோர்ந்து தரையில் வீழ்ந்ததும் வீமன்தான் முதலில் சபதம் செய்கிறான். பகடையாடி தோற்ற அண்ணனின் கைகளை எரிக்க வேண்டும் என்கிறான்.

‘தொடையைப் பிளந்துயிர் மாய்ப்பேன் - தம்பி
சூரத்துச் சாதனன் தன்னையு மாங்கே
கடைபட்ட தோள்களை பிய்ப்பேன்’

என்னுமிடத்தில் பாஞ்சாலி மீது அவன் கொண்ட அன்பு புலப்படுகிறது.

அருச்சுனன், குந்தி வயிற்றில் பிறந்த மூன்றாவது மகன் ஆவார். ‘வில்லுக்கு விசயன்’ என்பது சிறப்பு. காவியத்தில் வீமனுக்கு அடுத்து சபதம் செய்தவன்.

‘பார்த்தன் எழுந்துரை செய்வான் - இந்தப்
பாதகக் கர்ணனைப் போரில் மடிப்பேன்’

இவரது சபதமே இறுதியாக அமைக்கப்பட்டுள்ளது. ‘அழிவுற்றது உலகத்து அறமெல்லாம்’ தீமையில் அண்ணனைக் கொன்றவன் என்று சொல்லிடை நஞ்சு கக்கும் துன்மதியுடைய துச்சாதனன்.

விகர்ணன் நூறுபேரில் கடைக்குட்டி. சேற்றில் பிறந்த தாமரைப்போல் பண்பிலும் செயலும் உத்தமனாகத் திகழ்பவன். திரெளபதியின் அவல நிலை

கண்டு அவையிலுள்ளோர் அமைதியாக இருக்க வீமனும் அருச்சுனனும் பேசிய உடன் பெண்களை விலங்குப்போல் எண்ணி அவர்களை என்ன வேண்டுமானாலும் செய்திடலாம் என்கிறான் பாட்டன். பண்டைய வேதநெறி மாறிப் பின்னால் வழங்கும்நெறி இதுதான் என்கின்றான் இது தவறு. பெருந்தவறு என்று கூறுகையில் அவனின் நல்ல மனம் புலனாகிறது.

வீடுமன் திருதராட்டினரின் அமைச்சரவையில் சிறந்து விளங்கும் ஓர் அமைச்சன் பாண்டவர்கட்கும் கௌரவர்கட்கும் பாட்டன். ‘ஆரிய வீட்டுன்; அந்தமிழ் புகழுடையான்’ என்கிறார்.

பாண்டவர்களின் கடைக்குட்டி மாத்ரியின் இரண்டாவது மகன்; சிறந்த யோகி ஆவான். சூதுப்போரில் முதன்முதலில் பணயம் வைக்கப்படுபவன்.

“எத்தகைய வலிமை பெற்றவராயினும் முறை பிறழ்ந்தால் தாழ்ந்து அவராலேயே அழக்கப்படுவர் என்பதற்கு உதாரணமாக பாஞ்சாலி சபதத்தில் துரியோதனனும் காப்பியங்கள் பண்பாட்டுப் பெட்டகங்களாதலின் ஒவ்வொரு பண்பாடும் எத்தகைய மாந்தரைத் தம் தலைவர்களாக, வீரர்களாக ஏற்றுக் கொண்டது என்பதை அவை நமக்குக் காட்டுகின்றன. தனக்கு ஏற்பட்ட வாழ்க்கைச் சிக்கலை ஒருவன் தீர்த்துக் கொண்டு அதனால் தனக்கும் தன்னைச் சார்ந்தோருக்கும் நன்மை எய்துவிப்பதால் வீரன் அல்லது தலைவன் (Hero) என்னும் பெயர்பெறுகிறான். இத்தகைய தலைவனை அல்லது அவனுடைய சமுதாயத்தை எதிர்த்துப் போரிடுபவன் எதிர்த்தலைவன் (Anti – hero) என்று அழைக்கப்படுகிறான். இவ்விரண்டும் வீரயுக மரபுப் பெயர்கள்”[19].

பாஞ்சாலி சபத பாத்திரங்களைப் போலவே கம்பரின் பாத்திரங்களும் மிக மிக இன்றியமையாதவர்களாக இராமன், பரதன், குகன், அனுமன், வாலி,

இராவணன், கும்பகர்ணன், வீடணன், சீதை, கைகேயி ஆகியோரை குறிப்பிடலாம். திரௌபதி, துரியோதனனைப் போலவே இராமனும், இராவணனும் விளங்குகின்றனர். இவ்வாறே மில்டனின் காப்பிய மாந்தர்களும் ஆதாம், ஏவாள், சாத்தான், திருக்குமரான் ஆகியோரைக் குறிப்பிடலாம்.

தனக்குற்ற இடையூறுகளை ஒருவன் தன்னுடைய உடல் வலிமையினால் நீக்கிக் கொள்ளலாம். அறிவுக் கூர்மையால் பெரும் சூழ்ச்சித் திறத்தினாலும் நீக்கிக் கொள்ளலாம். இந்த இருவகைச் செயல்பாடுகளில் ஈடுபடும் தலைவன் தன்னுடைய செயல் அறத்தின்பாற்பட்டதோ, நேர்மையானதோ என்று ஆராய்வதில்லை. வெற்றி மட்டுமே இலக்கு; வழிமுறைகள் இலக்கல்ல என்னும் நோக்குடையவனாக இருப்பான். இனி இவ்வாறின்றி ஒருவன் தன் ஒழுக்க மேம்பாட்டினாலும் அறம் தவறாத தன்மையாலும் தனக்குற்ற இன்னலை நீக்கி கொள்வதுமுண்டு. இத்தகையவன் போராட்டத்தில் வெற்றியை இலக்காகக் கொண்டாலும் வழிமுறைகளிலும் அறம் கடவாத பண்பையே மேற்கொள்வான். இத்தகைய வீரனைத் தலைவன் என்று போற்றுகின்ற பண்பாடும் உண்டு. உலகக் காப்பியங்கள் பலவற்றையும் ஆராய்ந்த அறிஞர்கள் காப்பிய வீரத்தை (Epic Heroism) உடல் அல்லது போர்வீரம், அறிவு அல்லது சூழ்ச்சி வீரம், ஒழுக்கம் அல்லது போர்வீரம் என்று மூவகையாகப் பகுப்பர்”

மில்டன் ஆதாம், ஏவாள் ஆகியோரை இயல்பான எதார்த்தம் பொருந்தியவராகவும் திருக்குமாரனை ஆன்மீக யதார்த்தம் பொருந்தியவராகவும், சாத்தனை ஆன்மீக யதார்த்தத்தின் சிதைவாகிய மானுட யதார்த்தம் பொருந்தியவனாகவும் படைத்துள்ளார். அதேபோல் பாஞ்சாலி சபதத்தில் நற்பண்பு மிக்க கதாபாத்திரங்களாக பாண்டவர்களையும் தீய

எண்ணம் கொண்ட பாத்திரங்களாகக் கௌரவர்களையும் படைத்துள்ளதை ந.சுப்புரெட்டியார் அவர்கள் விவரித்து சிறப்புற விளக்கியுள்ளார்.

தொகுப்புரை

பாத்திரங்கள் படைக்கப்பட்டிருப்பதை மகாபாரதத்தில் இருந்து பாரதி பயன்படுத்தி இருப்பதையும், பாரதி பயன்படுத்திய பாத்திரங்களின் சிறப்பை ந.சுப்புரெட்டியார் பயன்படுத்திய விதத்தையும் அழகாகவும் ஆழமாகவும் பாஞ்சாலி சபதத்தை அமைத்திருப்பது மிகச் சிறப்பாகும்.

அடிக்குறிப்புகள்

1. எஸ்.இராமகிருஷ்ணன், இளங்கோவில் பாத்திரப்படைப்பு, ப.7
2. தா.ஏ.ஞானமூர்த்தி, இலக்கியத் திறனாய்வியல், ப.26
3. இரா.காசிராசன், காப்பியத் தோற்றமும் வளர்ச்சியும், ப.167
4. மேலது, ப.168
5. தா.ஏ.ஞானமூர்த்தி, இலக்கியத் திறனாய்வியல், ப.19
6. மேலது. ப.21
7. சோ.கந்தசாமி, புரட்சிக் காப்பியம், ப.69
8. அகிலன், கதைக்கலை, ப.29
9. தா.ஏ.ஞானமூர்த்தி, இலக்கியத் திறனாய்வியல், ப.292
10. ஜெயமோகன், நாவல் கோட்பாடு, ப.4
11. மா.இராமலிங்கம், தற்காலத் தமிழ் இலக்கியம், பக்.65-66
12. கா.சிவத்தம்பி, நாவலும் வாழ்க்கையும், ப.89
13. ந.சுப்புரெட்டியார், பாஞ்சாலி சபதம் ஒரு நோக்கு, ப.45
14. மேலது., ப.81
15. மேலது., ப.85
16. மேலது., ப.39
17. மேலது., ப.47
18. அ.அ.மணவாளன், இலக்கிய ஒப்பாய்வு காப்பியங்கள், ப.98
19. மேலது., ப.85

இயல் - 4

காவிய உத்திகள்

முன்னுரை

காப்பியம் சிறப்படைய அதில் பயன்படுத்தப்படும் உத்திமுறைகளே ஆகும். இவற்றின் மூலமாக காப்பியத்தில் குறிப்பிடப்படும் உணர்வு நிலைகளை அறிந்து கொள்ள முடிகிறது. தெய்வீக கூறுகள் போன்ற பெண்ணிய கருத்துகளும் இடம்பெறுகின்றன. உத்தி முறைகளை பற்றி ஆய்வதே இவ்வியலின் நோக்கமாகும்.

பாஞ்சாலி சபதம் அவல உத்தி

மிகச் சிறந்த அவலக் காப்பியமாக பாஞ்சாலி சபதம் திகழ்கின்றது. வேறு எந்த காப்பியத்திலும் இல்லாத நிலையை இதில் காண முடிகின்றது. நாணயத்தின் இரு பக்கங்களைப் போல இன்பமும் துன்பமும் மாறிமாறி நிகழும். துன்பத்தை அடையும்போது துவண்டு விடுகிறது மனமானது.

துன்ப நிகழ்வுகளே உலக இலக்கியங்களில் மக்களின் மனங்களில் என்றும் நிலைத்து நிற்கின்றன.

‘இழிவே இழவே அசைவே வறுமையென
விளிவல் கொள்கை அழுகை நான்கே’

இழிவே எனப்படுவது பிறர் தன்னை இழிவுப்படுத்தும் போதும், ஒன்றை அதாவது உயிரானும் பொருளானும் இழத்தலின் போதும் அசைவென்பது தளர்ச்சி அதாவது வருத்தமும் களைப்பும் ஏற்படும் போதும் வறுமை – வறுமை நல்குரவு எனப்படும் போதும் “இவை நான்குத் தன்மாட்டுத்

தோன்றினும் பிறர்மாட்டுத் தோன்றினும் நிகழும் அவலமாகும்”[1] என்று குறிப்பிட்டுள்ளார்.

தமிழில் அவலம், துன்பியல் என்ற இரு சொல்லுக்கும் ஆங்கிலத்தில் (Tragedy) என்ற ‘டிராஜடி’ சொல்லைப் பயன்படுத்துவர் என்று பாஞ்சாலி சபதத்தில் பாஞ்சாலியின் துயரம் துரியோதனனால் ஏற்பட்ட மரபுக் கவிதைக்கு அணியிலக்கணம் போல, கருத்தை உணர்த்துவதற்குப் புதுக்கவிதையில் சில உத்திமுறைகள் கையாளப்படுகின்றன. படிமக் குறியீடுகள், தொன்மக் குறியீடுகள், அங்கதம் என்பன புதுக்கவிதைகளில் காணலாகும் உத்தி முறையாகும்”

காப்பிய நடை

வெண்பாவிற் புகழேந்தி; பரணிக்கோர்
சயங்கொண்டான்; விருத்த மென்னும்
ஒண்பாவில் உயர்கம்பன்; கோவை உலா
அந்தாதிக்கு ஒட்டக் கூத்தன்
கண்பாய கலம்பகத்திற்கு இரட்டையர்கள்
வசைபாடக் காளமேகம்
பண்பாய பகர்சந்தம் படிக்காச
லாலொருவர் பகரொணாதே”[2]

யார் யார் எந்த வகை இலக்கியங்களை இயற்றுவதில் வல்லவர் என்று எடுத்துக்காட்டும் ‘திறனாய்கவிதை”யை ந.சுப்புரெட்டியார் அவர்கள் முன்னும் பின்னும் பன்முறை நோக்கித் திறனாய்ந்த புலவரின் திறனை எண்ணி மகிழ்ந்துள்ளார்.

ஒரு காப்பியத்தைப் படைக்கும் கவிஞன் கையாளும் நடையும் அக்காப்பியத்திற்குச் சிறப்பளிக்கும் மேனாட்டு இலக்கிய வரலாற்றினைக்

கவனித்தால் பற்பல காலங்களில் காப்பியத்தில் கையாளப்பெறும் பாநடை மாறி மாறித்தான் வந்துள்ளது. மில்டன் துறக்க இழப்பை எழுதின பிறகு அகவல் நடைதான் (Black verse) காப்பியத்திற்கு ஏற்றது என்ற கொள்கை நிலவிவந்தது. தமிழ் இலக்கிய வரலாற்றிலும் பெருங்காப்பியத்தை இயற்றினவர்கள் பற்பல நடைவகையினைக் கையாண்டிருப்பதைக் காணலாம்.

யாப்பு வடிவத்திற்கு அடிப்படையாக சந்தம், தொடை, சீர், தளை, அடி ஆகியவற்றின் வேறுபாட்டால் பாவகை அமைகின்றன.

பாரதியாரின் ‘நொண்டிச்சிந்து’ போன்ற சாதாரண நடை சரியான இலக்கிய கருவியாகுமா என்று கற்றோரிடம் கேள்வி எழுந்தால் ஆம் என்பதுதான் சரியான விடை என்கிறார் ந.சுப்புரெட்டியார் அவர்கள். மேலும் தொல்காப்பியத்தில்,

“மரபுநிலை திரியா மாட்சிய வாகி
உரைபடு நூல்தாம் இருவகை நிலைய
முதலும் வழியுமென நுதுலிய நெறியின”[3]

நூலானது முதல்,வழி நூல் என்பதைக் குறிக்கப் பெறுவதை இந்நூற்பாவில் குறிப்பிடப்படுகிறார். மேலும்,

“பாட்டுரை நூலே வாய்மொழி பசியே
அங்கதம் முதுசொல் அவ்வேழ் நிலத்தும்
வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்
நாற்பே ரெல்லை அகத்தவர் வழங்கும்
யாப்பின் வழிய தென்மனார் புலவர்”[4]

என்று ஏழு வகை இலக்கிய படைப்புகளை வகைமை செய்கிறார். இது மட்டுமின்றி,

‘அதுவே தானும் பசியொடு மானும்”[5]

என்ற நூற்பாக்களின் மூலமாக தொல்காப்பியர் காலத்தில் இதிகாசம், பெருங்காப்பியம், காப்பியம், புராணம் என்பன இருந்தனவாக புலப்படவில்லை என்றும் தொல்காப்பியர் நூலை முதல் நூல், வழி நூல் என்ற பாகுபாடும், பாட்டு உரை, நூல், வாய்மொழி, பசி, அங்கதம், முதுசொல், பண்ணத்தி என்ற பாகுபாடுகள் மட்டுமே இருந்தன என்று காவியக் காலத் தமிழில் வையாபுரிப்பிள்ளை குறிப்பிடுகிறார்.

ந.சுப்புரெட்டியார் அவர்கள் இதனையே கவிஞருக்கு தனி உரிமம் உண்டு என்பதையும் அதில் யாரும் குறுக்கிட முடியாது என்கிறார். மேலும் இளங்கோவும் சாத்தனாரும் தமது காப்பியங்களில் அகவல் நடையைக் கையாண்டதற்கு எந்த மரபினைப் பின்பற்றினர் என்றும் தொல்காப்பியத்திலோ அதற்கு முன்னரோ யாரும் இதற்கு ஒரு மரபினைக் காட்டவில்லை என்கிறார். மேலும் தன்னுடைய விருப்பத்திற்கேற்ற வகையிலே அக்கால மக்களின் விடுப்பார்வத்தையொட்டியும் தம் முறைகளை வகுத்துக் கொண்டனர் என்று பாரதியாரும் இக்காலத்து மக்களின் சுவையை யொட்டியும் புது மெருகுடன் புதிய முறையில் காவியம் ஒன்றைச் செய்ய வேண்டும் என்ற தம் மேதைத் தன்மைக்கேற்பவும் புதுப்புது நடைச் சிறப்பினை மேற்கொண்டார் என்பது ஏற்புடையதாகும் என்கிறார். மேலும் இதனை,

‘விருந்தே தானும்
புதுவது புனைந்த யாப்பின் மேற்றே’

விருந்து என்ற தலைப்பில் இவற்றினை அடக்கி இலக்கணம் கூறமுடியும் என்கிறது தொல்காப்பியம். இதற்கு உரை கண்ட பேராசிரியரின் ‘புதிதாகத் தாம் வேண்டியவாற்றாற் பல செய்யுளுள் தொடர்ந்து வரச் செய்வது’ என்பதை

வலியுறுத்துவதற்காக பாரதியார் பல நூற்றாண்டுகளாக பிரபந்தங்களைத் தவிர நூல்கள் யாவற்றையும் விருத்தப்பாக்களில் செய்து அதற்கு ஓர் எல்லை கண்டுவிட்டனர் என்பதை அறிந்து தமது காப்பியத்திற்குப் புது யாப்புக் கருவிகளைத் தேடிக் கொண்டார்.

சாதாரண மக்களின் பேச்சுகளில் வரும் சொற்களைக் கையாண்டு சுயம்புவான இலக்கியச் சுவை கொப்பளிக்கும்படி செய்துள்ள பல இடங்களைக் காப்பியத்தில் காணலாம். ‘கரி நூறினைத் தனிநின்று நொறுக்க வல்லார்’ என்ற அடியும் திருதராட்டிரன் சகுனியை கடிந்து கூறும்பொழுது,

‘— வெறும்
நொள்ளைக் கதைகள் கதைக்கின்றாய், பழ
நூலின் பொருளைச் சிதைக்கின்றார்’
‘நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று
அப்பால் எட்டாம் மெய்ப்பா டென்ப’

என்ற தொல்காப்பியரின் நகை (சிரிப்பு), அழுகை, இளிவரல் (இழிவு), மருட்கை (வியப்பு), அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை (மகிழ்ச்சி) என்பன எண்வகை மெய்ப்பாடுகள் இதில் எதற்கு கலங்காதிருக்கும் சாந்தம் என்பதையும் சேர்த்து ஒன்பது நவரசங்களையும் கொண்டு,

“தேவி திரௌபதி சொல்வாள்; - ஓம்
　　தேவி பராசக்தி ஆணை யுரைத்தேன்
பாவி துச்சாதனன் செந்நீர் — அந்தப்
　　பாழ்த்துரியோதனன் ஆக்கை இரத்தம்
மேவி இரண்டுங் கலந்து — குழல்
　　மீதினிற் பூசி நறுநெய் குளித்தே
சீவிக் குழல் முடிப்பேன் யான் - இது
　　செய்யு முன்னே முடியேனென்றுரைத்தாள்

பாஞ்சாலியின் இந்த சபதத்தின் மூலம் வீரவுணர்ச்சி காணப்படுகின்றது. வெண்டளை பயின்று வந்த நொண்டி சிந்து ஆகும். சிந்துப்பா சமநிலை, வியனிலை என இருவகைப்படும்.

“ஓடி விளையாடு பாப்பா – நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா!
கூடி விளையாடு பாப்பா! ஒரு
குழந்தையை வையாதே பாப்பா”[6]

பொதுவாக சிந்துப் பாடல்கள் அளவொத்த இரண்டடிகளில் அமையும். ஓரெதுகை பெற்று வருதலும் சந்தம் மடக்கடி, மோனை வரவேண்டும். தளைக்கு வரையறையில்லை. தனிச்சொல் அடிதோறுமோ, மடக்கடி தோறுமோ வருவதுண்டு. தனிச்சொல் இடம்பெறாத சிந்துப் பாக்களும் உண்டு.

“வள்ளுவன் தன்னை உலகினுக்கே – தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு – நெஞ்சை
அள்ளும் சிலப்பதி காரமென்றோர் – மணி
யாரம் படைத்த தமிழ்நாடு”[7]

அடிதோறும் இயைபு பெறுவது தனிச் சொல்லின் முன்னும் பின்னும் மூன்று சீர்களேயன்றி இருசீர், நாற்சீர், ஐஞ்சீர், ஆறுசீர் என வரவும் பெறலாம். இவை சமநிலைச் சிந்துப் பாக்கள் ஆகும். சமநிலை சிந்து என்பது அளவான சீர்களைக் கொண்டு நடப்பது. இது தனிச்சொல்லின் முன் உள்ள அரையடியும், பின் உள்ள அரையடியும் தம்முன் அளவொத்து விளங்குவது.

தனிச்சொல்லின் முன் உள்ள அரையடியும் பின் உள்ள அரையடியும் தம்முன் அளவு ஒவ்வாமல் வருவது வியனிலைச் சிந்து எனப்படும்.

‘தின்னப் பழங்கொண்டு தருவான் - பாதி
தின்கின்ற போதிலே தட்டிப் பறிப்பான்

என்னப்பன் என்ஐயன் என்றால் - அதை

எச்சிற் படுத்திக் கடித்துக் கொடுப்பான்'

தனிச் சொற்கு முன்னும் பின்னும் முறையே மூன்று, நான்கு சீர்கள் அமைதல்

"அத்தின புரமுண்டாம்; - இவ்

அவனியி லேயதற் கிணையிலை யாம்

பத்தியில் வீதிகளாம்; - வெள்ளைப்

பனிவரை போற்பல மாளிகை யாம்

முத்தொளிர் மாடங்க ளாம்; - எங்கும்

மொய்த்தளி சூழ்மலர்ச் சோலைகளாம்

நத்தியில் வாவிகளாம் ; - அங்கு

நாடு மிரதிநிகர் தேவிகளாம்"[8]

நான்கடியில் ஓரெதுகை பெற்று வருதல்

பாரதியாரின் இந்த நொண்டிச் சிந்து குறிப்பிடத்தக்க ஒன்றாகும். காவடிச் சிந்தும் சிறப்பானதாகும்.

சித்தர் பாடல், பள்ளு, குறவஞ்சி, பாரதியார் பாடல் போன்றவற்றை படித்து உணரலாம். இதேபோல் அண்ணாமலை ரெட்டியாரின் காவடிச் சிந்து, பாரதியார் இயற்றிய நொண்டிச் சிந்து போன்றனவாகும்.

"திரௌபதியை அவமானப்படுத்தும் பொழுது கடுஞ்சினங் கொண்ட வீமன் பேச்சிலும் பாரதியார் புதிய யாப்பு முறைகளைக் கையாள்வதில் வங்கக் கவிஞர் தாகூரைப் போலவே இலக்கிய உலகில் ஒரு புதிய புரட்சியை உண்டாக்கிவிட்டார் எனலாம்"[9]

சில இடங்களில் சிந்து நடை காவியத்தை மிகவும் சுவையாக்கியுள்ளது.

லால லாலலா லா லாலா

லால லாலலா லா

என்ற மெட்டுள்ள சிந்துக்கள் சூதாட்டத்தை வருணிக்கும் போது கையாளப் பெற்றுள்ளன.

“காயு ருட்ட லானார் - சூதுங்
களி தொடங்க லானார்
மாய முள்ள சகுனி – பின்னும்
வார்த்தை சொல்லுகின்றான்
நீ அழித்த தெல்லாம் - பின்னும்
நின்னிடத்து மீளும்
ஓய்வ டைந்தி டாதே – தருமா
ஊக்க மெய்து கொன்றான்”[10]

என்றும் வரும் பகுதிகளில் தாயக் கட்டைகள் போடும் போது ஏற்படும் ஒலிகளை யொட்டியே இந்தப் பகுதியில் அமைந்து மிகவும் கனிந்த நாடகத் தன்மையுடன் மிளிர்கின்றன.

சிறந்த காப்பியம் என்பது படிப்பவருக்கு கண்முன்னே காட்சியை வரவழைப்பதாகும். அத்தகைய நிலையில் இந்த பாஞ்சாலி சபதமானது அமைக்கப்பட்டுள்ளது.

செந்நெறிப் புலவர்கள் (Classical Poets) காப்பியம் படைக்க முற்படும் பொழுது மிகப் பழங்காலத்தில் தோன்றி செவிவழிச் செய்தியாக மக்களிடையே நின்று நிலவிய கதைகளையே தேர்ந்தெடுப்பதிலேயே நாட்டம் செலுத்துவதனைக் காண்கிறோம். மக்களுக்குத் தெரியாத புதிய கதை ஒன்றினைத் தம் கற்பனையாற்றல் மூலம் படைப்பதைக் காட்டிலும் அனைவரும் அறிந்த கதை ஒன்றைத் தம் கவிநலம் புலப்படப் புதிய முறையில் தருவதே வரவேற்கத் தகுந்தது என்று உரோம் நாட்டுத் திறனாய்வாளர் ஹோரஸ்

கூறுகின்றார். இவ்வாறே பாரதியார் பாஞ்சாலி சபதத்தை இயற்றியுள்ளார் எனலாம்.

காப்பிய நடை நிகழ்ச்சிகளை யொட்டிப் புதியதொரு விறுவிருப்பைப் பெறுகின்றது. களத்தில் தோற்போருக்கும் வெல்வோருக்கும் இரு பக்கங்களில் நின்று பார்ப்போருக்கும் உள்ள படபடப்பும், மனத்துடிப்பும், ஏமாற்றமும் எதிர்பார்ப்பும் அற்புதமாகத் தெரிகின்றன. படபடப்பாகச் செல்லும் கவிதை நடையில் கருத்திற்கேற்ப நடை அமையும் என்பர் திறனாய்வாளர். இங்குச் சூதாடும் மனப்படபடப்பு, தோல்வி, விரைவு யாவும் நடையில் மிளிர்வதைக் காணலாம் என்றும் திரௌபதி வென்றதும் விளையாட்டுக்களில் வெற்றிக்குப் பின்னர் பார்வையாளர்களிடையே எழும் உள்ளக் கிளர்ச்சியும் ஆரவாரமும் போல் கௌரவர்களிடையே எழுகின்றன”[11] என்கிறார் ந.சுப்புரெட்டியார் அவர்கள்.

உலக அநுபவத்தையுடைய கவிஞர் இக்கால ஆரவாரத்தை வெற்றிக் களிப்பை அப்படியே நம் கண்முன் கொண்டு வந்து நிறுத்த ஏற்ற நடையைக் கையாண்டுள்ளார்

“குப்பை கொலோ முத்தும்? – அந்தக்
குரை கடல் நிலத்தவர் கொணர்ந்து யெய்தார்”

சாதாரண மக்களின் பேச்சில் எடுத்தாளப்பெறும் ‘குப்பையிலும் முத்தோ’ என்ற உவமை பாரதியாரின் எளிமை காவிய நடைக்கு உயிர்ப்பூட்டுகின்றன.

காவியத்தில் படிமங்கள்

எந்தக் கவிஞனும் தன் அனுபவத்தைத் தேர்ந்தெடுத்த சொற்களால் உணர்வூட்டி நமக்குத் தருகின்றான். படிமங்கள் (images), சிந்தனை இவற்றின் குறியீடுகளாகச் சொற்கள் விளங்குகின்றன.

“ஆழ்மனத்தில் மறைந்திருக்கும் நினைவுகளின் மங்கிய காட்சி நிலைகளாகவும் படிமங்கள் புலப்படுகின்றன. நினைவில் படிந்த ஒரு புறக்காட்சி அல்லது புற உலகப் பண்பின் ஏதேனும் ஒரு நிலை கவிதையாக முதிர்ச்சிக் கொள்கையில் அது படிமக் கவிதையாகிறது. இது வெறும் படப்பிடிப்பு மட்டுமோ நினைவின் சுவடு மட்டுமோ அல்ல. புறக்காட்சியின் மனத்தைப் பாதிக்கும் ஒரு கோணம் மட்டுமே படிமமாக கலை உருக்கொள்கிறது. இவ்வுண்மையை ‘புறவய யதார்த்தத்தின் அச்சு நகலாகப் படிமம் இராது. அதன் சில அம்சங்களை மிகைப்படுத்தி அழகியல் படிமம் உருவாக்கப்படும்”[12]

“படிம வகை, மேல்நாட்டுக் கவிஞர்களாலும், திறனாய்வாளர்களாலும் தமிழ்ப் புதுக்கவிஞர்களாலும் பற்பலவாகக் கூறப்பட்டு விண்மீன்களைப் போல் பெருகிச் செல்கின்றன. படிமம் எதைச் சார்ந்து காட்சிப்படுகிறதோ அந்தத்தளம் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையாகி விடுகிறது. சொற்களே படிமங்களாதலும், படிமங்களே சொற்களைப் படைத்தலும் உண்டு. சூரியத்தாடி, நெருப்புக்காளி என்று கூறும்போது அவை மேலெழுந்தவரியான சொற்கள் சேர்ந்து அமைந்த படிமங்களாகப் புலப்படுகின்றன”[13] மேலும் படிமச் சிறப்புகளைக் கூறுமிடத்து,

“படிமத்தின் வகைகளை அகராதிகளும், ஆய்வாளர்களும் பலப்பலவாய்ப் பிரித்துக் காட்டுகின்றனர். ஏராளமான படிம வகைகளைப் படிமவியக்கக் கவிஞர்கள் அறிமுகஞ் செய்கின்றனர். பிரின்ஸ்மன் மனப்படிமம், அணிப்படிமம், குறியீட்டுப் படிமம் என மூவகைப் படிமங்களைச் சுட்டுகிறது”[14]

ந.சுப்புரெட்டியார் அவர்கள் பர்ட்டன் என்ற திறனாய்வாளரின் கருத்துப்படி கவிதையில் படிமம் அதிகமாகப் பயன்படுகிறது என்றும், அவ்வறிஞர் கூறியபடி செலுத்தப்பெறும் புலன்களுக்கேற்ப படிம வகைகளை வகைப்படுத்தியுள்ளார்.

கட்புலப் படிமங்கள் (Visual images). இவற்றில் வண்ண படிமங்கள் (Auditory images) சுவைப் புலப் படிமங்கள் (Gustatory images), நாற்றப்புலப் படிமங்கள் (Olfactory images) என்பனவாகும். இவற்றைத் தவிர இயக்க நிலைப் படிமங்கள் (Kinaesthetic images) மரபுநிலைப் படிமங்கள் (Conventional) என்பவையும் உள்ளன. இவை தனியாகவும் ஒன்று இரண்டு பலவாகவும் இணைந்து கலவைப் படிமங்களாகவும் (cluster) கவிதைகளில் அமைகின்றன. மேலும் குறியீடுகளாக அமையும் சொற்கள் ‘கட்டுண்ட’ படிமங்களையும் (Tied images), விடுதலைப் படிமங்களையும் (Free images) உண்டாக்கிப் படிப்போரிடையே ஒத்துணர்வு துலங்களையும் (sympathetic response), ஒட்ட உணரும் துலங்களையும் (Empathetic response) எழுப்புகின்றன. இவற்றில் படிப்போரின் கவிதையநுபவம் - முருகுணர்ச்சி – கொடுமுடியை எட்டுகின்றது”[15]

பாரதியாரின் பாஞ்சாலி சபதத்தை பர்ட்டனின் நோக்கு அவர்தம் காவியத்தில் எவ்வாறு அமைந்துள்ளது என்பதை கட்புலப் படிமங்கள், செவிப்புலப் படிமங்கள், சுவைப்புலப் படிமங்கள், இயக்கநிலைப் படிமங்கள், கலவை நிலைப் படிமங்கள், மின்வெட்டுப் போன்ற மணிமொழிப் படிமங்கள் போன்றவற்றினை ந.சுப்புரெட்டியார் ஒப்பிட்டுச் சிறப்புறக் கூறியுள்ளார்.

கட்புலப் படிமங்கள்

பல்வேறு படிமங்களில் கட்புலச் சொல்லாடல் ஒன்று. இத்தகைய சொல்லாடல் படிப்போரின் மனத்தில் நிலையான பதிவினை உண்டாக்கி விடுகின்றன. லியோடால்ஸ்டாயின் புத்துயிர்ப்பு நாவலில் ஆயிரக்கணக்கான கட்புலனைக் கவரும் படிமச் சொல்லாடல்கள் நிரம்பிக் காணப்படுகின்றன.

"அப்பொழுது பேதுரு அவரிடம் வந்து ஆண்டவரே! என் சகோதரன் எனக்கு விரோதமாய்க் குற்றம் செய்துவந்தால் நான் எத்தனை தரம் மன்னிக்க வேண்டும்? ஏழு தரமோ என்று கேட்டான். அதற்கு இயேசு ஏழு தரம் மாத்திரம் அல்ல. ஏரெடுபது தரம் என்று உனக்குச் சொல்கிறேன் என்றார்.

நீ உன் கண்ணிலிருக்கிற உதிரத்தை உணராமல் என் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பைப் பார்க்கிறதென்ன"[16] மேலும் படித்தை உணர்த்தும்விதமாக,

"உங்களில் பாவமில்லாதவன் இவன் மேல் முதலாவது கல்லெறியக் கடவன்"[17] படிப்போரின் மனதில் நிலையான பதிவினை உண்டாக்க கட்புலப் படிமத்தில்,

"எல்லாம் வல்ல இறைவன் பேரில் ஆண்டவரது பரிசுத்த வேதாகமத்தின் பேரில் நமது கர்த்தரின் உயிரளிக்கும் சிலுவையின் பேரில் நான் ஆணையுறுதி ஏற்கிறேன்"[18] என்ற தொடரானது அமையப் பெறுகிறது. மேலும் நாவலில்,

"சமயம் சம்பந்தமாகவுங்கூட அவர் சரியான விவசாயிக்குரிய போக்கினையே கொண்டிருந்தார். பொய் விளக்கப் பிரச்சனைகளையும் ஆதிக்கு எல்லாம் ஆதியானது எது என்பதையும் மறுமையையும் பற்றி அவர் சிந்திப்பதே இல்லை. அரகோவுக்கு எப்படியோ அதுபோல அவருக்கும் கடவுள்

ஒரு கருதுகோள்தான். உலகம் தோன்றியது எப்படி மோசஸ் கூறிய வழியிலா அல்லது கூறிய வழியிலா அகப்படைப்பைப் போலவே மனித சிந்தனை விளையாடுவதற்குரிய விளையாட்டுப் பொம்மையாகவே அவருக்குப் பட்டது"[19] உலகம் உதித்தெழுந்தது பற்றிய சிந்தனைகளில் படைப்பாசிரியரின் படிம சொல்லாட்சி இவ்வாறு அமைகிறது என்றும்,

"இல்லத் தலைவி பழைய மரபைச் சேர்ந்த பீட்டர்ஸ்பர்க் Grande dame முதலாம் நிக்கலாயின் அரசவையில் செடியாய் இருந்தவள் சரளமாகவும் இயல்பாகவும் பிரெஞ்சும் செயற்கையான முறையில் ருஷ்யனும் பேசினாள்"[20]

மேலும் லியோடால்ஸ்டாயின் நாவலில் படிமத்தை, "பிணவறை பெரியதல்ல. சாதாரணமான அறைதான். சுவரின் ஒரு சிறுவிளக்கு எரிந்து கொண்டிருந்தது. ஒரு மூலையில் குவிந்திருந்த சாக்குகளும், மரக்கட்டைகளும், வலப்புறத்தில் பலகைப் படுக்கைகளில் இருந்த நான்கு பிணங்களும் அந்த விளக்கின் மங்கலான வெளிச்சத்தில் தெரிந்தன"[21]

மேற்கண்டதில் படைப்பாளர், வாசகனின் மனத்தில் நிலையான பதிவினை உண்டாக்கும் முறையினைக் காணலாம். டால்ஸ்டாய் நாவலில் கட்புலப் படிமங்கள் பயின்று வந்துள்ளதைப் போல பாண்டவர்கள் அத்தினப்புரத்திற்கு பயணம் மேற்கொள்கையில் மழைக்காலம். அப்போது ஒரு பூம்பொலில் தங்கியிருந்தபொழுது பார்த்தன் பாஞ்சாலிக்கு பரிதியின் எழிலை விளக்குகின்றான்.

'செழுஞ் சோதி வனப்பையெல்லாம் சேரக் காண்பாய்' என்று கூறி,

"கணந்தோறும் வியப்புகள் புதிய தோன்றும்
கணந்தோறும் வெவ்வேறு கனவு தோன்றும்
கணந்தோறும் நவநவமாம் களிப்புத் தோன்றும்

கருதிடவும் சொல்லிடவும் எளிதோ ஆங்கே
கணந்தோறும் ஒரு புதிய வண்ணம் காட்டிக்
காளி பரா சக்தி அவள் களிக்கும் கோலம்
கணந்தோறும் அவள் பிறப்பால் என்று மேலோர்
கருதுவதன் விளக்கத்தை இங்கு காண்பாய்"[22]

என்ற பாடலில் கட்புலப் படிமங்களில் வண்ணப் படிமங்கள் பல இணைந்து ஓர் அற்புதக் கலவைக் காட்சியினை நம் மனத்தகத்தில் தோற்கடித்து பூரிப்படையச் செய்கின்றன.

'இடிவானத் தொளிமின்னல் பத்துக்கோடி
எடுத்தவற்றை ஒன்றுபட உருக்கி வார்த்து
முடிவான வட்டத்தை'

இமை குவிய மின்வட்டின் வயிரக் கால்கள் எண்ணில்லா திடையிடையே எழுதல்

பரிதியை விளக்கும் வடிவப் படிமங்களைக் கண்டு மகிழலாம். மேலும் நீலப் பொய்கைகளை வர்ணிக்குமிடத்து வடிவக் கட்புலப் படிமங்களைக் கவிதை பொலிவுறச் செய்கிறது.

'வேதத் திருவிழியாள்; - அதில்
மிக்கடல் ஓரையெனும் கருமையிட்டாள்
சீதக் கதிர் மதியே – நுதல்
சிந்தனை யேகுழல் ஒன்றுடையாள்'

இவற்றில் வண்ண வடிவக் கட்புலப் படிமங்களைக் கண்டு மகிழலாம் என்கிறார் ந.சுப்புரெட்டியார்.

செவிப்புலப் படிமங்கள்

பாரதியாரின் முருகியல் நோக்கில் செவிப்புலப் படிமங்களைப் படைப்பதிலும் செல்லுகின்றது.

மந்திர கீதங்களாம்; - தர்க்க

வாதங்களாம்

இவை அத்தினபுர வருணனையைக் கூறுமிடத்தில் வருபவை இவற்றைப் படிக்கும் போது நம் மனக்காது மந்திர கீதங்களைக் கேட்கிறது. பட்டிமன்றம் போன்ற அமைப்பில் நடைபெறும் 'தர்க்க வாதங்களையும் கேட்கின்றது. விதுரனின் தூதுச் செய்திகளில் சூது பற்றிய சதியை அறிந்ததும் வீமன் திகைத்து நிற்கிறான். தரும புத்திரனின் ஆணைப்படி படை முதலியவற்றை ஆயத்தம் செய்யப் புகுந்தவனின் சினத்தைக் காட்டும் கவிஞர்,

'தாமதம் செய்வோமோ? – செலத்

தகுந்தகும் எனஇடியுற நகைத்தான்'

என வீமனின் 'இடிக்குரல்' நம் மனக்காதில் விழுகின்றது. தருமன் கவறாடலை மறுக்கும் போது சகுனியின் ஏச்சினைக் காட்ட வந்த கவிஞர்

'கலகலவெனச் சிரித்தான் - பழிக்

கவற்றையோர் சாத்திர மெனப்பயின்றோன்'

என்று கூறுவதில் சகுனியின் சிரிப்பொலியைக் கேட்கின்றோம். இதே போன்று லியோ டால்ஸ்டாயின் நாவலில் காதுகளால் கேட்கப்படும் ஓசைப்புலன் உணர்வு நாவலில் படிமமாகப் பயன்படுத்தப்படும் சொல்லாடலைக் காணலாம்.

'குற்றமற்றவர் இந்தப் பெண், இதில் சிக்கிக் கொண்டு விட்டாள். இவளுக்குக் கருணை காட்டும்படி கேட்க வேண்டும்.

'நமது பரிசீலனைக்குரிய இது தமது சொந்த விருப்பு வெறுப்புக்கு இடமளிக்காது' என்கிறார் தலைமை சான்றாயர்.

'தலைமை நீதிபதியின் தொகுப்புரை நன்றாயிருந்தது' என்று கூறினார் கர்னல். கேட்கவே முடியவில்லை; அதைப்போய் அதைப்போய் நன்றாயிருந்தது

என்கிறீர்களே. ‘இந்த மாஸ்லாவும் சேர்ந்து சதி செய்திராவிடில் ஓட்டல் பணியாட்களுக்கு அங்கே பணம் இருந்த விபரம் தெரிந்திருக்க முடியாது. இதுதான் இங்குள்ள பிரதான விஷயம்’ என்றார் யூத இனத்தவரான விற்பனையாளர்.

‘அப்படியானால் அவள்தான் பணத்தைத் திருடினாள் என்றா நினைக்கிறீர்கள்’ என்று கேட்டார் சான்றாயர்களில் ஒருவர்.

‘என்னால் அதை நம்பவே முடியாது’ என்று பலக்கக் கூவினர் இளகிய மனமுடைய வணிகர். ‘அவ்வளவும் அந்த எமகாரச் செங்கண்ணி செய்த வேலை என்றேன். மூவரில் யாரும் சளைத்தவரல்ல’ என்றார் கர்ணல்.

‘அவள் சொல்வாள்தான்! அந்த பிசாசை ஒருபோதும் நம்ப மாட்டேன். நீங்கள் நம்புகிறீர்களோ இல்லையா என்பதல்ல இங்குள்ள பிரச்சனை’ என்றார் அந்த விற்பனையாளர்.

‘சாவி மாஸ்லவாவிடம்தான் இருந்தது’ என்றார் கர்னல்.

இருந்தால் என்னவர்? என்று சட்டெனக் கேட்டார் வணிகர். சரி. மோதிரத்தைப் பற்றி என்ன சொல்கிறீர்கள்”[23]

மேற்காண்பதில் அத்தினபுர வருணனை எப்படி நம் மனக்காது மந்திர கீதங்களை கேட்கச் செய்தது போல பட்டிமன்ற அமைப்பில் காதுகளால் கேட்கப்படும் ஓசைப்புலன் உணர்வு புதினத்திலும் நீண்ட சொல்லாட்சியாக அமைந்துள்ளது.

சுவைப்புலப் படிமங்கள்

சுவையுணர்வு படைப்பாளரின் ஆளுமைகளில் படிமமாகப் பயன்படுத்தப்படுவதாகும்.

“அளவு மீறி மது உண்டதால் நேர்ந்த இருதய நெகிழ்ச்சியால் மரணம் ஏற்பட்டதாக”[24] என்று மது உண்பதால் ஏற்படும் மயக்கத்தையும்

“சாராயம் கிடைக்குமென்றா ஓடி வந்தாய்?”[25]

மதுவின்மீது கொண்ட ஆர்வத்தையும் சுவையுணர்வை வெளிப்படுத்தும் விதமாகவும், மேலும்,

“பிறகு ஒரு கோப்பையில் இருந்த திராட்சைத் தேறலில் ஒரு சில துண்டுகளைப் போட்டார்”[26]

திராட்சையின் சுவையினையும் வெளிப்படுத்தியுள்ளார் நாவலாசிரியர்.

“கைதிகள் முகங்கழுவிய பின் உடுத்திக்கொண்டு பார்வைப் பதிவுக்காக வெளியே வந்தார்கள். இது முடிவடைந்ததும் தேநீர்க் கெட்டிலுக்குக் கொதிநீர் அருந்தியபோது”[27]

தேநீரின் சுவையையும் அதன்மூலம் ஏற்படும் சுவையுணர்வையும் அழகுற வெளிப்படுத்தியுள்ளார்.

“புகை பிடித்துக் கொண்டும் தேநீர் அருந்திக் கொண்டும்”[28] சுவை குறித்த உணர்வுகள் உரையாடல்களாக நீளுகின்றன. புகைப்பிடிப்பதால் ஏற்படும் உணர்வை இங்கு காட்டியுள்ளார்.

பாரதியாரின் பாஞ்சாலி சபதத்தில் சுவைப்புலப் படிமங்கள் அதிகமாக காணப் பெறவில்லை என்கிறார் ந.சுப்புரெட்டியார் அவர்கள்.

‘ …… …. - கெட்ட
வேம்பு நிகரிவ னுக்குநான்; - சுவை
மிக்க சருக்கரை பாண்டவர்’

என்று திருதிராட்டிரனின் நல்லுரைகளைக் கேட்ட துரியோதனன் வேம்பின் கசப்புச் சுவையும் சருக்கரையின் தீஞ்சுவையும் நம்மனத்தில் தட்டுப்படுகின்றனனவல்லவா? துரியோதனன் தன்னை இகழ்ந்து உரைக்கும்போது விதுரன் கூறும் நீதிமொழி

'பால்போலும் தேன்போலும் இனிய சொல்லோர்
இரும்பைக்கு வழிசொல்வார்; நன்மை காண்பார்
இளகுமொழி கூறார்'

இக்கூற்றில் பாலின் சுவையும் தேனின் சுவையும் நம் மனத்திற்குத் தட்டுப்படுகின்றன.

நாற்றப் புலப் படிமங்கள்

மூக்கினால் முகர்ந்து அனுபவிக்க வேண்டியவை இப்படிமச் சொல்லாடல்கள். இவை படைப்பாளரின் பயன்பாடுகளில் காணப்படுகின்றன.

"வயல்வெளிகளின் விறுவிறுப்பூட்டும் தூய காற்று நகருக்குள் வீசிச் சிறைக் கூடத்தின் வெளிமுற்றத்துக்குக் கூட வந்திருந்தது. ஆனால் இங்கே நடையினுள் அடைந்திருந்த பிணிக்காற்று புதிதாக உள்ளே வருவோர் திணறித் திண்டாடும் படியாக கக்கூஸ் வீச்சமும், கிலின் நெடியும் முடைநாற்றமும் மிக்கதாக இருந்தது, துர்நாற்றக் காற்றைச் சுவாசித்துப் பழக்கப்பட்டவளான பெண் காவலராலுங்கூட இதைச் சகிக்க முடியவில்லை"[29]

மேற்கண்டத்தில் மூக்கினால் முகர்ந்து நோக்கும் சொல்லாடல்களை காணமுடிகின்றது. இந்த வகையில் முருகுணர்ச்சியை நல்குவதாயினும் பாஞ்சாலி சபதத்தில் அரிதாகவே காணப்படுகின்றன என்கிறார் ந.சுப்புரெட்டியார்.

‘பொன்னிறப் பாஞ்சாலி – மகிழ்

பூத்திடும் சந்தனம் அகில் வகைகள்

ஏலம் கருப்பூ ரம் - நறும்

இலவங்கம் பாக்குநற் சாதிவகை

கோலம் பெறக் கொண்ர்ந்தே – அவர்

கொட்டி நின்றார், கரம் காட்டினார்’

இப்பகுதியினை படித்துச் சுவைக்கும் பொழுது மணப் பொருள்களின் மணம் மூக்கைத் துளைப்பதை உணர்கிறோம். மேலும்

“நாடுறு தயில வகை – நறு

நானத்தின் பொருள்பலர் கொணர்ந்து தந்தார்”

இராச சூய பெருவேள்வியினைத் தருமன் நடத்திய பொழுது பல நாட்டு மன்னர்களும் மக்களும் காணிக்கை பொருள்களைக் கொண்டு வந்து கொடுத்ததை துரியோதனன் எள்ளி நகையாடுவான். மேற்குறிப்பிட்ட அடிகளைப் படிக்கும் பொழுது தயில வகைகளின் வாசனை கஸ்தூரியின் நறுமணமும் நம் மூக்கைத் துளைப்பதாக உணர்கிறோம்.

தொடுபுலப் (நொப்புல) படிமங்கள்

இந்த நுண்ணிய உருக் காட்சிகள் காவியத்தில் அமைந்து காவியத்திற்குப் பொலிவூட்டுகின்றன. துரியோதனனின் பொறாமைத் தீயை வருணிக்கும் கவிஞர்

‘குன்ற மொன்று குழைவுற் றிளகிக்

குழம்பு பட்டழி வெய்திடும் வண்ணம்

கன்று பூதலற் துள்ளுறை வெம்மை

காய்ந்தெழுந்து வெளிப்படல் போல’

என்று கூறும் போது ‘வெப்ப உணர்ச்சி’ தட்டுப்படுகின்றது. பொறாமையைத் தீ என்று உருவகித்ததைப் போலவே சினத்தையும் தீ என்று உருவகித்திருப்பார்

பாரதியார். இன்ப நிகழ்ச்சிகளில் பொழுது போக்குமாறு தந்தை கூறுவதைச் செவிமடுத்த சுயோதனன் சினங் கொள்கிறான். ‘கோமகன் வெந்தழல் போலச் சினங்கொண்டே தன்னை மீறிப் பல சொல் விளம்பினான்’ என்று. இதனைக் கவிஞர் கூறும் போதும் நெஞ்சைத் தின்னும் கொடுந்தழல் கொண்டவர் சொல்லுஞ் செய்தி தெளிய உரைப்பாரோ என்ற சகுனியின் பேச்சிலும் இந்த வெப்பத்தை நம் மனம் உணர்கின்றது.

காவியம் உணர்த்தும் உண்மைகள்

வாழ்க்கையிலும் மனிதப் பண்பிலும் உள்ள பொதுத் தன்மையை எடுத்துக் கூறுவதே கவிதையின் நோக்கமாகும்.

உணர்ந்தவைகளை உணர்த்துவதே இலக்கியம். தானுணர்ந்த இன்ப துன்பங்களை இலக்கிய வடிவங்களில் புலவன் வெளியிடுகிறான்.

வடமொழியாளர்கள் தலைவன் ஏவலாளர்க்குக் கூறுதல் போன்றவை அறநூல்கள் என்றும், நண்பர் ஒருவருக்கொருவர் கூறும் முறையில் அமைந்தவை புராணங்கள் என்றும் கணவனுக்கு மனைவி உரைப்பது போன்றவை காவியங்கள் என்றும் ஒருவகைப்பாடு செய்து வடமொழியாளர்கள் கூறுவர். கவிதையில் சொற்களைவிட உள்ளத்து உணர்ச்சிகளே ஆற்றல் மிக்கவை. சொற்களால் உணர்த்துவதைவிட குறிப்பால் உணர்த்துவதே சிறப்பு. சில வரிகளில் சங்க அகப்பாடல்கள் உணர்ச்சியைக் கொட்டி நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுகின்றன”[30] என்று கூறப்படுகின்றது.

பெண்ணிற்கு கொடுமையிழைத்தால் அது பெரும் பாவம் என்றும் பாஞ்சாலியை பெண்ணே பெண்ணிற்காகவும் பெண்ணிற்கு அளிக்கப்படும்

கொடுமைகளை அவளே தட்டிக் கேட்பதைப் போல படைத்த பாரதியார் பாஞ்சாலியை ஒரு புரட்சிப் பெண்ணாக்கியுள்ளார்.

பாண்டவர் வேள்வியில் சமைத்தது போன்று துரியோதனன் ஒரு ஈடு இணையற்ற பிரமிக்கத் தக்கவகையில் சூழ்ச்சி எண்ணம் கொண்டு மாளிகை கட்டுதல், விதுரனின் மூலமாக விருந்துக்கு பாண்டவர்களை அழைத்தல், தனது கெட்ட எண்ணத்தை நிறைவேற்ற சகுனியின் மூலமாக சூதாட பாண்டவர்களை அழைத்து அனைத்தையும் இழக்கச் செய்து அவர்களையும் பாஞ்சாலியையும் அடிமையாக்குதல், காப்பியத்தில் முக்கியப் பகுதியான துரியோதனனின் தம்பி துச்சாதனன் பாஞ்சாலியை மன்றுக்கு இழுத்து வந்து மானபங்கம் செய்தல் முதலான செயல்கள் சங்கிலித் தொடர்போல் அமைந்து பாரதப் போர் ஏற்படுதல். அதில் கௌரவர்கள் மாண்டு போதல். இவை ‘அழுக்காறு உடையார்க்கு அதுவே சாலும்

‘அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி யுய்த்து விடும்’

என்றும் பொதுமறையில் காணப்படும் வள்ளுவரின் வாய்மொழிகளும் பாரதியாரின் மூலமாக நம்மைச் சிந்திக்க வைக்கின்றன என ந.சுப்புரெட்டியார் குறிப்பிடுகிறார்.

சூதின் கொடுமையை உணர்த்துகின்றார் பாரதியார். தருமன் நாட்டைப் பணயமாக வைத்துச் சூதாடி இழந்ததும் பாரதியார் சினம் கொள்கிறார். சூதாடிய தருமன் தன்னுடைய நாட்டையும் தம்பியரையும் தன்னையும் திரௌபதியையும் இழந்து உலகப்பழிக்கு ஆளாகின்றான். இக்காப்பியத்தில் இடத்திற்கேற்றவாறும் சந்தர்ப்பத்திற்கேற்றவாறும் கதை மாந்தர் வாயிலாக

ஊழின் வலி எடுத்துரைக்கப்படுகின்றது. ‘பெண்பாவம் பொல்லாதது’ என்பது உண்மை என்று எடுத்துக் கூறுகின்றது.

‘நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்கு மஞ்சாத நெறிகளும்
நிமிர்ந்த ஞானச் செருக்கு மிருப்பதால்
செம்மை மாதர் திறம்புவ தில்லையாம்’

என்று பெண்பாவம்தான் பாரதப் போருக்கு வித்திடுகிறது என்றும் பாரதியார் பாஞ்சாலியை ஆண்மை கூறுகளை உடையவள் போல தன்னிலை தானே சமாளித்து பெண்ணுக்கு பாவம் இழைத்ததால்தான் கௌரவர்கள் பூண்டோடு அழிந்துபட்டனர். இங்ஙனம் காவியம் உணர்த்தும் உண்மையாகும்.

தெய்வீக கூறுகள்

பாஞ்சாலி சபதத்தில் தெய்வீகம் தொடர்பான செயல்கள் முக்கியமான இடம்பெறுகின்றன. கண்ணன் தெய்வீகச் சக்தியாகக் காட்சியளிக்கிறார். கண்ணன் பரம்பொருளின் கூறு என்றும் எல்லோரும் உணரும்படி மக்களுடன் கலந்து பழகுகின்றான்.

‘ஆதிப் பரம்பொருள் நாரணன்; - தெளி
    வாகிய பாற்கடல் மீதிலே – நல்ல
சோதிப் பணாமுடி யாயிரம் - கொண்ட
    தெல்லறி வென்னுமோர் பாம்பின்மேல் ஸ்ரீ ஒரு
போதத் துயில்கொளும் நாயகன் - கலை
    போந்து புவிமிசைத் தோன்றினான் - இந்தச்
சீதக் குவளை விழியினான்’

திருதராட்டிரன் வாய்மொழியாலும் விதுரன், வீட்டுமன், துரோணர் போன்றோர் வாய்மொழியாக தெளிவு பெறுகிறது. மேலும் வீமன் மற்றும் அர்ச்சுனன் சபதம் செய்யும் போதும் வெளிப்படுகின்றது.

பாரதியார் பாஞ்சாலியையும் ஒரு தெய்வீகத் தன்மையுடையவளாகக் காட்டியுள்ளார். விதுரன் ‘தெய்வத் தவத்தி’ என்று பேசுகின்றார். பாஞ்சாலி சபதம் ஒரு அறம் கூறும் காப்பியமாகும். தமிழிலக்கியத்தில் கவிதையின் சிறப்பு ஓசை. சொல்லடுக்கு இன்றியமையாதவை. எனினும் பொருள் முக்கியமானது கவிதை என்பது வாழ்க்கையின் விளக்கமாகும்.

தொகுப்புரை

படிம உத்திமுறைகளை நாவலின் வாயிலாக பாஞ்சாலி சபதத்தில் பயன்படுத்திய முறைகளையும், காவியம் உணர்த்துகின்ற பெண்ணியம் தொடர்பான உண்மைகளையும் உத்தி முறைகளையும் திறனாய்வு நோக்கில் ந.சுப்புரெட்டியார் பயன்படுத்திய முறை சிறப்பாகும்.

அடிக்குறிப்புகள்

1. தொல்காப்பியம், பொருள், ப.351
2. ந.சுப்புரெட்டியார், பாஞ்சாலி சபதம் ஒரு நோக்கு, ப.106
3. தொல்காப்பியம், பொருள், ப.532
4. மேலது., ப.425
5. மேலது.,ப.488
6. பாரதியார் கவிதைகள், ப.240
7. மேலது., ப.151
8. பாரதியார் கவிதைகள் (பாஞ்சாலி சபதம்), ப.311
9. ந.சுப்புரெட்டியார், பாஞ்சாலி சபதம் ஒரு நோக்கு, ப.107
10. பாரதியார் கவிதைகள் (பாஞ்சாலி சபதம்), ப.365
11. ந.சுப்புரெட்டியார், பாஞ்சாலி சபதம் ஒரு நோக்கு, ப.109
12. வெ.இராம சத்தியமூர்த்தி, இலக்கியத்தில் படிமம், ப.2
13. ஆத்மாநாம், கவிதை பற்றி ஆத்மாநாம், ப.27
14. சுதந்திரமுத்து, படிமம் ஆய்வேடு பக்கமில்லை
15. ந.சுப்புரெட்டியார், பாஞ்சாலி சபதம் ஒரு நோக்கு, ப.117
16. மத்தேயு 18-21 புத்துயிர்ப்பு நாவல், ப.1
17. மேலது.,ப.1
18. டால்ஸ்டாய், புத்துயிர்ப்பு நாவல், ப.46
19. மேலது., பக்.660-661
20. மேலது., ப.717
21. மேலது., ப.737
22. ந.சுப்புரெட்டியார், பாஞ்சாலி சபதம் ஒரு நோக்கு, ப.120
23. டால்ஸ்டாய், புத்துயிர்ப்பு நாவல், ப.129
24. மேலது., ப.55
25. மேலது., ப.190
26. மேலது., ப.223
27. மேலது., ப.265
28. மேலது., ப.462
29. மேலது.,ப.3
30. ந.சுப்புரெட்டியாரின் தமிழ்ப்பணிகள், ப.165

ஆய்வு முடிவுரை

- ந.சுப்புரெட்டியாரின் வாழ்க்கையும் இலக்கியப் பின்புலமும் தமிழுக்குப் பல அரிய இலக்கண, இலக்கிய நூல்களை வழங்கியுள்ளது. அவர் பல்வேறு திறனாய்வு நூல்களை எழுதியுள்ளார். இந்த வகையில் அவருடைய தமிழ்ப் பணிகள் மற்றும் எளிய வெளிப்பாட்டுத் திறனும் தமிழ் இலக்கிய வரலாற்றில் ஏற்றம் தருவதாகும்.
- ந.சுப்புரெட்டியார் அவர்கள் ஒரு மொழியின் வளத்தை அம்மொழியிலுள்ள காப்பியங்களே புலப்படுத்தும் என்கிறார். மேலும் மேனாட்டார் காப்பியங்களின் சிறப்புகளை காப்பியம் உருவான வரலாற்றினையும் பிற நாட்டார் காப்பியங்களுடன் ஒப்பிட்டு மிகச் சிறப்பாக பாஞ்சாலி சபத நோக்கு என்ற நூலை எழுதியுள்ளார்.
- தமிழில் காணப்படும் இலக்கிய இலக்கணங்களுடன் ஆராய்ந்து பாரதியின் பாடலின் சிறப்பினை பாரதத்தில் வரும் சூதுப் போர்ச் சருக்கத்தை அடிப்படையாகக் கொண்டு பாரதி 283 பாடல்களால் தம் காவியத்தை படைத்துள்ளார்.
- ந.சுப்புரெட்டியார் அவர்கள் பாஞ்சாலியை மன்றுக்கு அழைத்து வரும் செய்திகளை மிக அழகாக ஒரு சிறந்த காப்பியமாக கொண்டு திறனாய்வு செய்துள்ளார் என்பதை அறியலாம்.
- திரௌபதி சிறப்புகளையும், காப்பிய கதை மாந்தர்களின் சிறப்புகளையும் ஒவ்வொரு கதாபாத்திரங்களையும் தனித்தனியே விவரித்துக் குறிப்பிடுகிறார்.
- பாரதி பயன்படுத்திய உத்திமுறைகளை மிகவும் சிறப்பாகக் குறிப்பிடுகிறார்.
- பாஞ்சாலியின் தெய்வீகத் தன்மையையும், காப்பியத்தின் மூலமாக உணரக்கூடிய உண்மைகளையும் ஆராய்ந்து கூறியுள்ளார்.

துணைநூற்பட்டியல்

முதன்மை ஆதாரம்

ந.சுப்புரெட்டியார் - பாஞ்சாலி சபதம் - ஒரு நோக்கு
கலைஞன் பதிப்பகம்,
சென்னை
இரண்டாம் பதிப்பு – 2001

துணைமை ஆதாரங்கள்

சுப்புரெட்டியார்.ந - நினைவுக் குமிழிகள் I
பாரி நிலையம்
சென்னை
1988

அ.அ.மணவாளன் - இலக்கிய ஒப்பாய்வு காப்பியங்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்
அம்பத்தூர், சென்னை – 600098
பதிப்பு – 2005

பேரா.சண்முகசுந்தரம் (தொ.ஆ) - காவியக்காலத் தமிழ்
வையாபுரியாரியம் - 2
காவ்யா பதிப்பகம், சென்னை
முதற்பதிப்பு – 2013

தா.ஏ.ஞானமூர்த்தி - இலக்கியத் திறனாய்வியல்
தமிழின்பம்
கோவை
முதற்பதிப்பு – 1998

இரா.காசிராஜன் - காப்பியத் தோற்றமும் வளர்ச்சியும்
மதி பதிப்பகம்
பசுமலை, மதுரை- 4
பதிப்பு – 2008

சோ.கந்தசாமி - புரட்சிக் காப்பியம்
பாரி நிலையம்
சென்னை
முதற்பதிப்பு – 1977

கா.சிவத்தம்பி - நாவலும் வாழ்க்கையும்
தமிழ்ப் புத்தகாலயம்
சென்னை
இரண்டாம் பதிப்பு – 1995

ஆத்மா நாம் - கவிதை பற்றி
மீட்சி புக்ஸ்
உதகை
பதிப்பு – 1984

வெ.இராம சத்தியமூர்த்தி - இலக்கியத்தில் படிமம்
செந்தமிழ் அச்சகம்
கோவை
பதிப்பு – 1983

பாரதியார் - பாரதியார் கவிதைகள்
மாணிக்கவாசகர் பதிப்பகம்
12ஆம் பதிப்பு – 2015

அகிலன் - கதைக்கலை
பாரி புத்தகப் பண்ணை
சென்னை
இரண்டாம் பதிப்பு – 1981

மா.இராமலிங்கம் - தற்காலத் தமிழ் இலக்கியம்
தமிழ்ப் புத்தகாலயம்
சென்னை
மூன்றாம் பதிப்பு – 1985

எஸ்.இராமகிருஷ்ணன் - இளங்கோவில் பாத்திரப் படைப்பு
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்,
அம்பத்தூர், சென்னை – 98
இரண்டாம் பதிப்பு – 1991

இளம்பூரணர் (உ.ஆ) - தொல்காப்பியம்-பொருளதிகாரம்
சாரதா பதிப்பகம், சென்னை
14ஆம் பதிப்பு – 2016

ஜெயமோகன் - நாவல் கோட்பாடு
கிழக்கு பதிப்பகம்
சென்னை
2009

ஆய்வேடு

முனைவர் க.ஜோதிமணி, - ந.சுப்புரெட்டியாரின் தமிழ்ப் பணிகள்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
2017

பன்முகப் பார்வையில் ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணனின் சொந்தமாக ஒரு சொர்க்கம்

மதுரை காமராசர் பல்கலைக்கழக ஆய்வியல் நிறைஞர் (**M.Phil.**) பட்டத்திற்காக அளிக்கப்பெறும் ஆய்வேடு

ஆய்வாளர்

சி.ராமேஸ்வரி

தேர்வு எண் B8811340

மேற்பார்வையாளர்

முனைவர் ஜெ.கோகிலா எம்.ஏ., எம்..ஃ.பில்.,பி.எச்.டி.,

தமிழ்த்துறை - உயராய்வு மையம்

செந்தமிழ்க் கல்லூரி

மதுரை - 625 001

2020

நன்றியுரை

'பன்முகப் பார்வையில் ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணனின் சொந்தமாக ஒரு சொர்க்கம்' என்னும் தலைப்பில் ஆய்வு மேற்கொள்ள அனுமதி வழங்கிய மதுரை காமராசர் பல்கலைக்கழகத்திற்கு என் நெஞ்சார்ந்த நன்றி.

நான் ஆய்வு மேற்கொள்ள வாய்ப்பளித்து ஊக்கமளித்த நான்காம் தமிழ்ச் சங்கம் மற்றும் செந்தமிழ்க் கல்லூரித் தலைவர் மற்றும் செயலாளர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

செந்தமிழ்க் கல்லூரி முதல்வர்(பொ.) முனைவர் கி.வேணுகா அவர்களுக்கும் துணைமுதல்வர் முனைவர் கோ.சுப்புலெட்சுமி அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என் ஆய்வுக்குச் சிறந்த ஆசானாக அமைந்து வழிகாட்டியதுடன் அவ்வப்போது அறிவுரைகள் வழங்கி, ஆய்வு சிறப்பாக அமைய உதவிய நெறியாளர் முனைவர் ஜெ.கோகிலா எம்.ஏ., எம்.ஃ.பில்., பிஎச்.டி., அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

ஆய்வினை மேற்கொள்ளப் பேருதவி புரிந்த ந.சுப்புரெட்டியார் அறக்கட்டளைக்கும் என் நெஞ்சார்ந்த நன்றி.

செந்தமிழ்க் கல்லூரிப் பேராசிரியப் பெருமக்கள் அனைவருக்கும் என் நன்றி. கல்லூரி அலுவலர்களுக்கும் என் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் இந்த ஆய்வினை மேற்கொள்ள எனக்கு உறுதுணையாக இருந்த எனது தாத்தா பாட்டி வி.முத்தழகன் - மு.பழனியம்மா ஆகியோருக்கும், எனது பெற்றோர் திரு.மு.அம்மாவாசி – அ.சின்னம்மாள், மு.சித்திரன் - சி.நாகம்மாள் ஆகியோருக்கும், சகோதர சகோதரிகள் அ.ஜெயராம், அ.ராஜாராம், அ.ராமாய், சி.அழகுதிருவாசகம், அ.மகாலட்சுமி, அ.அழகுமலை, அ.திருப்பதி, சி.ரமேஷ் ஆகியோருக்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாய்விற்குத் தேவையான எல்லா நூல்களையும் கொடுத்துதவிய செந்தமிழ்க் கல்லூரி நூலகர் திருமதி. தி.பிருந்தா அவர்களுக்கும் நூலக உதவியாளர் திருமதி. த.சுதா அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆய்வேடு சிறப்பாக அமையும் வண்ணம் கணிப்பொறியில் வடிவமைத்துக் கொடுத்த ஏகன் கணினி நிறுவனத்தாருக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சி.ராமேஸ்வரி

பொருளடக்கம்

ஆய்வு முன்னுரை

முன்னுரை

தமிழ் இலக்கியங்களில் மனித உறவுகளின் தேவைகளையும், இன்றியமையாமையும் வலியுறுத்தும் நோக்கத்தில் தோன்றியவண்ணம் உள்ளன. இலக்கியம் காலம், இடம் என்னும் தளங்களையும் வாசகர்களின் அறிதிறன்களையும் அவர்களது ஏற்பு முறைகளையும் எதிர்கொண்டு வாழ்கிறது. புதிது புதிதாய் உயிர்க்கின்ற அற்புதப் பண்பினை இலக்கியம் பெற்றுத் திகழ்கின்றது. அந்த வகையில் ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணன் அவர்களின் ‘சொந்தமாக ஒரு சொர்க்கம்’ என்னும் கட்டுரைத் தொகுப்பானது சமூக நிலைகளையும், வாழ்க்கைப் போராட்டங்களையும், தனிமனித ஒழுக்கங்களையும், மதிப்புகளையும் எடுத்துரைக்கின்ற மனித வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் படைப்பாக அமைந்துள்ளது.

இக்கட்டுரைத் தொகுப்பானது அக்கிரமங்கள், அநீதிகள், நியாயங்கள், தர்மங்கள், நல்லவை, தீயவை, சிறந்தவை, இழிவானவை என அனைத்தும் கலந்துள்ள வாழ்க்கையில் நம்மைப் பொருத்திக் கொண்டு இயல்பாக வாழ்வது எப்படி என்பதற்கான விளக்கமாக அமைந்துள்ளது. எனவே இவரது படைப்புகளை திறனாய்வு நோக்கில் ஆராய்வதாக இவ்வாய்வு அமைகிறது.

ஆய்வுத் தலைப்பு

பல்வேறு வகையான சமுதாயச் சிந்தனைகள் நாள்தோறும் தோன்றி வளர்ந்து கொண்டேயுள்ளன. பன்முகங்கள் அடங்கிய சமுதாயத்தில் சமூக அறிவும், விழிப்புணர்வும், மானிட மதிப்பும் வெளிப்படுத்தும் வகையில் படைப்புகள் அமைவது இன்றியமையாததாகும். இவற்றையெல்லாம் எடுத்துரைக்கும் வகையிலும், படிப்போரின் பண்பை உயர்த்தும் வகையிலும், மனிதநேயப் பண்பை வளர்ப்பதாகவும், உயர்த்துவனவாகவும் இக்கட்டுரைத் தொகுப்பு அமைந்துள்ளது. அதன் அடிப்படையில் சமூக மதிப்புகளை வெளிக்கொணரும் வகையில், “பன்முகப் பார்வையில் ஏர்வாடி

எஸ்.இராதாகிருஷ்ணனின் சொந்தமாக ஒரு சொர்க்கம்” என்பது இவ்ஆய்வின் தலைப்பாக எடுத்துக் கொள்ளப்படுகிறது.

ஆய்வு நோக்கம்

மனிதனானவன் மனித குலத்தில் தானும் ஒருவனாக வாழ்கிறான். அவனது உணர்வுகளின் வெளிப்பாடாகவே படைப்புகள் தோன்றுகின்றன. அதில் அவன் இருக்கிறான். அவனைப் போன்றே பிறரும் இருக்கிறார்கள். அவை மனிதகுலத்தோடு தொடர்புடையதாக விளங்குகின்றது. இன்றைய தனிமனித குடும்ப வாழ்வில் பல்வேறு சிக்கல்கள் நிறைந்துள்ளன. அவை சமுதாயச் சிக்கல்களாகவும் மாறுகின்றன. எனவே குடும்பம், சமுதாயம் என்னும் நிலையில் ஏற்படும் சிக்கல்களைக் கண்டறிவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

ஆய்வு எல்லை

சொந்தமாக ஒரு சொர்க்கம் என்னும் தொகுப்பில் இடம்பெற்றுள்ள 20 கட்டுரைகளும் இவ்வாய்விற்கு முதன்மை ஆதாரங்களாக அமைகின்றன. சமூகம் பற்றிய பல்வேறு ஆய்வு நூல்கள், ஆய்வேடுகள், கட்டுரைகள், கலைக்களஞ்சியங்கள், இதழ்கள் துணைமை ஆதாரங்களாக அமைகின்றன.

முதன்மை ஆதாரம்

ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணன் அவர்களின் “சொந்தமாக ஒரு சொர்க்கம்” என்பதே இந்த ஆய்வின் முதன்மை ஆதாரமாக விளங்குகின்றது.

துணைமை ஆதாரம்

ஆய்வு தொடர்பாக இதுவரை வெளிவந்துள்ள ஏர்வாடியாரின் நூல்களும், ஆய்வு நூல்களும் ஆகியவை துணைமை ஆதாரங்கள் ஆகும்.

ஆய்வு அணுகுமுறை

சொந்தமாக ஒரு சொர்க்கம் என்னும் கட்டுரைத் தொகுப்பின்மூலம் கிடைத்த தரவுகளைக் கொண்டு பகுப்பாய்வு முறையிலும், சமுதாயவியல் திறனாய்வு அணுகுமுறையிலும், விளக்கமுறைத் திறனாய்வு அணுகுமுறையிலும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கருதுகோள்

ஒவ்வொரு படைப்பாளருக்கும் சமூக நோக்கு, சமூகம் பற்றிய புரிதல், மொழிநடை, வெளிப்பாட்டு உத்திகள் போன்றவற்றில் தனித்தன்மை இருக்கின்றது. இத்தகைய பின்னணியில் ஏர்வாடியாரின் படைப்புகள் இலக்கிய வளர்ச்சிக்கும் சமுதாய மறுமலர்ச்சிக்கும் குறிப்பிட்டுக் கூறுமளவிற்குப் பங்களிப்பு செய்துள்ளன என்பதும், தனித்துவம் பெற்றுள்ளன என்பதும் இவ்வாய்வின் கருதுகோள்களாக முன்வைக்கப்படுகிறது.

ஆய்வுப் பகுப்பும் சுருக்கமும்

இந்த ஆய்வேடு முன்னுரை, முடிவுரை நீங்கலாகப் பின்வரும் ஐந்து இயல்களாக பகுக்கப்படுகிறது.

இயல் 1 : ஏர்வாடியாரின் வாழ்க்கைக் குறிப்பு

இயல் 2 : ஏர்வாடியாரின் கலை உள்ளம்

இயல் 3 : இலக்கியப் புலமை

இயல் 4 : சிந்திக்கத் தூண்டும் அனுபவக் கருத்துகள்

இயல் 5 : சமூகத்தின் மீது பதிந்த ஏர்வாடியாரின் பார்வை

ஆய்வு முன்னுரை என்னும் இயலில் ஆய்வுப் பொருள், ஆய்வின் நோக்கம், ஆய்வு எல்லை, ஆய்வு அணுகுமுறை, கருதுகோள், ஆய்வுப் பகுப்பும் சுருக்கமும் ஆகியவற்றைச் சுட்டி அமைகின்றது.

‘ஏர்வாடியாரின் வாழ்க்கைக் குறிப்பு’ என்னும் முதல் இயலில் பிறப்பு, கல்வி, குடும்ப வாழ்க்கை, பணி, கவிதை, கட்டுரை, கட்டுரை, சிறுகதை, நாடகம், நகைச்சுவை, மொழிபெயர்ப்பு, சொற்பொழிவுகள், பயணம், இசை, பரிசு, பட்டம், தொலைக்காட்சித் தொடர், பேட்டி, பின்பற்ற வேண்டிய மூன்று கொள்கைகள் போன்றவற்றை இவ்வியல் எடுத்துரைக்கிறது.

‘ஏர்வாடியாரின் கலை உள்ளம்’ என்னும் இரண்டாவது இயலில் நல்லவர் யார், கெட்டவர் யார், வெற்றியின் அடையாளம், சார்ந்து வாழ்தல், வாழ்க்கை வேடிக்கை, தலைமை என்கிற ஆசை, இளமை, முதுமை போன்றவற்றை ஆராய்வதாக இவ்வியல் அமைகிறது.

‘இலக்கியப் புலமை’ என்னும் மூன்றாவது இயலில் திருக்குறள், புராணம், வேதம், சங்க இலக்கியம், புத்தரின் அறிவுரைகள், நவீனகால அறிஞர்கள், கவிஞர்களின் கருத்துக்களை ஏர்வாடியார் கையாளும் விதத்தை ஆராய்வதாக இவ்வியல் அமைகிறது.

‘சிந்திக்கத் தூண்டும் அனுபவக் கருத்துகள்’ என்னும் நான்காவது இயலில் விளையும் மதிப்பும், இறைமையும் நம்பிக்கையும், மனவலிமை, முதுமை, தொழில், காதல், வாக்குறுதி, நட்பு, ஒப்பீடு, அரசியல் போன்றவற்றை திறனாய்வு செய்வதாக இவ்வியல் அமைகிறது.

‘சமூகத்தின்மீது பதிந்த ஏர்வாடியாரின் பார்வை’ என்னும் ஐந்தாவது இயலில் காலம், சான்றிதழ், சார்ந்து வாழ்வதே சமூகம், மதிப்போடு வாழ்தல், மதிப்பும் விலையும், சமூகத்தைப் பாதிக்கும் விளைவுகள், அரசியல், சகிப்பு போன்றவற்றை ஆராயும் விதமாக இவ்வியல் அமைகிறது.

ஆய்வு நிறைவுரைப் பகுதியில் இந்த ஆய்வில் கண்டறியப்பட்ட முடிவுகள் நிரல்பட தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

ஆய்வு நிறைவுரைப் பகுதியை அடுத்து இந்த ஆய்விற்குப் பயன்பட்ட நூல்களின் பட்டியல் துணைநூற்பட்டியலாக இடம்பெற்றுள்ளது.

இயல் - 1

ஏர்வாடியாரின் வாழ்க்கைக் குறிப்பு

முன்னுரை

பன்முக ஆற்றல் கொண்ட ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணன் அவர்களால் நெல்லை மாவட்டத்தில் உள்ள 'ஏர்வாடி' என்கிற சிறு கிராமத்தின் பெயர் உலகளாவிய இலக்கியப் புகழ்வாய்ந்த பெயராக்கிய பெருமைக்குரியவர். 100ற்கும் மேற்பட்ட நூல்களும், 500ற்கும் அதிகமான நாடகங்களும், மூன்று மேடை நாடகங்களும் படைத்துள்ளார். தொலைக்காட்சித் தொடர்கள், குறும்படங்கள், நாடக மேடைகள் போன்றவற்றில் நடித்துள்ள நடிகர் இசைத்துறையில் நுழைந்த சிறப்புக்குரியவர். மேலும் வங்கி கணக்காயர், மொழிபெயர்ப்பாளர் என்று பன்முகத்துறையில் சிறப்பு வாய்ந்தவர் ஏர்வாடி. இவரின் பல படைப்புகள் படைப்புக்கு உட்படுத்தப்பட்டு வருகிறது. நல்ல பண்புடையவர் என்று நண்பர்கள், அலுவலர்கள், குடும்பத்தவர்கள் அனைவரும் போற்றத்தக்க மனிதர் ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணன்.

ஊரின் பெருமை

'ஆறுகளின் பண்பறிந்து பாட்டிசைப்பான் கவிஞன்' என்கிற இரா.பி.சேதுப்பிள்ளையின் வரிகளுக்கு ஏற்ப மனிதனின் பண்பறிந்து தன் அனுபவத்தை சமூகத்தில் விதையாகத் தூவி விளைவித்த சிறந்த இலக்கியவாதி ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணன் அவர்கள் நெல்லை கட்டபொம்மன் மாவட்டத்தில் ஏர்வாடிக்காரர். திருநெல்வேலி மாவட்டம் தமிழகத்தின் ஐந்தாவது பெரிய நகரம்; வயல்வெளிகளையே வேலியாகக் கொண்டதால் இப்பெயர் பெற்ற மாவட்டத்தில் ஓர் சிற்றூர் ஏர்வாடி.

"ஏர்வாடி என்பது மக்கள் ஏர் உழும்போது பாடிக்கொண்டு உழுததால் 'ஏர்பாடி' என்பது ஏர்வாடியாக மறுவியது பேச்சுவழக்கில். ஏர்வாடி என்னும்

சொல் ‘ஏர்’ ‘கலப்பை’ என்னும் சொல்லில் இருந்து வந்தது. இவ்வூரின் நடுவே நம்பி ஆறு பாய்கிறது. தற்போது உள்ள தட்பவெப்பக் காரணங்களினால் ஆற்றின் நீர் வற்றிக் காணப்படுகிறது”[1]

திருநெல்வேலி நகரத்தில் இருந்து ஏறத்தாழ 38 கிலோமீட்டர் தொலைவில் இவ்வூர் அமைந்துள்ளது.

பிறப்பு, பெற்றோர்

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள ஏர்வாடி என்னும் ஊரில் நாகம்மாள் சுப்பையா தம்பதியரின் இரண்டாவது மகன் இராதாகிருஷ்ணன் அவர்கள் (18-5-1947) பிறந்தார். அவர்களின் மூத்த மகன் ரகுநாதனுக்குத் தந்தை வழிப் பாட்டன் பெயரையும், இரண்டாவது மகனான ராதாகிருஷ்ணனுக்கு பொன்னையா என்பதாகும். பொன்னையா என்பது தாய் வழிப் பாட்டன் பெயர். பொன்னையா ஏர்வாடியில் நாணயத்திலும் நம்பிக்கையிலும் சிறந்து விளங்கிய பொற் கொல்லர் நகை வியாபாரி. பொறுமை, நிதானம், உழைப்பு, ஒழுக்கம் இவற்றால் உயர்ந்திருந்த பொன்னையா நோய்வாய்ப்பட்டு இறந்து போனதும் அவரது மனைவி திருமதி லட்சுமி ஊராரிடம் தங்கத்தையும், நகைகளையும் ஒப்படைத்தபோது பொன்னை நிகர்த்த பொன்னையாவையே நாங்கள் இழந்த பிறகு இந்தப் பொன் எங்களுக்கு ஒரு பொருட்டல்ல என்று வாங்கிக்கொள்ள மறுத்துவிட்டார்களாம். பொன்னையாவில் குணநலன்களைக் கொண்டவர் ஏர்வாடி எஸ். இராதாகிருஷ்ணன். இவரை ஊரார் இன்றளவும் ‘இராதா’ என்றே அழைப்பர்.

பள்ளிப் படிப்பு

இவரின் தந்தை திரு. சுப்பையா சமூகரங்கபுரத்தைச் சேர்ந்தவர். இளவயதிலேயே இராணுவத்தில் பணியாற்றச் சென்றுவிட்டார். திருமணத்திற்குப் பிறகு இரயில்வே காவல்துறையில் உயர் அதிகாரியாகப்

பொறுப்பேற்றார். வசதியான குடும்பம் என்பதால் இயல்பாகவே ஒரு துணிச்சல், மதர்ப்பு, ஒழுக்கம், அநீதிகளைக் கண்டால் கொதிப்பது, நேர்மை யாவும் திரு.சுப்பையாவிடம் உண்டு. பணியாற்றுகிற இடங்களிலெல்லாம் இதனாலேயே பகை என்பதால் அடிக்கடி அவர்க்கு இடமாற்றங்கள் நேரும். எனவே பிள்ளைகளின் படிப்பு கெடக் கூடாதென்பதால் 'இட்டமொழி' என்ற கிராமத்தில் ஓவிய ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்த இவரது ஒன்றுவிட்ட சகோதரர் திரு.அழகேசன் அவர்களிடம் ராதா ஒப்படைக்கப்படுகிறார்.

இட்டமொழி ஏ.வி.ஜோசப் உயர்நிலைப் பள்ளியில் உயர்நிலைப் பள்ளிப்படிப்பு தொடங்கியது. அன்றிலிருந்துதான் ராதாவின் உயர்நிலை தொடங்கியது. படிக்கிறபோது விளையாட்டைத்தவிர எல்லாத் துறைகளிலும் ராதா முதன்மையானவராகத் திகழ்ந்தார்.

இட்ட மொழி ஏர்வாடி சுற்றுவட்டாரத்தில் நடக்கிற பள்ளி மாணவர்களுக்கான பேச்சுப் போட்டிகளில் ராதா கலந்து கொண்டால் யாரும் இரண்டாவது பரிசுக்குத்தான் முயற்சிப்பார்களாம்.

இரயில்வேயில் பணியாற்றிக் கொண்டிருந்த ராதாவிற்கு தந்தைக்கு சீனயுத்தத்துக்கு அழைப்பு வந்ததால் போர்முனைக்குப் போய்விட்டார். அவரின் தந்தை சில மாதங்களாக எங்கிருக்கிறார் என்று தெரியாத நிலையில் வீட்டுச் சொத்துக்களை நிர்வகிக்க இயலாத இழப்பும், கவலையுமாய் தாயார் தங்கம்மாள் தவித்தபோது தங்கம்மாளின் தாயார் லட்சுமியம்மாள் வாழ்க்கைச் சுழலில் போராடி பேரக் குழந்தைகளைக் காப்பாற்றி வந்தார்.

ஏர்வாடியைச் சேர்ந்த இசுலாமிய அன்பர்களும், ராதாவின்பால் அன்புகொண்ட ஆசிரியப் பெருமக்களும் ராதாவின் கல்வி இடையறாதிருக்கப் பெரிதும் உதவினார்.

ஏர்வாடியில் கலைஞர் என்.பி.எம். அப்துல்காதர் என்னும் அதி அற்புதமான மனிதர் ஒருவர் இருந்தார். திராவிட முன்னேற்றக் கழகத்தில் பற்றுக் கொண்டவர். வீட்டிலுள்ள நகை நட்டையெல்லாம் விற்று அப்போதைய கழகத் தலைவர்களான அண்ணா, கலைஞர், சம்பத், நாவலர் போன்றோரையெல்லாம் அடிக்கடி அழைத்துக் கூட்டம் நடத்துவார். இவர் வீட்டில் நல்ல தமிழ் நூல்கள் அடங்கிய நூலகம் ஒன்றுண்டு. ஊர்ப் பிள்ளைகளெல்லாம் ஓடியாடி விளையாடிக் கொண்டிருக்க ராதா மட்டும் என்.பி.எம்.அப்துல்காதர் வீட்டிலோ, நூலகத்திலோ இருப்பார்.

படிக்கிறபோதே மாலைமுரசு, தினத்தந்தி போன்ற பத்திரிகைகளில் நகைச்சுவைத் துணுக்குகள் எழுதத் தொடங்கினார். அதன் சன்மானங்கள் உந்துதலை ஏற்படுத்தியது அவரது எழுத்தில்.

"இராதா கலந்து கொள்கிற பேச்சுப் போட்டிகளுக்கெல்லாம் அவருடைய பேச்சைக் கேட்பதற்காகவே வருகிற ஒருவருண்டு. அவர்தான் கோ.அ.மு.மீரான் என்னும் செல்வந்தர். அவர் ஒரு சமூக சேவகர். தீவிரமான தேசபக்தர். சொத்துக்களில் பெரும் பகுதியை கல்வி நிறுவனங்களுக்குத் தானமளித்தவர். ஒவ்வொரு முறையும் ராதாவுக்கு திருக்குறள் போன்றவற்றைக் கூடுதலாகப் பரிசளித்து மகிழ்வார். நாளாவட்டத்தில் ராதாவின் நண்பராகவே ஆகிவிட்டவர். அதன்பின் ஏர்வாடியாரின் பேரூராட்சியின் தலைவராகவும் இருந்தார்"[2]

இராதாவின் பள்ளி ஆசிரியர்கள் "நல்ல ஆசிரியர்களைப் பற்றி நினைக்கும்போது ஏர்வாடியில் என் இடைநிலைப் பள்ளி ஆசிரியராக இருந்த திரு.நடராச பிள்ளை உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களான திரு.சூரியன், திரு.சீதாராமன் ஆகிய இவர்கள் என் நினைவில் என்றும் உள"[3] என்று குறிப்பிட்டுள்ளார்.

ராதாவின் பள்ளி ஆசிரியர்களான நடராசபிள்ளை, சந்திரன், அந்தோணிமுத்து ஆகிய ஆசிரியர்கள் ராதாவின் மீது மிகுந்த ஈடுபாடு கொண்டவர்கள். ஊருக்கு வெளியே மூன்று கிலோ மீட்டர் தொலைவிலுள்ள பள்ளிக்கு அவரை அவரது ஆசிரியர்களில் யாரேனும் ஒருவர் வந்து சைக்கிளில் அழைத்துப் போவது வழக்கம்.

“நான் படித்தது அதிகமில்லை என்றாலும் வாழ்க்கையில் ஒரு பிடிப்பை ஏற்படுத்தியவர்கள் அவர்கள்”[4] என்று என்பக்கம் 11ஆவது தொகுதி என்கிற தனது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

ஏர்வாடியின் தெற்குப் பகுதியிலிருந்து வடக்கு எல்லையில் உள்ள பள்ளிக்குச் செல்ல 5 கிலோமீட்டர் நடக்க வேண்டும். வசதியான மாணவர்கள் இங்கிலாந்து ஹெர்குலிஸ் சைக்கிள்களில் பறந்துக் கொண்டிருக்க இராதா தன் பள்ளிக்கு நடந்தே செல்வார்.

“இராதாவின் ஆசிரியரான திரு.நடராசபிள்ளை தினமும் காலையில் எங்கள் வீட்டுக்கு வந்து என்னைத் தன் சைக்கிளில் அழைத்துப் போகும் அன்பை நினைத்தால் இன்னும் என் கண் பனித்துப்போகும்”[5] என்று தனது என்பக்கம் - 11ஆவது தொகுதி கட்டுரையில் கூறி நெகிழ்ந்துள்ளார்.

மினர்வா நோட்ஸ் ஆங்கிலத்துக்கும், கோனார் நோட்ஸ் தமிழுக்கும் வாங்க வசதியில்லாத நிலையில் ஏர்வாடி இராதா தனது சொந்தமான வாக்கியங்களில் எழுதும் திறன் கொண்டவர். இராதாவின் ஆங்கில, தமிழ்க் கட்டுரைகளையும், பதில்களையும் படித்து பிரமாதமாக வருவாய் என்று வாழ்த்தியதோடு பிரமாதமாக வந்த பிறகு ஊருக்குச் செல்லும் பொழுதெல்லாம் அப்போதே தெரியும். நீ நன்றாக வருவாய்” என்று நெஞ்சம் நிறையும் அன்பில் தாய் தந்தையை மிஞ்சி விடுவாராம் அவரின் ஆசிரியர்.

இளங்கன்று பயம் அறியாது என்பதுபோல் இராதா இளவயதிலேயே துணிச்சலும் துடுக்கும் எவரிடமும் பயமின்றி பேசும் தன்மை உடையவர்.

கல்லூரி வாழ்க்கை

1963-64இல் ஸ்ரீவைகுண்டத்தில் உள்ள குமரகுருபரர் கலைக்கல்லூரியில் புதுமுக வகுப்பை முடித்து தாவரவியலில் பி.எஸ்சி. பட்டம் பெற்றார். 1964-65இல் இளம் அறிவியல் பட்டப்படிப்பிற்காக பாளையங்கோட்டை தூய யோவான் கல்லூரியில் சேர்ந்தார். கல்லூரி நாள்களில் ராதா துணிச்சல் மிகுந்த மாணவர். எதையும் தெளிவாய், துணிவாய் பேசுபவர். ஒருமுறை விடுதி மாணவர் தலைவராகவும் இருந்திருக்கிறார். அது அவரின் மறக்கமுடியாத சம்பவங்கள் பலவற்றில் ஒன்றாகும்.

பொதுமக்களின் குறைகளைக் கேட்பதற்காக திங்கள்தோறும் நடைபெறும் கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் கலந்து கொள்கிறார். குறைகளை தாராளமாக வந்து முறையிடலாம் என்ற அறிவிப்பு உலாவிக் கொண்டிருக்க உயர்பதவியில் இருந்த அதிகாரி ஒருவர் அப்போது நெல்லை மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்தார். அச்சமயத்தில் இராணுவ வீரர்களின் குடும்பத் துயர்துடைப்புப் பணி என்று அறிவிக்கப்பட்டிருந்ததால் ஒரு இராணுவ அதிகாரியின் மகன் என்ற முறையில் இராதா மாவட்ட ஆட்சியாளரை அணுகித் தன் துயரை விளக்கினார். ஒரு மாணவன் உரத்த குரலில் உரிமைக்குக் குரல் கொடுத்தது மாவட்ட ஆட்சியாளருக்கு அவரது அதிகாரத்தைக் கேள்வி கேட்டது போலிருந்திருக்கிறது. அதனால் வெகுண்ட அந்த ஆட்சியாளர் கருணை காட்டுவதற்குப் பதிலாகக் கடுஞ்சினத்தைக் காட்டினார்.

உடனே இராதாவை கல்லூரியிலிருந்து டிஸ்மிஸ் செய்யும்படி கல்லூரி முதல்வருக்குத் தொலைபேசி மூலம் உத்தரவிட்டிருக்கிறார். விடாப்பிடியாக அந்த ஆட்சியர் மீண்டும் கல்லூரி முதல்வர் வேதசிரோன்மணிக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு “இராதாவை டிஸ்மிஸ் செய்து விட்டீர்களா?” என்று அதிகாரத்தோடு வினவினர். அதிகாரியின்

அதிகாரக்குரலை அரவணைப்புக் குரல் அவமதித்தது. மனிதன் என்ற நிலையில் ‘என்னுடைய கல்லூரி அரசுக் கல்லூரி அல்ல; அப்படியேயிருந்தாலும் ஒரு நல்ல மாணவனின் படிப்பை, எதிர்காலத்தை நான் எக்காரணம் கொண்டும் பாழ் பண்ண மாட்டேன். அவன் மாணவன் என்பதைவிட என் மகன் என்று கூறிக்கொள்வதில் பெருமை அடைபவன் நான். உங்களுடைய ஈகோவை திருப்தி செய்துகொள்ள ஒரு மாணவனின் எதிர்காலத்தை இருட்டடிக்க நான் துணையிருக்க மாட்டேன். எனவே இவ்விஷயத்தில் நீங்கள் அநாவசியமாகத் தலையிடாதீர்கள்’ என்று அந்த அதிகாரிக்குச் சரியான பாடம் புகட்டி இராதாவின் கல்லூரிப் படிப்பிற்கு வழிசெய்தார். வேதசிரோன்மணி இவர் ஒரே கல்லூரியில் 25 ஆண்டுகட்கும் மேலாக முதல்வராகப் பணியாற்றிய பெருமைக்குரியவர்.

“ஒருமுறை கல்லூரி விடுதியில் நடந்த தேர்தலில் வெற்றிபெற்று திரு.வேதசிரோன்மணி அவர்களின் ஆசிகளைப் பெறச் சென்ற ஏர்வாடியாரிடம் “நீ பொது வாழ்வில் ஈடுபடுவதைவிட படிப்பில் கவனம் செலுத்தினால் அது வாழ்க்கையில் வெற்றியை உனக்குத் தரும்”[6] என்று அறிவுரை கூறினார். அப்போதே பொது வாழ்க்கையில் ஈடுபாடு உடையவர் ஏர்வாடி.

ஏர்வாடியார் ஜெபரத்னம், மாயாண்டி பாரதி ஆகிய தமிழ்ப் பேராசிரியர்களிடம் நல்ல தமிழ் கற்றுவந்தார். அவர்களுடைய தூண்டுகோலால் கவிதை எழுதும் ஆர்வம் இராதாவிடம் கவிதை எழுதும் ஆர்வம் இராதாவிடம் மேலோங்கியது.

இந்தி எதிர்ப்புப் போராட்டம், அரசியல் என்றெல்லாம் படிக்கிறபோதே நான் பிரச்சினைகள் செய்தாலும் வறுமை காரணமாகக் கல்லூரிக் கட்டணங்கள் கட்ட முடியாத என்னைப் பழிவாங்க நினைக்காமல் கல்லூரி நிர்வாகமே அச்செலவுகளை ஏற்றுக் கொண்டு படிக்க வைக்க உதவிய முதல்வர் வேதசிரோன்மணி அவர்கள் நாகர்கோவிலில் குடியேறியிருந்த நாள்களில் போய்ப் பார்க்கும் போதெல்லாம் ஆரத்தழுவி கர்த்தரின் ஆசிகள்

எனக்குப் பரிபூரணமாய் இருக்கிறதென்று வாழ்த்தி மகிழ்ந்ததையும் எப்படி மறக்கமுடியும் என்று மனதார நெகிழ்ந்து தன் கல்லூரி நினைவுகளைக் குறித்துள்ளார். ‘நல்ல ஆசிரியர்கள் கிடைப்பது நாம் செய்த புண்ணியம்’ என்கிறார்.

கல்லூரியில் படிக்கும் காலத்திலேயே கவிதைகள் புனையும் ஆற்றல் பெற்ற கவிஞர் முதன்முதலில் எழுதி அச்சேற்றிய கவிதை ஓர் இரங்கற்பாவாகும். 1960ஆம் ஆண்டு அன்றைய பிரதமர் “லால்பகதூர் சாஸ்திரி அவர்கள் மறைந்தபோது ‘நெருநல் உளனொருவன்’ என்னும் குறட்பாவை முதல் அடியாகக் கொண்டு கவிதை புனைந்திருந்தார். இதனைத் தொடர்ந்து அதற்கடுத்த மலரில் ‘நிலவே நில்’ என்றொரு சிறுகதையை கவிதை வடிவில் எழுதியிருந்தார். பின்னர் திரைப்படம் ஒன்று இக்கதையைத் தழுவி சில மாற்றங்களுடன் வெளிவந்தது. தேர்வு முடிந்து சென்னையைச் சுற்றிப் பார்க்கவந்த ஏர்வாடியார் சென்னையை தன் இருப்பிடமாக்கிக் கொண்டார்.

குடும்ப வாழ்க்கையில் ஏர்வாடி

பொதுப் பணிகளில் ஈடுபடும் மனிதர்கள் குடும்பத்தை கைவிடுவர் அல்லது குடும்பத்தின் மீது ஈடுபாடு உள்ளவர். பொதுப் பணியை சரிவர செய்திராதவராக சிலர் இருப்பதுண்டு. ஆனால் ஏர்வாடியார் பொதுப் பணியிலும் தன்னை ஈடுபடுத்திய பின்னும் வங்கிப்பணி, இலக்கியப்பணி, தமிழ்ப்பணி, பொதுப்பணி, குடும்பப்பணி என்று எதிலும் தளராதவர். துணைவியார் திருமதி.சிதம்பரம்மாள், இரண்டு மகன்கள், ஒரு மகள். மூத்த மகன் கௌரிசங்கர், இரண்டாவது மகன் அருண்குமார், மகள் சுதா. ஏர்வாடியார் நல்ல கணவராகவும், நல்ல தந்தையாகவும் தனது எப்பணியிலும் குறைவின்றித் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கடமையாற்றியுள்ளார்.

ஏர்வாடியார் உறவாக நினைப்பவர்கள் குறிப்பிடத்தக்கவர் டாக்டர் விக்கிரமன். இவர்மீது அளப்பரிய அன்பும் மதிப்பும் வைத்துள்ள ஏர்வாடி அவரைத் தன் எழுத்துலக ஆசான் என்றே குறிப்பிட்டு பெருமையுறுவார்.

ஏர்வாடியாரைத் தன் பெறாத பிள்ளையாகப் பேரன்பும் பற்றும் வைத்திருப்பவர் ஏர்வாடி நகரைச் சேர்ந்த திரு.அப்பாஸ் அவர்கள். அவரைத் தன் வாழ்க்கையில் ஒளியேற்றி வைத்த பெருமகனார் என்று கூறிப் பெருமையுறாத நாளில்லை.

வங்கிப்பணி

கல்லூரி தேர்வு முடிந்து சென்னையைச் சுற்றிப் பார்க்க வந்த ஏர்வாடியார் சென்னையிலேயே தங்கிவிட்டார். முதலில் தோல் பொருள்கள் தயாரிக்கும் நிறுவனத்தில் பணியாற்றிய பிறகு தானே சொந்தமாக ஒரு நிறுவனம் நடத்தத் தொடங்கினார். ‘ஷிமா டிரேடிங்’ கம்பெனியைத் தொடங்கிய நேரம் ஸ்டேட் பாங்கில் வேலை கிடைத்தது. நிறுவனத்தை நண்பர்களிடம் ஒப்படைத்துவிட்டு வேலைக்குப் போகத் தொடங்கினார்.

இலக்கிய அறிவுப்பசி மிகுந்த ஏர்வாடியார்க்கு ஏற்றதொரு வாய்ப்பை நல்கியது பாரத ஸ்டேட் வங்கி முன்வந்து அளித்தது. அவ்வங்கியில் ஆட்சிமொழிகள் துறையில் மொழிபெயர்ப்பாளர் பணி.

மொழிபெயர்ப்புப் பணியினை 1972ஆம் ஆண்டு ஏற்றார். இத்துறையில் இவரை அமர்த்தி ஆதரித்தவர் திரு.நமசிவாயம் என்கிற வங்கி அதிகாரி. இவ்வாதரவை இவரது நண்பர் மற்றும் இலக்கியச் சீடரான கவிஞர் முத்தையா உடையப்பன் என்கிற அதிகாரியும் தொடர்ந்தார்.

பாட்டு அணித் தலைவராக விளங்கும் கவிஞர் ஏர்வாடி கல்லூரியில் தாவரவியல் (Botany) முதன்மைப் பாடம் எடுத்துப் படித்தவர். இவருடைய

மொழிபெயர்ப்பிற்கு உரிய அங்கீகாரம் பெரும்பொருட்டு 15 அறிஞர்களைக் கொண்ட குழு ஒன்றை வங்கிக்கு அறிமுகப்படுத்தினார்.

15 தமிழறிஞர்கள் குழுவில் இடம்பெற்றிருந்த தமிழ்த் தொண்டர் கோ.முத்துப்பிள்ளை குறிப்பிடத்தக்கவர்.

"தமிழில் வங்கி கலைச் சொற்களஞ்சியம் ஏறத்தாழ 15,000 சொற்கள் அடங்கிய தொகுதியாக உருவெடுத்தது. ஏர்வாடியாரின் இடையறா உழைப்பே இதன் வெற்றிக்குக் காரணமாக அமைந்தது"[7]

இலக்கியப்பணி

நாடகம், கவிதை, சிறுகதை, கட்டுரை, மொழிபெயர்ப்பு, திரைக்கதை, வசனம், திரைப்பாடல் இப்படிப் பல்துறைப் புலமை ஒருங்கே பெற்றவர். 100க்கும் மேற்பட்ட இலக்கிய நூல்களை எழுதி இலக்கியத் துறையில் சிறந்து விளங்குகிறார்.

நூல்கள் வெளியிட்டு தமிழ் இலக்கிய வளர்ச்சியில் பங்கேற்றமைக்காகப் பாரத ஸ்டேட் பாங்கு நிர்வாகம் தம் அலுவலர்களுக்கு வழங்கும் பணமுடிப்பையும் பாராட்டையும் தொடர்ந்து ஆண்டுதோறும் பெற்ற பெருமைக்குரியவர்.

சிறப்புடன் தயாரிக்கப்பட்ட கலைச்சொல் அகராதியை அன்றைய முதல்வராக இருந்த மாண்புமிகு டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் வெளியிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் இவர் பொதுச் செயலாளர், அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர் சங்கம், அறங்காவலர், எழுத்தாளர் நல நிதி அறக்கட்டளை போன்ற துறைகளில் பல்வேறு பதவிகளை வகித்த திறமையாளர்.

தமிழ்ப்பணி

“1982ஆம் ஆண்டில் கோவையில் நடைபெற்ற பாரத ஸ்டேட் வங்கி அலுவலர்கள் கூட்டத்தில் Distinguished officer என்ற பாராட்டையும், கேடயத்தையும் தற்பொழுது வங்கி நிர்வாக இயக்குநராக உள்ள திரு.ஜே.பி.குந்தராவிடம் பெற்ற ஏர்வாடி, தனியொரு எழுத்தாளராகத் தான்நின்று செய்து வந்த தமிழ்ப் பணிகளைத் தன்னைப் போன்று தமிழ் ஆர்வமிக்க தன் சக நண்பர்களுடனும் இணைந்து ஓர் இயக்கமாகப் பணியாற்ற முற்பட்டார்”[8]

ஏர்வாடியார் ஏறக்குறைய பத்தாண்டு காலம் மொழிபெயர்ப்புத் துறையில் பணியாற்றினார். அந்நாட்களில் மிகைநேரப்பணி ஊதியம் தாராளமாக வழங்கப்படுவதுண்டு. ஆனால் மொழிபெயர்ப்புத் துறையில் அவ்வாய்ப்புக்கு வழியில்லாதிருந்தபோதும் தமிழின் மீது ஏற்பட்ட அன்பால் இழப்பையும் பொருட்படுத்தாது இன்தமிழ்ப்பணியாற்றினார். இவரின் தியாகம் என்று வீண் போகவில்லை. வங்கி நிர்வாகமே அவருக்குச் சிறப்புவிடுப்பும், போக்குவரத்துச் செலவும் அளித்து 1982ஆம் ஆண்டு சான்பிரான்சிஸ்கோவில் நடந்த ஐந்தாவது உலகக் கவிஞர்கள் மாநாட்டிற்கு அனுப்பிவைத்துச் சிறப்பித்தது.

1981இல் சிறிய செடியாக இருந்த வங்கித் தமிழ் இன்று அடையாறு ஆலமரம் போன்று மாபெரும் மரமாக வளர்ந்துள்ளது. பாரத ஸ்டேட் வங்கியின் கலைச்சொற்கள் கொண்ட பெரிய அகராதியை பேரகராதியாக இப்போது தொகுத்துள்ளது. இந்த அரிய அகராதியை அருந்திறலுடன் தொகுத்துள்ள பெருமை கவிஞர் ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணன் அவர்களையே சாரும்.

பேசுவதற்கும் பொதுமக்களிடம் பழகுவதற்கும் தமிழைக் கற்க பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த உயர் அதிகாரி ஒருவர் ஆர்வம் காட்டினார். சக

ஊழியர்களின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் வடநாட்டு அதிகாரிக்கு தமிழ்ப் பாடங்களைக் கற்றுக் கொடுத்து ஒரு புதிய அத்தியாயத்தைத் தம் தமிழ்ப் பணியில் எழுதியவர்.

பாரத ஸ்டேட் வங்கியின் அதிகாரியாகப் பணியாற்றிவரும் ஏர்வாடி அவர்கள் நாடறிந்த நல்ல எழுத்தாளராவார். பல இனிய நூல்களின் ஆசிரியர். சிறந்த கவிஞர். இவருடைய செந்தமிழ்ப் பாடல்களும் சுவைமிக்க நாடகங்களும் அனைத்திந்திய வானொலியிலும் சென்னைத் தொலைக்காட்சியிலும் பெருமுழக்கம் செய்துவருகின்றன. கசப்பான உண்மைகளையெல்லாம் தெளிதேனில் குழைத்து ஊட்டி மக்களைத் திருத்தும் மாண்பு மிக்கவர் இவர். இவருடைய தளராத தமிழார்வத்தாலும் அயராத உழைப்பினாலும் ஆகிவந்துள்ளது. இந்தப் பேரகராதி என்று இவரின் தமிழார்வத்தை குறிப்பிட்டுள்ளது.

ஒவ்வொரு முறையும் வெளிநாடுகளுக்குச் சென்று வந்ததன் நினைவாக ஏதாவது ஒரு தமிழ்ப்பணி செய்வது ஏர்வாடியாரின் பண்பாக விளங்குகிறது. இவரது தமிழ்ப்பணி பலவிதங்களில் செயல்புரிந்தாலும் இதழியல் பணிகள் என்றும் வாழும் சான்றுகளாக நின்று உதவுகின்றது.

ஏர்வாடியாரின் பிற பணிகள்

- ஆண்டுதோறும் சிறந்த மனிதநேயத் தொண்டர்களைத் தேர்ந்து சிறப்பித்தல்.
- கிராமப் புறங்களில் மருத்துவம், கல்வி, கவிதை முகாம்களை நடத்துதல்.
- தாமே தங்கள் நூல்களைப் பதிப்பிக்கும் எழுத்தாளர்களின் நூல்களை விற்க கண்காட்சி கடற்கரை புத்தகச்சந்தை நடத்துதல்.
- கல்வியிற் சிறந்த ஏழைச் சிறார்களுக்கு உதவுதல் (கவிதை உறவு மூலம்)

- நூல்கள் வெளியிட இயலாதோர்க்கு நூல்கள் வெளியிட்டுதவுதல்.
- ஆண்டுதோறும் வெளியிடப்பெறும் சிறந்த கவிதை, சிறுகதை, வாழ்வியல், இலக்கிய நூல்கள் குறும்படங்களுக்கு கவிதை உறவு வாயிலாகப் பரிசுகள் வழங்குதல்.
- 1988இல் அ.இ.த.எ.ச.பொதுச்செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஏர்வாடியாரைப் பாராட்டியதோடு பாரத ஸ்டேட் வங்கி அவரது ஆலோசனையை ஏற்றுக் கவிதை, கட்டுரை, நாவல், நாடகம், சிறுகதை ஆகிய ஐந்து துறைகளில் சிறந்த ஐந்து எழுத்தாளர்களுக்குத் தலா ரூ.1000 வீதம் ரூ.5000 பரிசளிக்க முன்வந்து செய்தும் காட்டியது.
- கவிதை உறவு மாத இதழ் வாயிலாக இலக்கியப் பணி
- கவிதை இரவு வாயிலாக கவிஞர்களுக்கிடையே திறமையும் நட்பையும் வளர்க்கும் பணி.
- நூல் வெளியீடுகள் மூலம் உதவி செய்து ஊக்குவிக்கும் பணி.
- இல்லந்தோறும் இலக்கிய நிகழ்வுகள் மூலம் பாச உணர்வு, மனிதநேயம் வளர்க்கும் பண்பாட்டுப்பணி.
- "தொலைக்காட்சியில் நாடகத்தைத் தேர்வு செய்யும் குழுவில் உறுப்பினராக உள்ளார்"[9]

மருத்துவ முகாம், மாணவமணிகளுக்கு உதவும் பணி தென்னிந்திய நுகர்வோர் சங்கத்தின் (Southern Consumer Union) செயற்குழு உறுப்பினராகவும்

பாரத ஸ்டேட் வங்கி அலுவலர்கள் பண்பாட்டுக் கழகத்தில் இணை அமைப்பாளராகவும், Madras Link என்ற வங்கித்துறை ஊழியர்களுக்கான இதழின் துணை ஆசிரியராகவும் தமிழ்க் கவிஞர் மன்றத்தின் பொருளாளராகவும் இணைச் சிறப்பாசிரியராகவும்

கவிதை உறவு திங்களிதழின் சிறப்பாசிரியராகவும் Coastal Town Lions Club உறுப்பினராகவும் அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் செயற்குழு உறுப்பினராகவும் இணைச் செயலாளராக 1959 முதல் பொதுச் செயலாளராகவும் பணியாற்றினார்.

இதழ்ப்பணி

1978ஆம் ஆண்டில் பல்வேறு நிறுவனங்களில் பணியாற்றும் 12 கவிஞர்கள் கூட்டமாகச் சேர்ந்து தமது எண்ணக் கோலங்களை 'வண்ணங்கள்' என்ற தலைப்பில் இம்மன்றத்தின் சார்பில் வெளியிட்டனர்.

சென்னை வானொலி இயக்குநர் திரு.எஸ்.கந்தசாமி (துறைவன்) அவர்கள் தலைமையில், அன்றைய தமிழ்நாடு செய்தி சுற்றுலாத்துறை அமைச்சர் மாண்புமிகு இராம.வீரப்பன் அவர்களால் இந்நூல் வெளியிடப்பட்டது.

"மாண்புமிகு அமைச்சர் பேசும்பொழுது 'பாரதி பாவேந்தர் ஆகிய இரண்டு பரம்பரைகளும் இரண்டாகி இணைந்து இங்கே காணப்படுவதாக உணர்கிறேன்' என்று குறிப்பிட்டார். இந்த இரண்டு பரம்பரையினரையும் ஒரே அணியில் இணைத்து ஒரு புதிய பரம்பரையை உருவாக்குவதுதான் ஏர்வாடியாரின் இலக்காகவும் இருந்தது"[10] அதன்பின் 1982இல் 'கவிதை உறவு' என்கிற இதழைத் தொடங்கினார்.

18-05-1972இல் கவிதை உறவு இயக்கம் 'கவிதை உறவு' என்ற இதழை 1988இல் தொடங்கி தற்போது 42ஆண்டுகளாகத் தொடர்ந்து 'கவிதை உறவு' இதழை அரசுப் பதிவிதழாகத் தொடர்ந்து வெளிக் கொணர்டு சாதனையைப் படைத்துள்ளது.

18-01-1988 அன்று காஞ்சியில் கவிதை உறவினரும் அனைத்திந்திய தமிழ் எழுத்தாளர் சங்கத்தினரும் ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி

ஸ்ரீஜெயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளைச் சந்தித்து கவிதை உறவு இதழை அறிமுகம் செய்து ஆசி பெற்றனர்.

டாக்டர் த.கோவேந்தன் அவர்களின் 'தமிழுடை நெஞ்சம் தாம் கலந்தனவே' என்னும் வரிகளை ஒவ்வொரு இதழில் தலைப்பிலும் எண் 4, முத்துமுதலி தெரு, புரசைவாக்கம், சென்னை – 600007 என்ற முகவரியிலிருந்து வெளிவந்தது.

25-01-1958 அன்று சென்னையில் பாரத ஸ்டேட் வங்கி அதிகாரிகள் சங்கப் பயிற்சி மைய அரங்கில் வங்கி அதிகாரிகள் சங்கப்பயிற்சி மைய அரங்கில் முறைப்படி இவ்விதழ் வெளியிடப்பட்டது.

பின் சென்னைத் தொடர்ந்து (Madras Link) என்ற காலாண்டிதழில் இணை ஆசிரியராகப் பணியாற்றியவர் ஏர்வாடி.

கவிதை உறவு இதழில் வெளியாகின்ற கவிதைகளுக்கு மிகச் சிறந்த ஒரு கவிதைக்கு 'அமுத சுரபி' ஆசிரியர் டாக்டர்.விக்கிரமன் அவர்கள் நூலும், கடிதமும் அனுப்பி 'அமுத கவிதை' என்று சிறப்புப் பெற்றது.

கவிதை உறவின் பணி

'கவிதை உறவு' மாத இதழ் வாயிலாக இலக்கியப் பணி. கடற்கரைப் புத்தகச் சந்தை வாயிலாக புத்தக விற்பனைப் பணி.

கவிதை இரவு வாயிலாக கவிஞர்களுக்கிடையே திறமையும் நட்பையும் வளர்க்கும் பணி.

நூல் வெளியீடுகள் மூலம் உதவி செய்து ஊக்குவிக்கும் பணி.

இல்லந்தோறும் இலக்கிய நிகழ்வுகள் மூலம் பாச உணர்வு, மனித நேயம் வளர்க்கும் பண்பாட்டுப் பணி.

மருத்துவ முகாம், மாணவமணிகளுக்கு உதவும் பணி.

கவிதை உறவு அமைப்பு கவிஞர்களிடமிருந்து சிறந்த கவிதைகளைக் கேட்டு வாங்கித் தொகுதியாக அவ்வப்போது வெளியிட்டுள்ளது.

வண்ணங்கள்

மீண்டும் மீண்டும்

இன்னும் இருக்கிறது

தொடரும்

உயரே உயர

ஆகிய நல்ல தொகுதிகளைத் தமிழுக்குத் தந்துள்ளது கவிதை உறவு.

பாங்காக்கில் நடந்த பத்தாவது உலகக் கவிஞர்கள் மாநாட்டையொட்டி (நவம்பர் 14 – 18- 1988) நவம்பர் 1988 ஆண்டு இதழ் சிறப்பு வெளியீடாக தாய்லாந்து நாட்டின் சிறப்புகளுடன் வெளிவந்தது.

1990ஆம் ஆண்டில் துபாய் சிறப்பிதழ் வெளியிட்டு வாழ்த்தினார்.

ஜுலை 1990 இதழ் பாவேந்தர் சிறப்பிதழாக வெளியிடப்பட்டுள்ளது.

5-3-1991இல் கவிதை உறவு பிரான்ஸ் சிறப்பிதழ் மக்கள் தலைவர் திரு.கருப்பையா மூப்பனார் அவர்களால் வெளியிடப்பட்டது.

இத்தகைய சிறப்பு இதழ்கள்மூலம் வெளிநாட்டில் உள்ள தமிழர்களுக்கும் தாயத் தமிழர்களுக்கும் ஓர் இணைப்புப் பாலமாய் நட்புப் பாசறையாய் விளங்குகிறது கவிதை உறவு.

ஏர்வாடியார் ‘கவிதை உறவு’ என்ற இலக்கிய அமைப்பைத் தொடர்ந்து 48ஆண்டுகளாக நடத்திவருகிறார். இவ்வமைப்பின் சார்பில் ‘கவிதை உறவு’ மாத இதழை 49 ஆண்டுகளாக வெளியிட்டு வருகிறார்.

'கவிதை உறவு' இதழுக்காக 'பொற்றாமரை' அமைப்பு வழங்கிய சிறந்த இலக்கிய இதழ் விருது, 'உரத்த சிந்தனை' வழங்கிய சிறந்த இதழ் விருது, 'இலக்கிய இணையர் பேராசிரியர் இரா.மோகன் முனைவர் நிர்மலா மோகன் அறக்கட்டளை' வழங்கிய சிறந்த இலக்கியச் சீரிதழ் விருது பெற்றுள்ளது. தலைவர்கள், அறிஞர்கள் பலரது பாராட்டுகளையும் பெற்ற இதழாகத் திகழ்கிறது"[11]

எழுத்தாளர் ஏர்வாடியார்

ஏர்வாடியாரின் பள்ளியாசிரியர் நடராசபிள்ளை கல்லூரி முதல்வர் வேதசிரோன்மணி போன்றவர்களின் நிழலில் தன்னை வளர்த்தெடுத்த ஏர்வாடியார் தன் தமிழ்ப் பேராசிரியர்களான ஜெயரத்னம், மாயாண்டி பாரதி ஆகிய பேராசிரியர்களின்மூலம் அவர்களின் தூண்டுகோலால் கவிதை எழுதும் ஆர்வத்தை வளர்த்தது. வங்கிப்பணிக்குச் சென்ற பின்னும் முழுநேரப் பணியாளராக இருந்த எழுத்தார்வத்தை வளர்த்துக் கொண்டது மட்டுமல்லாமல் புதுமுக எழுத்தாளர்களையும் தூண்டினார். அவர்களுக்கு நல்ல ஒரு வாய்ப்பையும் நல்கித்தந்தார்.

'எண்ணங்களைத் தடை

செய்யாதீர்கள்... அதுபாட்டுக்கு வந்து

போகட்டும்'

என்கிற ஜென்குருமார்களின் பொன்மொழிகளுக்கு ஏற்ப வாழ்க்கையின் பாதையில் தன் எழுத்தார்வத்தைத் தடை செய்யாது வளர்த்துக் கொண்டவர்.

கல்லூரியில் படிக்கும் காலத்திலேயே கவிதைகள் புனையும் ஆற்றல் பெற்ற கவிஞர் இராதா முதன்முதலில் எழுதி அச்சேற்றிய கவிதை ஓர் இரங்கற்பாவாகும். 1966ஆம் ஆண்டு அன்றைய பிரதமர் 'லால்பகதூர் சாஸ்திரி அவர்கள் மறைந்தபோது 'நெருநல் உளனொருவன்...' என்னும்

குறட்பாவை எழுதியதிலிருந்தே ஏர்வாடியாரின் எழுத்தார்வம் தொடங்கியது. இலக்கியத்தின் மீதுள்ள நாட்டமும், அவரை எழுத்தாளராக உருவேற்றச் செய்தது.

"ஏர்வாடியார்க்கு எழுத்தார்வத்தை வளர்த்தவர்கள் பலர். அவர்களில் விக்ரமன் முதன்மையானவர். முதலில் கோமகள் இதழில் எழுதினார். பிறகு அமுதசுரபி, கலைமகள் என ஏர்வாடியின் எழுத்தார்வம் வளர்ந்தது"[12] 41 வயதிலேயே கலைமாமணி விருது பெற்றார்.

ஏர்வாடியார் தன் குடும்பத்தில் முதல் பட்டதாரி. படிப்பைத்தவிர வேறு சிந்தனைகள் வரக்கூடாதென்பதில் இவரின் தந்தை கவனமாகவும், கண்டிப்பாகவும் இருப்பார். கல்லூரி மலர்களைத் தவிர இவரின் படைப்புகள் வெளிவந்ததில்லை. வங்கிப்பணி கிடைத்த பின்னும் வேலையின் மேலே கவனம் கொள்ள வேண்டும் என்பார். இவருக்குத் தந்தை, வங்கி என்று இரண்டு இலக்கியத் தடையாளர்கள் இருந்தனர். கண்ணதாசன் கவிதை, முல்லைச்சரம், தமிழ்ப்பணி, கோமகள் போன்ற இதழ்களிலும் கவிதைகளும் அகில இந்திய வானொலியில் நாடகங்களும் அமுதசுரபி, கலைமகள் போன்ற இதழ்களில் சிறு கட்டுரைகளும், நேர்காணல்களும், சிறுகதைகளும் எழுதத் தொடங்கினார். இந்த நேரத்தில்தான் அவருக்கு இரண்டு எதிரிகள் உருவெடுத்தனர்.

பன்முக ஆற்றல் கொண்ட ஏர்வாடி அவர்கள் 100க்கும் அதிகமான நூல்களை வெளியிட்டுள்ளார். அவரின் இரண்டு நூல்கள் தமிழ் வளர்ச்சித் துறையின் சிறந்த நூல்களுக்கான பரிசுகளைப் பெற்றுள்ளன.

"'திருமணங்கள் வெறும் நிகழ்ச்சிகள் அல்ல' என்ற ஏர்வாடியாரின் நூலுக்குத் தமிழ் வளர்ச்சித் துறையின் 1986ஆம் ஆண்டிற்கான விருதைப் பெற்றது"[13]

வானொலி நிலையத்தில் பணியாற்றும்போது கட்டுரை, கவிதைகள் எழுதி அதை வானொலியில் வாசித்தார். இவர் முதலில் எழுதிய சிறுகதை பிரபல இதழில் வெளியாகவில்லை. அக்கதையை ‘அமுதசுரபி’ எனும் இதழ் நடத்திய சிறுகதைப் போட்டிக்கு அனுப்பினார். அப்போட்டியில் அக்கதையே முதல் பரிசு பெற்றது. இவர் எழுதிய முதல் நூல் ‘உனக்காக ஒரு பாடல்’ என்பது. இந்நூல் வானொலி தொலைக்காட்சியில் ஒளிபரப்பான இவரது இசைப்பாடல்கள் அடங்கிய தொகுப்பாகும்.

ஏர்வாடியார் நாடக ஆசிரியர், சிறுகதை எழுத்தாளர், கவிஞர், கட்டுரையாளர் என்று இன்றும் வலம்வந்துக் கொண்டிருக்கிறார் நம்மிடையே.

கவிதை

1966இல் கவிதை எழுதத் தொடங்கிய ஏர்வாடி 1977ஆம் ஆண்டு ‘உனக்காக ஒரு பாடல்’ என்கிற கவிதை நூல் இவர் எழுதி வெளியிட்ட முதல் நூல்.

ஏர்வாடியாரின் கவிக்குள் பொதிந்த வாழ்க்கைத் தத்துவம்.

‘காற்றைத் தருகிறான்
கடவுள் உயிரெனும்
பேற்றைப் பெறுகிறான்
பிறக்கின்ற மனிதன்’
‘வாழ்ந்தே பாரென
விதிக்கிறான் இறைவன்
வாழ்க்கை இதுவென
வகுக்கிறான் மனிதன்’
‘அறியத் தருகிறான்
ஆயிரம் இறைவன்
அறிவாய் அனுபவம்
பிழிவாய் மனிதன்’ (வெளிச்ச மலர்கள்)

கவிதையில் பொதிந்த கவிஞர்க்கான அறிவுரையை தன் கவிதையில் விதைத்துச் செல்கிறார்.

‘கவிதைப் பொய்யைக் கூட
கற்பனை என்று சொல்லிவிடலாம்
ஆனால்
கவிஞனே பொய்யனாயிருந்தால்
காலம் புறந்தள்ளி விடும்’

கவிதைப் பொய்க் கொண்டு புனைதல் இலக்கணம், கவிஞனே பொய்யனென்றால் இலக்கணமாகாது என்பதை உரையிலும் வானொலி, தொலைக்காட்சி மேடைகளில் வழங்கியவர் ஏர்வாடியார்.

ஏர்வாடியாரின் ஏக்கம் “தமிழில் இதிகாசத் தரமுள்ள கவிதைப் படைப்புகள் வரவில்லையே”[14] என்கிற ஏக்கம்.

கவிதையில் உணர்வுதான் முக்கியம். கவிதையில் சரியான உணர்வு வெளிப்படும்போது அது தனக்கான சொற்களைத் தேடிக் கொள்ளும் வடிவத்திற்கு அப்பாற்பட்டதுதான் கவிதை என்கிறார் ஏர்வாடி.

கட்டுரை

சிறுகதை ஆசிரியர், நாடக ஆசிரியர் என்று சொல்வதைவிட கட்டுரையாளர் என்பது பொருத்தமுடையது.

‘எழுத்தாளர்களுக்கு’ என்ற கட்டுரை நூல் ஒன்றையும் அனைத்திந்திய தமிழ் எழுத்தாளர் சங்கப் பொதுச் செயலாளரான ஏர்வாடியார் தன் எழுத்துச் சமூகத்துக்குப் பயன்படக்கூடிய ஒரு பேருதவியை இந்நூலின் வாயிலாகச் செய்துள்ளார்.

‘கவிதை உறவு’ என்ற தன்னுடைய இதழில் ஒவ்வொரு மாதமும் எழுதிவந்த சிந்தனைக் கட்டுரைகளை ‘என் பக்கம்’ என்ற அதே பெயரில் வாழ்வியல் கட்டுரை நூல் ஒன்றையும் தொகுத்துள்ளார்.

‘வெளிநாட்டு வீதியிலே’ என்ற தலைப்பில் கிரீஸ் பயணக் கட்டுரை நூல் ஒன்றை எழுதியுள்ளார். 24-07-1989 அன்று இந்நூல் பாரிஸில் Maison Dela mutualitc அரங்கில் வெளியிடப்பட்டுள்ளது.

மனிதர்களின் மனதை பிரித்தறிந்து சிந்திக்கக்கூடிய கருத்தார்ந்த கட்டுரைகளை எழுதும் திறன் வாய்ந்தவர் ஏர்வாடி.

சிறுகதை

1966ஆம் ஆண்டு அன்றைய பிரதமர் லால்பகதூர் சாஸ்திரி மறைந்தபோது ‘நெருநல் உளனொருவன்’ என்னும் குறட்பாவை முதல் அடியாகக் கொண்டு அப்பாடல் தொடர்ந்து அதற்கடுத்த மலரில் ‘நிலவே நில்’ என்றொரு சிறுகதையை கவிதை வடிவில் எழுதினார்.

1. திருமணங்கள் வெறும் நிகழ்ச்சிகள் அல்ல
2. இனிவரும் நாள்களில்
3. வேளை வந்துவிட்டது

“தமிழ் வளர்ச்சித் துறையின் சிறந்த நூல்களுக்கான பரிசு ‘திருமணங்கள் வெறும் நிகழ்ச்சிகள் அல்ல’ சிறுகதைத் தொகுதி முதற்பரிசு.

பரிசு பெற்ற சிறுகதையொன்று (வேளை வந்துவிட்டது) இந்தியச் திரைப்படத் துறையினரால் படமாக்கப்பட்டுள்ளது. இச்சிறுகதை தமிழ்நாடு அரசுப் பள்ளிகளில் 10ஆம் வகுப்புப் பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டது”[15]

அமுதசுரபி மாத இதழ் நடத்திய சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்றுள்ளது.

நாடகம்

“1988இல் ‘வங்கி வாடிக்கையாளர் அமைப்பு’ என்ற அமைப்பு, வங்கிகள் சரிவர சேவை செய்கிறதா என்பதை உறுதிப்படுத்தக் கூடியவை.

இச்சேவைகள் பற்றிய விரிவான ஒரு நாடகத்தை முற்றிலும் புதிய முறையில் தயாரித்து சென்னைத் தொலைக் காட்சியில் “கனவுக்குக் கால் முளைக்கும்” என்ற பெயரில் ஒளிபரப்புச் செய்தார்”[16]

வாழ்க்கையில் பல சந்தர்ப்பங்களில் நிகழக் கூடியது மனப்போராட்டங்களை படம்பிடித்துக் காட்டுவது போல் ஏர்வாடியாரின் நாடகங்கள் அமைந்திருக்கும். 500க்கும் மேற்பட்ட நாடகங்களை எழுதியும் வானொலிகளில் ஒலிபரப்பவும் செய்துள்ளார். சில நாடகங்களில் கதாபாத்திரமாகவும் நாடக மேடைகளில் நடித்துள்ளார். 3 மேடை நாடகங்கள், தொலைக்காட்சித் தொடர்கள், குறும்படங்கள் உருவாக்கியுள்ளார்.

1. பணம், பணம், பணம்
2. நிழல் தேடும் நெஞ்சங்கள்
3. அன்புள்ள கீதாவுக்கு
4. இப்போது புரிகிறது
5. நீ வந்த நேரம்
6. இன்னும் ஒரு மீரா
7. ஒரே ஒரு வீடு

இதில் ‘இன்னும் ஒரு மீரா’ என்னும் நூல் தமிழ் வளர்ச்சித் துறையின் பரிசு பெற்ற நூலாகும். வானொலி, தொலைக்காட்சி நாடகங்கள் இவை அறிமுகமானவை. இலக்கிய உலகில் தனக்கென்று ஒரு இடத்தைப் பிடித்துக் கொண்டுள்ளது.

சென்னை பச்சையப்பன் கல்லூரியைச் சேர்ந்த கு.கேசவன் என்ற மாணவர் டாக்டர் இரா.குமரவேலன் அவர்கள் மேற்பார்வையில் (1989ஆம் ஆண்டு ‘ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணன் நாடகங்கள் ஓர் ஆய்வு’ என்ற தலைப்பில் எம்.ஃ.பில் பட்டத்திற்காக ஆய்வறிக்கை அளித்துள்ளதால் இவரது நாடகங்கள் இலக்கிய இலச்சினை பெற்றுள்ளதனை அறிய முடிகிறது.

நகைச்சுவை நூல்

ஏர்வாடியார் இயல்பாகவே நகைச்சுவை கலந்து பேசும் தன்மையுடையவர். அதுபோல் அவரின் நூல்களிலும் நகைச்சுவை ஆங்காங்கே கலந்திருக்கும் எதார்த்தத்தைக் காணலாம்.

என்னுடைய நண்பரொருவர் பெண் வீட்டாருக்கு அனுப்புவதற்காக புகைப்படம் எடுக்கப் போனார். சிரித்தபடி அவர் போஸ் கொடுத்தபோது மனதில் நினைத்துக் கொண்டேன்... அணைகிறபோது ஜோதி பிரகாசமாக எரியுமாமே... இப்படி இவர் இனிமேல் எங்கே சிரிக்கப் போகிறார் என்று.

ஏர்வாடியார் எழுதிய 'வருகிறாள் உன்னைத் தேடி' என்கிற நூலில் நகைச்சுவையை சிந்திக்கவும், சிரிக்கவும் செய்யும் வகையில் அமைந்துள்ளதனைக் காணலாம்.

மொழிப் பெயர்ப்பாளர் ஏர்வாடி

மொழிபெயர்ப்பு பணியை 1972ஆம் ஆண்டு தொடங்கினார். வங்கியின் ஆணைகளுக்கேற்ப மொழிபெயர்ப்பு பணியைத் தொடங்கினார். சுமார் 15,000 வங்கிக் கலைச் சொற்கள் அடங்கிய பேரகராதியைத் தயாரித்தார்.

"Balance sheet	–	ஐந்தொகைக் குறிப்பு
Cell	-	சிற்றம்
Method	-	வகைப்பாட்டு முறை
Photostat copy	-	ஒளிநகல்
Receipt	-	கொள் சீட்டு
Scheme	-	சமைதிட்டம்
System	-	அமைப்பு முறை
Task Force	-	விரைவுப் பணிக்குழு"[17]

இவை ஏர்வாடியார் மொழிபெயர்ப்புச் செய்த சில சொற்கள் ஆகும்.

ஏர்வாடியார் பங்கேற்ற இலக்கியச் சொற்பொழிவுகள்

காப்பியக் கவிஞர் வாலி, கவிக்கோ அப்துல் ரகுமான், ஈரோடு தமிழன்பன், கவிஞர் கு.மா.பா.ஞானபாரதி, வலம்புரி ஜான், கவிஞர் பொன்னடியான், கே.சி.எஸ் அருணாசலம், கவிஞர் சக்தி சிதம்பரநாதன் போன்றோர் தலைமையில் கவியரங்கம் பங்கேற்றுள்ளார். பல்வேறு கவியரங்குகளில் தலைமை, பட்டிமன்றம் மற்றும் இலக்கியச் சொற்பொழிவுகளில் கலந்துகொண்டுள்ளார்.

சாகித்ய அகாடமி அரசு மற்றும் பல்கலைக்கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்றவர்.

பயணம்

உலகளாவிய தமிழ் நண்பர்களை அன்பர்களாகப் பெற்ற ஏர்வாடி இராதாகிருஷ்ணன் 1982ஆம் ஆண்டு இலங்கையில் நடந்த இந்து சமய மாநாட்டில் அரசு விருந்தினராகக் கலந்து கொண்டார். 1990இல் துபாய் முதலிய நாடுகளுக்குச் சென்று பல இலக்கய நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டவர். 'கலீஜ் டைம்ஸ்' என்ற வெளிநாட்டு பத்திரிகை ஒன்றில் இவரது பேட்டியும் 'கவிதை உறவு' இதழைப் பற்றிய செய்திகளும் வெளிவந்துள்ளன. பாங்காக்கிலிருந்து வெளியாகும் 'Focus' என்ற ஆங்கில நாளிதழ் (15-11-1988) ஏர்வாடியின் புகைப்படத்துடன் அவரைப் பற்றியும் மாநாடு பற்றிய செய்திகளையும் வெளியிட்டுள்ளது.

உலகக் கவிஞர்கள் மாநாடுகளில் (சான் பிரான்சிஸ்கோ, ஏதென்ஸ், தாய்லாந்து) கலந்து கொண்டவர்.

கலை, இலக்கிய, ஆன்மீக நிகழ்ச்சிகளில் பங்கேற்க உலக நாடுகள் பலவற்றிற்கும் பயணித்த அனுபவம் அமெரிக்கா, இங்கிலாந்து, கிடகஸ்,

பிரான்ஸ், மேற்கு ஜெர்மனி, துபாய், மலேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து, இலங்கை உள்ளிட்ட நாடுகளுக்குச் சென்று வந்தவர்.

சாகித்ய அகாடமி போன்ற அமைப்புகளின் நிகழ்ச்சிகளிலும் பல்வேறு பல்கலைக்கழக நிகழ்ச்சிகளிலும் பங்கேற்றுள்ளார்.

உலகக் கவிஞர்கள் சங்கத்தின் எட்டாவது மாநாடு 1985ஆம் ஆண்டு கோப்பு கிரிஸில் நடைப்பெற்ற இம்மாநாட்டில் கலந்துகொண்டார் ஏர்வாடியார்.

இசைத்துறை

வானொலியில் நூற்றுக்கும் மேலான இசைப்பாடல்கள் எழுதியவர். புகழ்வாய்ந்த இசையமைப்பாளர்களின் இசையில் முன்னணி பாடகர்கள் வரிசையில் பாடிப் புகழ்பெற்றவர்.

‘உவமையவளே மாரியம்மா

வரம்தருவாய் மாரியம்மா’

என்று தொடங்கும் பாடலை ஆர்.ராமானுஜம் இசை அமைக்க, எஸ்.வரலட்சுமி பாடி, ‘ஆனந்த பைரவி’ திரைப்படம் வாயிலாக திரைப்படம் பாடலாசிரியராக இசையுலகில் அறிமுகமானார்.

‘தாகம் தீராத மேகம்’ என்ற திரைப்படத்தில் சங்கீதராஜன் இசையமைப்பில் ஆறு பாடல்களை எழுதியுள்ளார்.

இவர் எழுதிய ‘மாட்டுக்கார வேலன் பாட்டுப்பாடப் போகிறேன்’ என்று தொடங்கும் பாடலை மலேசியா வாசுதேவன் பாடியுள்ளார்.

இப்படத்தில் இவரது பாடல்களை பி.சுசிலா கே.ஜே.ஜேசுதாஸ், சித்ரா ஆகியோரும் பாடியுள்ளனர்”[18]

1. உனக்காக ஒரு பாடல்
2. வசந்தம் வருகிறது
3. எனது வானில்
4. பாட்டு வரும் போன்ற பாடல் தொகுதிகளை வெளியிட்டுள்ளார்.

திரைப்படப் பாடலாசிரியராக கவியரசு கண்ணதாசன் அவர்களுடன் அறிமுகமானார் (படம் ஆனந்த பைரவி) மேலும் இரு படங்களுக்கும் இதுவரை 5 பாடல்கள் எழுதியவர் ஏர்வாடி.

வானொலியிலும் தொலைக்காட்சியிலும் மெல்லிசைப் பாடல்கள் மூன்று. திரைப்பாடல்கள் ஆறு, ஏர்வாடியார் எழுதி வெளிவந்த படம் ஆனந்த பைரவி.

ஏர்வாடியார் பெற்ற விருதுகளும் பரிசுகளும்

கவிதை உறவு எனும் இலக்கிய அமைப்பைத் தொடங்கி நடத்திவருகின்றார். இதன்மூலம் ஆண்டுதோறும் தமிழில் வெளியாகும் சிறந்த படைப்புகளுக்கு போய் ஒரு இலட்சம் வரை பரிசுகள் வழங்கப்படுகின்றன.

'தமிழ் வளர்ச்சித் துறையின் சிறந்த நூல்களுக்கான பரிசு', 'இன்னும் ஒரு மீரா' நாடகம் இரண்டாவது பரிசு.

பரிசு பெற்ற சிறுகதையொன்று (வேலை வந்துவிட்டது) இந்தியத் திரைப்படத் துறையினரால் படமாக்கப்பட்டுள்ளது.

'திருமணங்கள் வெறும் நிகழ்ச்சிகள் அல்ல' என்ற ஏர்வாடியின் நூலுக்குத் தமிழ் வளர்ச்சித் துறையின் 1986ஆம் ஆண்டிற்கான விருதைப் பெற்றுள்ளது.

'ஞாலக் கவிஞர்', 'கவிச்சிற்பி', 'கவிதைக் காவலர்', 'பொதிகைத் தமிழ்ப் பாவலர்', 'இலக்கியத் தென்றல்', 'கலைமாமணி', 'தமிழ்நாடு அரசின்

பாரதிதாசன் விருது’, ‘பாரதி தமிழ்ப் பணிச் செல்வர்’, ‘கனடா உதயன் வழங்கிய வாழ்நாள் சாதனையாளர் விருது’ என்று பல விருதுகளைப் பெற்றவர் ஏர்வாடி.

ஏர்வாடியார் பணிகளுக்காகப் பெற்றுள்ள விருதுகளும் பரிசுகளும் பட்டங்களும் பலவாகும்.

ஏர்வாடியார் பெற்ற பட்டங்கள்

தாய்மண் இலக்கியக் கழகம் சார்பில் பேராசிரியர் க.அன்பழகன் அவர்களால் ‘ஞாலக் கவிஞர்’ என்ற பட்டமும்,

செங்காடு மதுரை வீரன் திருக்கோவில் சார்பாக ‘எழுத்துச் செம்மல்’ என்கிற பட்டமும்,

தமிழ்நாடு ஆன்மீகப் பேரவையால் ‘எழுத்துச் செல்வர்’ என்கிற பட்டமும்,

வி.ஜி.பி. சந்தனம்மாள் அறக்கட்டளை சார்பாக ‘கவி உலகச் செம்மல்’ என்ற பட்டமும்,

மகா பைன் ஆர்ஸ்ங் சார்பில் ‘மக்கள் தொண்டர்’ என்ற பட்டமும்,

ஸ்ரீராம் நிறுவனங்கள் சார்பாக பாரதி பாவேந்தர் நூற்றாண்டு விழாவில் (1991) சிறந்த ‘சிறு பத்திரிகை ஆசிரியருக்கான’ பட்டயத்தினையும் பெற்றுள்ள ஏர்வாடியாருக்கு சங்கத்தின் சார்பில் Distinguished Officer என்ற சிறப்பும் வழங்கப்பட்டுள்ளது.

ஏர்வாடியார் தம் பணிகளுக்காக வாங்கிய பட்டங்கள் ‘ஞாலக் கவிஞர்’, ‘கவிச்சிற்பி’, ‘கவிதைக் காவலர்’, ‘பொதிகைத் தமிழ்ப் பாவலர்’, ‘இலக்கியத் தென்றல்’, ‘எழுத்துச் செம்மல்’, ‘சேவா ரத்னா’, ‘நாடகப் பேரொளி’, ‘கலைமாமணி’, ‘தமிழ்நாடு அரசின் பாரதிதாசன் விருது’, ‘பாரதி தமிழ்ப் பணிச் செல்வர்’, ‘கனடா உதயன் வழங்கிய வாழ்நாள் சாதனையாளர்

விருது' பெட்னா (Fetna) வழங்கியுள்ள வாழ்நாள் சாதனையாளர் விருது' எனப் பல விருதுகளும் பட்டங்களும் பெற்ற பெருமைக்குரியவர் ஏர்வாடி.

தொலைக்காட்சித் தொடர்

'வி.ஜி. தொலைக்காட்சித் தொடர் 13 வாரங்கள் சென்னை தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டது. (4 பகுதிகளுக்குக் கதை வசனமும் மற்றவற்றிற்கு கதை மட்டும்) மற்றுமோர் தொடர் 'ஒரே ஒரு வீடு' இரு வாரங்கள் ஒளிபரப்பானது.

பொதிகைத் தொலைக்காட்சியில் பெரிதும் வரவேற்கப்பட்ட 'கவிதைக் கச்சேரி' வாரத் தொடரைத் தலைமையேற்றுத் தயாரித்து வழங்கியவர்.

கலைஞர் தொலைக்காட்சியில் சந்தித்த வேளையில் கருத்துக்களம் (நடுவராக) ஆகிய நிகழ்ச்சிகளில் சிறப்புப் பங்கேற்பாளராவார்.

பாலிமர் தொலைக்காட்சியில் கடந்த ஓராண்டாகத் தொடர்ந்து 'நூல் மதிப்பீடு' செய்து வருகின்றார்.

பேட்டி

சன், ஜெயா, பொதிகை, டி.டி.சி, வசந்த், மக்கள் தொலைக்காட்சிகளிலும் சென்னை, டெல்லி, சிங்கப்பூர், பி.பி.சி. (லண்டன்) வானொலி நிலையங்களிலும் இவரது பேட்டிகள் ஒலி மற்றும் ஒளிபரப்பாகியுள்ளன.

ஏர்வாடியாரின் நூல்கள் ஆய்வேடுக்கு பரிந்துரை

"படைப்புகள் பல்கலைக்கழக மாணவர்களால் எம்.ஃ.பில், பி.எச்.டி, பட்டத் தேர்வுகளுக்காக ஆய்வு செய்யப்பட்டுள்ளன. (நாடகம், கவிதை, சிறுகதை, எம்பக்கம், வாழ்வியல் கட்டுரைகள், ஏர்வாடியாரின் படைப்பாற்றல்

போன்ற தலைப்புகள்). இவரது கவிதைகளை எம்.ஃ.பில் பட்ட ஆய்வுக்குச் சென்னைப் பல்கலைக்கழகம் ஏற்றுப் பட்டம் வழங்கியுள்ளது"[19]

ஏர்வாடியாரின் படைப்புகளை ஆய்வு செய்து 7 பேர் எம்.ஃ.பில் பட்டமும் 4 பேர் கலாநிதி (பி.ஹெச்.டி) பட்டமும் பெற்றிருக்கிறார்கள். இவரின் கவிதைகள் பல பல்கலைக்கழகங்களில் பாடல்களாகியிருக்கின்றன.

சென்னை பச்சையப்பன் கல்லூரியிலும் 1989ஆம் ஆண்டு 'ஏர்வாடி எஸ்.இராதா கிருஷ்ணனின் நாடகங்கள் ஓர் ஆய்வு' என்ற தலைப்பில் எம்.ஃ.பில் பட்டத்திற்காக ஆய்வறிக்கை அளித்துள்ளது.

சுப்புரெட்டியாரின் 100ஆம் ஆண்டுக்கு எம்.ஃ.பில் பட்ட ஆய்வுக்கு பரிந்துரைத்துள்ளது. 'சொந்தமாக ஒரு சொர்க்கம்' என்ற கட்டுரை.

மகிழ்ச்சிக்குப் பின்பற்ற வேண்டிய மூன்று கொள்கைகள்

ஏர்வாடியார் மூன்று (A) க்களை பின்பற்றுகிறார். அவை,

"1. Acceptability (எதையும் ஏற்றுக் கொள்ளுதல்)

2. Adaptability (எதனுடனும் பொருத்திப் போதல்"

3. Accessibility (தேடக் கிடைக்கும் எளிமை)

4. இம்மூன்றையும் யார் பின்பற்றினாலும் மகிழ்ச்சியாக இருப்பார்கள்"[14] என்கிறார்.

தமிழ் இலக்கியத்தையும் ஆங்கிலத்தையும் கற்றவர் ஏர்வாடி கல்லூரியில் "சிறு வயதில் இருந்து கண்ணதாசனின் மீது ஈடுபாடு உண்டு. அவரது எழுத்து மீது தீராத மயக்கமும் கொண்டவர். அதன் ஓசைநயத்தில் இலயிந்து போனவர்"[21] ஏர்வாடியார்.

கல்லூரி கட்டுரைப் போட்டிக்கான தலைப்புகளில் மற்றவர்கள் மறைந்த பாரதி, பாரதிதாசன், கம்பர் போன்ற கவிஞர்கள் பற்றி எழுதியபோது ஏர்வாடியார் மட்டும் கண்ணதாசனைப் பற்றி எழுதினார்.

ஏர்வாடியார் மூன்று (3) என்கிற எண்ணையும் அதன் மடிப்புகளையும் கையாளத் தகுந்தவர். தனது கட்டுரைகளுக்குள்ளயும் மூன்றாலேயே வகைப்படுத்துதல் ஏர்வாடியாரின் வழக்கமாக உள்ளது.

ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணன் அவர்கள் மூன்று நிலைகளில் தம் படைப்புகளை உருவாக்கியுள்ளார். கவிதைகள், சிறுகதைகள், நாடகங்கள் என்பவையே.

1. 7 கவிதைத் தொகுதிகள்
2. 64 சிறுகதைகள்
3. 35 நாடகங்கள்
4. 7 திரைப்பாடல்கள்
5. 3 மேடை நாடகங்கள்

பொதுமக்களும் இவரின் படைப்புகளைப் படித்துக் கொள்ளும் வகையில் படைப்புகள் உள்ளது.

கவிதை நூல்கள்

1. உனக்காக ஒரு பாடல்
2. பாட்டு வரும்
3. வசந்தம் வருகிறது
4. My Heaven
5. எனது வானில்
6. வெளிச்சம் வருகிறது
7. ஏர்வாடி இராதாகிருஷ்ணன் கவிதைகள்

8. எப்போதாவது (திருவனந்தபுரம் பல்கலைக்கழகம் பாடநூல்)
9. கவிதை மின்னல்கள் - 1
10. கவிதை வானில்
11. கவிதை மின்னல்கள் - 2
12. பாட்டு வெளியினிலே
13. கனவின் பெயர் கவிதை
14. காதல் வெறும் கதையல்ல

கவிதைத் தொகுப்பு

1. வண்ணங்கள்
2. கவிதை உறவுக் கவிதைகள்
3. அன்னையின் அநேக வடிவங்கள்
4. உயரே உயர
5. தொடரும்
6. இன்னும் இருக்கிறது
7. மீண்டும் மீண்டும்
8. அண்ணா எங்கள் அண்ணா

சிறுகதை நூல்கள்

1. இனிவரும் நாள்களில்
2. வேலை (ளை) வந்துவிட்டது
3. ரத்ததானம்
4. முள்ளில் விழுகிற சேலைகள்
5. விளம்பரங்கள்

1. திருமணங்கள் வெறும் நிகழ்ச்சிகள் அல்ல – சிறுகதைத் தொகுப்பு நூல்கள்
2. இனிவரும் நாள்களில் - சிறுகதை தொகுப்பு

3. வேளை வந்துவிட்டது

நாடக நூல்கள்

1. பணம், பணம், பணம்
2. நிழல் தேடும் நெஞ்சங்கள்
3. அன்புள்ள கீதாவுக்கு
4. இப்போது புரிகிறது
5. நீ வந்த நேரம்
6. இன்னும் ஒரு மீரா
7. ஒரே ஒரு வீடு

கட்டுரை நூல்கள்

1. என் பக்கம் (12 – தொகுதிகள்)
2. மனத்தில் பதிந்தவர்கள் (6 – தொகுதி)
3. வாழ்க்கை வாழத்தான் (4 பதிப்புகள்)
4. மலரோடு மலராக
5. மன்றங்களில் மலர்ந்தவை
6. மாபெரும் சபைகளில்
7. இன்னும் சில சிறகுகள்
8. எண்ணிய வண்ணமாய்
9. படைப்புக் கடவுளின் பரம்பரையில் வந்தவர்கள் (விஸ்வகர்மாக்கள் வரலாறு – 5 பதிப்புகள்)
10. வெளிநாட்டு வீதியிலே (கிரீஸ் பயணக்கதை)
11. தோரணங்கள்
12. சில நந்தவனங்களில் நான்
13. மலரோடு தென்றல்
14. எழுத்தாளர்களுக்கு (final – 5 பதிப்புகள்)

15. நினைவுக்கு வந்த நிகழ்ச்சிகள்
16. பதிந்ததும் பாதித்ததும்
17. தலைவாசல்
18. எழுத்துச் சிறகுகள்
19. வெளிச்ச மலர்கள்
20. கண்ணில் தெரியுது வானம்
21. தமிழ்ச்சுவை
22. அக்கம் பக்கம்
23. ஏர்வாடியிலிருந்து எஸ்.இராதாகிருஷ்ணன்
24. மலரும் மனங்கள்

சொந்தமாக ஒரு சொர்க்கம்

ஏர்வாடியார் தேர்விற்குப் போகும் மாணவனைப்போல மனதிற்குள்ளேயே ஒரு மேடையமைத்துக் கொண்டு பேச்சைத் தீர்மானித்தக் கொள்வாராம். கூட்டத்திற்குப் போய்த் திரும்பியதும் வரவேற்கப்பட்ட இடங்களையெல்லாம் நினைவு கூர்ந்து தேவைப்பட்ட சொற்பொழிவுகளைக் கட்டுரைகளாக்கிக் கொண்டும், அவ்வப்போது சிந்திக்கிற செய்திகளையும் கட்டுரைகளாக்கி அவற்றை வரவேற்கிற, கேட்கிற இதழ்களுக்கு அனுப்பும் தனித்தன்மை படைத்தவர் ஏர்வாடி. அப்படி அவரை பெரிதும் வரவேற்கப்படுகிற தினமலர் (மதுரை பதிப்பு) நாளிதழுக்கு அவர் அனுப்பி வெளியாகி வாசகர்களால் வரவேற்கப்பட்ட சில கட்டுரைகளின் தொகுப்புதான் இந்நூல் என்கிறார்.

'சொந்தமாக ஒரு சொர்க்கம்' என்ற தலைப்பில் பொற்றாமரை இலக்கிய அமைப்பின் ஆண்டுவிழாவில் ஏர்வாடியார் ஆற்றிய ஒரு மணி நேரச் சொற்பொழிவு பலருக்கு இதமாகவும், கேட்க இனிமையாகவும், பயனுள்ளதாகவும் இருந்ததாக தலைவர் தேசியமணி இல.கணேசன் எம்.பி. அவர்கள் பாராட்டியதும் அவருக்கு உற்சாகமளித்தாராம்.

அந்த சொற்பொழிவைச் சுருக்கி தினமலருக்குத் தந்தாராம். ‘தினமலர்’ வாசகர்களையும் அது பெரிதும் ஈர்த்தது. இப்படிப் பயனுள்ளவற்றை எழுதுவதும் சுவையான அனுபவமான இருக்கிறது என்கிறார் ஏர்வாடியார்.

இந்நூல் மே-2017 ஆண்டு முதல் பதிப்பாக, 20 கட்டுரைகள் அடங்கிய ‘சொந்தமாக ஒரு சொர்க்கம்’ என்கிற இக்கட்டுரைத் தொகுப்பு ஏர்வாடியாரின் 99ஆவது படைப்பாக வெளிவந்தது.

ஏர்வாடியாரை தட்டிக் கொடுத்து எழுத வைத்தவர் மதுரை தினமலருக்கும், குறிப்பாக ஏர்வாடியாரின் நண்பர் ரமேஷ் அவர்களுக்கும் தினமலருக்கும் அவரை அறிமுகம் செய்து வைத்ததோடு இந்நூலுக்குச் சிறப்பாக அணிந்துரை தந்தும் பெருமை சேர்த்திருக்கிற பேராசிரியர் இரா.மோகன் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறார்.

இந்நூலை வெளியிட்டவர் ஏர்வாடியாரின் அன்பு சகோதரர் வானதி அதிபர் டாக்டர் இராமநாதன் அவர்கள். ஒளியச்சு செய்தவர் ஆ.அறிவழகன். அட்டைப்பட ஓவியம் வடிவமைத்துள்ளவர் ஏர்வாடியாரின் நண்பர் ஹரீஷ் குகன் என்பவர்.

ஏர்வாடியார் தனது ஒவ்வொரு ஆண்டு பிறந்தநாள் அன்று ஒரு நூலை வெளியிடுவார். அப்படி வெளியிடப்படுகிற நூல்களை அவரின் அன்பிற்கும், மதிப்பிற்கும் உரிய நபருக்கு சமர்ப்பிப்பது வழக்கம். அவ்வாறு சொந்தமாக ஒரு சொர்க்கம் என்கிற இக்கட்டுரையை ஏர்வாடியார் மதித்துப் போற்றுகிற முதியோர் நல மருத்துவர் பத்மஸ்ரீ டாக்டர் வி.எஸ்.நடராசன் அவர்களுக்கு இந்நூலை சமர்ப்பணம் செய்கிறார்.

தனிப்பட்ட எண்ணம் கொண்ட நாம் சார்ந்து இந்த வாழ்க்கைக்குள் நாம் நம்மைப் பொருத்திக் கொண்டு எப்படி இயல்பாக வாழ்வது என்பது பற்றிக் கூறும் நூல் இது. இந்நூலில் அடங்கியுள்ள 20 கட்டுரைகளும் பல்வேறு விஷயங்களைப் பற்றிப் பேசுகிறது. மன்னிப்பது, அழுவது,

அமைதியான மனநிலையுடன் இருப்பது, அச்சமின்றி எளிமையாக வாழ்வது, ஈடுபாட்டுடன் எந்த வேலையிலும் ஈடுபடுவது, பிறருடன் நம்மை ஒப்பிடுவது, முதியவர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகள் என இந்நூலில் இக்காலத்திற்கு ஏற்ப ஏற்கத் தக்கதும், ஏற்கத்தக்க அல்லாதவர்களை மதிப்பிடுதலும் ஏர்வாடியார் ‘மனிதநேயம் மாண்புமிகு வாழ்க்கை – மண்ணில் எவர்க்கும் அஞ்சாமை’ என்பது அவரது எழுத்தின் கொள்கை என்பது புலனாகிறது. வாழ்க்கையை வசப்படுத்திக் கொள்வதற்கான வழிவகைகளையும் 20 கட்டுரைகளும் கூறிச்செல்கிறது.

முடிவுரை

பல்துறைகளில் நுழைந்த ஏர்வாடியார் எத்துறையில் நுழைந்தாலும் வெற்றிப் பதிக்காமல் நின்றவரில்லை. கட்டுரை எழுதுவதில் கை தேர்ந்தவர். மக்களின் மனங்களை அறிந்து தன் அனுபவத்தின்மூலம் பல கட்டுரைகளையும் பல நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார். இதழ் ஒன்றினையும் (கவிதை உறவு) தொடங்கி அதில் ‘என் பக்கம்’ என்கிற ஒரு பக்கத்தில் தன் கட்டுரைகளையும் வெளியிட்டு வருகிறார். அவற்றையும் ‘என் பக்கம்’ என்ற கட்டுரை நூல் ஒன்றினையும் தொகுத்து வெளியிட்டுள்ளார். இப்படிப் பல துறைகளில் நுழைந்து மக்களுக்கும் தன் கருத்தை எவ்வழியில் எல்லாம் கொண்டு சேர்க்க முடியுமோ அவ்வழிகளையெல்லாம் கையாண்டுள்ளார். நூல்கள் வெளியிட முடியாதவர்களுக்கு உதவும் மனப்பான்மையுடையவர். கடல் புத்தகச் சந்தை (ஞாயிற்று) விடுமுறை நாட்களில் நடத்துபவர். இப்படிப் பல வழிகளில் ஓய்வு பெற்ற பின்பும் ஓயாது உழைக்கும் வாழ்நாள் சாதனையாளர் ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணன்.

அடிக்குறிப்பு

1. இணையதளம் medbox.iiab.me
2. பின்னலூர் மு.விவேகானந்தன், இலக்கிய வானில் இனிய நிலா, ப.26
3. ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணன், என் பக்கம் 11ஆவது தொகுதி, ப.65
4. மேலது., ப.65
5. மேலது., ப.65
6. பின்னலூர் மு.விவேகானந்தன், இலக்கிய வானில் இனிய நிலா, பக்.28-29
7. மேலது., ப.35
8. மேலது., ப.41
9. இணையதளம் tamilaivugal.org
10. பின்னலூர் மு.விவேகானந்தன், இலக்கிய வானில் இனிய நிலா, ப.45
11. முனைவர் கோ.சுப்புலெட்சுமி, கவிஞர் ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணன், ப.54
12. தமிழ்த்தொண்டர் கோ.முத்துப்பிள்ளை, பிறந்து வளரும் பெரிய பணி (வங்கிக் கலைச் சொல்லாக்கம்)
13. பின்னலூர் மு.விவேகானந்தன், இலக்கிய வானில் இனிய நிலா, ப.42
14. மேலது., ப.45
15. முனைவர் கோ.சுப்புலெட்சுமி, கவிஞர் ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணன், ப.9
16. பின்னலூர் மு.விவேகானந்தன், இலக்கிய வானில் இனிய நிலா, ப.41
17. மேலது., ப.81
18. மேலது., ப.81
19. தமிழ்த் தொண்டர் கோ.முத்துப்பிள்ளை, பிறந்து வளரும் பெரிய பணி (வங்கிக் கலைச் சொல்லாக்கம்)
20. இணையதளம் கலைக்கேசரி, www.kalaikesari.Lk
21. பின்னலூர் மு.விவேகானந்தன், இலக்கிய வானில் இனிய நிலா, ப.35

இயல் - 2

ஏர்வாடியாரின் கலை உள்ளம்

முன்னுரை

மனிதநேயம் மாண்புமிகு வாழ்க்கை மண்ணில் எவர்க்கும் அஞ்சாமை என்பது ஏர்வாடியாரின் எழுத்தின் கொள்கை. கலை உள்ளம் படைத்தவர் ஏர்வாடி; சிறந்த நூல்களைக் கற்றுத் தேர்ந்தவர். பல தானியங்களைத் திரட்டி எடுத்த வெண்சாந்து உருண்டையை நெய்யில் வெண்ணையில் உருட்டி எடுப்பது போல், இவரின் கட்டுரைகள் அவர் அனுபவத்தில் இருந்து திரட்டப்பட்டவை. நல்லது நடந்தால் நல்லது, சொந்தமாக ஒரு சொர்க்கம், அடுத்த தலைமுறை, முதுமை ஒரு வதமல்ல வரம் போன்ற கட்டுரைகளில் இருந்து ஏர்வாடியாரின் கலை உள்ளம் அனுபவச் சாரலால் துளிர்விடுவதைக் காணலாம்.

நல்லவர் யார் கெட்டவர் யார்

ஏர்வாடியாரின் நண்பர் ஒருவர் கேட்டாராம் நல்லவர் யார், கெட்டவர் யார் என்று. ஏர்வாடியாரின் பதில்கள் எப்போதுமே சிந்திக்கத் தூண்டும் பதில்களாகவே தன் நண்பர்களுக்கு அமைந்துவிடுகிறது.

“நல்லது செய்கிறவர்கள் நல்லவர்கள்,
கெட்டது செய்கிறவர்கள் கெட்டவர்கள்”[1]

என்று சொல்லிவிட்ட ஏர்வாடியாரை அவரின் நண்பர் விட்டபாடில்லையாம். ‘எது நல்லது எது கெட்டது?’ என்று அடுத்த கேள்வியைக் கேட்டாராம்.

எதைச் செய்ய வேண்டும் எதைச் செய்யக் கூடாது என்பதற்கு வரைமுறைகள் உண்டு என்கிறார் ஏர்வாடி.

‘திசை மாற்றி வைப்பானோ மனிதன் என்று
தினம் தினம் விடியல் கூடத்
தடுமாறி விடுகிறது’

நல்லவனும் கெட்டவனும் வாழும் உலகம் என்பதை தமிழன்பனின் கவிதை சுட்டிச் செல்வது ஏர்வாடியாரின் வரையறைக்குப் பொருத்தமுடையது.

"அதிகமாக எதிர்பார்க்கும் போது அதை நிறைவேற்ற எங்களுக்கு நேரமில்லாமற் போவது எங்களுடைய குற்றமா"[2]

என்று குறிப்பிடுவது கலைஞனால் மட்டுமே இளைஞர்களின் மனதைப் படித்தறிய முடியும் என்பது ஏர்வாடியாரின் வரிகள் புலப்படுத்துகிறது.

காலம் எங்களுக்கு 'கல்தா' கொடுத்து விடுகிறது. தற்போதுள்ள 'இளசுகள்' இடையே பயன்பாட்டில் உள்ள சொற்களைப் பயன்படுத்தும் விதமே அவரின் கலை உள்ளம் புலனாவதற்குச் சான்று.

'வாலி' அவர்களின் தலைமையில் நடந்த கவியரங்கில் ஏர்வாடியார் பாடிய பாடல்

"நல்லா இருக்கணும்னா... நல்லவனா இருக்க முடியாது

நல்லவனா இருந்தா நல்லா இருக்க முடியாது

இந்த நாட்டில் பணத்தாலே அடிக்கலாம்...

பிடிபட்டால் பணத்தாலே அடிக்கலாம்.

"நாட்டில் நல்லவர்கள் பலர் 'நன்றாக' இல்லாதபோது எது நல்லது என்று யாரால் சொல்ல முடியும்? நல்லது கெட்டது என்பது அவரவர்க்கான அனுபவத்தின் விளைவாக எதிர்ப்பின் வழியாக தனிப்பட்ட கருத்து"[3] என்று எதார்த்தமாக தன் பதிலை அளித்து விடுகிறார் ஏர்வாடி. மேலும் அதற்கு ஒரு வரலாற்றுச் செய்தியையும் கொடுக்கிறார்.

அண்மையில் ஒரு வரலாற்று செய்தியைப் படித்தாராம். ஏறத்தாழ ஏழாயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்தது பழைய காலம்தான் பொற்காலமாம். தற்போது மோசமான காலமாம்.

இப்படி ஒவ்வொரு தலைமுறையை சார்ந்தவரும் குறைபட்டுக் கொள்வது வழக்கம்தான். இப்போதும்கூட நம் பாட்டி, தாத்தா, அப்பா, அம்மா, இளையவர்களைப் பார்த்துக் குறைபட்டுக் கொள்கின்றனர்.

“கெட்ட காலத்தில் வசிக்கும் நாம்கூட நம் பேரப்பிள்ளைகளிடம் நம் காலம் பொற்காலம் என்றுதான் சொல்வோம்”[4] என்கிற அப்துல் ரகுமான் வரிகளைப் பொருத்தமுற அமைத்து ஏற்றிக் கூறுகிறார் ஏர்வாடி.

மனிதனை தீர்மானிக்கும் சான்றிதழ்கள்

‘மனிதனின் குணங்களை, ஒரு மனிதனின் குணாதிசயங்களை மற்றொரு மனிதன் தீர்மானிப்பதைவிட சான்றிதழ்கள் துல்லியமாகத் தீர்மானிக்கின்றன என்று விமர்சனத்திற்கு உள்ளாக்குகிறார் ஏர்வாடி.

‘ஒருமுறை ஞானபாரதி வலம்புரிஜான் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தபோது ஒரு வேடிக்கை செய்தாராம். என்னைப் போலில்லை; இவர் நல்ல நடத்தையுள்ளவர் என்று ஒருவருக்குச் சான்றிதழ் கொடுக்க, இப்படியெல்லாம் கொடுக்கக் கூடாது என்று ஒரு நிறுவனம் அதைத் திருப்பிவிட, மோசமானவர்களிடம் மக்களை அனுப்பி நன்னடத்தைச் சான்றிதழ் கேட்பதை முதலில் நிறுத்துங்கள் என்று பதில் அனுப்பியிருக்கிறார். “சான்றளிக்கிறவனே சான்றோனாயில்லாத நாடுதானே இது”[5]

சான்றளிப்பவனே சான்றோனாயில்லாத நாடு என்று நாட்டின் அவலநிலையை எடுத்துரைக்கிறார் ஏர்வாடி.

ஏர்வாடியார் இதுபோல் ஒரு பிரபலத்தின் அறியாமையை இவ்விடத்தில் வெளிப்படுத்துகிறார்.

தாம் பயணிக்கவிருந்த விமானம் விபத்துக்குள்ளானதில் ஒரு ‘பிரபல’த்துக்கு ஏக மகிழ்ச்சி. பத்திரிகைகளில் பேட்டி கொடுத்தவர். அதற்கு முந்தைய விமானத்தில் புறப்பட்டது எவ்வளவு நல்லதாகப் போயிற்று என்று நிம்மதிப் பெருமூச்செறிந்ததோடு இல்லாமல் விபத்துக்குள்ளான பயணிகளுக்கு வருத்தம் தெரிவிக்காமல் மறந்து தான் நன்றாக இருந்தால்போதும்; யார் எப்படிப் போனால் என்ன என்று எண்ணுகிற பிரபலங்கள் உண்டு.

‘எண்ணங்களே நன்மைத் தீமைகளை தீர்மானிக்கிறது’ என்கிற இஸ்லாமியர்களின் கருத்து ஏர்வாடியாரின் எண்ணத்தை வெளிப்படுத்துகிறது.

இன்னும் சிலர் நல்லது நடக்க வேண்டும் என்றும் அது நம்மால் நடக்க வேண்டும் என்று எண்ணுபவர் அரசியல்வாதிகள் என்பவரே என்பது இவ்விடத்தில் அரசியல்வாதிகளின் தன்னலத்தை காட்டுகிறது.

“நல்லது நடக்க வேண்டுமெனில் முதலில் நாம் நல்லவர்களாக இருக்க வேண்டும்”[6] என்ற ஏர்வாடியாரின் இக்கருத்து நல்லவன், கெட்டவன் என்று பகுத்து பார்த்துக் கொண்டிருப்பவருக்கு சாட்டை அடி விழுவதுபோல் அமைந்துவிடுகிறது.

“நல்லவர்களாக இருப்பது பண்பு என்றால் நம்மிடம் மற்றவர்களை நல்லவர்களாக வைத்துக் கொள்வது புத்திசாலித்தனம்”[7]

இதற்கு ஒரு நிகழ்வையும் எடுத்து இயம்புகிறார்.

கிரேக்க நாட்டில் ஏதென்ஸ் மாநகரில் பேரறிஞர் சாக்ரட்டீஸை வெளிநாட்டு இளைஞன் ஒருவன் அவரிடம் அவன் கிரேக்க நாட்டு மக்கள் எப்படி? நல்லவர்களா, கெட்டவர்களா? என்று கேட்க அதற்கு அவர், உங்கள் நாட்டு மக்கள் எப்படி? என்று கேட்டதும், மக்களா அவர்கள்? அயோக்கியர்கள்; ஏமாற்றுப் பேர்வழிகள், திருடர்கள்” என்று தன்

ஆத்திரத்தைக் கொட்டித் தீர்க்கிறான் அந்த இளைஞன். இங்கும் நீ அப்படிப்பட்ட மோசமான மனிதர்களைத்தான் சந்திப்பாய் என்கிறார் சாக்ரடீஸ்.

சில நாட்கள் கழித்து வேறு ஒரு நாட்டிலிருந்து வந்த இளைஞனும் இதே கேள்வியைக் கேட்க, உங்கள் நாட்டு மக்கள் எப்படி! என்று சாக்ரட்டீஸ் வினவுகிறார்.

எங்கள் நாட்டில் நாங்கள் எல்லோரும் நல்லவர்கள் என்று பெருமையாகச் சொல்லி மகிழ்ந்தான். எங்கள் நாட்டிலும் நீ நல்ல மனிதர்களைச் சந்திப்பாய் என்கிறார்.

'என்னால் யாருக்கும் எதையும் கற்பிக்க முடியாது. என்னால் அவர்களைச் சிந்திக்க வைக்க மட்டுமே முடியும்' என்கிற சாக்ரட்டீஸின் கருத்து தத்துவம் போல ஏர்வாடியாரின் கருத்து படிப்பவரை சிந்திக்கத் தூண்டும்.

இதைப் போன்ற நிகழ்ச்சி மகாபாரதத்திலும் இடம்பெற்றுள்ளது. கிருஷ்ண பகவானிடமும் துரியோதனன் 'யாரும் எனக்கு நல்லவர்களாகப் படவில்லை எனும்போது தர்மர் எவரும் எனக்கு தீயவர்களாகத் தோன்றவில்லை என்பார்.

இதன்மூலம் ஏர்வாடியார் இலக்கியத்தையும் புராணக் கதைகளையும் கையாளப் பெற்றவர் என்பது புலனாகிறது.

"நம்மைச் சுற்றி நல்லவர்களைப் பார்க்க வேண்டுமென்றால் நாம் முதலில் நல்லவர்களாக இருக்க வேண்டும்"[8] என்று ஒரு கருத்தையும் இவ்விடத்தில் அழகாகக் கையாளுகிறார்.

சொர்க்கமாக்கிக் கொள்ளுதல்

சொர்க்கம், நரகம் என்று இரண்டையும் நாம் சிறுவயதில் இருந்து கேட்டதுண்டு. கேள்விப்பட்டதும் உண்டு. நரகம், சொர்க்கம் இரண்டும் உண்டு என்று ‘ஆன்மிக’ வாதிகள் நம்புவது உண்டு. பைபிள், குரான் இந்துக்களில் சாஸ்திர சம்பிரதாயங்கள், புராணங்கள், இலக்கியம் என்று இவை சொர்க்கம், நரகம் பற்றிப் பேசுகிறது.

நல்லது செய்பவர் சொர்க்கம் அடைவர், கெட்டது செய்பவர் நரகம் அடைவர் என்று இவர்களின் நம்பிக்கை.

ஏர்வாடியாரோ சொர்க்கம் என்பது “வாழ்கிற இடத்தையும், வாழ்க்கையையும் சொர்க்கமாக்கிக் கொள்ளலாம் என்கிறார். பிறக்கும்போதே இறைவன் நமக்கு ஒரு சொர்க்கத்தை உறுதிப்படுத்தித் தாம் நம்மை இந்த மண்ணுக்கு அனுப்புகிறான்”[9] என்கிறார்.

‘தாயின் மடியில்தான் சொர்க்கம் இருக்கிறது’ என்கிற நபிகள் நாயகத்தின் பொன்னான மொழிகளை எடுத்து இயம்புகிறார் ஏர்வாடி. சொந்தமாக ஒரு சொர்க்கம் பற்றி புராணமும் குறிப்பிடுகிறது. அக்கதையை இவ்விடத்தில் காட்சிப்படுத்துகிறார் ஏர்வாடி.

திரிஅருணி என்று ஓர் அரசன் அவனுக்கு சத்தியவிரதன் என்ற ஒரு மகன் அவன் வசிஷ்டரின் கோபத்துக்கு ஆளாகவே தந்தை அவனை காட்டுக்கு அனுப்ப காட்டில் வாழுகிற போது, அவன் தந்தை மீது சினம் கொண்டிருந்தது, பசுவைக் கொன்றது, பசுக்கறி உண்டது என்று மூன்று பாவங்களைச் செய்ததால் அவனுக்கு திரிசங்கு என்று பெயராயிற்று. விசுவாமித்திரரின் மனைவிக்கு உதவி செய்ததால் அவனுக்கு சொர்க்கம் வழங்க இந்திரன் அதைமறுக்க விசுவாமித்திரன் அவனுக்கு திரிசங்கு சொர்க்கம் தந்ததுபோல் இப்போதுள்ள எந்த ரியல் எஸ்டேட் நிறுவனமும் நமக்கு முன்வராது. அத்தனை சுலபமாக நம் அரசு அதிகாரிகளிடம் அனுமதி

பெற்றுவிடவும் முடியாது என்று ஏர்வாடியார் சமூகத்தின் இயலாமையை சுட்டிச் செல்கிறார்.

வெற்றியின் அடையாளம்

வெற்றி என்பது ஒருவரைக் கீழே இறக்கிவிட்டுப் பெறுவதே வெற்றி என்றும் வாழ்க்கையை வெல்வதே வெற்றி என்றும் அனைவரின் மனம்போன போக்கு.

ஏர்வாடியாரின் கருத்தோ, "வெற்றி யென்பது நல்ல வாழ்க்கையை வாழ்ந்து காட்டுவதுதான்"[10] என்கிறார். வாழ்க்கையில் தோல்வியைத் தாண்டி வெற்றியை அடைந்த ஏர்வாடியாரின் வரிகள் வாழ்க்கையைப் புலப்படுத்துகிறது.

இப்போது வாழ்க்கையில் ஜெயித்தவர்கள் எல்லாம் வாரிச் சுருட்டுகிற அரசியல்வாதிகள். கொள்ளையடித்து சமூக அந்தஸ்து பெற்றவர்கள். கற்பழித்த சாமியார்கள் என்று வாழ்க்கையில் 'ஜெயித்துக் காட்டியவர்கள்' இதை எப்படி வெற்றியாக கருதமுடியும் என்றும் இது வசதியைக் காட்டுமே தவிர வாழ்க்கையை அல்ல என்று கூறுகிறார்.

ஏர்வாடியார் கூறும் வெற்றியானது வாழ்க்கையை வெற்றிப் பெறுவதல்ல. வாழ்க்கையை வாழ்ந்துக் காட்டுவது என்கிறார்.

"இறைவனிடம் நாம் கேட்க வேண்டுவது வாழ்க்கையைத்தானே தவிர வாழ்க்கைக்கானவற்றை அல்ல"[11] என்கிற ஸ்ரீ அரவிந்தர் அன்னை அவர்களின் கருத்தை இவ்விடத்தில் எடுத்தியம்புகிறார்.

சார்ந்து வாழ்தல்

மனிதன் ஒட்டுண்ணி வகையைச் சார்ந்தவர்கள். இல்லம், உறவுகள், பணியாற்றுபவர்களை சார்ந்து வாழ்ந்த மனிதனின் இயல்பு.

“நம்மோடு இருக்கிறவர்களோடு வாழ்கிற கலையைக் கற்றுக் கொண்டாலேயே வாழ்க்கை நமக்கு வசப்பட்டுவிடும்”[12]

சார்ந்து வாழ்கிற வாழ்க்கையில் விட்டுக் கொடுத்தல் என்பது ஒரு சொந்தமான சொர்க்கத்தை உருவாக்கிக் கொடுக்கும் என்கிறார்.

பேரறிஞர் அண்ணாவின் புகழ்மிக்க வாசகம் ஒன்றையும் நினைவுபடுத்துகிறார். “விட்டுக் கொடுப்பவர்கள் கெட்டுப் போவதில்லை. கெட்டுப் போகிறவர்கள் விட்டுக் கொடுப்பதில்லை”[13] என்கிற வாசகத்தை கையாளுகிறார்.

“விட்டுக் கொடுத்து அன்பு பாராட்டினால் நம் இல்லம் கட்டிமுடித்த சொர்க்கமாகிவிடும்”[14] என்று கூறுவதன் வாயிலாக கலை உள்ளம் படைத்த ஏர்வாடியாரின் பண்புநலன்கள் வெளிப்படுவதனைக் காணலாம்.

“மற்றவர்களை தம்மிடம் நல்லவர்களாகப் பார்த்துக் கொள்வது அரிது மட்டுமல்ல, அரிய கலையும்கூட”[15] என்கிறார். ஏர்வாடியாரின் சகப்பணியாளர்கள் இவரைப் பாராட்டுவர்; அந்தக் கலையை கைவரப் பெற்றவர் ஏர்வாடி என்று. ‘மனிதன் தனிமனிதச் சிந்தனை கொள்ளாமல் சமூகச் சிந்தனையோடு வாழ வேண்டும்’ என்கிற அரிஸ்டாட்டில் தத்துவத்திற்கு ஏற்ப வாழ்பவர் ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணன் அவர்கள்.

வீடு, அலுவலகம் என்று இருக்கக்கூடாது. சமூகத்திற்கு நாம் பயன்பட வேண்டும் என்று ஏர்வாடியார் தற்போதுள்ள இளைஞர்களுக்கு தன் கட்டுரை வாயிலாக வலியுறுத்துவதுண்டு.

தன்னை அறிதல் வேண்டும்

ஒவ்வொரு மனிதனும் தன்னை அறிதல் வேண்டும். தன்னை அறிதல் மட்டுமே தன்னைப் பற்றிய சமூகத்தின் நோக்கமாகவும் அமைகிறது.

நான் யார் தெரியுமா? என்று பிதற்றுகிறவர்கள் தன்னை அறிந்ததில்லை. நீ யாராக இருந்தால் எனக்கென்ன? என்று எண்ணுபவர்கள் பெருகிப் போனதற்கே காரணம் அகந்தைதான் என்கிறார் ஏர்வாடி. தன்னை அறிதல் பற்றி திருமந்திரத்திலும் சில வரிகளைக் குறிப்பிடலாம்.

'தன்னை அறியத் தனக்கொரு
கேடில்லை
தன்னை யறியாமல் தானே கெடுகின்றான்'

என்கிற திருமந்திர வரிகளுடன் ஏர்வாடியாரின் கருத்து ஒத்திசைவதனைக் காணலாம். 'அவமதித்தவனிடமே தங்கிவிடுகிறது' என்கிற புத்தப் பெருமானின் வரிகளுக்கு ஏற்ப.

காந்தி சிறையில் இருந்தபோது 'ஸ்மாட்ஸ்' என்கிற வெள்ளைக்கார சிறை அதிகாரிக்கு விடுதலை பெறுகிறபோது அவர் கையாலே தைத்த காலணிகளைப் பரிசாக வழங்கினார். அந்தச் சிறை அதிகாரி, எப்படி என் பாதத்தின் அளவு உங்களுக்கு கிடைத்தது? என்று காந்தியிடம் கேட்டார். நீங்கள் சேற்றுக் காலால் என் முதுகில் உதைத்தபோது உங்கள் கால்தடம் பதிந்திருந்தது. அதற்கேற்ற அளவில் செய்தேன் என்று காந்தி பதிலளித்தபோது அந்த அவமானம் சிறைஅதிகாரியின் மேலேயே பதிந்துவிட்டது. அந்தக் காலணிகளை காந்தியின் நினைவாகப் போற்றிப் பாதுகாத்திருக்கிறார்.

'தன்னை அறியும் அறிவை அறிந்தபின் தன்னையே அர்ச்சிக்கத்தான் இருந்தானே' என்கிற திருமந்திரத்திற்கு ஏற்ப சிறைஅதிகாரி தன் தவறை உணர்ந்தார். அதனால் அவர் பெயர் பெற்றார். பொருத்தமான நல்ல ஒரு உதாரணத்தைப் பொருத்திப் பார்ப்பதன்மூலம் ஏர்வாடியாரின் கலை உள்ளம் புலனாவதைப் பார்க்கலாம்.

சொந்தமாக ஒரு சொர்க்கத்தை உருவாக்க நல்ல மனம்தான் தேவை. பணம் என்பது வானம் வசப்பட நமக்கு உதவலாம்; ஆனால் வாழ்க்கை வசப்படுவது நம் மனத்தால் மட்டுமே சாத்தியமாகும் என்கிறார் ஏர்வாடி.

வாழ்க்கை, வேடிக்கை

நம் தலைவர்கள் யார் யார் என்று எத்தனைப் பேர் அறிந்து வைத்திருக்கிறோம்? விலைவாசி உயர்ந்தாலோ அல்லது நம் தேவை ஏற்படும்போது மட்டுமே நாம் அறிகிறோம் என்று நம் சமூகத்தின் நிலையை வெளிப்படுத்துகிறார் ஏர்வாடி.

“சில நேரங்களில் நான் யோசிப்பதுண்டு. நம்மில் பலரைத் தலைவர்களாய் யார் தேர்ந்தது? அது எங்கே நடந்தது? பெரும்பாலான தலைவர்கள் தங்களைத் தாங்களே தலைவர்கள் என்று அறிவித்துக் கொண்டவர்கள் இவர்கள் தமக்குத் தாமே மகுடம் சூட்டிக் கொண்டவர்களே தவிர மக்களால் அல்ல”[16] என்று அரசியல்வாதிகளின் சூட்சுமத்தை வெளிப்படுத்துகிறார்.

நல்ல உதாரணத்தையும் எடுத்தியம்புகிறார் ஏர்வாடி. மாவீரன் நெப்போலியன் யாருக்கும் தனக்கு முடிசூட்ட அருகதை இல்லை என்று தனக்குத்தானே மகுடம் சூட்டிக் கொண்டவர். இவரின் முடிவு பரிதாபமாக இருந்தது வரலாற்று நிகழ்வு.

“அப்படித்தான் சில நேரங்களில் அங்கங்கே நிகழ்ந்துவிடுகிறது”[17] என்று ஏர்வாடி குறிப்பிடுகிறார்.

‘மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்
தங்களுக்கு தாங்களே
நம்பிக்கையுள்ளவர்களாக நடந்துகொண்டால்
போதாது தேர்ந்தெடுத்த மக்களுக்கும்
நம்பிக்கையுள்ளவர்களாக நடந்து கொள்ள வேண்டும்’

என்று அறிஞர் அண்ணா கூறுவதுண்டு.

தலைமை என்கிற ஆசை

தலைமை ஏற்க எல்லாருக்குள்ளும் ஒரு தூண்டு உணர்வு உண்டு என்கிறார் ஏர்வாடியார்.

ஒரு தமிழறிஞர் வருத்தப்பட்டார் தனித்தனியே குழுக்களாக இயங்குகிற தமிழமைப்புகளெல்லாம் ஒன்றுசேர வேண்டும்; உரிமைக்குரல் கொடுக்க வேண்டும் என்றாராம்.

உடனே அப்படி ஓர் அமைப்பை உருவாக்கினால் நான்தான் அதற்குத் தலைமை ஏற்பேன் என்கிறார். அதெப்படி என்றார். அந்த தமிழறிஞர் அதுதான் பிரச்சினையே என்னைப் போலவே எல்லோருக்கும் தலைவராக ஆசைவரும்; எதைத் தொடங்கினாலும் தானே தலைவராக இருக்க வேண்டும் என்பது எல்லாருடைய இயல்பாகிவிட்டது என்கிறார் ஏர்வாடி.

“தலைமையின் மீது ஆசை என்பதால் நல்ல தலைமை நமக்கு கிடைக்காமல் போகிறது”[18] என்கிற வருத்தம் தெரிகிறது ஏர்வாடியாரின் வரிகளில்.

தலைமை பண்புக்கு மூன்று கூறுகளை வகுக்கிறார்.

1. நடத்துதல்(Conduct)
2. நிர்வகித்தல் (Manage)
3. தலைமை தாங்குதல் (lead)

இம்மூன்றும் தலைமைக்கு அவசியம் என்கிறார். “தலைவனுக்கு வழி தெரிய வேண்டும். அவ்வழியில் அவன் செல்ல வேண்டும்”[19] என்கிற ஜான்மேக்ஸ்வெல் என்னும் அறிஞர் என்பவரின் கருத்தை எடுத்தியம்புகிறார் ஏர்வாடி.

“எனக்குப் பின்னால் ஒரு பெரிய கூட்டம் இருக்கிறது என்பவன் ஒருபோதும் தலைவனாக இருக்க முடியாது. அவன் ஓர் அடக்கியாளுநராக(boss) மட்டுமே இருப்பான்”[20] என்கிறார்.

சில இடங்களில் கைமன் கினெக், மாவீரன் அலெக்ஸாண்டர் போன்றோரின் கருத்தை எடுத்தியம்புவதன் வாயிலாக ஏர்வாடியாரின் கலை உள்ளம் புலனாவதைப் பார்க்கலாம். அப்பாவி ஆடுகளைக் காப்பாற்றுவதற்காக நான் ஒரு சிங்கம் போன்றவன் மாவீரன் அலெக்ஸாண்டர் சிங்கங்களுக்குத் தலைமையேற்றுள்ள ஆடு குறித்து எனக்கு அச்சமில்லை. ஆடுகளைத் தலைமை தாங்கும் சிங்கத்தைப் பார்த்தே நான் அஞ்சுகிறேன். இவ்வரிகளை இடத்திற்கு இடம் பொருத்திப் பார்க்கும்போது ஏர்வாடியாரின் கலை உள்ளம் வெளிப்படுகிறது.

“கவனமிருக்கட்டும், நமக்கு அடுத்த தேர்தல் முக்கியம் அல்ல; அடுத்த தலைமுறை முக்கியம்”[21] என்கிறார் ஏர்வாடி.

இளமை, முதுமை

முதுமை என்பது வதமல்ல வரம் என்கிற கட்டுரையில் முதுமை என்பது அனைவரும் இளமைக்காலத்தில் நலமாக நடந்துகொள்வதை வைத்தே அமைகின்றன என்பார் ஏர்வாடி.

மேலும் இப்போதுள்ள இளைஞர்கள் இளமையிலேயே முதுமை அடைந்துவிடுகின்றார்கள். “அதை உங்கள் மூதாதையருக்குத் தராமல் நீங்கள் முதுமையடைந்திருக்கிறீர்கள். அதற்காக உங்களைப் பாராட்ட வேண்டும்”[22] என்றார்.

எண்ணல் வேண்டும். முதுமையும் இளமையும் “முதுமை என்பது முதியோர்க்கு ஒரு சுமையல்ல என்பதுபோல முதியோரும் இன்றைய

இளையோர்க்கு சுமையல்ல என்று இரு சாராருமே எண்ண வேண்டும்"[23] என்கிறார்.

ஏர்வாடியாரின் கருத்தோடு ஒத்திசையும் குரான் வரிகள்,

"எல்லோருக்கும் ஒளிதர
தன்னை உருக்கிக் கொள்ளும்
மெழுகுவர்த்தி போல
எல்லோரையும் ஏற்றிவிட்டுத்
தேய்ந்த பின்னும்
ஓய்ந்து போகா படிக்கட்டு"[24]

என்கிறது குரான். (அல்குர்ஆன் 17:23, 24)

அடிக்கடி எரிமலை வெடித்துத் தீப்பிழம்பு கக்குகிற ஒருநாடு அன்று அதிகமாக தீப்பிழம்பு கக்க எல்லாருமே அலறடித்து ஓட முதியோரைக் காப்பாற்ற மனமில்லாமல் ஓட ஒரு அண்ணன் தம்பியர் மட்டும் தன் தாய் தந்தையரைத் தோளில் சுமந்துகொண்டு ஓடுகிறார்கள். தப்பித்த எல்லோரும் சமவெளிகளில் சந்திக்கின்றனர். தீக்காயங்களுடன் சிலர் தப்பிக்க, சிலர் இறந்து போகின்றனர். தாய்தந்தையைச் சுமந்து வந்த சகோதரர்கள் பத்திரமாக வந்து சேர்கிறார்கள். காரணம் தாய்தந்தையரின் அனுபவ அறிவே காரணம். "கூட்டுக் குடும்பங்களின் நிம்மதியே வீட்டிலிருக்கிற பெரியோர்தான்"[25] அவர்களின் வழிநடத்தல் வேண்டும் என்கிறார் ஏர்வாடி.

முதியோர் சந்திக்கும் மூன்று சோதனைகள் பற்றிக் குறிப்பிடுகிறார்.

1. முதுமையின் காரணமாக நோய்நொடிகள்
2. உறவுகளின் உதாசீனம்
3. பொருளாதாரப் பிறழ்வுகள்

"'மூப்பினுக்கு இடங்கொடேல்' என்கிற ஔவையாரின் வரிகள் வயதால் மூத்தாலும் தளர்ச்சிக்கு இடங்கொடுக்காதே என்கிறார் ஔவை. ஏர்வாடியார் "உடலைப் பேணுவது உயிரைப் பேணுவதற்குச் சமமானது"[26] என்கிறார்.

ஸ்ரீ அரவிந்த அன்னை அவர்களின் வரிகளை இடத்திற்கு ஏற்ப ஏற்கிறார் ஏர்வாடி. “உடலும் உயிரும் ஒன்றுக்கொன்று வழங்கப்பட்டுள்ள பரிசு” என்றும், “இளமை வரவேற்கப்படுவதைப்போல முதுமையும் வரவேற்கப்பட வேண்டும்”[27] என்கிறார் ஏர்வாடி. மனிதன் வாழ்க்கையில் மிகச்சிறந்த பலமே முதுமைதான். அனுபவங்கள் என்றுமே ஒரு வரமாகத்தான் மனிதர்களுக்கு அமையும் ஒரு கலை.

முடிவுரை

ஏர்வாடியாரின் கட்டுரைகள் படிக்கும் அனைவருக்கும் ஒரு வரமாகத்தான் அமைகிறது. ‘நல்லது நடந்தால் நல்லது’ என்கிற கட்டுரையில் நம் எண்ணமே நம்மைத் தீர்மானிக்கிறது. ‘சொந்தமாக ஒரு சொர்க்கம்’ என்கிற கட்டுரையில் சொர்க்கம் என்பது இடத்திற்கு ஏற்றாற்போல் நாம் அமைத்துக் கொள்வது. ‘அடுத்த தலைமுறை’ என்கிற கட்டுரையில் தலைமை என்பது பெறுதல்; எடுத்தல் அல்ல என்கிறார். ‘முதுமை வதமல்ல வரம்’ என்னும் கட்டுரையில் முதுமை போற்றத்தக்கது வரவேற்க வேண்டுவது என்று இன்றைய இளைஞர்கள் படித்துப் பயன்பெறும் கட்டுரைகளாக இவரின் படைப்புகள் அமைந்துள்ளது.

அடிக்குறிப்புகள்

1. ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணன், சொந்தமாக ஒரு சொர்க்கம், ப.17
2. மேலது.,ப.19
3. மேலது.,ப.20
4. மேலது., ப.20
5. மேலது.,ப.21
6. மேலது.,ப.22
7. மேலது.,ப.23
8. மேலது.,ப.24
9. மேலது.,ப.37
10. மேலது.,ப.39
11. மேலது.,ப.40
12. மேலது.,ப.40
13. மேலது.,ப.41
14. மேலது., ப.41
15. மேலது.,ப.42
16. மேலது.,ப.94
17. மேலது.,ப.95
18. மேலது.,ப.96
19. மேலது.,பக்.96-97
20. மேலது., ப.97
21. மேலது.,ப.98
22. மேலது.,ப.99
23. மேலது.,ப.102
24. அல் குர் ஆன்., ப.17;23,24
25. ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணன், சொந்தமாக ஒரு சொர்க்கம், ப.102
26. மேலது.,ப.103
27. மேலது.,ப.103

இயல் - 3

இலக்கியப் புலமை

முன்னுரை

கட்டுரையாளர், நாடக ஆசிரியர், நாடக நடிகர், சிறுகதை ஆசிரியர், இதழ் ஆசிரியர், வங்கி கணக்காயர், மொழிபெயர்ப்பாளர், இசைத் துறையில் சிறந்தவர் என்று பன்முக ஆற்றல் கொண்ட இவர் மிகச்சிறந்த இலக்கியவாதி. 20 கட்டுரைகள் அடங்கிய இக்கட்டுரைகளில் இவரின் இலக்கியப் புலமை புலனாகிறது. நல்ல நூல்களே சிறந்த நண்பன் என்று பல அறிஞர்கள் சொல்வதுண்டு. அதுபோல தனக்குப் பல நூல்களை நண்பனாக்கிக் கொண்டுள்ளார் ஏர்வாடி என்பதனை இவ்வியலில் காணலாம்.

திருவள்ளுவரின் திருக்குறட் கருத்துகள்

உலகப் பொதுமறை என்று அழைக்கப்படுகின்ற திருக்குறளை அனைவரும் பயன்படுத்துவது இயல்பு. புகழ்பெற்ற குறள்களைப் பயன்படுத்த கைவரபெற்றவர் ஏர்வாடியார்.

“செய்யதக்க அல்ல செயக்கெடும் செய்தக்க

செய்யாமை யானும் கெடும்

‘செய்ய தக்கவை’, செய்யதக்க அல்ல, (Do’s and Don’ts) தான் நன்மை தீமைகளையும் நல்லது கெட்டதுகளையும் தீர்மானிக்கின்றன”[1] என்கிறார் ஏர்வாடி.

“இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண

நன்னயம் செய்து விடல்

மன்னிக்கப்படுகிறபோது மனதில் இருக்கிற மாசு வெளியேற்றப்படுகிறது. மனம் சுத்தமாகிறது. மனம் சுத்தமாக இருப்பதுகூட உடல் சுத்தத்தைப்போல உயிர்பேணும் ஒப்பற்ற உபாயமாகும். மன்னித்தல் என்பது நாளும் நம்மை நலமாக வைத்திருப்பதால் மறப்போம்; மன்னிப்போம்; மகிழ்ச்சியாக இருப்போம்”[2]

இக்குறள்களைப் பயன்படுத்தாத அறிஞர்கள் இல்லை. இடத்திற்கு ஏற்ப பயன்படுத்தும் திறன் பெற்றவர் ஏர்வாடி.

‘இன்னா செய்தாரை ஒறுத்தல்’ என்கிற குறளை இரண்டு இடங்களில் கையாளுகிறார். வள்ளுவர் வாழ்க்கை நெறியை வகுத்தவர். அந்நெறியை கொள்கையாக்கிக் கொண்டு வாழ்பவர் ஏர்வாடி. ‘பகையால் பகைமையை அழிக்க முடியாது”[3] என்ற கருத்துடையவர்.

ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்

தாழாது உஞற்று பவர்

உழைத்துப் பெறுகிற உயர்வை கடவுளைக் காரணம் காட்டுபவரும் உண்டு என்பதால் இக்குறளை எடுத்தியம்புகிறார்.

“எதையும் கடவுளே தருகிறான் என்கிற நம்பிக்கையை ஊட்டிவிட்டு உழைக்கத் தேவையில்லை என்று உணர்த்தப்படாமல் நாமெல்லாம் உலக மகா சோம்பேறிகளாகிவிடுவோம்”[4] என்கிறார் ஏர்வாடி.

“நவில்தொறும் நூல்நயம் போலும்

பண்புடை யாளர் தொடர்பு”

பண்பாளர்களின் நட்பானது படிக்க படிக்க கிடைக்கிற பயன்போன்றது. பழகப்பழக கிடைக்கிற பண்பாளர்களின் நட்பு என்கிறார் ஏர்வாடி.

“கடினமான உழைப்பைப்போல் எதுவும் சிறந்ததாகவும் உயர்ந்ததாகவும் இருக்கமுடியாது”[5] என்கிறார்.

நட்புக்கு இலக்கணம் தரும் வள்ளுவரின் கருத்தை கையாளும் ஏர்வாடியாரின் தனித்தன்மை புலனாகிறது.

“புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்

நட்பாங் கிழமை தரும்

“இருவருக்கிடையே நட்பு முகிழ்ப்பதற்கு முன்னர் தொடர்பும் தேவையில்லை. தோழமையும் வேண்டியதில்லை. இருவரின் ஒத்த உணர்வே போதுமானது”[6] என்கிற வள்ளுவரின் வரிகளோடு சங்க கால நண்பர்களான கோப்பெருஞ்சோழனுக்கும் புலவர் பிசிராந்தையாருக்கும் உள்ள நட்பை எடுத்துக்காட்டுகிறார் ஏர்வாடி.

வள்ளுவர் ‘நட்பு’ என்கிற ஒரு அதிகாரத்தை இயற்றியது போல ‘பழகிப் பாருங்கள்’ என்கிற கட்டுரையை நட்புக்காக எழுதியுள்ளமை அவரின் உள்ளாந்த நட்பு மதிப்பிற்குரியது.

புராணக் கதைகள்

நல்லவர்கள், கெட்டவர்கள் என்று நாம் பார்க்கும் பார்வையில் உள்ளது எதென்பதை புராணக்கதையின் வாயிலாக எடுத்தியம்பும் ஏர்வாடியார் ‘மகாபாரதத்தில் ஒரு காட்சி’, கிருஷ்ண பகவானிடம் துரியோதனன், யாரும் எனக்கு நல்லவர்களாகப்படவில்லையே? எனும்போது தர்மர், எவரும் எனக்குத் தீயவர்களாகத் தோன்றவில்லை என்பார்.

“சொந்தமாக ஒரு சொர்க்கம் செய்ய முடியுமா?”[7] என்பதற்கு இராமாயண கிளைக்கதைகளில் ஒரு கதையை காட்சிப்படுத்துகிறார். திரிசங்கிற்கு விசுவாமித்திரர் மூன்று பாவங்களைச் செய்தாலும் ஒரு நன்மை

செய்ததற்காக திரிசங்கு சொர்க்கத்தை அளிக்கும் புராணக்கதையை கூறிப்பின் இதுவல்ல சொர்க்கம் என்று எதார்த்தமாக சொல்லும் ஏர்வாடியார், ‘சொர்க்கம் என்பது நாம் இருக்கும் இடத்தை நமக்கு ஏற்றாற்போல் மாற்றிக் கொள்வதே சொர்க்கம்’ என்கிறார்.

நட்புக்கு உதாரணமாக புராணக் காட்சிகளை எடுத்துக்காட்டுகிறார்.

மகாபாரதத்தில் நட்பின் இலக்கணமான குறிப்பிடப்படுகிறவர்கள் கர்ணனும், துரியோதனனும். கர்ணன் பிறப்பறியாப் பழிக்காகக் கேவலமாகப் பேசப்படும்போது துரியோதனன் அவனுக்கென்று அரச போகத்தைத் தந்து சிறப்பிக்கிறான். இவர்களின் நட்பின் ஆழத்தைப் புலப்படுத்தும் காட்சி துரியோதனனின் மனைவியுடன் கர்ணன் சொக்கட்டான் ஆடிக் கொண்டிருக்கும்போது கணவன் வருவதை அறிந்து எழும் அவளை ஆட்டத்தில் தோற்றதற்காக எழுகிறாயா? என்று தடுத்தபோது மேகலை அறுந்து மணிகள் சிதறுகின்றன. அவற்றை ‘எடுக்கவோ கோக்கவோ’ என்று துரியோதனன் கேட்கும்போது இந்த நிகழ்ச்சி அவனிடம் எந்தச் சலனத்தையும் ஏற்படுத்தவில்லை. இதுதான் உண்மையான நட்பு.

குந்திதேவி கர்ணனைப் பார்த்து உடன்பிறந்தவர்களுக்கு எதிரான அணியில் இருக்கிறாயே அவர்களிடமிருந்து விலகி உன் சகோதரர்களுடன் சேர்ந்து கொள் என்று கேட்டபோது, என்னை ஆற்றில் எறிந்துவிட்டுப் போனவள் நீ. அனைத்துச் சிறப்புகளையும் தந்தவன் துரியோதனன். செஞ்சோற்றுக் கடனுக்கும் நான் துரோகமிழைக்க மாட்டேன் என்கிறான் கர்ணன். “இங்கு தாயினும் மேலானதாக நட்பு உணர்த்தப்படுகிறது”[8] என்கிறார் ஏர்வாடி.

இராமாயணம் முழுக்க முழுக்க நட்பைச் சுற்றியதாகவே இருக்கும். வேடன் குகனின் நட்பு, வீடணனின் நட்பு என்று ஒவ்வொரு பாத்திரத்துடனும் இராமனின் நட்பு பாத்திரமாக இருக்கும். ‘குகனோடு ஐவரானோம்’ என்று

அந்த நட்பை சகோதர நிலைக்கு உயர்த்திய இராமன் நட்பில் உயர்ந்திருக்கிறான். குகனும், "தோழமை என்றவனுடன் சொல்லிய சொல் ஒரு சொல்லன்றோ" என்று வியக்கிறான்"[9] நட்புக்கு இலக்கணமாக விளங்கும் இராமனுடன் ஏற்பட்ட கதாபாத்திரங்களைப் பட்டியலிடுகிறார் ஏர்வாடி.

புராணக் கதைகளை உதாரணம் காட்டும் ஏர்வாடியாரின் புராணப்புலமை புலனாகிறது.

வேதக் கருத்துகள்

மறப்போம், மன்னிப்போம் என்கிற ஏசு கிறிஸ்துவின் வாசகங்களை நினைவுபடுத்துகிறார்.

தேவக்குமாரனான ஏசு கிறிஸ்துவை சிலுவையில் அறைகிறார்கள்; அவமானப்படுத்துகிறார்கள். பொறுமையுடன், 'தாம் செய்வது இன்னதென்று தெரியாத இந்தப் பாவிகளை மன்னியும்'. இவ்வாசகம் உலகமக்கள் அனைவருடைய மனதிலும் பதிந்திருக்கிற மாணிக்க வரிகளாகும் என்று படிப்பவரின் மனதில் பதிந்துவிட்டுச் செல்கிறார் ஏர்வாடி.

இஸ்லாம் குற்றங்கள் பலவற்றிற்குக் கடுமையான தண்டனைகளைக் குறிப்பிட்டிருந்தாலும் நபிகள் நாயகம் குற்றவாளிகளை மன்னிக்கிறார். இவரின் ஒரு வாழ்க்கை காட்சியை காட்சிப்படுத்தும் ஏர்வாடியார், மக்கா மதீனா போரில் அவருக்கு எதிராக நின்றவர்களை, போரில் வெற்றி பெற்றவுடன் அனைவருக்கும் பொதுமன்னிப்பு வழங்குகிறார். இவரின் அருமைகள் ஜைனப் கருவுற்றிருந்தபோது கொடிய ஆயுதத்தால் அக்கர்ப்பிணியின் வயிற்றில் கீறி அவளின் மரணத்திற்கு காரணமாக அவன் நபிகள் நாடகத்தை மாறுவேடத்தில் சந்திக்க குற்றவாளி பொது மன்னிப்பு என்பது எல்லோருக்குமே பொருந்தும்தானே என்று கேட்ட போது நபிகள் அவனை யார் என்று அறிந்த பின், 'என் மகள் ஜைனப் மரணத்திற்குக்

காரணமான ஹப்பாருக்கும் அது பொருந்தும்' என்றபோது அவன் நெகிழ்ந்து போனானாம். "மன்னிப்பு என்பதே ஒரு மரண அடிதான்"[10] என்கிறார் ஏர்வாடி.

'தாயின் மடியில்தான் சொர்க்கம் இருக்கிறது' என்று நபிகள் நாயகம் கூறுவதுண்டு.

தன்னில் ஒருவனே தன்னைக் காட்டிக் கொடுக்கப் போகிறான் என்றறிந்தபோதும் யூதாஸிடம் அன்புகாட்டியவர் ஏசுபிரான் பகைநீக்கி பவித்திரமான நெஞ்சங்களில்தான் பேரமைதியுரும் என்று புகழ்வாய்ந்த வாசகத்தை இவ்விடத்தில் எடுத்துக்காட்டுகிறார் ஏர்வாடி.

'கடமைகளைச் செய்; பலனை எதிர்பாராதே' என்கிறது கீதை. "எதிர்பார்ப்புகளை குறைத்தும் கொள்வது போன்ற இன்பம் வேறெதிலும் இல்லை"[11] என்கிறார் ஏர்வாடி. நாம் அமைதியை விரும்புவதுபோல அடுத்தவரும் அதை விரும்புவர் என்கிறார். 'அமைதி ஏற்படுத்துவோர் பேறு பெற்றோர் அவர்கள் கடவுளின் குழந்தைகள்' (மத்தேயு) என்கிறது.

நபிகள் நாயகம் வாழ்க்கையில் நடந்த ஒரு நிகழ்ச்சியை ஏர்வாடியார் எடுத்தியம்புகின்றார். நபிகள் நாயகம் ஒருநாள் சாலையில் நடந்து சென்றபோது ஓரமாக ஒரு சிறுமி அழுது கொண்டிருக்க, தாயுடன் வந்த சிறுமி கூட்டத்தில் காணாமல் போக வழியறியாது விழித்த அச்சிறுமியை வீட்டை அறிந்து அழைத்துச் செல்கிறார். வீட்டுக்கு வெளியே நின்று 'அஸ்லாமு அலைக்கும்' என்று மூன்றுமுறை குரல் கொடுத்தவரின் பின் சிறுமியின் தாய் 'அலைக்கும் வா சலாம்' என்று மறுமொழி கூறி தன் குழந்தையை அணைத்துக் கொள்கிறாள். நபிகளுக்கு ஒரு வருத்தம் அந்த தாய் நான் தெரித்தபோது எல்லாம் சரிதான். ஒருவர் சலாம் சொல்லுகிறபோது உடனே மறுமொழி கூறவேண்டும் என்று உங்களுக்குத் தெரியாதா? மூன்றாவது முறை நான் விளித்தபோதுதான் மறுமொழி தரவேண்டுமா? ஏனிந்த அலட்சியம்? என்று வினவினார். அலட்சியம்

எதுவுமில்லை பெருமகனாரே. உங்கள் குரல் கனிவாக இருந்தது. இக்குரலை மீண்டும் கேட்பதற்காகத்தான் நான் அமைதியாக இருந்தேனே தவிர உங்களை அலட்சியம் செய்யவில்லை. இருந்தாலும் என்னை மன்னியுங்கள்" என்று பணிந்து வருந்தினாளாம் அந்த தாய்.

"கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றுகிறவர்களை காப்பாற்றுகிறவர்களுக்கு கடவுளுக்கு இணையாகக் கூடக் கருதலாம்"[12] என்கிறார் ஏர்வாடி.

'யேகோவா தேவன் கொடுத்திருக்கும் எந்த வாக்கிற்கும் உத்திரவாதம் உண்டு. அது நிச்சயம் நிறைவேறும். ஒருகாலும் பொய்த்துப் போகாது' (ஏசாயா.55:11) பலதுறையில் புலமை பெற்ற ஏர்வாடியார் சிறப்பு வெளிப்படுகிறது.

'நீங்கள் உள்ள உறுதியுடன் செய்யும் சத்தியங்களை நிறைவேற்றவில்லை எனில் அல்லா உங்களைக் குற்றம் கண்டுபிடிப்பான்' என்று திருக்குர் ஆனில் 2-225) உள்ள கருத்தை எடுத்தியம்பும் ஏர்வாடியாரின் வேதங்கள் கற்றவர் என்பது புலனாகிறது.

சங்க இலக்கியக் கருத்துகள்

சங்க இலக்கியத்தில் ஈடுபாடு கொண்ட ஏர்வாடி சங்க இலக்கியக் கருத்துகளைக் கையாளும் விதம் தனித்துவமானது.

'அழுதால் கொஞ்சம் நிம்மதி' என்கிற கட்டுரையில் ஆன்மீகத்தில்கூட அழுதடைவது பற்றிய செய்திகள் நிரம்ப உண்டு என்கிறார் ஏர்வாடி. மாணிக்கவாசகர் பெருமான் எட்டாம் திருமுறையான திருவாசகத்தில் இறைவனிடத்தில் அழுதே காரியத்தைச் சாதித்துக் கொள்ளலாம் என்றார்.

“பற்றிப்பாடுவது வேறு, பற்றிக் கொண்டு பாடுவது வேறு”[13] என்கிறார் ஏர்வாடி. “திருக்குறள் மனிதர்களுக்காக ஒரு மனிதன் பாடியது. கீதை மனிதனுக்காக இறைவன் சொன்னது. திருவாசகமோ இறைவனுக்காக மனிதன் செய்தது. இறைவனே எழுந்தருளி மாணிக்கவாசகர் சொல்லக் கேட்டு எழுதியது. உணர்ச்சிவயப்பட்ட மாணிக்கவாசகர் உருகி உருகி அதைச்சொல்லிய”[14] மாணிக்கவாசகர் பற்றி உருகிப் படிக்கும் தன்மையோடு அவரின் கட்டுரைகள் அமைந்திருக்கும்.

“திருவாசகத்துக்கு உருகார் ஒரு வாசகத்துக்கும் உருகார்.

‘காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி’ இறைவனிடத்தில் உருகும் மாணிக்கவாசகர், ‘அழுதால் அவனைப் பெறலாமே”[15] என்று ஆற்றுப்படுத்துவதையும் செய்கிறார் என்று பொருத்தமுற அமைக்கும் ஏர்வாடியாரின் இலக்கியப் புலமை மாறுபட்டது.

தன் வலிக்காக, தன் துயரத்திற்காக, தன் சோகத்திற்காக, தனது தோல்விக்காகவும் அழுங்கள்; அது மனதுக்கு இதம் தரும் என்கிறார் ஏர்வாடி. வள்ளல் இராமலிங்க அடிகள் வருந்திய ஒரு வரி ‘வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்’ என்பதாகும்.

“தனக்காக அழுவதுபோல அடுத்தவர்க்காகவும் கொஞ்சம் அழுங்கள்; மானுடம் மாண்புறும்”[16] என்கிறார் ஏர்வாடி. “அழிவதற்கும் ஆள்வதற்கும் அவனவனே காரணம்”[17] என்கிறார்.

‘முதுமை ஒரு வதமல்ல வரம்’ என்கிற தன் கட்டுரையில் “உடலில் எதிர்ப்பு சக்தி குறைகிறபோது நோயில் மட்டுமல்ல; பாயிலும் விழுந்துவிடுகிறது முதுமை”[18] என்கிறார் ஏர்வாடி.

உடலை வளர்த்தேன்; உயிர் வளர்த்தேனே என்கிற வரிகளை நினைவிற் கொள்ள வேண்டும் என்கிறார். ‘வாக்குறுதி’ என்கிற கட்டுரையில் உண்மைக்காக வாழ்ந்து கொடுத்த வாக்குறுதியைக் காக்கத் தன்னைப் பல இன்னல்களுக்கு ஆட்படுத்திக் கொண்டவர் அரிச்சந்திரன் என்பதை பதிவு செய்துள்ளதைக் காணலாம்.

பழகிப் பாருங்கள் என்கிற கட்டுரையில் கடையெழு வள்ளல்களில் முதன்மையானவரான பாரியுடன் நட்புக் கொண்ட கபிலர், பாரியின் நிலையில் உருகி வடக்கிருந்து உயிர்துறந்த அந்தப் புலவனின் நட்பு மேன்மையானது என்று இடத்திற்கு ஏற்ப இலக்கியத்தை உதாரணம் காட்டுவதன்மூலம் ஏர்வாடியாரின் இலக்கியப்புலமை புலனாகிறது.

புத்தரின் அறிவுரைகள்

புத்தரின் வாசகங்களை தனது கட்டுரையில் பல இடங்களில் கையாண்டுள்ளார் ஏர்வாடி.

“பகையைக் கொண்டு பகையை அழிக்க முடியாது. அன்பினால்தான் பகையை அழிக்க முடியும் என்று போதிக்கிறார் புத்தர். பகைவனை மன்னித்தால் பயமின்றித் திரியலாம்”[19] என்று வழிகாட்டுகிறார். புத்தர் வாழ்க்கையில் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியைக் காட்சிப்படுத்தும்போது,

புத்தர் பெருமானிடம் ஓர் இளம்துறவி ஞானம் பெறுவதற்காக வந்து அவருடன் தங்கியிருந்தாராம். பயிற்சியின் போது புத்தர் அவரிடம் ‘நீ தர்மம் போதிக்கிறபோது யாராவது கேலி செய்தாலோ திட்டினாலோ என்ன செய்வாய்?’ என்றார். நல்லவேளை அவர்கள் அடிக்கவில்லையே என்று அமைதியாக இருப்பேன் என்று இளம் துறவி பதிலளித்தார். சரி. அடிக்கத் தொடங்கிவிட்டால் என்றார் புத்தர். ‘ஆயுதங்களால் தாக்கவில்லையே என்று ஆறுதலடைவேன்’ என்றார் துறவி. ‘மகிழ்ச்சி. அவர்கள் கொடிய

ஆயுதங்களால் உன்னைக் கொலை செய்ய முற்பட்டால்' என்ற புத்தரிடம் 'பிறவித் துன்பத்திலிருந்து விடுபட ஒரு வழி திறக்கப் போகிறார்களே என்று நிறைவடைவேன்' என்ற இளம் துறவியைப் பார்த்து இளம் புன்முறுவல் பூத்த புத்தர், 'தர்மத்தைப் போதிக்கிற ஞானம் உனக்குள் வந்துவிட்டது. நீ புறப்படலாம்' என்று அனுப்பி வைத்தாராம் புத்தர். "மன்னிக்கிற மனம்தான் முதலில் நம்மை மனிதனாக்குகிறது. பிறகு மாமனிதனாக்குகிறது"[20] என்கிறார் ஏர்வாடி.

"நம்மை அவமதிக்கிறவர்களையும் நமக்குத் தீமை செய்கிறவர்களையும் மன்னிக்கிற போது நாம் உயர்ந்துவிடுகிறோம்"[21] என்று புத்தரின் அறிவுரையை காந்தியடிகளுக்கு உதாரணமாக்குகிறார் ஏர்வாடி.

"மனதில் போராட்டமும், குழப்பமும் மிகுதியாகிறபோது அதை எதிர்கொள்வது எப்படி"[22] என்று புத்தரின் வாசகங்கள் நமக்குப் பெரிதும் உதவும் என்கிறார் ஏர்வாடி.

கண்களை மூடுவதற்குப் பதிலாக மனதை மூடவேண்டும் என்கிற புத்தரின் வாசகத்தையும் கூறி வழி செய்கிறார்.

பகையால் பகையை அழிக்க முடியாது. அன்பால் மட்டுமே பகையை அழிக்க முடியும் என்கிற புத்தரின் வாசகங்களை இடத்திற்கு ஏற்ப உதாரணம் காட்டும் ஏர்வாடியார், 'அமைதியான மனதினிலே' என்கிற தன் கட்டுரையில் புத்தரின் வரிகளைக் கையாண்டுள்ளார்.

மகாகவி பாரதியார்

பாரதியின் பாடல்களைக் கையாளும் போது ஏர்வாடியாரின் தனித்தன்மை புலனாகிறது.

“எண்ணிய முடிதல் வேண்டும்

நல்லன எண்ணல் வேண்டும்

நல்லது நடக்க வேண்டுமெனில் முதலில் நாம் நல்லவர்களாக இருக்க வேண்டும்”[23] என்கிறார் ஏர்வாடி. பயன்படும் மனிதர்களைத்தான் இந்த உலகம் போற்றுகிறது என்கிறார் ஏர்வாடி.

“சொல்லடி சிவசக்தி என்னைச் சுடர்மிகும் அறிவுடன் படைத்துவிட்டாய் என்பார் பாரதி.

வல்லமை தாராயோ இந்த மாநிலம் பயனுற வாழ்வதற்கே என்று ‘வேண்டும்’ பாரதியின் வரிகளை ஏற்றுக் கூறும் ஏர்வாடியார், பயன்பட வாழ்ந்த, வாழ்கிற பெரியோர்களே மண்ணில் புகழோடு விளங்கியிருக்கின்றனர்”[24] என்கிறார்.

“‘எழுத்தும் தெய்வம்; எழுதுகோலும் தெய்வம்’ என்பார் பாரதி.

படைப்புத் தொழிலை இறைவன் மேற்கொண்டிருப்பதுபோல புதிய படைப்புகளைத் தருகிற படைப்பாலும் இறைவன்தான் என்று நாம் கருதலாம்”[25] என்கிறார் ஏர்வாடி.

‘அச்சமில்லை அச்சமில்லை’ என்கிற பாரதியின் பாடலைச் சிறுவயதில் இருந்தே பாடி வருகிறோம். படித்திருக்கிறோம். அந்தத் துணிச்சலை யாரும் துளிகூடப் பெற்றோமில்லை. இவை வருந்தக்கூடிய ஒன்று என்று உணர்த்துகிறார் ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணன் அவர்கள்.

நிஜமாக பயம் என்பது உண்டோ இல்லையோ கற்பனையாக நாம் உருவாக்கிக் கொள்கிறோம். ‘அச்சம் என்பது மடமையடா’ என்கிற பட்டுக்கோட்டையாரின் வரிகளை நமக்கு நினைவுப்படுத்துகிறார் ஏர்வாடி.

"கலை இலக்கியம்கூட தொழில்தான்"[26]

மேன்மைத் தொழில் கவிதை

எமக்குத் தொழில் கவிதை என்பாராம். பிறிதோரிடத்தில் பாரதி எந்தத் தொழிலாக இருந்தாலும் அந்தத் தொழில் தெய்வமாகக் கருதப்பட வேண்டும் என்பார். மகாகவி பாரதியின் வாழ்க்கையில் நடந்த ஒரு நிகழ்ச்சி,

கவிதைப் போட்டியொன்றில் மகாகவி பாரதி எழுதிய 'செந்தமிழ் நாடெனும் போதினிலே' என்கிற பாடல் இரண்டாவது பரிசைப் பெற்றது. முதற்பரிசு பெற்ற கவிஞரும் அந்தக் கவியும், பாரதியைப்போன்று, அவரின் பாடலைப் போன்றும் பேசப்படவுமில்லை; புகழ்பெறவுமில்லை. அத்தொழிலை பாரதியைப் போன்று தொடர்ந்து செய்யவுமில்லை. மகாகவி பாரதியின் வரிகளை தனது கட்டுரையில் எடுத்தியம்பும் ஏர்வாடியாரின் இலக்கியப்புலமை புலனாகிறது.

பாவேந்தர் பாரதிதாசன்

'அமைதியான மனதினிலே' என்கிற கட்டுரையில் அமைதியை வலியுறுத்தும் ஏர்வாடியார் கெட்ட போரிடும் உலகத்தை வேருடன் சாய்ப்போம் என்று பாவேந்தர் பாடியது போரினால் அமைதி போய்விடும் என்பதனால்தான் என்கிறார் ஏர்வாடி.

கவியரசர் கண்ணதாசன்

சிறுவயதில் இருந்து கண்ணதாசனின்மீது ஈடுபாடு கொண்ட ஏர்வாடி. அவரது எழுத்து மீது தீராத மயக்கமும் கொண்டவர். அதன்மீது உள்ள ஓசைநயத்தில் இலயித்துப் போனவர். ஏர்வாடி கல்லூரி கட்டுரைப் போட்டிக்கான தலைப்புகளில் மற்றவர்கள் மறைந்த பாரதி, பாரதிதாசன், கம்பர் போன்ற கவிஞர்கள் பற்றி எழுதியபோது, ஏர்வாடி மட்டும் கண்ணதாசனைப் பற்றி எழுதியவர்.

“பிரிவுத் துயரம் அழவைப்பதைப் போலவே சேரும்போதும் அழத்தோன்றுவது மரபு”[27] என்கிற ஏர்வாடியாரின் அதற்கேற்ப கண்ணதாசனின் பாடல் வரியை இவ்விடத்தில் பயன்படுத்துகிறார்.

பிரிந்தவர் மீண்டும் சேர்ந்திடும்போது அழுதால் கொஞ்சம் நிம்மதி

என் கண்ணீரைத்தான் நீங்கள் கவிதை என்கிறீர்கள் என்பார்.

‘வானம் அழுவது மழையெனும்போது

வையம் அழுவது பனியெனும்போது

கானம் அழுவது கலையெனும்போது

கவிஞர் அழுவது கவிதையாகாதா’

என்கிறது இப்பாடல் என்று கேட்பதுகூட கவனத்திற்குரியது என்கிறார் ஏர்வாடி.

அமைதியைப் பெறுவதற்கு அனுபவங்களால் மட்டுமே முடியும் என்கிறார்.

‘பார்த்தது கோடி; பட்டது கோடி சேர்த்து என்ன சிறந்த அனுபவம்’ என்கிறது கவியரசு கண்ணதாசனின் பாடல்வரி. இங்கே இப்படி வாழ்க்கையைத் தொடங்கு என்று ஏழைப் பிள்ளைக்கும் பணக்காரப் பிள்ளைக்கும் அமைவது பிறப்பைப் பொறுத்தே என்கிறார் ஏர்வாடி.

‘கடல்மீது விழுந்தோர்கள் நீந்துங்கள்

கனிமீது விழுந்தோர்கள் உண்ணுங்கள்’ என்கிறது பாடல்வரி.

‘படைப்பதனால் என் பெயர் இறைவன்’ என்பார் கண்ணதாசன். இறைவன் படைப்பான மனிதன்கூட மறைந்து விடுவான். மனிதனின் எழுத்துப் படைப்புகள் என்றும் மறையாது என்கிறார் ஏர்வாடி.

‘ஞானவான்கள் வாழ்கிற ஆலயம்’ என்று நூலகத்தைக் குறிப்பிடுகிறார் கவியரசு.

“புத்தகத்தோடு வாழ்கிறவர்கள் பலர் என்றால் புத்தகமாகவே வாழ்கிறவர்கள் சிலர்”[28] என்று கண்ணதாசனை குறிப்பிடுகிறார் ஏர்வாடி.

அறிஞர் அண்ணா

உறவுகள் மேம்படுதலில் விட்டுக்கொடுக்கிற பண்புதான் முக்கியமானது என்கிற ஏர்வாடியார் இப்பண்பினையுடையவர். ‘விட்டுக் கொடுக்கிறவர்கள் கெட்டுப்போவதில்லை; கெட்டுப் போகிறவர்கள் விட்டுக் கொடுப்பதில்லை’ என்பார் கண்ணதாசன். இவரின் புகழ்மிக்க வாசகங்களில் ஒன்று பேரறிஞர் அண்ணா மிகச்சிறந்த படைப்பாளி மட்டுமல்ல; படிப்பாளியும்தானாம். சென்னை கன்னிமாரா நூலகத்தில் உள்ள புத்தகங்கள் பலவற்றை அவர் படித்திருப்பதாகக் கூறுவதுண்டாம். அவர் புற்றுநோயால் அவதிப்பட்டபோது ஓர் அறுசை சிகிச்சை செய்ய வேண்டியிருந்ததாம். கொஞ்சம் தள்ளிப் போட முடியுமா? என்று மருத்துவரிடம் இரண்டுநாள் அவகாசம் கேட்டாராம். தாம் படித்துக் கொண்டிருந்த புத்தகத்தைப் படித்துமுடிப்பதற்காகவே கேட்டாராம்.

அண்ணா அவர்கள் “வரி வசூலிப்பதைக்கூட மலருக்கு வலிக்காமல் தேன் எடுக்கிற தேனியிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டும் என்பார். “கண்டிப்பில் மட்டுமல்ல; கனிவிலும் இருக்கிறது நல்ல நிர்வாகம்”[29] என்கிறார் ஏர்வாடி.

கவிப்பேரரசு வைரமுத்து

கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் “ஏர்வாடி என்ற ஊரின் பெயரைக் கேட்டாலே என் நினைவுக்கு உடன் வருபவர் கலைமாமணி ஏர்வாடி இராதாகிருஷ்ணன்”[30] என்பார்.

வைரமுத்து "கவிதைக்குப் பொய்யழகு" என்பார். அதை ஏர்வாடியார் "அதீதமான கற்பனை என்று கற்பித்துக் கொண்டால் கவிதையும் சுகமாக கவிஞனும் நிஜமாகத் தோன்றும்"[31] என்பார்.

காப்பியக் கவிஞர் வாலி

காப்பியக் கவிஞர் வாலி ஏர்வாடியார் பற்றி ஒரு கவியும் பாடியுள்ளார்.

"ஏர்வாடி இராதாகிருஷ்ணன்

ஏரார்ந்த தமிழ்மகள்பால்

ஏராளமான காதல் கொண்டு

சீரார்ந்த செய்யுள் பூக்களை – அவள்

சேவடிகளில் சேர்த்தவர்; நம்

கவிகளிலும் கவிதைச்

செழுந்தேன் வார்த்தவர்"[32]

என்று கவியரசு கண்ணதாசன் இறந்தபோது ஒரு இரங்கற் பாவை எழுதினார் வாலி.

'எழுதப் படிக்கத் தெரியாத

எத்தனையோ பேர்களில் எமனும் ஒருவன்

ஒரு கவிதைப் புத்தகத்தைக் கிழித்துப் போட்டுவிட்டான்'

புத்தகங்களுக்குச் செலவழி என்று காப்பியக் கவிஞர் வாலி சொல்வதை நினைவிற் கொள்வது நல்லது என்று 'படிப்போம் பயன்பெறுவோம்' என்கிற கட்டுரையில் நினைவுபடுத்துகிறார் ஏர்வாடி.

தலைவர்களின் அறிவுரைகள்

மன்னித்தல் என்பது பெரும்பாரத்தை மனதில் இருந்து இறக்கி வைப்பதுபோல் என்கிறார் ஏர்வாடி. 'மன்னித்தல் என்பது பலசாலிகளின் பண்பு'

என்கிறார் பாரதப் பிரதமர் இந்திராகாந்தி அம்மையார். கண்ணுக்குக் கண் என்ற பகையுணர்வு இருந்தால் உலகில் எல்லோருமே குருடர்களாகத்தான் திரிந்து கொண்டிருப்பார்கள் என்பது காந்தியடிகள் சொல்லிச் சென்றது.

அண்ணல் காந்தி தன்னை அவமானப்படுத்தியவருக்கு காலணிகளைப் பரிசாக வழங்கிய நிகழ்ச்சியை நமக்கு நினைவுபடுத்துகிறார் ஏர்வாடி. புறச்சூழல்களில் பாதிக்கப்படாதிருப்பதுதான் உண்மையான அமைதி என்பார் காந்தி. ‘குழப்பம் என்பது அமைதியின்மை எனினும் குழப்பத்தை அமைதியாகவே அணுக வேண்டும்’ என்பார் அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ரீகன்.

ஏர்வாடியார் போராட்டத்தையும் குழப்பத்தையும் எதிர்கொள்வது எப்படி என்பதற்கு எடுத்தியம்புகிறார். ‘படிப்போம் பயன் பெறுவோம்’ என்கிற கட்டுரையில் “நல்ல புத்தகங்கள் நல்ல கனவுகளை வளர்க்கும். நல்ல கனவுகள் நல்ல எண்ணங்களை உண்டாக்கும். நல்ல எண்ணங்கள் நல்ல செயல்களை உருவாக்கும்”[33] என்கிற டாக்டர் ஏ.பி.ஜே.அப்துல்கலாம் அவர்களின் வாசகம் ஒன்றினை நினைவுபடுத்துகிறார்.

“நல்ல புத்தகங்கள் நல்ல மனிதனையும் நல்ல மனிதனை மகானாகவும் உருமாற்றம் செய்ய வல்லவை”[34] என்கிறார் ஏர்வாடி.

நூலில் எப்படி நூலாசிரியர்கள் வாழமுடியும்? என்பதற்கு பண்டித ஜவஹர்லால் நேரு சொல்லிச் செய்லார். பயணத்தின்போது பெட்டி நிறையப் புத்தகங்களை எடுத்துச் செல்லும் நேருவிடம் அவரின் உதவியாளர் கேட்டாராம் இத்தனை நூல்களைச் சுமந்து செல்கிறீர்களே உங்களால் படிக்க முடியுமா? படிக்க முடியாவிட்டால் என்ன? என்னுடன் இத்தனை நூல்களின் ஆசிரியர்களும் பயணிக்கிற உணர்வு கிடைக்குமே? என்பாராம்.

அதுபோல படுக்கையறைக்கும் புத்தகத்தை எடுத்துச் செல்லும் நேருவிடம் உதவியாளர் கேட்டபோது ஓய்வு எடுக்க வேண்டிய நேரத்தில் எப்படிப் படிக்கப் போகிறீர்கள்? எனக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற நேரத்தில் ஒன்று அல்லது இரண்டு மணி நேரத்தைத் திருடிக் கொள்வேன் என்றாராம் நேரு.

ஹிட்லரை ஏர்வாடியார் துப்பாக்கிக் குண்டுகளைப் பொழிந்து சிரித்தவனின் கல் மனதில் காதல் என்ற ஈரம் கொஞ்சம் இருந்ததுபோல நூல்களின் மீதும் உண்டு. ஹைட் நூலகத்தை லண்டன் படையெடுப்பில் அழிக்காமல் பாதுகாத்தவர் ஹிட்லர்.

அம்பேத்கர் மேற்படிப்புக்காக லண்டனுக்கு சென்றபோது எங்கே தங்கப் போகிறீர்கள் என்று நண்பர்கள் கேட்டபோது எங்கு வேண்டுமானாலும் தங்கிக் கொள்கிறேன். அருகில் ஒரு நூலகம் இருக்க வேண்டும் என்பாராம்.

ஆபிரகாம் லிங்கனுடைய தந்தை அவருக்குச் சொன்னாராம்.

நீ எந்தத் தொழிலைச் செய்தாலும் அந்தத் தொழிலில் அமெரிக்காவில் உன்னை விஞ்ச ஆளிருக்கக் கூடாது. நீ செருப்புத் தைத்தால்கூட மகிழச்சிதான். செருப்புத் தைப்பதில் நீதான் முதலிடத்தில் இருக்க வேண்டும் என்பாராம்.

காந்தி, நேரு, காமராஜர், நெப்போலியன், கக்கன் என்று பல தலைவர்களின் வாழ்க்கை பற்றிய சில நிகழ்வுகளை எடுத்தியம்பியுள்ளார் ஏர்வாடி.

பிறநாட்டு கவிஞர்கள்

தமிழ் இலக்கியங்களில் மட்டுமல்ல, பிறநாட்டு இலக்கியங்களும் கற்றுணர்ந்தவர் ஏர்வாடி. ‘நமது தேவைகளைவிட, நாம் எத்தனை பேருக்குத் தேவைப்படுகின்றோம் என்பதுதான் முக்கியம்’ என்பார் ஓர் ஆங்கில அறிஞர்.

ஏர்வாடியார் மனிதர்களுக்கான தேவைகளில் மனிதர்களே மனிதர்களுக்கு அதிகமாகத் தேவைப்படுவது மறுக்க முடியாத உண்மை என்கிறார்.

'இருளை இருள் அகற்ற முடியாது என்பதைப்போல பகையைப் பகை அகற்ற முடியாது. அன்புதான் பகையை அகற்றும்' என்கிறார் மார்ட்டின் லூதர் கிங்.

மனிதன் தன்னைக் கண்டெடுப்பது சோகத்தில்தான். கவலைகள்தான் மனிதர்களைப் புடம்போடுகின்றன.

ஆங்கிலக் கவிஞர் பிரான்சிஸ் தாம்சன் 'கண்ணீரால் கழுவப்பட்ட கண்களுக்குத்தான் புனித தரிசனங்கள் கிடைக்கும்' என்பார்.

'அழுதால் கொஞ்சம் நிம்மதி' என்கிற தன் கட்டுரையில் லார்ட் டென்னிசன் எழுதியுள்ள 'த வுமன் ஷீவெப்ட்' என்ற நாவலில் ஒரு காட்சியை காட்சிப்படுத்துகிறார் ஏர்வாடி.

போருக்குச் சென்ற கணவன் சுடப்பட்டு இறந்துவிடுகிறான். அவன் உடல் வீடு சேர்கிறது. கணவன் உடலைப் பார்த்தும் அழுகாத அந்தப் பெண்ணின் மடியில் அவளின் குழந்தையைப் பொட்டவுடன் கதறி அழும் காட்சியை இவ்விடத்தில் காட்சிப்படுத்தும் ஏர்வாடியாரின் இலக்கியப்புலமை புலனாகிறது.

சார்லி சாப்ளின் அனைவரையும் சிரிக்க வைக்கும் ஒரு கலைஞரின் வாழ்க்கையில் சோகம் மட்டுமே உண்டு. 'மழையில் நனைவது எனக்குப் பிடிக்கும்' என்பாராம். ஏனெனில் என் கண்ணீர் அப்போது யாருக்கும் தெரியாது என்பாராம். துன்பப்படுபவன் வேறு அதைச் சொல்பவன் வேறு என்கிற டி.எஸ்.எலியட் குறிப்பிடுவதுகூடக் கவிஞர்களைத்தான் என்கிறார் ஏர்வாடி.

‘அமைதி ஓர் அழகிய கவிதை. அது ஆக்கப்படுவதற்கு முன் இங்கே இல்லை. அதைக் கற்பனை செய்யவும் முடியாது’ என்பார் ஓர் ஆங்கில அறிஞர்.

சர்ச்சில் சொன்னதாக ஏர்வாடி நடைப்பயிற்சி சுழியைச் சுற்றுகிற உன் சுதந்திரம் என் மூக்கு முனை வரை இருக்கலாம். அது என் மூக்கில் பட்டுவிட்டதென்றால் என் சுதந்திரத்தை நான் பயன்படுத்த நேரிடும் என்பாராம்.

“அமைதியும் மகிழ்ச்சியும் மனதில் அற்றுப் போவதற்குக் காரணம் அதிகமான எதிர்பார்ப்புகளும், குறைவான ஆற்றல்தான் என்கிற ஓர் ஆங்கிலப் பழமொழியை நினைவுபடுத்துகிறார் ஏர்வாடி.

ஒரு மனிதன் தன்னுடைய மரணத்துக்கு முன்னால் 10,000 புத்தகங்கள் படித்திருக்க வேண்டும். 10,000 மைல்கள் நடந்திருக்க வேண்டும்”[35] என்று சீனப்பழமொழி ஒன்று உண்டு.

‘ஒருவருக்கு ஒரு புத்தகம் விற்கப்படுகிறபோது அச்சிட்ட காகிதத்தில் ஓர் அழகான வாழ்க்கை வழங்கப்படுகிறது’ என்று கிறிஸ்டபர் மார்லே கூறுவதுபோல் ஏர்வாடியார், “நல்ல நூல்கள் நம் வாழ்வில் மகத்தான மாற்றங்களை நிகழ்த்தும் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது”[36] என்கிறார்.

‘புத்தகம் இல்லாத வீடு ஆன்மா இல்லாத உடல்’ என்கிறார் சிஸரோ.

“தலைமை என்பது பண்பாகக் கருதப்படுகிற பட்சத்தில் அதற்கென சில எதிர்பார்ப்புகள் உள்ளன”[37] என்கிறார் ஏர்வாடி.

‘தலைவனுக்கு வழி தெரிய வேண்டும். அவ்வழியில் அவன் செல்ல வேண்டும். வழிகாட்ட வேண்டும்’ என்கிறார் ஜான் மேக்ஸ்வெல். ‘தலைமை என்பது அடுத்த தேர்தல் அல்ல; அடுத்த தலைமுறை’ என்பார் சைமன்சினெக்.

தலைமை பற்றிப் பேசும் 'அடுத்த தலைமுறை' என்கிற கட்டுரையில் அப்பாவி ஆடுகளைக் காப்பாற்றுவதற்காகத்தான் ஒரு சிங்கம் போன்றவன் என்கிறவனே தலைவனாக இருக்க முடியும் என்கிற போது, மாவீரன் அலெக்ஸாண்டர் சிங்கங்களுக்குத் தலைமை ஏற்றுள்ள ஆடு குறித்து எனக்கு அச்சமில்லை; ஆடுகளுக்குத் தலைமை தாங்கும் சிங்கத்தைப் பார்த்தே நான் அஞ்சுகிறேன் என்பாராம்.

பொய் பற்றிப் பேசும் ஏர்வாடியார், 'பொய்யர்களுக்கு ஞாபக சக்தி அவசியம் வேண்டும்' என்பாராம் செரிடான் என்கிற ஆங்கில அறிஞர். "'இலவசமாக ஒரு மீனைக் கொடுப்பதைவிடத் தூண்டிலைக் கொடுங்கள்' என்கிற சீனப் பழமொழி ஒன்று உண்டு என்கிறார் ஏர்வாடி. "சமூகம் நம்மைச் சோம்பேறிகளாக்கிக் கொண்டிருக்கிறதோ"[38] என்று சிந்திக்க வைக்கிறார் ஏர்வாடி.

செய்வதற்கு ஏதாவது வேலை இருந்து செய்துகொண்டே இருப்பவர்தான் உயர்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பார் ஆங்கில அறிஞர் ஒருவர். அவர் கூறுவதில் உள்ள உண்மை உழைப்பவர்களுக்கு மட்டுமே உரியது என்கிறார் ஏர்வாடி.

சாதி வெறியர்களுக்காக ஏர்வாடியார் தன் கட்டுரையில் குறிப்பிடுகிறார். சீனாவில் மிகப்பெரிய மதமொன்றின் நிறுவனர் கன்பூசியில் ஒவ்வொருவரும் செய்கிற பணிகளின், தொழிலின் அடிப்படையில் இனங்களைப் பகுத்ததாகக் கூறப்படுகிறதாம். சீனாவில் மிகப்பெரிய நான்கு சாதிகள்தான் வகுக்கப்பட்டனவாம். அறிஞர்கள், விவசாயிகள், கைவினைஞர்கள், வியாபாரிகள் என்று சாதிகள் பிரிக்கப்பட்டனவாம். நண்பர்களுக்கிடையே நல்ல நட்பு வேண்டும் என்று வலியுறுத்துகிறார் ஏர்வாடி.

'நல்ல நண்பர்களைத் தேர்ந்து நிரந்தரமாக வைத்துக்கொள்ள வேண்டும்' என்பாராம் பெர்னாட்ஷா.

மாவீரன் நெப்போலியன் தன் இறுதி நாள்களில் போரில் தோற்று ஹெலினா தீவில் தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டபோது வருந்தினாராம். எந்நேரமும் என்னைச் சுற்றி என்னைத் துதிபாடுகிற கூட்டத்தை வைத்துக் கொண்டிருந்தேனே தவிர நண்பர்களாக யாரையும் வைத்துக் கொண்டேனில்லை. நண்பனாக நடிக்கக்கூட எவரும் எனக்கில்லை" என்று வருந்தினாராம்.

"நட்பு என்பது விலைக்கு வாங்க முடியாத கடவுளின் பரிசு என்கிறார் பிரான்சிஸ் ஃபார்மர் என்னும் அறிஞர். ஏர்வாடியார் கடவுளிடம் கேளுங்கள். அவர் உங்களுக்கும் ஒரு நண்பரைப் பரிசாகத் தருவார்"[39] என்கிறார்.

'ஒப்பிடு' என்கிற கட்டுரையில் ஒப்பிட்டுப் பார்க்கும் மனிதர்களின் இயல்பை எதார்த்தமாக உணர்த்துகிறார் ஏர்வாடி.

பில்லிங்கஸ் என்ற ஓர் ஆங்கில அறிஞர் ஜலதோஷத்துக்கு நல்ல மருந்து, நல்ல வேளை இது நிமோனியா இல்லையே என்று தேற்றிக் கொள்ள வேண்டுமாம்.

ஏர்வாடியார் இலக்கியக் கருத்துகளை கையாளும் விதமும் இடத்திற்கு ஏற்ப ஏற்றிக்கூறும் திறனும் அவரின் இலக்கியப்புலமையை வெளிப்படுத்துகிறது.

நவீனகால அறிஞர்கள்

காலத்தவர்கள் குறித்து குறிப்பிடும் ஏர்வாடி கெட்ட காலத்தில் வசிக்கும் நாம்கூட நம் பேரப்பிள்ளைகளிடம் நம் காலம் பொற்காலம் என்றுதான் சொல்வோம் என்கிறார் கவிக்கோ அப்துல் ரகுமான்.

ஒரு புதுக்கவிஞர் பாடிய பாடலை ஒப்பிடுங்கள் என்கிற தன் கட்டுரையில் எடுத்தியம்பும் ஏர்வாடியார்,

“காலில் செருப்பில்லையே என்று கவலைப்பட்டேன்; காலில்லாதவனைப் பார்க்கும்வரை என்கிறார். அதற்கு ஏர்வாடியார், கையில்லை என்பதைவிடவா கையிலில்லை என்கிற கவலை”[40] என்கிறார்.

முடிவுரை

ஏர்வாடியார் பட்டறிவும் படிப்பறிவும் தனித்தன்மையும் கொண்டவர். இலக்கியவாதி என்று அழைப்பதற்கும், போற்றப்படுவதற்கும் உகந்தவர். பல கட்டுரையாளர்களில் தனித்தன்மை கொண்டவர். தமிழ் இலக்கியங்களில் மட்டுமல்ல, பிறநாட்டு இலக்கியங்கள்மீதும் ஈடுபாடுடையவர். பாரதி, பாரதிதாசன், கண்ணதாசன், வைரமுத்து, வாலி, அண்ணா என்று புகழ்பெற்ற மாபெரும் அறிஞர்களின் கருத்தை தன் கட்டுரையில் கையாண்டுள்ளார். ஹென்றி சாரி, லியோ டால்ஸ்டாய், சைமன், எட்வின், ஜான்சன், பெர்னாட்ஷா, சார்லிசாப்ளின், நெப்போலியன் போன்ற பிறநாட்டு அறிஞர்களையும் வாசகங்களையும் கருத்தையும் கையாண்டுள்ள ஏர்வாடியாரின் இலக்கியப்புலமை புலனாகிறது.

அடிக்குறிப்பு

1. ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணன், சொந்தமாக ஒரு சொர்க்கம், ப.18
2. மேலது., ப.36
3. மேலது., ப.60
4. மேலது., ப.65
5. மேலது., ப.25
6. மேலது., ப.145
7. மேலது., ப.38
8. மேலது., ப.144
9. மேலது., ப.144
10. மேலது., ப.35
11. மேலது., ப.61
12. மேலது., ப.136
13. மேலது., ப.48
14. மேலது., ப.48
15. மேலது., ப.49
16. மேலது., ப.50
17. மேலது., ப.64
18. மேலது., ப.103
19. மேலது., ப.33
20. மேலது., ப.34
21. மேலது., ப.43
22. மேலது., ப.59
23. மேலது., ப.22
24. மேலது., ப.42
25. மேலது., ப.71
26. மேலது., ப.122

27. மேலது., ப.46
28. மேலது., ப.74
29. மேலது., ப.88
30. முனைவர் கோ.சுப்புலெட்சுமி, கவிஞர் ஏர்வாடி. எஸ்.இராதாகிருஷ்ணன், ப.15
31. ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணன், சொந்தமாக ஒரு சொர்க்கம், ப.116
32. முனைவர் கோ.சுப்புலெட்சுமி, கவிஞர் ஏர்வாடி. எஸ்.இராதாகிருஷ்ணன், ப.15
33. ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணன், சொந்தமாக ஒரு சொர்க்கம், ப.71
34. மேலது., ப.71
35. மேலது.,ப.75
36. மேலது., ப.75
37. மேலது., ப.96
38. மேலது., ப.119
39. மேலது., ப.150
40. மேலது., ப.151

இயல் - 4

சிந்திக்கத் தூண்டும் அனுபவக் கருத்துகள்

முன்னுரை

'சொந்தமாக ஒரு சொர்க்கம்' என்கிற ஏர்வாடியாரின் இக்கட்டுரைத் தொகுப்பு சொர்க்கத்தைப் பெறுவதற்கான வழிசெய்யும் நூல். அறிஞர்களையும் இளையோர்களையும், பெரியோர்களையும் சிந்திக்க வைக்கும் ஒரு சிறந்த நூல். சார்ந்து வாழ்தல் பற்றியும், மன்னித்து, அச்சத்தை ஒழித்து, நட்பு, தேடல், காதல் செய்வது என்று வாழ்க்கைக்கான வழிகாட்டும் தன்மை ஆகியவற்றை ஒருங்கே பெற்றவர் என்பது இவரது படைப்பின்வழி புலனாகிறது. வாழ்க்கையை எப்படி வேண்டுமானாலும் வாழலாம் என்கிற நமக்கிடையில் வாழ்க்கையை இப்படித்தான் வாழ வேண்டும் என்று அறிவுரையாக இல்லாமல் அனுபவமான நமக்கு அளிக்கிறார் ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணன் அவர்கள்.

நல்லது நடக்க வேண்டும்

ஏர்வாடியாரின் கருத்துகள் நகைச்சுவை உணர்வும், குறும்பும், கிண்டலும் கலந்து நமக்கு சிந்திப்பதற்கான ஒரு வாய்ப்பை அளிக்கிறார். கெட்டுப்போனது நாம்தான் என்று நமக்குத் தெரிந்தாலும்கூட நாடுகெட்டுப் போனதாகச் சொல்வது நமக்கு வாடிக்கையாகிப் போனது என்கிறார். நம்மைச் சுற்றியுள்ளவர்கள் அனைவரும் நல்லவர்களாக இருக்க வேண்டும் என்று எல்லோருமே எதிர்பார்ப்பதுண்டு. நல்லது நடக்கவேண்டுமெனில் முதலில் நாம் நல்லவர்களாக இருக்க வேண்டும் என்கிறார் ஏர்வாடி.

கண்ணதாசனும் இதுபோல் சொல்வதுண்டு. 'பூமியில் இருப்பதும் வானத்தில் பறப்பதும் அவரவர் எண்ணங்களே! இருக்குமிடம் எதுவோ

நினைக்குமிடம் பெரிது. போய் வரும் உயரமும் புதுப்புது உலகமும் அவரவர் உள்ளங்களே நமது எண்ணங்களே நம்மை உருவாக்குகின்றன.

மன்னித்தலின் பயன்

‘மன்னிப்பு’ என்கிற கட்டுரையில் தமிழில் எனக்கு மிகவும் பிடித்த வார்த்தை ‘மன்னிப்பு’ என்கிறவர், மன்னிப்பதும், மன்னிக்க வேண்டும். எவ்வளவு பெரிய பாதுகாப்பு என்பது என்னைப்போல் அனுபவசாலிகள் அறிவார்கள் என்கிறார் ஏர்வாடி. மன்னிப்பு என்பது இறைத்தன்மை என்கிறார்.

‘மன்னிக்கும் பழக்கமுடைய மனிதர்கள் ஆனந்தமாகவும், ஆரோக்கியமாகவும் இருக்கிறார்கள்’ என்று பல்வேறு ஆராய்ச்சி முடிவுகளும் கூறுகிறது.

குற்றம் புரிவோரை மன்னிப்பதென்பது குற்றங்களை அதிகப்படுத்திவடாதா என்று கேட்டுவிட்டு பதிலும் அளிக்கிறார்.

குற்றம் செய்தவர்க்கு தண்டனை கொடுப்பது சரிதான். ஆனால் சிறிய குற்றம் செய்தவன் சிறையைவிட்டு வெளிவரும்போது பெரிய குற்றங்களுக்கான பயிற்சியோடு வெளிவருவதை நம்மால் பார்க்கமுடியும்.

கிறிஸ்துவமும் பாவ மன்னிப்பை பரிபூரணமாக ஏற்கிறது. இஸ்லாம் குற்றங்கள் பலவற்றிற்குக் கடுமையான தண்டனை கொடுக்கிறது. இருந்தும் நபிகள் நாயகம், குற்றவாளிகளை மன்னிக்கிறார். கர்ப்பிணியான தன் மகளைக் கொன்றவனையும் ‘பொது மன்னிப்பு’ எல்லோருக்கும் பொருந்தும் என்று அவனையும் மன்னிக்கிறார். ஏர்வாடியார் எடுத்தியம்பும் கருத்துகள் நாம் சிந்திக்கும் விதமாக அமைந்துள்ளது.

சொர்க்கமாகிறது

‘சொர்க்கம்’ என்பது இறந்தபின் பெறுவதல்ல. இருக்கும்போதே நாம் இருக்கும் இடத்தை நம் மனதிற்கு ஏற்ப அமைத்துக் கொள்வதே சொர்க்கம் என்கிறார் ஏர்வாடி. ‘சொந்தமாக ஒரு சொர்க்கம்’ என்கிற இவரின் இக்கட்டுரை நம்மைச் சிந்திக்கத் தூண்டுவது அல்லாமல், அதீத கற்பனைகளையும் ஏற்படுத்திவிடுகிறது.

“பிறக்கிறபோதே இறைவன் நமக்கு ஒரு சொர்க்கத்தை உறுதிப்படுத்தித்தான் நம்மை இந்த மண்ணுக்கு அனுப்புகிறார்”[1] என்பது சிந்திக்கக் கூடியது. சொர்க்கத்தை சொந்தமாக்கிக் கொள்வதும் நரகமாக்கிக் கொள்வதும் நமது எண்ணங்களே என்பதை உணர்த்துகிறார்.

‘எண்ணிய எண்ணியாங்கு’ எண்ணம்போல் வாழ்வு என்கிறது திருக்குறளும் (666)குறள்.

சொந்தமாக ஒரு சொர்க்கம் செய்ய முடியுமா என்றால் முடியும் என்கிறார். ஏர்வாடி நினைத்தால் முடியும் என்கிற நோக்குடையவர்.

நாம் யாருமே வசதிகளைத்தான் வேண்டுகிறோம். வாழ்க்கையை அல்ல. உறவுகளை மதிப்பதைவிட பொருள்களை மதிப்பதில் நாம் ஆர்வம் காட்டுகிறோம். நம்மால் வீட்டைத்தான் கட்ட முடியும். இல்லத்தையும் இல்லறத்தையும் அனுபவிக்க மட்டுமே முடியும் என்கிறார். கட்டிய வீட்டில் உறவுகளோடு இணைந்து உருவாக்குவது இல்லம். இல்லறமும் “விட்டுக் கொடுத்து அன்பு பாராட்டினால் நம் இல்லம் கட்டிமுடித்த சொர்க்கமாகிவிடும்”[2]

வாழ்க்கையை மனதால் வசப்படுத்திக் கொண்டால் அதுவே சொர்க்கமாகும். ஒரு சொர்க்கம் சொந்தமாகிவிடும் என்கிறார்.

அழுதால் நிம்மதி

‘அழுதால் கொஞ்சம் நிம்மதி’ என்கிற கட்டுரையில் ஏர்வாடியார் அழுவது மாற்றத்தின் வழி என்பதை உணர்த்துகிறார்.

“அழுகை என்பது மனிதர்களின் உடன்பிறந்த குணங்களில் ஒன்று”[3]

அழுவது கோழைத்தனம் அல்ல. அவை உணர்வுகளின் வெளிப்பாடு. வார்த்தைகளற்ற உணர்வின் மொழி (Non Verbal Language) என்கிறார். இதுபோல் ஒரு தமிழ்க் கவிஞரும் அழுதால் கிடைப்பது உருமாற்றம் என்கிறார்.

‘விண்ணழுதால் மழையாகும்
வளங்கொழிக்க வழியாகும்
பெண்ணழுதால் நகையாகும்
பணம்கரைய வழியாகும்
பொன்னழுதால் நகையாகும்
பொற்கொல்லர் பணியாகும்
மனமழுதால் கவியாகும்
மலையழுதால் நதியாகும்’

என்று பாடியதுண்டு. அடிக்கடி இல்லையென்றாலும் அவ்வப்போது அழுங்கள். பாரத்தை இறக்கி வைத்துவிட்டு பயணத்தைத் தொடருங்கள் என்கிறார். ஏர்வாடியாரின் நகைச்சுவையான ஒரு கதை

திருமணம் முடிந்த இளம் தம்பதியர் வெளிநாடு செல்வதற்காக விமான நிலையத்திற்கு வழியனுப்ப உறவினருடன் வருகிறார்கள். மணப்பெண் மட்டும் அழுதுகொண்டே இருக்கிறாள். அதைப்பார்த்த சிறுமிக்கு புரியவில்லை. ஏன் அக்கா அழுகிறாள் என்று தாத்தாவிடம் வெள்ளந்தியாகக் கேட்க

நம்மளைவிட்டு பிரிந்து செல்கிற சோகத்தில் என்று தாத்தா சிறுமியிடம் சொல்ல, "அத்திம்பேருக்கு மட்டும் பிரிந்த வருத்தம் இல்லை. அவரும்தான் எல்லோரையும் பிரிந்து போகிறார். "அவர் மட்டும் அழாமல் இருக்கிறாரே என்று அந்தச் சிறுமி கேட்க, பக்கத்தில் இருந்த பாட்டி சொன்னாள் "அவர் நாளையிலிருந்து அழுவார்" என்று சொன்னாராம். அழுகையைக்கூட கலையாக மாற்றிப் பார்க்கும் ஏர்வாடியாரின் கைவண்ணம் புலனாகிறது.

விலையுமாகி மதிப்புமாகி

'விலை வேறு மதிப்பு வேறு' என்கிற தன் கட்டுரையில் ஏர்வாடியார், விலைக்கும் மதிப்புக்கும் வித்தியாசம் தெரியாத மனிதர்களுக்கு பாடம் புகட்டுகிறார். மனிதனுக்கு மதிப்பு மட்டுமே உண்டு. விலைபேச முடியாது. மனிதர்கள் மதிப்பிற்குரியவர்கள் என்கிறார். எல்லாவற்றிற்கும் விலை நிர்ணயித்துக் கொள்ளக் கூடாது; அன்பு இலவசமானது. இலவசமாக அளிக்கப்படும் பொருள்கூட 'அன்பளிப்பு'.

"மொழியற்ற நிலைமைகூட மௌனம் தானே தவிர அமைதியாகாது"[4] என்கிறார். அமைதி என்பது மனம் சார்ந்தது, அமைதியை உறுதி செய்வது, போராட்டங்களும், மனப்போராட்டங்களும்தான் என்கிறார். அதனால்தான் 'போருக்குப்பின் அமைதி' என்கின்றனர். போர்பற்றிய அச்சமில்லாத அமைதியை ஏற்படுத்த முடியாது. அதற்கு மனித மனங்கள்தான் தயாராக வைத்திருக்க வேண்டும் என்கிறார்.

அமைதியை உருவாக்கும் வழியைக் கூறும் ஏர்வாடியார், 'அடுத்தவர் விஷயங்களில் தலையிடாமல் இருப்பதுதான் நம் அமைதியான வாழ்வுக்கு வழி. சிக்கிக்கொண்டது எப்படி என்பதைப் புரிந்து கொண்டால் போதும். அமைதியை அமைத்துக் கொள்ளலாம். எதிர்பார்ப்புகளைக் குறைத்து ஆற்றலை வளர்த்துக் கொண்டால் மனதுக்கும் மகிழ்ச்சிக்குமான இடைவெளி குறைந்து மனமும் அமைதிபெறும் என்கிறவர் ஒரு சீனக் கதையும் கூறிச்

செல்கிறார். சீனாவில் ‘அமைதி’ என்ற தலைப்பில் ஓவியப் போட்டி நடத்தப்படுகிறது. அமைதியான நதி, ஆள் அரவமில்லாத பூங்கா, சலனமில்லாத குளம், சந்தடியில்லாத சாலை என்று பல்வேறு ஓவியங்கள் போட்டிக்கு வந்திருந்தன. ஆனால் போட்டியை அறிவித்த அரசன், இடி, மின்னல், புயல், கடுமையான மழை, மரங்களின் பேயாட்டம், கடலின் சீற்றம், காட்டு விலங்குகளின் கூக்குரல், தலைதெறிக்க ஓடும் மக்கள் காணப்படும் ஓர் ஓவியத்தைப் பரிசுக்குத் தேர்ந்தெடுக்கிறார். அரசே இதுவா அமைதி? என்றார் அமைச்சர். அமைச்சரே! ஓவியத்தைச் சற்று உற்றுப் பாருங்கள். பதட்டமான இந்தச் சூழலிலும் அமைதியாக ஒரு பறவை தன் குஞ்சுகளுக்கு இரை ஊட்டிக் கொண்டிருக்கிறது. புறச்சூழல் எப்படியிருந்தாலும் அமைதியாக அப்பறவை நமக்கு உணர்த்துவது அமைதி புறத்திலில்லை, அகத்திலென்று புரிகிறதா? என்கிறார். அமைதியானது அகத்தில்தான் இருக்கிறது என்பதை உணர்த்துகிறார் ஏர்வாடி.

இறைமையும் நம்பிக்கையும்

‘இறைவனுக்கென்ன இதுவா வேலை?’ என்கிற தன் கட்டுரையில் இறைவன் என்பவன் நம்பிக்கையாக மட்டும் உள்ளான் என்று இறைவன் மீதுள்ள நம்பிக்கையை வெளிப்படுத்துகிறார். தெய்வத்தை ஒரு நம்பிக்கையாக மட்டுமே வைத்துக் கொள்ள வேண்டும். அதற்காக அதை மட்டுமே நம்பக்கூடாது. உழைப்பும் வேண்டும் என்கிறார்.

உழைப்பு பற்றிய ஒரு சிறு நிகழ்வு

தொழிலில் நொடிந்து போன ஒரு தொழிலதிபர் அமைதியாக ஒரு பூங்காவில் தனியாக அமர்ந்து கொண்டிருந்தார். அப்போது ஒரு பெரியவர் அவ்வழியாக வருகிறார். கோட்டும் சூட்டுமாக அவர் ஒரு பெரிய பணக்காரர் போல இருந்தார். அந்த தொழிலதிபரிடம் தன்னை ராக்ஃபெல்லர் என்று அறிமுகத்திக் கொண்டு ஏன் சோர்வாக இருக்கிறீர்கள்? என்று கேட்க தன்

நிலைமையை விவரிக்கிறார். கவலைப்படாதீர்கள். நான் உங்களுக்கு 5 லட்சம் டாலர் காசோலை தருகிறேன். வட்டி ஏதும் வேண்டாம். நட்டத்திலிருந்து மீண்ட பிறகு எப்போது முடியுமோ அப்போது திரும்பத் தந்தால் போதும் என்று காசோலையைக் கொடுக்கிறார். ராக்ஃபெல்லரைப் பார்க்கவில்லை என்றாலும் கேள்விப்பட்டிருந்த தொழிலதிபர் அந்தக் காசோலையை பத்திரமாக இரும்புப் பெட்டியில் வைத்துப் பூட்டிவிட்டு தேவைப்படும்போது பயன்படுத்தலாம் என்று துணிச்சலோடு நம்பிக்கையோடு உற்சாகமாக மூலப் பொருட்களைக் கடன் வாங்குவதும் புதிய ஊழியர்களை நியமிப்பதும் புதுமையான விளம்பர யுத்திகளை அறிமுகம் செய்து இரண்டொரு நாளில் வங்கிக் கடன்களை அடைத்து கோடிக்கணக்கில் சம்பாதித்தார். இத்தனைக்கும் அவருக்கிருந்த ஒரே நம்பிக்கை பெட்டியில் இருந்த 5 லட்சம் டாலருக்கான காசோலை இருக்கிறது என்பதுதான். அதை எடுத்துப் பயன்படுத்த அவசியமில்லாமலே போனது ராக்ஃபெல்லருக்கு நன்றி தெரிவித்துவிட்டு அந்த காசோலையை திருப்பித்தர பூங்காவிற்கு சென்றபோது ஒரு வயதான பெண்மணியின் அருகில் அமர்ந்திருந்தார் ராக்ஃபெல்லர். அவரிடம் பேச்சுக் கொடுத்தபோது சாரிசார் உங்ககிட்டயும் இவர் கொடுத்தாரா? பணம் இல்லேன்னு திரும்பி வந்ததா? எங்களை மன்னிச்சிடுங்க. இவர் என் கணவர். மனநலம் பாதிக்கப்பட்டவர். தினமும் இங்கே வந்து இப்படித்தான் எல்லோருக்கும் செக் கொடுத்திட்டு இருக்கார். பாவம் நீங்களும் ஏமாந்துட்டீங்க போல இருக்கு என்றார்.

போலியான காசோலை வங்கியில் இருப்பில்லை என்றாலும் அதை நம்பி எத்தனை முயற்சிகள் வெற்றிகள் என்று பெருமூச்செறிந்த அவர் நம்பிக்கைதான் வெற்றி என்று உணர்கிறார். அவர் நாம் நம்புகிற அந்த சக்திதான் கடவுள் என்கிறார் ஏர்வாடி.

அன்பு என்பது இறைமை. கடவுள் என்பது ஒரு சக்தி. இவை இரண்டும் நம்மிடமே இருக்கிறது. கடவுள் என்பது நாமே கற்பித்துக் கொள்கிற

கற்பனை, கட்டுக்கதை என்றாலும் இறைவனைப் பற்றிய நம்பிக்கை என்னவோ இதமளிக்கிறது என்கிறார்.

படிப்பதின் பயன்

பன்முக ஆற்றல் கொண்ட ஏர்வாடியார் பல நூல்களைக் கற்றுத் தேர்ந்தவர்; அனுபவசாலி என்கிற முறையில் படித்தால் என்னென்ன நன்மைகளை நாம் அடைய முடியும் என்பதை நமக்கு எடுத்துரைக்கிறார்.

காகிதத்துக்கு கனம் சேர்ப்பது அதில் எழுதப்படுகிற சிந்தனை மட்டுமே வெற்றுக்காகிதத்துக்கு ஒரு விலை இருக்கிதென்றால் புத்தகத்துக்கு விலையோடு சேர்த்து ஒரு மதிப்பு இருக்கிறது. அதற்குக் காரணம் அதில் ஒரு படைப்பாளனின் சிந்தனை இருப்பதால்தான்.

“நல்ல நூல்களில் படைப்பாளர்கள் வாழ்கிறார்கள்”[5] என்கிறார். புத்தக்களுக்காகச் செலவிடுகிற தொகை செலவல்ல. மூலதனம். வாசிக்கும் பழக்கத்தை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும். அது நம்மை வளர்க்கும். புத்தகங்கள் புதையல் போன்றவை. அவற்றை வீடுகளில் சேர்த்து படித்துப் பயன்பெறல் வேண்டும் என்கிறார்.

கற்பனையின் உரு (அச்சம்)

மரியாதையைப் போன்ற சிறந்த பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் தராது. இளவயதில் தேர்வு குறித்த பயமும், நடுத்தர வயதில் வாழ்க்கை குறித்த பயமும், முதுமையில் மரணம் குறித்த பயமும்தான் பெரும்பாலும் பலருக்கு வருகிற பயம். பெரும்பாலும் உண்மையில்லாத பயத்தை கற்பனையாக உருவாக்கிக் கொள்கிறோம் என்கிறார்.

பயம் பற்றிய ஒரு சிறு கதை

ஒரு ஊரில் 500பேர் இறக்க வேண்டும் என்பது விதிப்பயன். ஒரே நேரத்தில் எப்படி 500 பேரைக் கொல்வது என்று யோசித்த மரண தேவன், அந்த ஊரில் கொடிய நோயைப் பரவவிடுகிறான். 5000 பேருக்கும் அதிகமானோர் இறந்துவிடுகின்றனர். மரணத்தின்மீது அந்நாட்டு அரசன் ஆத்திரப்பட்டபோது 500 பேர் மட்டுமே அக்கொடிய நோயால் இறந்ததாகவும் மீதமுள்ளோர் அச்சத்தால் செத்துப் போனதாகவும் கூறுகிறான் மரணதேவன். கதைகளின்மூலம் ஏர்வாடியார் நமக்கு சிந்திக்கும் வாய்ப்பளிக்கிறார். அச்சமின்றி இருப்பதற்கான வழியும் வகுத்துச் செல்கிறார்.

நமக்கு எது கிடைத்தாலும் அது வந்தவழி கௌரவமானதாக இருக்க வேண்டும். கணக்குப் பாடத்தில் கடைசிப் பக்கத்தில் விடை இருந்தாலும் எப்படி விடை வந்ததென்ற செய்முறை முக்கியம். சில நேரங்களில் செய்முறை தவறான விடை வந்தாலும் செய்முறை சரி என்றால் பாதி மதிப்பெண் கிடைப்பதுபோல நம் வாழ்க்கை பயமின்றி அமைந்துவிடும் நேர்மையான வழி இதுவே என்கிறார் ஏர்வாடி.

பகையை வளர்த்துக் கொள்வதைவிட நம்மைச்சுற்றி நல்ல நண்பர்களைப் பார்த்துக் கொண்டால் பயத்திற்கு அவசியமில்லை என்கிறார். நம்மைச் சுற்றியிருப்பவர்கள் மீது அன்பு காட்டியும் பெற்றுமிருந்தால் அஞ்சுவதற்கு அவசியம் இல்லை. மனிதநேயம், மாண்புமிகு வாழ்க்கை, மண்ணில் எவர்க்கும் அஞ்சாமை இவை மூன்றும்தான் மகிழ்ச்சியான மந்திரங்கள் என்கிறார்.

'பயத்தை வெல்லாதவன், வாழ்வின் முதல் பாடத்தை கல்லாதவன்' என்கிறது தமிழ் தத்துவம்.

அதீத புகழின் விளைவு

அதீத புகழ்கூட ஒருவரை எரிச்சல் கூட்டும் என்பதற்கு பெர்னாட்ஷாவின் வாழ்க்கையில் ஒரு நிகழ்ச்சியை காட்சிப்படுத்துகிறார் ஏர்வாடி.

ஒருநாள் பெர்னாட்ஷா ஒரு சாலை வழியே நடந்து வருகிறபோது எதிர்ப்பட்ட முதியவர் பெயரை எழுதித்தருமாறு காகிதத்தைக் கொடுத்தார். 'பெர்னாட்ஷா' என்றதும் பெர்னாட்ஷாவுக்கு தூக்கிவாரிப் போடுகிறது. "அவரை இதற்குமுன் பார்த்து இருக்கிறீர்களா? பழகியிருக்கிறீர்களா? அவர் உங்களுக்கு ஏதேனும் தீமை செய்தாரா என்று தம்மைக் காட்டிக் கொள்ளாமலே கேட்டார். அப்படியெல்லாம் கோபம் ஒன்றுமில்லை. ஆனால் அவரைப் பற்றி எல்லோரும் பேசுவதும் புகழ்வதும் பெரிதாகப் பாராட்டி எழுதுவதும் எனக்கு எரிச்சலூட்டகிறது. அதெப்படி ஒரு தனி மனிதனை இந்த அளவுக்குத் தலையில் தூக்கிவைத்து ஆடுவது? பெர்னாட்ஷாவுக்குப் புரிந்தது ஒருவரின் அதிகமான புகழும் பெயரும் விளம்பரமும் வேடிக்கையும் யாருக்கும் எரிச்சலூட்டும் என்பது.

மனவலிமை

குற்றங்களைக் காசு கொடுத்து வாரிச் சுருட்டுவது இயல்பாகிக் கொண்டிருக்கும் காலம் இது.

'இந்த நாட்டில்
பணத்தாலே அடிக்கலாம்
பிடிபட்டால்
பணத்தாலே அடிக்கலாம்'

என்று ஏர்வாடியார் தன் கவிதை ஒன்றில் கூறியதுண்டு.

பணம் எப்போதுமே பலமாக இருக்கமுடியாது. பயமாகத்தான் இருக்க முடியும் என்கிறார். உண்மையான வலிமை எதுவென்று யோசிக்கும் போது மனம் நமக்குச் சொல்லுமாம் நான்தான் உன் வலிமை என்று.

ஏர்வாடியார் தமிழன்பனின் கவி ஒன்றினை எடுத்தியம்புகிறார்.

'கயிறு அறுந்தபோதுதான்

பட்டத்துக்குத் தெரிந்தது

உயரம் தனதல்ல என்று'

யாரோ தருகிற உயரமாக இருப்பதைவிட நாமே பெறுகிற உயர்வாக வாழ்க்கை இருக்க வேண்டும் என்கிறார்.

நாம் முன் எங்கு இருந்தோம், எப்படி இருந்தோம் என்பதை எந்த நிலையிலும் மறக்கக்கூடாது என்பதை உணர்த்துகிறார் ஏர்வாடி.

வரமாகப் பெற்ற முதுமை

'முதுமை என்பது வதமல்ல வரம்'. இளமையை வரவேற்பதுபோல முதுமையையும் நாம் வரவேற்க வேண்டும். எதிர்பார்ப்புகள் அதிகமாகும்போது நாம் ஏமாந்துபோகிறோம். எதிர்பார்ப்பைக் குறைத்துக் கொண்டால் சுகமாக முதுமையில் தாழ்வு மனப்பான்மையை மூத்த குடிமக்கள் தள்ளிவைக்க வேண்டும். பிள்ளைகளைப் புரிந்துகொள்ள வேண்டும் என்கிறார்.

நான்கு நிலையில் வாழ்நாளை எப்படிப் பகுத்துக்கொள்ள வேண்டும் என்பதை நமது பண்பாடு மானுடத்துக்குச் சொல்லி வைத்துள்ளது.

1. பிரம்மச்சர்யம்
2. கிருஷஸ்தம்
3. வானப்பிரஸ்தம்
4. சன்னியாசம்

என்று. முதியவர்கள் மனத்தைப் பாதுகாத்துக் கொண்டாலே முதுமை இனிமையாகிவிடும். காத்திருந்து பெற்ற முதுமையை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்கிறார் ஏர்வாடி.

முதுமை என்பது முதியோர்க்கு சுமையல்ல என்பதுபோல முதியோரும் இன்றைய இளைஞர்க்கு சுமையல்ல என்று இரு சாராருமே எண்ண வேண்டும் என்கிறார்.

பொய்களின் அதிபதிகள்

பெரியவர்களைவிட குழந்தைகள்தான் அதிகம் பொய் பேசுகிறார்கள். காரணம் அவர்களுக்குத் தாம் சொல்வது பொய் என்று தெரியாது. ஆனால் இல்லை என்று சொன்னால் தப்பித்துக் கொள்ளலாம் என்று மட்டும் குழந்தைகளுக்குத் தெரியும்.

குழந்தைகளுக்கு அடுத்தபடியாக பொய் பேசுகிறவர்கள் கணவன்மார்கள்தானாம். அதற்கு ஒரு நகைச்சுவை துணுக்கு : இரவில் ஒரு குழந்தை தாயிடம் கதை சொல்லக் கேட்க “கொஞ்சம் இரு; வழக்கம்போல உங்கப்பா லேட்டா வருவார். ஏன் லேட்டுன்னு நான் கேட்போன். அதுக்கு அவர் ஒரு கதை சொல்லுவார். இன்றைக்கு மட்டுமில்ல; தினந்தோறும் புதுசு புதுசா ஒரு கதை சொல்லுவார். கேள்” என்று அந்தத் தாய் சொல்லுவதாக ஏர்வாடியார் ஒரு நகைச்சுவை துணுக்குடன் கூறுகிறார்.

உண்மைக்கும் பொய்க்கும் உள்ள வேறுபாட்டை உருவகப்படுத்துகிறார். உண்மைக்கு “நிர்வாண உண்மை” (Naked Truth) என்று ஒரு பெயருண்டாம்.

பொய், உண்மை என்ற இரு பெண்கள் ஒரு குளத்தில் நீராடச் சென்றார்களாம். பொய் அவசர அவசரமாகக் குளித்துவிட்டு கரையேறி அவசரமாகத் தன்னுடைய உடையைவிட்டு உண்மையின் உடையை

அணிந்துகொண்டு ஊருக்குள் போய்விடுகிறது. உண்மை தன்னுடைய ஆடைகளை காணாமல் தவிக்கிறது. பொய்யின் ஆடையை உடுத்திக் கொள்ளாமல் நிர்வாணமாகவே ஊருக்குள் நுழைகிறது. இதன் காரணமாக உண்மைக்கு நிர்வாண உண்மை என்று பெயர் வந்ததாம் என்கிறார் ஏர்வாடி.

பாராட்டு என்பதுகூட ஒரு பொய்தான் என்கிறார். "பாராட்ட அழைத்துவிட்டு பொய் பேசக்கூடாது என்றால் எப்படி?"[6] பாராட்டுதான் இப்படி என்றால் இரங்கற்பாவாவது உண்மையாக இருக்கக்கூடாதா என்கிறார். பொய்கள் தவிர்க்க முடியாததாக இருந்தாலும் இன்னும் 'வாய்மையே வெல்லும்' என்று நம்பிக்கை கொண்டிருக்கிறோம். நம் முன்னோர்கள் நம்பி நமக்கு வலியுறுத்திய வாழ்க்கை நெறி என்கிறார் ஏர்வாடி.

செய்யும் தொழிலே தெய்வம்

நாம் சிந்திக்க வேண்டியதை நகைச்சுவையாக எப்படி எடுத்துக் கொள்கிறோம். பெரியவர் ஓர் இளைஞரிடம் என்ன வேலை பார்க்கிறாய் என்றபோது, அப்பாவுக்கு உதவியாய் இருக்கிறேன் என்று கூற, அப்பா என்ன வேலை செய்கிறார் என்று கேட்கிறார். அப்பாதானே! வேலைவெட்டி இல்லாமல் வீட்டில் சும்மா இருக்கிறார் என்ற பதில் கேட்டு சிரிக்கவா தோன்றும் என்று வருத்தம் தொனிக்க கேட்டுவிடுகிறார். இது சிந்திக்க மட்டுமே வேண்டும் என்பதை நாம் உணரவேண்டும்.

இலவசம் நம்மைச் சோம்பேறிகளாக்கிக் கொண்டிருக்கிறதோ? என்று சிந்திக்கும் வாய்ப்பினை அளிக்கிறார் ஏர்வாடி.

இலவசமாக ஒரு மீனைக் கொடுப்பதைவிட தூண்டிலைக் கொடுங்கள் என்கிறது சீனப்பழமொழி ஒன்று. ஓய்வு என்பது கூட இன்னொரு பணிக்கான வழிகாட்டி. ஏர்வாடியார் எங்கு சென்றாலும் வலியுறுத்திச் சொல்வது 'எதிலும் நாம் முதன்மையாக இருப்பது முக்கியமல்ல; முழுமையாக இருக்க வேண்டும்' என்பதே.

காதலித்துப் பாருங்கள்

காதல் மீது அதீத நாட்டம் இல்லையென்றாலும் ‘ஆதலினால் காதல் செய்வீர்’ என்ற கட்டுரையில் காதலர்களுக்கு அறிவுரைகளை வழங்குகிறார். ஏர்வாடியாரின் இளமைப்பருவத்தில் காதலிக்கத் தகுதிகள் இருந்தும் ஏன் காதலிக்கவில்லையே என்று தன் தோழி கேட்டபோது, காதலுக்குக் கதவைச் சாத்திக் கொண்ட கிராமத்தனம், பட்டாளத்துத் தந்தை மீதான பயம், செலவு செய்யச் சில்லறை இல்லாமை, இளமையோடு வறுமை, சிறுவயதிலே கால்கட்டு போடப்பட்ட கொடுமை போன்ற காரணங்களால் காதலுக்கும் எனக்கும் காததூரம் என்றாராம் ஏர்வா.

தன் மனைவியை 45 ஆண்டுகளுக்கும் மேலாகக் காதலித்ததாக பெருமையுடன் கூறுகிறார். காதல் புனிதமானது ஒரே ஒருமுறைதான். ஒருவர் மீதுதான் காதல் வரவேண்டும். அடிக்கடி காதல் என்பதாக ஆன்மாக்கள் அலைக்கழியக்கூடாது என்கிறார். என்னைக் காதலி என்பதுகூட யாசகம்தான் என்கிறார். சினிமாவில் நடக்கும் காதல்கள் போன்று நிஜத்தில் பெரும்பாலும் நடக்காது. மனதில் இடம் பிடிக்க தோற்றப்பொலிவு மிகவும் முக்கியம். நடையில், உடையிலும் கதாநாயகனாக இருக்க வேண்டும். வில்லனாக இருக்கக்கூடாது. இளித்தமுகம் வேண்டாம்; சிரித்தமுகம் வேண்டும். உடல்மொழி மிகவும் முக்கியமானது என்கிறார்.

அளித்த வாக்குறுதிகளின் நிலை

காதலன் காதலியிடம், நண்பன் நண்பனிடம், கணவன் மனைவியிடம் கொடுத்த வாக்குறுதி நிலைகள், “இந்த நாட்டின் மக்கள் வெகுவாகக் குறையாமல் இருப்பதற்கு நிறைவேற்றப்படாத ஒரு பிரம்மாண்டமான வாக்குறுதிகள் ஒரு காரணம்”[7] என்கிறார். வாக்குறுதிகள் இப்போது ஏளனத்திற்கு உள்ளாகிறது. நிறைவேற்றப்படாத வாக்குறுதிகள் ‘நேற்றோடு நீ சொன்ன வார்த்தை காற்றோடு போயாச்சு’ என்கிறது திரைப்படப்பாடல் ஒன்று.

நம்பிக்கை நம்மைநாம் நம்பும்போதுதான் பிறரின் மீது உண்டாகும் என்கிறார் ஊர்வாடி. வாக்குறுதி நம்பிக்கையின் காரணமாக அளிக்கப்படுகிறது. வாக்குறுதி அளிப்பவரும் ஏற்பவரும் நிறைவேற்றும்வரை.

பழகுவதற்கு ஒரு நண்பனை வேண்டுங்கள்

நட்பை நம் நாடு கொண்டாடுவதைப்போல வேறெந்த நாடும் கொண்டாடியதேயில்லையாம். நமது இதிகாசங்களும் இலக்கியங்களும் நட்பின் மேன்மையைக் கூறுகிறது. ‘உலகின் அதிபதியாக இருந்தாலும், ஒரு நண்பன் அவசியமே’ என்பார் ‘யங்’ என்கிற கவிஞர். ஏர்வாடியார் நல்ல நண்பர்களை நாம் தேடிப் பிடிக்க வேண்டும் என்கிறார்.

“கடவுளிடம் கேளுங்கள். அவர் உங்களுக்கும் ஒரு நண்பரைப் பரிசாகத் தருவார்”[8] என்கிறார் ஏர்வாடி. அதுபோல் கவிஞர் எமர்சன் சொல்வதுண்டு. ‘ஒரு நண்பனைப் பெறுவதற்கு நீ ஒரு நல்ல நண்பனாய் இருப்பது ஒன்றே வழியாகும்’ என்பார். திருவள்ளுவர் ‘நட்பு’ என்கிற ஒரு அதிகாரத்தை இயற்றியதுபோல ஏர்வாடியார் நட்பானது எப்படி இருக்க வேண்டும். நட்பைப் பெறுவதற்கான வழியும் ‘பழகிப்பாருங்கள் என்கிற கட்டுரையில் கூறுகிறார்.

யாரோடு யார் ஒப்பிடுதல்

நம் வாழ்க்கையில் ஒன்றோடு ஒன்றை ஒப்பிடாமல் இருக்க இயலாது. நம் வாழ்க்கைப் போராட்டங்களில் ஒன்று. அடுத்தவரைப் பார்த்து ஆறுதலடைவதில் தவறில்லை. நம்மை நாமே குறைபட்டுக் கொள்ளக் கூடாது என்கிறார். குழந்தைகளை எப்போதும் ஒப்பிட்டுத் திட்டக்கூடாது. உன்னால் முடியும் என்றுதான் உற்சாகப்படுத்த வேண்டும் என்கிறார்.

‘போதும் என்கிற மனமே பொன் செய்யும் மருந்து’ என்கிற பழமொழி பழைய மொழி என்பதை நினைவுபடுத்துகிறார். பொறாமை தீதென்பதைப்

புலப்படுத்தவே இப்பழமொழி பிறந்ததேயன்றி நம்மை வளர வேண்டாம் என்று யாரோ வேலி போட வந்ததன்று என்கிறார்.

என்றும் நம்முடன் நம்மை ஒப்பிட்டு உயர்ந்து கொண்டிருக்க வேண்டுமே தவிர பிறரோடு அல்ல என்கிறார் ஏர்வாடி.

அரசியல் கருத்துகள்

நல்ல ஆட்சி என்பது நல்ல அரசியல்வாதிகளால் ஏற்படுத்த முடியும் என்று நம்புபவர் ஏர்வாடியார். அரசியல்வாதிகள் தனக்குத்தானே வரையறுத்துக் கொள்ள வேண்டும் என்கிறார். இரு சாராருமே உடன்படிக்கையோடு வந்தாலும் அறுபட்டுவிடுகிறது. விட்டுக் கொடுத்த நடக்காததுதான் காரணம். இரயிலில் ஓட்டை போட்டு நோட்டை எடுப்பதும், தேர்தலில் நோட்டைப் போட்டு ஓட்டை எடுப்பதற்கும் அப்படியொன்றும் வேறுபாடு இல்லை என்கிறார்.

கையூட்டு வாங்கி ஓட்டுபோடும் நமக்கும் "லஞ்சப் பேர்வழி"க்கும் என்ன வேறுபாடு? பணமானது மதிப்புமிக்கது. இத்தனைத் தலைவர்களா என்று சலித்துக் கொள்கிற அளவுக்கு எத்தனையோ தலைவர்களால் தத்தளித்துக் கொண்டிருக்கிறது தமிழகம். ஏர்வாடியார் லஞ்சத்தைப்பற்றிக் கூறியதுண்டு.

'ஏழை செஞ்ச தப்பு நாட்டில்
குத்தம் ஆகுது - இங்கே
வாழத் தெரிஞ்ச தப்பு மட்டும்
வித்துப் போகுது'

என்பார் ஏர்வாடி தன் கவிதையில் (பூக்களும் பூங்காவும்)

இத்தனை தலைவர் இருக்கிறார்கள் என்பது விலைவாசி உயரும்போதும், பிரச்சனை என்று வரும்போதுதானே நமக்குத் தெரிகிறது.

பெரும்பாலான தலைவர்கள் தங்களைத் தாங்களே தலைவர்கள் என்று அறிவித்துக் கொள்கிறார்கள். மாவீரன் நெப்போலியன் போன்று தனக்கு முடிசூட யாருக்கும் தகுதி இல்லை என்று தனக்குத் தானே முடிசூட்டிக் கொண்டதுபோல் பல தலைவர்கள் உண்டு.

அபரிமிதமான வரவேற்பு என்பதுகூட அடக்க முறைக்கு உட்பட்டது என்கிறார். தலைமைப் பண்பானது அனைவரின் மனதில் பதிந்த ஒன்று எந்தத் துறையாக இருந்தாலும் நானே தலைவனாக இருப்பேன் என்று ஒவ்வொருவரும் ஆசைப்படுவது உண்டு. ஒருவன் வெற்றி பெறுவதற்கும் தட்டிப் பறிப்பதற்கும் என்னென்ன உபாயங்கள் உண்டோ அதைப் பயன்படுத்துகிறவன் மந்திரி அல்லது தந்திரி தானே தவிர தலைவன் அல்லன் என்கிறார்.

“கவனமிருக்கட்டும். நமக்கு அடுத்த தேர்தல் முக்கியம் அல்ல. அடுத்த தலைமுறைதான் முக்கியம்”[9]

‘அரசியலுக்கு இளைஞர்கள்

வரவேண்டும். சரி

யார் வீட்டு இளைஞர்கள்’

என்று ‘வெளிச்ச மலர்கள்’ என்கிற தன் கவிதை ஒன்றில் கூறியுள்ளார் ஏர்வாடி.

இளைய தலைமுறை அரசியலுக்கு வரவேண்டும். அதை ஏற்றுக் கொள்ளவும் வேண்டும். அவர்களால் நல்ல ஒரு மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்பதை நம்புகிறார் ஏர்வாடி. ‘யார் வீட்டு இளைஞர்கள்’ என்பது கேள்விக்குறியாகத்தான் இன்றும் உள்ளது.

‘அரசியலில் இதெல்லாம் சகஜமப்பா’ அரசியல் என்றால் இப்படித்தான் இருக்கும். அரசியல்வாதிகள் இப்படித்தான் இருப்பார்கள் என்று சமூகம்

ஆத்திரப்படுகிறவர்களை ஆற்றுப்படுத்துகிறது. நல்ல அரசியல்வாதிகள் என்றால் கர்மவீரர் காமராசர், கக்கன் போன்ற தலைவர்கள்தான் என்கிறார். காமராசர் ஆட்சியைக் கொண்டு வருவோம் என்கிறவர் சிலர். அவர் ஆட்சிதானே நடக்கிறது என்பவர் சிலர் என்று பேசுவதிருக்கட்டும். முதலில் நம்மில் சில காமராசர்களை நாம் கண்டறிவோம். இதெல்லாம் சகஜமென்று சமாதானம் சொல்லிக் கொண்டிருக்காமல் நல்ல மாற்றங்களை மாறாத இளைஞர்களைக் கொண்டு நாளை நிகழ்த்திக் காட்டுவோம் என்கிறார்.

முடிவுரை

ஏர்வாடியாரின் ‘சொந்தமாக ஒரு சொர்க்கம்’ என்னும் இக்கட்டுரைத் தொகுப்பு படிப்பதற்கும், படைப்பதற்கும் உந்துதலாக விளங்குகின்றது. அறிவுரைக் களஞ்சியம் என்று சொல்லும் அளவுக்கு நல்ல அறிவுகள் அமைந்த தொகுப்பு. அறியப்படாதவை அறிவதற்கும், சிந்திப்பதற்கும் சிறந்த வாய்ப்பினைப் பெற்றுத் தருகிறது. அனுபவமே சிறந்த வழிகாட்டி என்பதை உறுதி செய்தவர். இளையவரோ பெரியவரோ படிக்க வேண்டிய, அறிந்துக் கொள்ள வேண்டிய கட்டுரைத் தொகுப்பு ‘சொந்தமாக ஒரு சொர்க்கம்’.

அடிக்குறிப்பு

1. ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணன், சொந்தமாக ஒரு சொர்க்கம், ப.37
2. மேலது., ப.37
3. மேலது., ப.45
4. மேலது., ப.57
5. மேலது., ப.72
6. மேலது., ப.116
7. மேலது., ப.135
8. மேலது., ப.150
9. மேலது., ப.98

இயல் - 5

சமூகத்தின் மீது பதிந்த ஏர்வாடியாரின் பார்வை

முன்னுரை

சமூகம் என்பது சார்ந்து, சேர்ந்து வாழ்ந்து வருகிற ஒரு சமுதாயமாகத்தான் இருக்க வேண்டும் என்கிற ஏர்வாடியார் தனக்கென்று பல கொள்கைகளை வகுத்துக் கொண்டு வாழ்கிறவர் மட்டுமல்ல; மற்றவர்களையும் அதுபோல் வாழவைக்கவேண்டும் என்கிற எண்ணம் படைத்தவர் என்பது அவரின் கட்டுரையின் வாயிலாக புலப்படுகிறது. ஏர்வாடியார் இயல்பான நகைச்சுவை உணர்வுக்கு சொந்தக்காரர். சார்ந்து வாழ்ந்தால் மட்டுமே ஒரு சமூகத்தை உருவாக்க முடியும் என்றும், எண்ணமே அனைத்துக்கும் காரணம். மனதை எதற்கும் தயார்நிலையில் வைத்திருந்தால் இளமையும் முதுமையும் வரமாக அமையும் என்கிறார் தன் கட்டுரையில்.

கால மாற்றம்

கால மாற்றத்திற்கு ஏற்ப மனிதர்களும் மாறிக் கொண்டேதான் இருக்கிறார்கள். முன்னேற்றத்தைத் தழுவி முன்னேறாமல் சமூகத்தையும் சேர்த்துக் கீழ் இறக்கி வருகிற மனிதர்கள் இருக்கிறார்கள்.

அன்று குடிப்பது ஒழுக்கமின்மை என்றும் சட்டப்படி குற்றம் என்றும் கருதப்பட்டதாம். குடிப்பவர்கள் சமூகத்தில் மதிப்பை இழந்திருந்தனவாம். கைதாகிச் சிறையிலும் அடைக்கப்பட்டார்களாம். இப்போது அரசாங்கமே கடைகளைத் திறந்து வைத்துக் கொண்டிருக்கிறது.

நாடு கெட்டுப் போனதாக பேசுகிறவர்களையே அதற்குக் காரணகர்த்தாக்களாகவும் இருக்கிறார்கள். நாம் கெட்டுப்போனதற்கு நாடு கெட்டுப்போனதாக சொல்கிறார்கள் என்கிறார் ஏர்வாடி.

நல்லது கெட்டது என்பது அவரவர்க்கான அனுபவத்தின் விளைவாகவும் எதிர்பார்ப்பின் பேரிலும் சொல்லப்படுகிற தனிப்பட்ட கருத்து என்கிறார்.

சமூகம் வசதியானவர்களை சாமர்த்தியசாலிகள் வெற்றியாளர்கள் என்று பாராட்டுகிறதாம். ஒரு தமிழ் அறிஞர் சொல்லியதுண்டு ‘பணக்காரர்கள் பணம் இல்லாதவர்களிடம் தங்களைக் காப்பாற்றிக் கொள்ளவே சாதி, மதம் என்கிறவற்றை உருவாக்கிக் கொண்டனவாம்’

அடையாளப்படுத்தும் சான்றிதழ்

பொருள்களை மனிதன் அடையாளப்படுத்திய காலம் மாறி மனிதனை பொருள் கொண்டு அடையாளப்படுத்தும் காலம் இது.

சான்றளிப்பவனே சரி இல்லாத போது அவனிடமே நன்னடத்தை சான்றிதழ் கேட்கும் நம் நிலையை ஏர்வாடியார் சித்தரிக்கிறார்.

எல்லாருக்குமே நல்லது நடக்க வேண்டுமென்ற ஆசை இருக்கிறது. அது தமக்கே திகழவேண்டும் மற்றவர்களுக்குக் கூடாது என்று நினைப்பதும் உண்டு என்கிறார். சிலர் நல்லது நடக்க வேண்டும் என்பர். அதுவும் தம்மால் மட்டுமே நடக்க வேண்டும் என்று எண்ணுவதுண்டு. இவ்வகையைச் சார்ந்தவர் அரசியல்வாதிகளாகவே இருப்பார் என்கிறார்.

சார்ந்து வாழ்வதே சமூகம்

விலங்குகள் சார்ந்து வாழாது சேர்ந்து இருந்துவிட்டுப் போகும். மனிதன் மட்டுமே சார்ந்து வாழ்கிறான். சமூகம் என்பது தனிமனிதனில் இருந்து உருவாவதுதான் சமூகம் என்பதை நாம் உணர வேண்டும்.

“பயன்படுவது, பயன்படுத்துவது என்பதெல்லாம் மனிதர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டிருக்கிற வரம். வாழ்க்கை நெறியுமாகும்”[1] என்கிறார்.

மனிதர்களை சமூக விலங்குகள் (Social Animals) என்போம். மனிதர்கள் ஒருவரையொருவர் நம்பியும் சார்ந்தும் வாழ வேண்டும் என்கிற (நம்பிக்கை) உடையவர் ஏர்வாடி.

எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும். எல்லோரும் எல்லோருக்கும் வேண்டும் என்ற பொருள் பொதிந்த வாழ்க்கையே சிறந்தது. மனிதர்கள் சார்ந்திருத்தல் பற்றி மூன்று வகைகளாய்ப் பகுத்தும் பார்க்கலாம் என்கிறார்.

1. அவசரம் சார்ந்த தேவை
2. அன்பு சார்ந்த தேவை
3. ஆற்றல் சார்ந்த தேவை

அவசரம் சார்ந்த தேவை – அன்றாட வாழ்க்கைத் தேவைகள். அன்பு சார்ந்த வகை – நம்பிக்கைக்குரிய உறவுகளிடம் பொறுப்புகளை ஒப்படைப்பது. ஆற்றல் சார்ந்த வகை – படித்தவர்கள், ஆற்றல் மிகுந்தவர்கள், அறிவு சார்ந்தவர்கள், பலத்த பின்னணி, தனித்திறன் கொண்டவர்கள் அடங்குவர் என்கிறார் ஏர்வாடி.

ஒருவரையொருவர் சார்ந்திருக்க வேண்டிய சமூகத்தில் வருகிற சங்கடங்களுக்கெல்லாம் விட்டுக் கொடுக்காத வீராப்பும், "தான்" என்கிற தலைக்கனமும்தான் காரணம். எல்லோர்க்கும் எல்லோரும் வேண்டும் என்கிற எண்ண உறவை தக்கவைத்துக் கொள்ளும் என்கிறார்.

"சேர்ந்து மட்டுமல்ல சார்ந்தும் வாழ்கிறோம் என்பதை மறக்கக்கூடாது, மறுக்கவும் முடியாது"[2]

மனிதர்கள் விலங்குகளைப்போல் அல்லாமல் மனிதர்கள் வாழ்ந்துவிட்டு சமூகத்தில் தனக்கென்று ஒரு வெற்றியை நிலைநாட்டிச் செல்ல வேண்டும் என்கிறார்.

சமூகத்தில் மதிப்போடு வாழ்தல்

மதிப்பும், மரியாதையும் மனிதர்களை வைத்துவரும் என்று நினைக்கும் காலம் கடந்து பொருள்களே மனிதனுக்கு மதிப்பு அளிப்பதாகக் கருதும் சமூகமாக மாறி வரும் சமூகத்தின் அவலநிலையை கூறி செல்கிறார்.

“நாம் வசதிகளைத்தான் வேண்டுகிறோம். வாழ்க்கையை அல்ல”[3]

சார்ந்து வாழ்தல் மூன்று நிலைகளில் சம்பந்தப்பட்டிருக்கிறது என்கிறார்.

1. இல்லத்து உறவுகளைச் சார்ந்து
2. பணியாற்றும் அலுவலகம் சார்ந்து
3. வாழ்கிற சமூகம் சார்ந்து.

சமூகம் நம்மை மதிக்க வேண்டும் என்றால் சமூகத்திற்குப் பயன்பட வேண்டும் என்கிறார் ஏர்வாடி.

‘சொல்லடி சிவசக்தி என்னைச் சுடர்மிகு அறிவுடன் படைத்துவிட்டாய். வல்லமை தாராயோ இந்த மாநிலம் பயனுற வாழ்வதற்கே’ என்பார் பாரதி. மனதை வசப்படுத்திக் கொண்டால் மட்டுமே வாழ்க்கை நம் வசப்படும் என்கிறார்.

மதிப்பில் இருந்து விலை

மதிப்பிற்கும், விலைக்கும் வித்தியாசம் தெரியாத சமூகம் மதிப்பில் இருந்து பிறப்பது உறவு. விலையில் இருந்து கிடைப்பது தீர்மானப் பொருள். நாம் இதை உணர வேண்டும்.

விலையில் ஏற்ற, இறக்கம் உண்டு. மதிப்பில் அன்பு ஒன்றே. மனிதனுக்கு விலை என்பது கிடையாது. மதிப்பு மட்டுமே உண்டு என்கிறார்.

விலை மகிழ்ச்சியை தரும், மதிப்பு பெருமையைத் தரும். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் ஒருவரைத் தேர்ந்தெடுக்க மக்களாட்சி நமக்குத்

தந்திருக்கிற மாபெரும் வாய்ப்பு அது. அதை ஆயிரத்துக்கும் ஐநூற்றுக்கும் விற்கிறபோது ஒரு விலை கிடைக்கிறது. ஆனால் அதன் மதிப்பு போய்விடுகிறது என்கிறார்.

லஞ்சமாகத் தருகிறபோது, பணமும் மதிப்பிழக்கிறது; நாமும் மதிப்பிழக்கிறோம் என்பதை நாம் உணர வேண்டும். சாதனைக்காக சமூகம் அறிந்தேற்று வழங்கும் கொடையை விலையென்று கருதமுடியாது. அது மதிப்பிற்குரியதாகிறது என்கிறார்.

தொண்டுள்ளம் படைத்தவர்கள் மட்டுமே தொண்டுகளுக்கு விலை வைத்துக் கொள்வதில்லையாம். உயர்ந்த பெருமக்களின் கலைப்படைப்புகள் ஏலத்தில் கோடிக்கணக்கில் பணம் கொடுத்து வாங்கப்படுவது. விலையும் அல்ல; மதிப்பும் அல்ல; விலைமதிப்பற்றவை என்கிறார்.

சமூகத்தைப் பாதிக்கும் விளைவுகள்

சமூகத்தில் வாழும் மக்களை மனதார பாதிக்க வைப்பது மற்றவரின் அதீத புகழ்தான் என்பதற்கு பெர்னாட்ஷாவின் வாழ்க்கையில் நடந்த ஒரு நிகழ்வை காட்சிப்படுத்துகிறார் ஏர்வாடி. பெர்னாட்ஷா ஒருநாள் சாலையில் நடந்து கொண்டிருக்கும் போது எதிர்ப்பட்ட முதியவர் பேப்பரும் பேனாவும் கொடுத்து ஒரு பெயரை எழுதித்தரச் சொன்னாராம். ‘பெர்னாட்ஷா’ என்றதும் அதிர்ந்துபோனார். அவரைப் பார்த்துப் பழகியிருக்கிறீர்களா? ஏன் இந்தக் கோபம் என்றாராம். அப்படியெல்லாம் கோபம் இல்லை. ஆனால் அவரைப் பற்றி எல்லோரும் புகழ்ந்து பேசுவதும் பெரிதாகப் பாராட்டி மகிழ்வதும் எழுதுவதும் எனக்கு எரிச்சலூட்டகிறது என்றாராம். ஒருவரின் அதிக புகழும் விளம்பரமும் பேச்சும் மற்றவரைப் பாதிக்கும் என்பதை அன்று புரிந்து கொண்டாராம். விளம்பரங்களைத் தவிர்த்துக் கொண்ட தலைவர்கள் என்றால் கர்மவீரர் காமராசரும் கக்கனும்தான் என்கிறார். “மதங்களை மீறி,

சாதிகளைத் தாண்டி வசதிகளுக்கு அப்பால் மானுடத்தை ஒரு குடைநிழலில் கொண்டு வருவது எளிமைதான்”[4]

இன்றைய சமுதாய சீரழிவுகளுக்கெல்லாம் அடிப்படைக் காரணம். நம்மிடத்தில் எளிமை இல்லாததுதான். குற்றங்களுக்கும், தீமைகளுக்கும், கலவரங்களுக்கும், ஆடம்பரமே காரணம் என்கிறார்.

சமூகத்தில் குற்றங்கள் பெருக அச்சாணியாக இருப்பது பணம். குற்றங்களைக்கூட காசு சுத்தப்படுத்திவிடுவதாக நம்மவர்கள் நம்புகிற காலம் என்கிறார். பணம் எப்போதுமே பலமாக இருக்க முடியாது. பயமாக மட்டுமே இருக்க முடியும் என்கிறார் இந்த சமூகத்திற்கு

அடக்குமுறையாக மாறும் அரசியல்

பல தலைவர்கள் இருந்தும் மக்களுக்கு இவர்கள்தான் தலைவர்கள் என்று தெரிந்துகொள்ளாமல் போனதுக்கு என்ன காரணம் ஒன்றும் இல்லாமல் போனதுதானே. இரு சாராருமே தேவை என்கிறபோது மட்டும் அறிந்து வைத்துக் கொண்டால் போதும் என்கிறபோது எப்படி அரசியல்வாதிகள் தேர்தல் வருகிறபோது காலில் விழாத குறையாகத் தன்னை அறிமுகப்படுத்துகிறார்கள். சாதாரண மக்களோ விலைவாசி கூடுகிறபோது அன்றாட தேவைகள் தேவைப்படும்போது மட்டுமே தலைவர்கள் யார் யார் என்று அறிந்து கொள்கிறார்கள்.

இத்தனைத் தலைவர்களா என்று சலித்துக் கொள்கிற அளவுக்கு எத்தனையோ தலைவர்களால் தத்தளித்துக் கொண்டிருக்கிறது தமிழகம்**.**

அற்புதமான தலைவனை இனி எப்போது பார்க்கப் போகிறோம் என்று இன்றும் காத்துக் கொண்டுதான் இருக்கிறோம். ஒரு கதையை உருவகப்படுத்துகிறார். ஒரு முறை தமிழக மக்கள் ஒன்று சேர்ந்து ஒரு கோரிக்கையை முன்வைத்தனர். இப்படிக் கூட்டமாக வராமல் யாரேனும்

ஒருவரைத் தலைவராக உங்கள் பிரதிநிதியாகத் தேர்ந்து அவரை மட்டும் அனுப்பி வையுங்கள் என்று திருப்பி அனுப்பிய பரந்தாமன் இன்றும் காத்திருக்கிறான். எந்தத் தலைவனும் வரவில்லை. தேர்ந்தெடுக்கப்படவும் இல்லை. யாரும் வரவில்லையே என்று பரந்தாமன் கேட்க ஒருநாள் நாரதரிடம் அப்படியெல்லாம் யாரும் இனி வர வாய்ப்பில்லை. நீங்கள் நிம்மதியாக பள்ளி கொள்ளலாம் என்றாராம் நாரதர்.

சமூகத்தில் இருக்கிற இந்த மனிதர்கள் ஒவ்வொருவருக்கும் தலைமை தாங்க வேண்டும் என்கிற ஆசை உண்டு. அதைத் தீர்க்கவே இவர்களுக்கு நேரம் இல்லை. அப்படி ஒருவன் தலைவனானால் அவர்களை விட்டுவைக்கமாட்டான். வாயில் போட்டுக் கொள்வான். தன் வேலையை விட்டு யார் புகார் அளிக்க வருவார்கள். இப்படித்தான் மக்கள் சமூகத்தில் தன் வாழ்க்கையை நடத்திச் செல்கிறார்கள் என்பது பரிதாபத்துக்குரியது.

‘நானும் சிந்திக்க மாட்டேன்; பிறரையும் சிந்திக்க விட மாட்டேன்’ என்பது போலத்தான். சமூகம் சிறப்பாக இயங்குவதற்கு மூன்று கூறுகதை கூறுகிறார் ஏர்வாடி.

1. நடத்துதல் (Conduct)
2. நிர்வகித்தல் (Manage)
3. தலைமை தாங்குதல் (Lead)

இம்மூன்றும் அன்றாடப் பணிகளை செய்ய உதவும் என்றும், இதை மனித சக்தி (Man power), மானுட ஆற்றல் (Human Resource), சார்ந்தது என்கிறார். நிர்வாகத்தின் (Managerial skill) தலைமையை நாம் தலைமைப்பண்பு (Leadership quality) என்கிறோம். தலைமை என்பது பண்பாக கருதப்படுவது என்கிறார் ஏர்வாடி.

தன் உழைப்பாலும் பண்பாலும் ஒரு சமூகத்தை நமக்கு ஏற்படுத்தி அறிமுகம் செய்த முதியோர்களை சமூகத்தில் இருந்தும் குடும்பத்தில்

இருந்தும் ஒதுக்கி வைக்கும் சமூகம் உருவாகிக் கொண்டிருக்கிறது என்பதை உணரும் தருணத்தை ஏற்படுத்திக் கொடுக்கிறார் ஏர்வாடி.

'முதுமை என்பது வதமல்ல வரம்' என்கிற தன் கட்டுரையில் இளமை வரவேற்கப்படுவதைப்போல முதுமையும் வரவேற்கப்பட வேண்டும் என்கிறார். குடும்பங்கள் நிம்மதியே வீட்டிலிருக்கிற பெரியோரின் வழிநடத்துதல்தான் என்கிறார். அனுபவசாலிகளின் வழிநடத்தல்தான் இந்தச் சமூகம் இன்றும் சார்ந்து வாழ்ந்து வருகிறது என்பதை நாம் உணரவேண்டும். இச்சமூகம் உழைத்து ஓய்வு பெற்ற அனுபவசாலிகளை ஆசைகாட்டி தவறான வழிகளில் இழுத்துச் செல்லக்கூடாது. சட்டத்தில் இருக்கும் ஓட்டைகளை அடையாளப்படுத்த அவர்களைப் பயன்படுத்தக்கூடாது. அதற்கு நாம் அனுமதிக்கவும் கூடாது என்கிறார் ஏர்வாடி.

"மனித வாழ்க்கையில் மிகச்சிறந்த பலமே முதுமைதான்"[5] என்கிறார்.

சகித்துக் கொள்ளும் சமூகம்

இச்சமூகம் 'அரசியலில் இதெல்லாம் சகஜமப்பா' என்று அக்கிரமங்களை எதிர்த்துக் குரல் கொடுப்பவரை சமாதானமும் செய்து அரசியல்வாதிகள் என்றால் இப்படித்தான் என்று ஆத்திரப்படுகிறவர்களை ஆற்றுப்படுத்திவிடுகிறது.

"இப்படியெல்லாம் இல்லாமலும் இந்தியாவில் அரசியல் நடந்திருக்கிறது"[6] இன்றைய இளைஞர்களுக்கு அது வியப்பாக இருந்தால்கூட பரவாயில்லை. பிரமாண்டமான கற்பனையாகவும், அதிகமாய் நம்பமுடியாத கதையாகவும் இருக்கலாம் என்கிறார்.

பணமில்லாதவர்களையும் பணம்பார்க்க ஆசைப்படாதவர்களையும் மக்களும் பெரிதாக வரவேற்கத் தயாரில்லை. காரணம் நமக்கும் அவர்களிடமிருந்து சலுகைகளும் சில்லரையும் வேண்டும் என்கிற தேவைதான்

என்கிறார். இப்படிப்பட்ட தலைவர்கள் உருவாகக் காரணம் நாமாகத்தான் இருக்கிறோம்.

அரசே லஞ்சம் வாங்குவதை சகஜம்தானே என்று நியாயப்படுத்தி வருவது பரிதாபத்துக்குரிய நிலை. அந்த நாளில் லஞ்சம் வாங்குவது தவறு என்று உணர்ந்திருந்தார்கள். பிறகு தவறில்லை என்று கருதினாலும் பயந்திருந்தார்கள். இதன் வளர்ச்சிக்குக் காரணம் இதெல்லாம் அரசு அலுவலகங்களில் சகஜம் என்கிற நிலைதான் என்கிறார் ஏர்வாடி.

சமூகத்தின் சோம்பேறித்தனம்

இலவசம் வழங்கி மக்களை சோம்பேறிகளாக்கிக் கொண்டிருக்கிறது. இலவசமானது உழைப்பை ஏளனப்படுத்துவதற்கு இணையானது. உழைத்து உழைத்து உண்ண வேண்டும். அதில் கௌரவம் பெற முடியும் என்கிறார்.

உழைப்பே உயர்வுக்குக் காரணம் என்கிறவர் ஓய்வு என்பது அடுத்த வேலைக்கான வழிகாட்டி என்னும் நோக்குடையவர் ஏர்வாடி

முடிவுரை

சமூகத்தின் பரிதாபநிலையை கூறும் ஏர்வாடி விளைவிற்கான காரணத்தையும் கூறி அதற்கான வழியும் தீர்வையும் அளிக்கிறார். 20 கட்டுரைகள் அடங்கிய 'சொந்தமாக ஒரு சொர்க்கம்' என்கிற இக்கட்டுரைத் தொகுப்பு சமூக சீர்திருத்த நூலாக கருதும் அளவுக்கு ஏர்வாடியாரின் கட்டுரை தொகுப்பு அமைந்துள்ளது. இதழாசிரியர், கவிஞர், நாடக ஆசிரியர், புனைகதை ஆசிரியர், கட்டுரையாளர், நடைச்சித்திர ஆசிரியர், திறனாய்வாளர், சொற்பொழிவாளர், ஊடகவியலாளர், மொழிபெயர்ப்பாளர் என்று பன்முக ஆற்றல் கொண்ட ஏர்வாடியார் எவருக்கும் அஞ்சாமை என்பது அவரது எழுத்தின் கொள்கையாக விளங்குகிறது என்பது இவரின் கட்டுரையே விளக்கிக் காட்டுகிறது.

அடிக்குறிப்பு

1. ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணன், சொந்தமாக ஒரு சொர்க்கம், ப.26
2. மேலது., ப. 30
3. மேலது., ப. 40
4. மேலது., ப. 86
5. மேலது., ப. 104
6. மேலது., ப. 105

ஆய்வு முடிவுரை

- பன்முகத் திறன்களைத் தன்னகத்தே கொண்ட ஓர் ஆற்றல்சால் படைப்பாளியான கலைமாமணி ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணன் அவர்களின் 99ஆவது படைப்பான சொந்தமாக ஒரு சொர்க்கம் ஆய்வாளர்களின் கலைக்களஞ்சியமாக பன்முக திறன்களைக் கொண்டது.
- இலக்கிய வளமும், கலைத்திறனும் அடங்கிய இந்நூல் ஆராயத்தக்கது.
- பெரியோரையும், சிறியோரையும், கற்றோரையும், கல்லாதவரையும், சிந்திக்கத் தூண்டும் கருத்துக்கள் அடங்கிய இந்நூல் ஆராய்ச்சியாளர்களுக்கு புதிய நோக்கத்தையும் பாதையையும் அமைத்து கொடுக்கிறது இக்கட்டுரைத் தொகுப்பு.
- ஏர்வாடியாரின் ‘சொந்தமாக ஒரு சொர்க்கம்’ என்னும் இக்கட்டுரைத் தொகுப்பு படிப்பதற்கும், படைப்பதற்கும் உந்துதலாக விளங்குகின்றது. அறிவுரைக் களஞ்சியம் என்று சொல்லும் அளவுக்கு நல்ல அறிவுகள் அமைந்த தொகுப்பு. அறியப்படாதவை அறிவதற்கும், சிந்திப்பதற்கும் சிறந்த வாய்ப்பினைப் பெற்றுத் தருகிறது
- சமூகத்தின் பரிதாபநிலையை கூறும் ஏர்வாடி விளைவிற்கான காரணத்தையும் கூறி அதற்கான வழியும் தீர்வையும் அளிக்கிறார். 20 கட்டுரைகள் அடங்கிய ‘சொந்தமாக ஒரு சொர்க்கம்’ என்கிற இக்கட்டுரைத் தொகுப்பு சமூக சீர்திருத்த நூலாக கருதும் அளவுக்கு ஏர்வாடியாரின் கட்டுரை தொகுப்பு அமைந்துள்ளது.

துணைநூற்பட்டியல்

முதன்மை ஆதாரம்

ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணன் - சொந்தமாக ஒரு சொர்க்கம்
வானதி பதிப்பகம்
23, தீனதயாளு தெரு, தி.நகர்,
சென்னை – 600017
முதற்பதிப்பு 2017

துணைமை ஆதாரங்கள்

ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணன் - நல்லது நடந்தால் நல்லது,
வானதி பதிப்பகம்
23, தீனதயாளு தெரு, தி.நகர்,
சென்னை – 600017
முதற்பதிப்பு – 2014

முனைவர் கோ.சுப்புலட்சுமி - கவிஞர். கலைமாமணி ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணன்
19, கண்ணதாசன் சாலை, தி.நகர்,
சென்னை – 17
முதற்பதிப்பு – 2016

ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணன் - பக்கம் பக்கமாய்
சுதா பதிப்பகம்
420இ, மலர்க் குடியிருப்பு
அண்ணாநகர் மேற்கு
சென்னை – 600040
முதற்பதிப்பு - 2014

ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணன் - என் பக்கம் - 11வது தொகுதி
சுதா பதிப்பகம்
420இ, மலர்க் குடியிருப்பு
அண்ணாநகர் மேற்கு,
சென்னை – 600040
முதற்பதிப்பு – 2009

பின்னலூர் மு.விவேகானந்தன் - இலக்கிய வானில் இனிய நிலை – ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணனின் இலக்கிய வாழ்வும் பணியும்
சுதா பதிப்பகம்,
4, முத்து முதலித்தெரு,
புரசைவாக்கம்,
சென்னை – 600007
முதற்பதிப்பு – 1991

ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணன் - வெளிநாட்டு வீதியிலே (கிரீஸ் பயணக்கதை)
சுதா பதிப்பகம்,
4, முத்து முதலித்தெரு,
புரசைவாக்கம்,
சென்னை – 600007
முதற்பதிப்பு – 1987

ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணன் - மன்றங்களில் மலர்ந்தவை
சுதா பதிப்பகம்,
4, முத்து முதலித்தெரு,
புரசைவாக்கம்,
சென்னை – 600007
முதற்பதிப்பு - 1998

ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணன் என் பக்கம் 5ஆவது தொகுதி
சுதா பதிப்பகம்,
4, முத்து முதலித்தெரு,
புரசைவாக்கம், சென்னை – 600007
முதற்பதிப்பு - 1999

ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணன் மனதில் பதிந்தவர்கள் 2ஆம் தொகுதி
சுதா பதிப்பகம்,
4, முத்து முதலித்தெரு,
புரசைவாக்கம், சென்னை – 600007
முதற்பதிப்பு - 2003

India Book of Records

CERTIFICATE

CENTENARY CELEBRATIONS OF PROF DR. N SUBBU REDDIAR

Prof Dr S Ramalingam (born on 13 Oct 1949) Organizing Secretary, Na Subbu Reddiar 100 Educational Trust, Chennai, Tamil Nadu, has conceived, designed and meticulously executed 108 Centenary Events throughout Tamil Nadu during the Centenary Year (2015-2016) of Prof. Dr. N Subbu Reddiar who served the cause of education for 65 years andwritten 135 books in various fields (100 books after retirement).

Biswaroop Roy Chowdhury
Chief Editor
India Book of Records

Date: March 19, 2018

India Book of Records is registered with the Government of India with RNI no. HARENG/2010/32259.

India Book of Records is affiliated to Asia Book of Records and follows Asian Protocol of Records (APRs) as per the consensus arrived at the meeting of the Chief Editors of National Record Books, Ho Chi Minh City, Vietnam.



First Paper: *என்ன ஆச்சரியம்?* **"Enna Aacharyam !" [1949]**

ஓர் அறிமுகம்

பேராசிரியர்

ந சுப்பு ரெட்டியார்



Books Published : **135 + 1**
Papers Published : **200** [Tamil 173 + English 27]
Endowments established: **10**
Endowment Lectures : **12**
Awards received: **8**
Prizes won : **14**
Titles conferred : **8**

Masterpieces:

1) Tamil Payitrum Murai [1957]
2) Religion & Philosophy of Naalayira Divyap-pirabhandham with special reference to Nammalwar [English][His PhD thesis] [1977]
3) Kalvi Ulaviyal Kotpaadukal [1989]
4) Vainava Selvam [1995]

Financial Aid for publishing the Books:

a) Tirumala Tirupathi Devasthanams - 21
b) Directorate of Tamil Development
Government of Tamil Nadu - 6

Research on Professor's Books

a) University of Madras - 1993 (leading to PhD)
b) Madurai Kamaraj University - 2017 (leading to PhD)
c) Bharathiyar University - 2020 (leading to PhD)

ISBN 978-81-948697-7-1
9 788194 869771

பேராசிரியரின் 135 நூல்களில், தெரிவு செய்யப்பெற்ற 100 நூல்கள் (முழுமையாக)
https://archive.org/details/@centenary1916nsr2016
எனும் இணையதளத்தில் உள்ளன. [freely downloadable]